குமரேச சதகம்

மூலமும் உரையும்.

உ

முருகன் துணை.

குருபாததாசர் அவர்கள்

இயற்றியருளிய

திருப்புல்வயல்

குமரேச சதகம் மூலமும்,

ஜீவகசிந்தாமணி வசனம், அரிச்சந்திரபுராண வசனம், ஸ்ரீ பகவத்கீதை வசனம், அருணாசலபுராண வசனம் ஆகிய நூல்களின் ஆசிரியரும், ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடி வெண்பா, கந்தர் சஷ்டி கவசம், விவேகசிந்தாமணி, கபிலரகவல் ஆகிய நூல்களின் உரையாசிரியருமாகிய

மதுரை ஜில்லா செம்பூர் வித்வான்

ஸ்ரீமத். வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களால்

இயற்றப்பெற்ற

உரையும்.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1918

விலை ரூபா 1

All Rights Reserved.

உ

குகன் துணை

முகவுரை.

இப் பிரபந்தமானது, 'குமரேசன்' என்னும் சுப்பிரமணியக் கடவுளுடைய திருநாமத்தை மகுடமாக வைத்து நூறு செய்யுட்களாற் பாடப்பெற்ற துதிநூ லாதலின், இதற்கு, 'குமரேச சதகம்' என்னும் பெயர் ஏற்பட்டது. 'குமரேசசதகம்' என்னும் இத்தொடரானது, குமரேசனைச் சார்ந்த சதகமென்றேனும், குமரேசனது ஸ்தோத்திர விஷயமான சதகமென்றேனும் விரிக்கப்படும்; குமரேசனைச் சார்ந்த சதகமென விரித்தால், இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவும், குமரேசனது ஸ்தோத்திர விஷயமான சதகமென விரித்தால் ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவும் கொள்ளப்படும். இன்னும் இது, 'குமரேசனுக்குரிய சதகம்' என விரித்து, நான்காம் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளப்படும். குமாரன் ஈசன் என்பது, புணர்ச்சி விதியால், இருமொழிகளினும் ஈற்று னகரமெய்கள் கெட்டு, குமார என்பதி னிடையிலுள்ள நெடில் குறிலாய் ஈற்றகரங்கெட ஈசன் என்பதன் முதல் ஈகாரம் ஏகாரமாய்க்; 'குமரேச' எனப் புணர்ந்து நின்றது. 'குமரேசன்' என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை; குமரனாகிய ஈசன் என விரியும். 'சதகம்' என்பது நூறு செய்யுட்களாலாகிய நூல் எனப் பொருள்படும்.

இச் சதகமானது, குருபாததாச ரென்பவரால் 'திருப் புல்வயல்' என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் குமா ரக் கடவுள்மீது பாடப் பெற்றது. 'திருப்புல்வயல்' என் பது சோழநாட்டின் சார்பாகத் தொண்டைமான் புதுக் கோட்டை சமஸ்தானத்தி லுள்ளது. குருபாததாச ரென்ப வர் அத் தலத்திலேயே இருந்தவ ரென்றும், இவருடைய இயற்பெயர் முத்துமீனாக்ஷிக் கவிராயர் என்றும், இவர் சைவ வேளாளர் குலத்திற் றோன்றியவ ரென்றும், இவ ருடைய ஆண் மரபைச் சார்ந்தவர் திருப்புல்வயலினும், பெண் மரபைச் சார்ந்தவர் சேலத்தைச் சேர்ந்த சார்வாய் என்னும் ஊரிலும் இன்னும் இருக்கின்றன ரென்றும், மிக்க கீர்த்திமானாகிய கதிர்வேற் கவிராயர் இவருடைய புத் திரி பரம்பரையைச் சார்ந்தவ ரென்றும், கடம்பர் கோவில் மதுரைநாயகம் பிள்ளையென்னும் புலவரும் இவர் மரபி னரே யென்றும் சிலர் கூறுவர்.

இத்தகைய இக் குருபாத தாசரால் பாடப்பெற்ற இக் குமரேச சதகமானது ஸ்தோத்திர நூலாயினும், மானிடர்க் கவசியமான பல அரிய பெரிய நீதிகளை யெல்லாம் தெளி வாக விளக்கக் கூடியது. மற்றைய சதகங்களும் இங்ஙனம் நீதிகளையே கூறுவனவாயினும், அவற்றுள் இஃதொன்றே தலைமை பெற்றதாகும்; இன்னும், இது, மேற்கூறியபடி நீதிகளைக் கூறுவதிலும் சிறுவர்க்கும் அவற்றைத் தெள்ளி தில் விளக்கிக் காட்டக் கூடியது. இதுபற்றியே இந்நூல் பண்டைக்காலந்தொட்டுத் தமிழ்ப் பள்ளிக்கூடச் சிறுவர்க் குப் பாடமாக வைக்கப்பட்டு வருகிறது. தென்னாட்டி லுள்ள பள்ளிக்கூடச் சிறுவர்க்கு, எழுத்து நடைபடிக்கத் தெரிந்தவுடன் முறையே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, மூதுரை, அம்பிகைமாலை முதலிய நூல்களைப்

பாடம் வைத்துப் பின்னர், இக் குமரேச சதகம், தண்டலை யார் சதகம், விவேகசிந்தாமணி முதலிய நூல்களை ஆசிரியர்கள் கற்பிப்பது வழக்கம். அங்ஙனம் பண்டைக்காலத்தவர், இந்தக் குமரேச சதகம் முதலிய நூல்கள் சிறுவர்க்கு நீதி புகட்டுவதில் சிறந்தவைகளெனக் கருதி இவற்றைப் பள்ளிக்கூடங்களில் பாடம் வைத்து வந்த வழக்கத்தை யனுசரித்தே இக்காலத்தில் ஆங்கில கலாசாலைகளினும் இவற்றுள் சில நூல்கள் பாடமாக வைக்கப்பட்டு வருகின்றன. அங்ஙனம் வைக்கப்பட்டு வந்தவைகளில் குமரேச சதகம் இதுவரை எடுக்கப்படா திருப்பினும், இப்போது இதனுயர்வு நோக்கி இந்நூலும் முக்கியமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்நூல் இவ்வகைச் சிறப்புற்றதா யிருந்தும் இதில் விளக்கமான வுரையோடு கூடிய நல்ல பதிப்புப் புஸ்தகம் கிடைப்பதரிதா யிருக்கின்றது. சிலர் ஸ்கூல்களுக் குபயோகமாகும்படி இந்நூலில் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் குறிப்புரையுடன் நல்ல பதிப்புப் புஸ்தகங்கள் வெளியிட்டிருக்கின்றனரெனினும், அவற்றுள் எல்லாப் பாடல்களு மில்லாமையால், முழுநூலையும் பார்க்கவேண்டு மென்னுங் கருத்துடையார்க்குப் பெருங்குறையா யிருக்கின்றது. ஆதலின், இதற்கு விளக்கமான வுரையொன்றெழுதி நல்ல விதத்தில் வெளிப்படுத்த வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு நெடுநாளாக ஏற்பட்டிருந்தது; சில தமிழபிமானமுள்ள நண்பர்களும் அங்ஙனமே இந்நூலுரையை வெளிப்படுத்தினால் அஃது தமிழர் எல்லோருக்கும் பயன்தருவதாகுமெனத் தெரிவித்தனர். அதுபற்றியே, இப்போது என் புத்திக்குத் தோன்றியமட்டில் இவ்வுரையை யெழுதி வெளியிடலானேன். இதில் ஒவ்வொரு பாடல்களினுமுள்ள

ஒவ்வொரு விஷயங்களும் கூடியவரை தெளிவாக விளக்கிக் காட்டப்பட் டிருக்கின்றன. இவ்வுரையானது கல்விகற்கும் மாணவர்க்கும், தமிழ் நூலாராய்ச்சியுடைய மற்றையர்க்கும் மிகவும் உபயோகமாக விருக்கும். தமிழர் இதனாலடையும் நற்பயன்கள் பலவுள. ஆதலின், இதனை, தமிழபிமானிக ளெல்லோரும் அன்புடன் ஏற்றுதரித்து, எனக்கும், இதனை வெளியிடுவித்தவர்க்கும், மேன்மேலும் இத்தகைய நன் முயற்சிகளி லேற்படும் மனவெழுச்சியானது விருத்தி யடையுமாறு செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

என்னால் எழுதப்பட்ட இந்நூலுரையில் என் ஆராய்ச் சிக் குறைவாலோ, அறியாமையாலோ சிற்சில பிழைகள் ஏற்பட்டிருத்தலுங் கூடும். அங்ஙனம் காணப்படின் அறி வுடையோர் அவற்றைத் தெரிவிப்பின் வந்தனத்துடன் ஏற்று மறு பதிப்பில் திருத்திக்கொள்வேன்.

இதனைப் படிப்போர்க்கும், இது வெளிப்படுதற்கு முக்கிய காரணமா யிருந்தவர்க்கும், முருகன் திருவருள் புரிவானாக.

இங்ஙனம்:

☞ வீ. ஆறுமுகன்.

உ
குகன் துணை.

குமரேச சதகம்

மூலமும் உரையும்.

காப்பு.

நேரிசை வெண்பா.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே விபசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

(இதன் பதப்பொருள்.) பூமேவு-இப்பூமண்டலத்திற் பொருந்திய, புல்லை - திருப்புல்வயலிலே, பொருந்து - கோவில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற, குமரேசர்தம்மேல் - குமாரக்கடவுளின் மீது, தேம் மேவிய - இனிமைபொருந்திய, சதகம் - சதகமென்னும் நூலை, செப்ப - கூறுதற்கு, கோ மேவி - எல்லாத் தேவர்களுக்கும் தலைமைத்தன்மை பொருந்தி, காக்கும் - விக்கினங்களை நீக்கி எல்லோரையும் காக்குந் தொழிலையுடைய, சரம் - மணிவடத்தின், வண்ணத்தான் - அழகையுடையவனும், கம்பம் - அசைகின்ற, கும்பத்து-குடம்போன்ற மத்தகத்தையுடைய, ஐந்து கரம் - ஐந்து திருக்கைகள் பொருந்திய, கா - வனத்திற் சஞ்சரிக்கின்ற, குஞ்சரம் - யானையைப்போன்ற, வண்ணத்தான் - வடிவையுடையவனுமாகிய விநாயகக்கடவுள், காப்பு - காவலாவான்.

(விசேடவுரை.) பூமேவு-எழாம்வேற்றுமைத்தொகை; இதனை எழுவாய்த் தொடராகக்கொண்டு, 'அழகுபொருந்திய' எனப் பொருளுரைப்பினும் அமையும். புல்லைப்பொருந்து - இதுவும் எழாம்வேற்றுமைத் தொகையேயாம். பொருந்து குமரேசர் - வினைத்தொகை. 'குமர ஈசர்' என்னுஞ் சொற்கள், 'குமரேசர்' எனப் புணர்ந்தன; இங்ஙனம் புணர்வது வடமொழிப் புணர்ச்சியாகிய குணசந்தி யெனப் படும். குமரேசர் என்பதில், ஈசன் எனற்பாலது ஈசர் எனவந்தது, உயர்வுபற்றி ஒருமைப்பால் பன்மைப்பாலாக மாறிவந்த பால்வழுவமைதியாம்; "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை யிழுக்கினு மியல்பே," என்பது நன்னூற் பொதுவியற் சூத்திரம். தேமேவிய - எழுவாய்த்தொடர்; மேவிய பெயரெச்சம். சதகம் - அகப்பொருளொன்றன்மேலாயினும், புறப்பொருளொன்றன்மேலாயினும் நூறு செய்யுட்களா லியற்றப்படும் பிரபந்தமாம். இந்நூலில் புறப்பொருள் சம்பந்தமான நீதிகளும் தெய்வ ஸ்தோத்திரமும் அடங்கியிருத்தலின் இது, புறப்பொருளைச் சார்ந்துவந்ததாம். சதம் - நூறு; இதனோடு கம் விகுதி புணர்ந்து சதகம் என்றாயது. செப்ப-வினையெச்சம்; இது காப்பு என்பதனோடு முடியும். விநாயகக்கடவுள் எல்லோருக்கும் தலைமையுடையராயிருந்து விக்கினங்களைத் தீர்த்தாளுமியல்பினையுடையராதலின், 'கோமேவிக் காக்கும் சரவணத்தான்,' என்றார் ஆசிரியர். புல்வயல் என்பது புல்லை என மருவி வந்தது. கும்பம்-உவமையாகுபெயர்; இது கும்பத்தைப் போன்ற மத்தகத்தை யுணர்த்திற்று.

"வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொண்ட
விலக்கண விலக்கிய
மிடுக்க ணின்றி யினிது முடியும்."

என்கிற சூத்திர விதிப்படி ஒரு நூல்செய்யுங் காலத்து மங்கலச் சொல்லாற் றொடங்கி வழிபடு தெய்வவணக்கங் கூறுதல்

முறைமையாகலின், இச்செய்யுளில் பூ என்னும் மங்கலச்சொல்லைத் தொடக்கத்தில் வைத்துத் தெய்வ வணக்கமுங் கூறினர் ஆசிரியர்; மங்கலச்சொற்கள் இருபத்திரண்டில் பூ என்பதும் ஒன்றாம்; மங்கலச் சொல் இருபத்திரண்டாவன:—திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் என்பன வாம்; இன்னும் மங்கலச்சொல்லின் வகையை,

> "சீரெழுத்துப் பொன்பூ திருமணிநீர் திங்கள்சொற்
> கார்பரிதி யானை கடலுலகம்—தேர்மலைமா
> கங்கை நிலம்பிறவுங் காண்டகைய முன்மொழிக்கு
> மங்கலமாஞ் சொல்லின் வகை."

என்னும் வச்சணந்திமாலைச் செய்யுளானு முணர்க. மூன்றாமடியி லுள்ள சரவணத்தான் என்பதற்குக் குமாரக்கடவுள் எனப் பொருள் கொண்டு, சுப்பிரமணியக் கடவுளும், விநாயகக் கடவுளும் காவல் புரிவாராக எனப் பொருளுரைப்பினும் அமையும். ஒருகாலத்தில், சிவபிரானும் உமாதேவியும் நந்தவனத்தின் சித்திரமண்டபத்தில் எழுதியிருந்த ஆண்யானை பெண்யானைகளைப் பார்க்க அவற்றினின் றும் கஜமுகாசுரனை வெல்லும்பொருட்டு விநாயகக்கடவுள் யானை முகத்துடன் தோன்றி அவன் வல்லமையையடக்கி அவனைத் தமக் குப் பெருச்சாளி வாகனமாக்கிக் கொண்டன ரென்பது புராண கதை. இன்னும் விநாயகக்கடவுள் கஜமுகராகத் தோன்றியகதை, விநாயகபுராணம் முதலியவற்றில் வெவ்வேறு வகையாகவும் கூறப் படுகின்றது. காப்பு - தொழிற்பெயர்; இதற்குப் பின் ஆவான் என் னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது.

அவையடக்கம்.

இரட்டையாசிரிய விருத்தம்.

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவு
    மனைக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவுஞ் சந்திரன்முன்
    மருவுமின் மினிபோ லவும்
பாருக்கு ணல்லோர்மு னேபித்தர் பலமொழி
    பகர்ந்திடுஞ் செயல் போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
    பாரிலா டுதல் போலவும்
பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரென்று
    போதுவாய்க் கால் போலவும்
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
    பொருந்தவைத் தது போலவும்
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவுமின்சொல்
    வாணர்மு னுகந்து புல்லை
வாகுமே ரேசர்மேற் சதகம் புகன்றனன்
    மனம்பொறுத் தருள் புரிகவே.

(இ - ள்.) மாரிக்கு - (எல்லாம் செழிக்க மழையைச் சொரிகின்ற) மேகத்திற்கு, நிகர் என்று - தான் சமமென்று நினைத்து, பனி - ஹிமமானது, சொரிதல் போலவும் - பொழிதல் போலவும்; சிறு பெண் - விளையாட்டுப் பருவமுள்ள கன்னிப்பெண்ணானவள், மனைக்கு நிகர் என்று-பெரிய மாளிகைக்குச் சமமாகுமென்று கருதி, மணல் வீடு - மணலினாலே சிற்றில்லை, கட்டுவதுபோலவும்-இயற்றி விளையாடுதலை நிகர்க்கவும்; சந்திரன் முன் - எங்கும் பிரகாசிக்கின்ற நிலவின் எதிரில், மருவும் - தான் அதற்குச் சமமென்று நினைத்துச் சேர்ந்துலவும், மின்மினி போலவும் - மின்மினிப்பூச்சிபோலவும்,

பாருக்குள் - இந்தப் பூமியிலே, நல்லோர் முன்னே-நற்குணமுடைய அறிஞர்க் கெதிரே, பித்தர் - பயித்தியமுடைய அறிவிலிகள், பல மொழி - பலவிதமான வார்த்தைகளை, பகர்ந்திடும் - தாம் விவேகத் தோடு பேசுவதாக நினைத்துச் சொல்லும், செயல் போலவும் - செய் கையைப்போலவும்; பச்சை மயில் - பசுமை நிறத்தையுடைய மயூரம், ஆடுதற்கு - தோகையை விரித்தாடுவதற்கு, இணை என்று - தன் ஆட் டம் சமமாகுமென்று நினைத்து, வான்கோழி - வான்கோழி யென் னும் பறவையானது, பாரில் - பூமியில் நின்று, ஆடுதல் போலவும் - ஆடுவதை நிகர்க்கவும்; பூரிக்கும்-நீரினாலே நிறைந்து தோற்றுகின்ற, இனிய - இனிதாகிய, காவேரிக்கு - காவிரியாற்றிற்கு, நிகர் என்று- சமமாவோமென்று நினைத்து, போது - ஓடுகின்ற, வாய்க்கால் போல வும் - சிறு கால்வாய்போலவும்; புகல் - அறிஞரால் உயர்த்திக் கூறப் படுகின்ற, சிப்பி முத்துக்கு இப்பியிற் றோன்றும் முத்தினுக்கு, நிகரா - சமமாக, பளிங்கை - ஸ்படிகமணியை, பொருந்த-பொருத்த மாக, வைத்தது போலவும் - வைத்ததை நிகர்க்கவும்; வாரிக்கு முன்- சமுத்திரத்திற் கெதிரே, (தன்னைச் சமமென்று நினைத்து) வாவி - சிறு தடாகமானது, பெருகல் போலவும் - நிறைதல் போலவும்; (நானும்) இன் சொல்-இனிய தமிழ்ச் சொற்கவிகளினாலே, வாணர்- வாழ்வோராகிய வித்வான்களுக்கு, முன் - எதிரில், உகந்து-(அவர்க் கிணையாகச்சொல்வேனென்று பேதைமையால் நினைத்து) சந்தோஷி த்து, புல்லை - திருப்புல்வயலென்னுந் தலத்தி லெழுந்தருளியிருக் கின்ற, வால குமரேசர்மேல் - பாலராகிய குமாரக்கடவுண்மீது, சத கம் - சதகமென்னும் இந்நூலை, புகன்றனன் - கூறினேன், (ஆயி னும் இது, அவர் செய்த நூல்களுக் கிணையாகமாட்டாது; எனினும், சிறு பெண்கள் கட்டும் சிறு வீடு முதலியவற்றிலும் அறிஞர் அரு வருப்புக்கொள்ளாது சந்தோஷித்தல்போல, என்னாற் செய்யப்பட்ட இந்நூலில் உள்ள குற்றங் குறைகளை) மனம் பொறுத்து - மனதிற் பொறுத்து, (இதனை ஆதரித்து) அருள் புரிக - கலைவல்லோர் கிரு பை செய்வாராக.

(வி - ரை.) மேகத்துக்கு நிகரென்று பனி சொரிதல் போலவும், சிறுபெண் மனைக்கு நிகரென்று மணல்வீடு கட்டுவது போலவும், சந்திரனுக்கு முன்னே மின்மினி உலாவுதல் போலவும், நல்லோர்க்கு முன்னே பித்தர் பல மொழிகளைக் கூறுதல் போலவும், மயிலாடுதற் கிணையென்று நினைத்து வான்கோழி ஆடுதல்போலவும், காவிரிநதிக்கு நிகரென்று ஓடுகின்ற வாய்க்கால் போலவும், சிப்பி முத்துக்கு நிகராகப் பளிங்கைப் பொருந்தவைத்தது போலவும், கடலுக்கு முன்னே தடாகம் பெருகுதல் போலவும், கவிவாணர்க்கு முன்னே யானும் ஒரு வித்வான்போலக் குமரேச சதகமென்னும் இந்நூலைச் சொன்னேன். ஆதலின், என்னூல் மேலான கவிவாணர் நூலுக் கிணையாகாது; எனினும், மழைக்குமுன் சொரியும் பனி முதலியவற்றையும் உலகத்தார் வெறுக்காது அவற்றா லேற்படும் சிறு பயன்களையும் கொள்ளுதல்போல வித்வான்கள், இந்நூலையு மேற்று இதிலுள்ள குற்றங் குறைகளைப் பொறுத் தின்னருள் புரிவாராக என்பது இதன் கருத்து. 'அவை அடக்கம்' என்பதற்குச் 'சபையார்க்குச் செய்யும் வணக்கம்' என்பது பொருள்; இது, தகுதியுடைப் பொருள்பற்றி வந்த நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்கதொகை. சபையெனப் பொருள்படும் அவையென்னுஞ் சொல் இடவாகுபெயராய்ச் சபையிலுள்ளாரை யுணர்த்திற்று. அடக்கம் என்பது தொழிற்பெயர். மாரிக்கு நிகர், மனைக்கு நிகர், ஆடுதற் கிணை, காவேரிக்கு நிகர், முத்துக்கு நிகர் என்பன ஒப்புப் பொருள் பற்றிவந்த நான்காம் வேற்றுமைவிரிகள். இவ்வொப்புப் பொருள், நன்னூல் நான்காம் வேற்றுமைச் சூத்திரத்தில் 'ஆதி' என்றதி லடங்கும். 'வாரிக்குமுன்' என்பது நான்காம் வேற்றுமை எல்லைப்பொருளது. பச்சை - பசுமையென்னும் பண்புச்சொற்றிரிபு. 'பாருக்குள்' என்பதில் 'உள்' ஏழனுருபு. 'காவிரி' என்பது காவேரி யெனத் திரிந்துவந்தது. இந்நதி காகத்தினாலே விரியப்பட்டதாதலின் காவிரியெனப் பெயர் பெற்றது; காகவிரி என்பது காவிரி

யென்று தொகுத்தலாயிற்றெனக் கொள்க; விநாயகக்கடவுள் காக வுருக்கொண்டு அகஸ்தியருடைய கரகநீரைக் கவிழ்த்துவிட அதி னின்றும் காவிரியானது விரிந்து பெருகிற்றென்பது புராணகதை. போதுதல் என்னுந் தொழிற்பெயர் தல்லீறு கெட்டு, 'போது' எனப் பெயரெச்சமாய் நின்றது. 'போதுவாய்க்கால்' என்பது வினைத் தொகை. 'போதுதல்' என்பதற்குச் 'செல்லுதல்' என்று பொருள். சொல் என்பது ஆகுபெயராய் அதனாலாகிய கவிகளை யுணர்த்திற்று. 'சொல்வாணர்' என்பதற்குச் சொற்களாலாகிய கவிகளினாலே வாழ் வோர் என்பது பொருள். 'வாழ்நர்' என்பது 'வாணர்' என்றாயது. வாலகுமரேசர், இதில் 'வாலகுமரன்' என்பது 'மீமிசைச்சொல்' என் றும், ஒருபொருட் பன்மொழியென்றுங் கூறப்படும்; "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்பது நன்னூற் பொதுவியற் சூத்திரம். குமரேசர் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'அருள் புரிக' என்பதற்குமுன், 'கலைவல்லோர்,' என்னும் எழுவாய், இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. புரிக - வியங்கோள் வினை முற்று. நூல் செய்யப் புகுங்கால், அது நிர்விக்கினமாக நிறைவேறற் பொருட்டும், அதனை வித்வான்கள் ஆதரிக்கும் பொருட்டும் தொடக் கத்தில் தெய்வ வணக்கமும், அவையடக்கமும் கூறுதல் முறைமை யாகலின், ஆசிரியர் இங்ஙனம் முதலில் தெய்வவணக்கமும், அதன் பின் அவையடக்கமுங் கூறினர்.

நூல்.

குமரேசர் மகிமை.

இரட்டையாசிரிய விருத்தம்.

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடி யும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
செருக்கமுடி யாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினு லிருகூறு
செய்தமரர் சிறைத விர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
னினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) மா - வண்டுகள், மிக்க - மிகுந்த, தேன் - மதுவை, பருகு - சேர்ந்து குடிக்கின்ற, கடம்பு பூ அணியும் - கடப்ப மலர் மாலையை யணிகின்ற, மணி - அழகிய, மார்பனே - திருமார்பை யுடையவனே! வள்ளி கணவா-வள்ளியின் நாயகனே! மயில் ஏறி-மயில்வாகனத்தின் மேலமர்ந்து, (அதனை யெங்குஞ் செலுத்தி) விளையாடும் - விளையாட்டயர்கின்ற, குகனே - குகனென்னுந் திருநாம முடையவனே! புல் வயல் - புல்வயலென்னுந் தலத்திலே, நீடு - வளர்ந்திருக்கின்ற, மலைமேவு - மலையின்மீ தெழுந்தருளிய,

குமரேசனே - குமாரக்கடவுளே! (நீ) பூமிக்கு - இப்பூமியில், ஓர் - ஒப்பற்ற, ஆறு தலையாய் - ஆறு சிரங்களை யுடையவனாகி, வந்து - தோன்றிவந்து, சரவணப் பொய்கைதனில் - சரவணப்பொய்கை யென்னும் கங்கை மடுவிலே, விளையாடியும் - சிறு குழந்தையாய் விளையாட்டயர்ந்தும்; புனிதற்கு - பரிசுத்தனாகிய சிவபெருமானுக்கும், மந்திர உபதேசமொழி - பிரணவமந்திரபோதனையாகிய சிறந்த வாக்கியத்தை, சொல்லியும் - அவன் செவியிற் புகுமாறு கூறியும்; போதனை - அறிவுள்ளவனாகிய பிரமனையும், சிறையில்-சிறைக்கூடத்தில், வைத்தும்-அடைத்துவைத்தும்; தேம் மிக்க - இனிமைமிகுந்த, அரிஹரபிரமாதிகட்கும் - விஷ்ணு சிவன் பிரமன் முதலியவர்களுக்கும், செருக்க முடியா - கொல்லமுடியாத, அசுரனை - சூரபத்மனை, வடிவேலினால்-கூர்மைதங்கிய வேலாயுதத்தினாலே, தேகம் கிழித்து- உடம்பைக் கீறி, இரு கூறு செய்து - இரண்டு பங்காக்கி, அமரர் - தேவர்களுடைய, சிறை தவிர்த்தும்-சிறையை நீக்கியும்; நேமிக்குள்- இப் பூமிக்குள்ளே, அன்பர் - விசுவாசமுடையவர்கள், இடர் உற்ற சமயந்தனில் - துன்பமடைந்த நேரத்தில், நினைக்குமுன் - அவர்கள் தியானிப்பதற்கு முந்தியே, வந்து உதவியும் - அவரிட மணுகிச் சகாயம் புரிந்தும், நிதமும் - தினந்தோறும், மெய்த்துணையாய்-அடியார்க்கு உண்மைத்துணையாகி, விளங்கலால்-பிரகாசித்தலாலே, உலகில்- இப்பூமண்டலத்தில், உனை நிகரான - உனக்குச் சமமான, தெய்வம் உண்டோ - தெய்வமிருக்கின்றதோ? (இல்லை).

(வி-ரை.) 'பூமியில்' என வருதற்பாலது, 'பூமிக்கு' எனக் குவ்வுருபு பெற்றுவந்தது உருபுமயக்கம்; "யாத னுருபிற் கூறிற் றாயினும், பொருள்செல் மருங்கில் வேற்றுமை சாரும்," என்பது சூத்திரம். 'சரவணம்' என்பதற்கு, 'நாணற்காடு' என்று பொருள்; சரம் - நாணல், வணம் - காடு; வநம் என்னும் வடமொழி வணமெனத் திரிந்துவந்தது. சரவணப்பொய்கை யென்பதற்கு, நாணற்காட்டாற்

சூழப்பட்ட மடுவென்பது பொருள்; நாணற்காட்டாற் சூழப்பெற்ற கங்கையின் மடுவில் சுப்பிரமணியக் கடவுள் சிவாம்சத்தால் ஆறு திருமுகங்களை யுடையவராய்த் தோன்றி விளையாடினரென்பது கந்தபுராணகதை. சிவனுக்குப் பிரணவவுபதேசஞ் செய்ததும், பிரமனைச் சிறையில் வைத்ததும், சூரனைவதைத்துத் தேவர்சிறை நீக்கியதும் கந்தபுராணத்தா லுணரப்படும். போதம்-அறிவு; அதனை யுடையவன் போதன்; பிரமா வேதம் முதலியவைகளைச் செய்த மகா விவேகியாதலின் இங்ஙனம், 'போதன்,' எனப்பட்டான். இன்னும் இவன் திருமாலின் உந்திக்கமலத்தில் வீற்றிருப்பவனாதலின், 'போதன்'என்பதற்குத், 'தாமரைப்புஷ்பத்தில் வீற்றிருப்பவன்,' எனப் பொருள் கூறினும் அமையும்; போது - புஷ்பம்; அதிலிருப்பவன் போதன். ஹரன், பிரமன் என்பவற்றினீற்று னகரமெய்கள் கெட்டன. பிரம ஆதி-பிரமாதி; இது வடமொழிப் புணர்ச்சியாகிய தீர்க்கசந்தியெனப் படும். ஆதியர் என்பது ஈற்றிலுள்ள உயர்திணைப் பலர்பால் விகுதியாகிய அர் கெட்டு ஆதியென நின்றது. நேமிக்குள்: இதில் உள் - ஏழனுருபு. உண்டோ என்பதனீற்றோகாரம் எதிர்மறைப்பொருளது. உனக்கு நிகரான என வரற்பாலது உனை நிகரான எனவந்தது உருபு மயக்கம். 'பூங்கடம்பணியும்' என்பதை, 'கடம்பு பூ அணியும்' என மாற்றுக; "பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்," என்கிற விதிப்படி, பூ கடம்பு என்பதற் கிடையில் ஙகரவொற்றுத் தோன்ற, பூங்கடம்பு என்றாயது. குகன் - குகைகளில் வாசஞ்செய்பவன்; குகம் - குகை; அதிலிருப்பவன் குகன். குமாரக்கடவுள் சூரசம்மார காலத்தில் மலைக்குகைகளையே படை வீடுகளாகக் கொண்டிருந்தனரென்பது புராணகதை; அவையாவன:—திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம்; குன்றுதோறாடல், சோலைமலை என்பனவாம். (க)

அந்தணரியல்பு.

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
　　கூறுசுரு திப் பெருமையுங்
　கோதிலா வாகமபு ராணத்தின் வளமையுங்
　　குலவுயா காதி பலவும்
முறையா நடத்தலாற் சகலதீ வினைகளையு
　　முளரிபோ லேதகிப் பார்
　முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ
　　மூர்த்தமுண் டாக்கு விப்பார்
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
　　னீண்மழை பொழிந் திடுவதும்
　நிலமது செழிப்பது மரசர்செங் கோல்புரியு
　　நிலையுமா தவர்செய் தவமும்
மறையோர்க ளாலேவி ளங்குமிவ் வுலகத்தின்
　　மானிடத் தெய்வ மிவர்காண்
　மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே—! (பிராமணர்கள்) குறையாத - சுருங்காத, காயத்திரி ஆதி-காயத்திரி முதலிய மந்திரங்களின், செப மகிமையும் - உச்சரிப் புப் பெருமையையும், கூறு - உயர்த்திக் கூறப்படுகின்ற, சுருதிப் பெருமையும் - வேதத்தின் மகிமையையும், கோது இல்லா - குற்ற மற்ற, ஆகம வளமையும் - ஆகமங்களின் செழிப்பையும், புராணத் தின் வளமையும் - புராணங்களின் செழிப்பையும், குலவு - கொண் டாடப்படுகின்ற, யாகாதி பலவும் - யாகங்கள் முதலிய பலவற்றை யும், முறையா-ஒழுங்காக, நடத்தலால் - நடைபெறும்படி செய்வத னாலே, சகல தீவினைகளையும் - எல்லாக் கொடுஞ் செயல்களாகிய பாவங்களையும், முளரிபோலே - அக்கினியைப்போல, தகிப்பார்-எரி

த்து நீருக்குவார்; முதன்மை பெறு - தலைமை பெற்ற, சில செம்பு பிருதிவிகளில் - கல் செம்பு மண் முதலியவைகளினாலே, தெய்வ மூர்த்தம் - தேவதாவடிவங்களை, உண்டாக்குவிப்பார் - செய்வித்து அவற்றை மனிதர்கள் வணங்கும்படி செய்வார்கள்; நிறை ஆக - உறுதியாக, நீதி நெறி-தருமமார்க்கத்தினின்றும், வழுவார்கள்-பிசக மாட்டார்கள்; ஆகையால் - ஆதலினாலே, நீள் - நீண்ட, மழை - மாரி யானது, பொழிந்திடுவதும் - உலகத்திற் சொரிவதும், நிலமது - பூமியானது, செழிப்பதும் - தழைத்தோங்குவதும், அரசர் - மன்னர் கள், செங்கோல் புரியும் - செங்கோலை நடத்தும், நிலையும் - உறு திப்பாடும், மாதவர் - சிறந்த தவத்தினையுடைய முனிவர்கள், செய் தவமும் - செய்கின்ற விரதங்களும், இவ்வுலகத்தில் - இப்பூமியில், மறையோர்களாலே - வேதியர்களினாலேயே, விளங்கும் - பிரகாசிப் பனவாம், (ஆதலின்) இவர் - இந்த அந்தணர்கள், மானிடத் தெய் வம் - மனுஷவடிவமான தெய்வமாவர்.

(வி - ரை.) காயத்திரி ஜெபமும், வேதாத்தியயனமும், ஆகம புராணப் பிரசங்கமும், யாகங்களும் நடக்குமிடத்தில் தீவினை யணு காதாதலால், அந்தணர் இவற்றை யெல்லாம் நடைபெறச் செய்வத னாலே பாவத்தை அக்கினிபோலத் தகிக்கும் இயல்பினை யுடையவ ராவார். அங்ஙனம் அவர்கள் பாவங்களை நீக்கியும், செம்பு, கல் முத லியவற்றால் தெய்வமூர்த்தங்களை உண்டாக்குவித்தும், நீதிநெறி வழுவாமல் நடப்பார்களாதலால், மழை பொழிவதும், நிலஞ் செழிப்ப தும், அரசர் செங்கோனிலையும், முனிவர் செய்தவமும், அவர்க ளாலேயே நடைபெறும்; ஆதலின், அவர்கள் மானுடத்தெய்வ மாவார்கள். காயத்திரி - பிராமணர்கள் ஜெபித்தற்குரிய ஒருவகை மந்திரம். சுருதி - இசை; வேதமானது இசை வடிவமுள்ள எழு த்தக்களவியாதலின் இது சுருதியென்னும் பெயர் பெற்றது. இவ் வேதம் நான்காம்; இவற்றைச் சுருதி என ஒருமைப்பாலாற் கூறி

யது சாதியொருமையாம். வேதம் நான்காவன:—இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்பனவாம். ஆகமம் - சைவாகமம் இருபத்தெட்டுமாம்; அவையாவன:—காமிகம், யோசசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என்பனவாம். புராணம் - பதினெண் புராணங்களாம்; அவையாவன:—மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம் என்பனவாம். யாகம் - பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம் என்னும் ஐந்துமாம்; இவற்றுள் வேதமோதல் பிரமயாகம், ஓமம் வளர்த்தல் தெய்வயாகம், பலியீதல் பூதயாகம், தர்ப்பண முடித்தல் பிதிர்யாகம், இரப்போர்க் குணவு முதலியன கொடுத்தல் மானுடயாகம். மகிமை, பெருமை, வளமை என்பன பண்புச்சொற்கள்; இவற்றிலும், யாகாதி பலவும், பொழிந்திடுவதும், செழிப்பதும், நிலையும், தவமும் என்பவற்றிலுமுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. பொழிந்திடு இதில் இடு என்பது துணைவினை; இது, பகுதிப்பொருள் விகுதியென்றுஞ் சொல்லப்படும். நிலமது - இதில் அது என்பது முதல் வேற்றுமைச் சொல்லுருபு, சாரியையென்றுஞ் சொல்லப்படும். செய்தவம் - வினைத்தொகை. காண் - ஒருவகை அசையிடைச்சொல். (உ)

அரசரியல்பு.

குடிபடையி லபிமான மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்ய வசனங்

கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுரு பாயம்
படிவிசா ரணையொடுப்ர தானிதள கர்த்தரைப்
பண்பறிந் தேய மைத்தல்
பல்லுயி ரெலாந்தம் முயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்
குடிபெறு தமக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரக சௌரியம்
வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே!—, வடிவு பெறு - அழகுபொருந்திய, செங்கோல் நடத்திவரும் - செம்மையாகிய அரசநீதியைப் புரிந்துவருகின்ற, அரசர்க்கு - மன்னருக்கு, குடி படையில்-குடிகளிடத்திலும் சேனைகளினிடத்திலும், அபிமானம்-விசுவாசமும், மந்திராலோசனை-அமைச்சருடனே கூடிச் செய்யும் இரகசியாலோசனையும், குறிப்பு அறிதல் - பிறர் மனக்கருத்தை எளிதிற் றெரிந்துகொள்ளுதலும், சத்திய வசனம் - உண்மைவார்த்தை கூறுதலும், கொடை - யாசிப்போர்வேண்டியவற்றைக் கொடுத்தலும், நித்தம் - தினந்தோறும், அவரவர்க்கு - தம்மிடம் வரும் ஒவ்வொருவர்க்கும், எற்ற மரியாதை - பொருந்திய நீதியைச் செய்தலும், பொறை-பொறுமையும், கோடாத - சாயாத, சதுர் உபாயம் - நான்குவகை இராஜதந்திரங்களும், படி விசாரணை-வேலையாட்களுக்குக் கொடுக்கும் சம்பள விசாரணையும், பிரதானி - அதிகாரி அல்லது மந்திரியையும், தளகர்த்தரை - சேனைத்தலைவரை

யும், பண்பு அறிந்து - அவர்கள் குணத்தை யறிந்து, (இவர்கள் நமக்குத் தகுதியானவர்களென்று நிச்சயித்து) அமைத்தல்-வேலைக்கேற்படுத்துதலும், பல் உயிர் எல்லாம் - பல வுயிர்ப்பிராணிக ளெல்லாவற்றையும், தம் உயிர்க்கு நிகர் என்றே - தம் பிராணனுக்குச் சமமென்றே நினைத்து, பரித்தல்-விசுவாசமாகக் காப்பாற்றுதலும், குற்றங்கள் களைதல்-தம் அரசாட்சியி லேற்படும் குறைகளை நீக்குதலும், துடி பெறு - வலிமை பெற்ற, தமக்கு உறுதியான - தமக்கு நிலையான, நட்பு - உறவினரை யுடைத்தாயிருத்தலும், அகமின்மை-அகங்கார மில்லாதிருத்தலும், சுகுணமொடு - நற்குணமும், கல்வி அறிவு - கலைஞானமும், வினைவலி கண்டு - பகைவரின் காரிய வன்மையை நோக்கி, தோலாத - தீராம் அபஜெய முறாத, காலம் - சமயத்தையும், இடம் - ஸ்தானத்தையும், அறிதல்-அறிந்து பகைவரோடெதிர்த்தலும், துஷ்ட நிக்கிரக சௌரியம் - கொடுஞ் செய்கையுடையாரை நாசப்படுத்தும் வீரமும், (ஆகிய) இவை - இவைகளே, வழுவாத - நீங்காத, முறைமை - இராஜரீக வொழுங்காம்.

(வி - ரை.) அரசராயினோர்க்கு, குடிபடையில் அபிமானமும், இரகசியாலோசனையும், பிறர் மனக்கருத்தறிதலும், உண்மைமொழி கூறலும், யாசகர்க்குக் கொடுத்தலும், தம்மிடம் வருவார் ஒவ்வொருவர்க்கும் ஏற்ற மரியாதை செய்தலும், பொறுமையா யிருத்தலும், வேலைக்காரரின் சம்பளவிசாரணை செய்தலும், தகுதியான மந்திரி தளகர்த்தர் முதலியோரை நியமித்தலும், பலவுயிர்களையும் தம்முயிர்போலப் பாவித்தலும், குற்றங்களை நீக்குதலும், உறுதிச் சுற்றங்களுட னிருத்தலும், அகங்கார மின்மையும், நற்குணமும், கல்வியறிவும், பகைவர் வினைவலி கண்டு அவர்களை ஜெயித்தற்குரிய கால மிட முணர்தலும், துஷ்ட நிக்கிரகஞ் செய்யும் வீரமும் பொருந்தி யிருத்தல்வேண்டும்; இவற்றை யுடையாரே அரசரெனப்படுவார்; இவை யில்லார் அரசராகார். குடி படை என்பவற்றில் எண்

ணும்மைகள் தொக்கன. படை - இரதம், கஜம், துரகம், பதாதி என்னும் நான்குமாம். மந்திரம் - இரகசியம்; மந்திராலோசனை-இரகசியமாகச் செய்யப்படும் ஆலோசனை; அரசர் பகைவரை வெல்லற் பொருட்டு மந்திரிகளுடன் சேர்ந்து செய்யப்படும் ஆலோசனையெல்லாம் இரகசியமாகவே யிருத்தல் அவசியமென்பது தோன்ற, 'மந்திராலோசனை' என்றார் ஆசிரியர். கொடை - தொழிற்பெயர். அவரவர் - ஒரு கூட்டத்தவரைத் தனித்தனியாக விதந்து கூறும் ஒருவகைச் சுட்டடுக்குச்சொல். பொறை - தொழிற்பெயர். சதுர் உபாயம் - நான்குவகை இராஜதந்திரங்கள்; அவையாவன:—சாமம், பேதம், தானம், தண்டம் என்பவைகளாம்; இவற்றுள் சாமமாவது:—சமாதானத்தாற் பகைவரிடங் காரியங்கொள்ளல்; பேதமாவது:—பகைவர் கூட்டத்தைப் பிரித்துப் பேதப்படுத்தி அவரிடங் காரியங்கொள்ளல்; தானமாவது:—பொருள் கொடுத்துச் சத்துருக்களிடம் காரியங்கொள்ளல்; தண்டமாவது:—ஆயுதப் பிரயோகஞ்செய்து பகைவரைத் தண்டித்து அவரிடங் காரியங்கொள்ளல். விசாரணையொடு என்பதில், ஒடு எண்ணொடு. உயிர் என்பது ஆகுபெயராய் உயிருள்ள பிராணிகளை யுணர்த்திற்று. நட்பு - உறவு; இஃதாகுபெயராய் அதனையுடைய சுற்றத்தவரை யுணர்த்திற்று. 'உறுதியான நட்பு' எனவே, உறுதிச் சுற்றமென்பது பெற்றாம். அரசர்க்குறுதிச் சுற்றமாவது: நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப்புலவர் ஆகிய ஐவருமாவர். செங்கோல் என்பது அடையடுத்த ஆகுபெயராய் அதனால் நடத்தப்படும் அரசநீதியை யுணர்த்திற்று. (௩)

வணிகரியல்பு.

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
 கூடிவர நய முரைப்பார்

கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வ ராதபடி
குறுகவே செலவு செய்வார்
வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்தி டார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையிலெ லாங்கொ டுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள் விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிவை காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—(வணிகராயினோர்) கொண்டபடிபோல்-தாம் பொருளை விலைக்குப்பெற்ற விதம்போலவே, விலை பேசி - அதற்கு உண்மையான விலையைக் கூறி, லாபம் சிறிது கூடிவர - அதற்குச் சொற்ப பயன் சேர்ந்துவரும்படி, நயம் உரைப்பார் - (பொருள் கொள்வோரிடத்தில்) நன்மையான வார்த்தை சொல்லி வியாபாரஞ் செய்வார்; கொள்ளும் - தாம் வியாபாரப்பொருளை விலைக்குக் கொள்ளுவதற்குதவியாயிருக்கும், ஒரு - ஒப்பற்ற, முதலுக்கு - முதற்பொருளாகிய பணத்திற்கு, மோசம் வராதபடி - அழிவுவாராதபடி, குறுகவே-சுருக்கமாகவே, செலவு செய்வார் - இலாபப்பொருளிற் செலவிட்டு வருவார்கள்; வண்டப்புரட்டர்தாம் - துஷ்டத்தன்மை பொருந்திய பொய்யர்கள், முறிதந்து - கடன்சீட்டெழுதிக்கொடுத்து, பொன் - சுவர்ணத்தை, அடகு வைக்கினும் - ஈடுவைத்தாலும், (அவர்களுக்கு) கடன் ஈந்திடார் - கடன் கொடுக்கமாட்டார்கள்; மருவு-பொருந்திய,

நாணயம் உள்ளோர்-வாக்குப் பிசகாமையுடையவர்கள், கேட்டு அனுப்புகினும் - பணம் கேட்டு ஒராளை யனுப்பினாலும், அவர் வார்த்தையில் - அவர்களுடைய நம்பிக்கையான வார்த்தைக்கே, எல்லாம் - அவர்கள் கேட்ட எல்லாவற்றையும், கொடுப்பார் - தடையின்றிக் கொடுப்பார்கள்; கண்டு - பற்று வரவுக்காரரின் ஊர் பெயர் தொகை முதலிய விவரங் குறித்து, எழுது - எழுதுகின்ற, பற்று வரவினில்- பற்றிலும் வரவிலும், மயிர் பிளந்து - (மயிர்பிளந்தாற்போன்று) சிறு தொகைகளையும் வகுத்துப் பெருக்கிக் கழித்து ஒழுங்காகக் கணக்கிட்டு, கணக்கில் - அவ்வாறு மயிர்பிளந்தாற்போலப் பார்க்குங் கணக்கிலே, அணுவாகிலும் - அணுவளவு பொருளாகிலும், விடார் - கைசோரவிடமாட்டார்கள்; காசு - பணத்தை, வீணில் - பயனற்ற காரியத்தில், செலவிடார் - செலவு செய்யமாட்டார்கள்; உசிதமானதில் - உத்தமமான காரியத்தில், கனதிரவியங்கள் - அளவற்ற பொருள்களை, விடுவார் - செல்லவிடுவார்கள்; இவை - இக்காரியங்களே, மண்டலத்தூடு-இப்பூமண்டலத்தில், கனம் - மேன்மையான, வர்த்தகம் செய்கின்ற - வியாபாரம் புரிகின்ற, வணிகர்க்கு - மேற்கூறிய வாணிபர்களுக்கு, முறைமை - அவர்களுடைய ஜாதி ஒழுங்காம்.

(வி - ரை.) வாணிகஞ் செய்வார் இதிற் கூறியவாறு தாம் கொண்ட விலைப்படியே உண்மையான விலை கூறிச் சிறிதுலாபம் விரும்பி மோசக்கருத்தின்றிப் பிறர் பொருளையுந் தம் பொருளைப் போல நினைத்து எல்லோரிடத்தும் இனிய வசனம் பேசி வியாபாரஞ் செய்யவேண்டும்; இங்ஙனஞ் செய்யப்படும் வாணிபமே சிறந்தாம்; "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின்," என்பது திருக்குறள். இந்நீதியை யுணராதார் சிலர், மகா கௌரவ முடையார்போல ஆசனமிட்டுச் சாய்ந்து கொண்டு ஒன்றுக்குப் பத்துலாபம் வைத்து விலைகூறிப் பொருள்களை விற்று ஊரார் பொருள்களையெல்லாம் பகற்கொள்ளைக்காரர்

போல மோசஞ்செய் தபகரித்தும், தம்மிடம் வந்து ஏதேனுங் கேட்பவர்க்கும் இனிய விடை கூறுமல் ஊமைப் பைசாசம்போல மௌனமுற்றும், ஒரு சமயம் ஏதேனும் பேசத் தொடங்கினுலும் பிறர் திடுக்கிடும்படி நாய்போற் குலைத்தும் அநியாய வியாபாரஞ் செய்வர். இத்தகையார், அறிஞரால் தாழ்ந்த மிருகவகுப்பைச் சார்ந்தவரென்று கருதப்படுவாரேயன்றி வியாபாரிகளெனக் கருதப்படார்; இவர், இவ்வுலகில் விரைவில் வறுமையுற்றுச் சீரழிவதோடு மறுமையில் மீளா நரகிற் காளாகித் துன்புறுவரென்பது நிச்சயம். இன்னும், வியாபாரஞ் செய்வோர், முதலுக்கு மோசம் வாராதபடியும் இலாபத்தில் சிறுகச் செலவு செய்து செட்டாயிருந்து பொருளீட்டவேண்டும்; அங்ஙனமின்றி முதற்பொருளுக்கும் அழிவு வரும்படி செலவு செய்தால் பல துன்பங்க ளுண்டாம்; "ஆன முதலி லதிகஞ் செலவானுல், மான மழிந்து மதிகெட்டுப் - போன திசை, எல்லார்க்கும் பொய்யனு யேழ்பிறப்புந் தீயனுய், நல்லார்க்கும் பொல்லனு நாடு," என்பது ஔவையார் திருவாக்கு. இன்னும் அவ்வணிகர், நாணய மில்லாதவர்க்கு எவ்விதத்தாலும் கடன் கொடுக்கலாகாது; நாணய முள்ளவர்க்குத் தடையின்றிக் கடன் கொடுக்கவேண்டும். பற்று வரவில் மயிர் பிளந்ததுபோல் கணக்குப் பார்த்துக் கணக்கில் அணுவளவு தொகையும் விடாமற் பாதுகாக்கவேண்டும்; வீணிற் பணத்தைச் செலவிடலாகாது; நற்காரியங்களில் அதிகமாகச் செலவு செய்யவேண்டும்; இங்ஙனஞ் செய்வாரே வணிகராவார்; மற்றையர் வணிகராகமாட்டார். 'வணிகர் இங்ஙனம் செய்வார்' எனவே, இவ்வகை புரியாதார் வணிகர் ஆகாரென்பது தானே பெறப்படும். முதலில், 'வணிகராயினுர்' என்பது வருவிக்கப்பட்டது. போலும் என்பதில் உம்மை அசைநிலைப் பொருளது. முதல் என்பது ஆகுபெயராய், வியாபாரத்துக்கு முதலிற் சேகரித்து வைக்கப்படும் பொருளை யுணர்த்திற்று. செலவு-தொழிற்பெயர். 'கேட்டனுப்புகினும்' என்பதற் கிடையில், 'ஆள்' என்பது

வருவித் துரைக்கப்பட்டது. வார்த்தைக்கு எனற்பாலது வார்த்தை யில் என வந்தது உருபுமயக்கம். 'மயிர் பிளந்து' என்பது மயிரைப் பிளப்பதுபோல நுட்பமாகக் கணக்குப் பார்த்தலை விளக்கும்; இது, பிறிதுமொழிதலணி; அதாவது : உபமானங் கூறியமாத்திரத்தில் உபமேயம் பெறவைத்தல். "எலிப்பகை நாக முயிர்ப்பக் கெடும்," என்ற வுபமானத்தால், 'வீரனொருவ னெழுந்தால் வீரரல்லாத பலர் அழிவர்,' என்ற உபமேயந் தோன்றுதல்போல, 'மயிர் பிளந்து' என்ற வுபமானத்தால், 'நுட்பமாகக் கணக்குப்பார்த்து' என்ற வுப மேயந் தோன்றிற்று. அணு - ஆகுபெயர்; அவ்வளவு பொருளை யுணர்த்திற்று. விடார் என்பதற்கு முன், 'கைசோர' என்பது வரு வித் துரைக்கப்பட்டது. செலவிடார் என்பதை செல்லவிடார் என்றும், செலவு இடார் என்றும் பிரித்து இருவகையாகப் பொரு ளுரைக்கலாம். செல்லவிடார் என்பதற்குப் போகவிடார் என்றும், செலவு இடார் என்பதற்குச் செல்லுதலைச் செய்யார் என்றும் பொருளாம். உசிதமானது - வினையாலணையும்பெயர். 'வீண்' என் பது பயனின்மை; அது ஆகுபெயராய்ப் பயனற்ற காரியத்தை உணர்த்திற்று. (சு)

வேளாளரியல்பு.

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழைபொழிவ தும்
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோ
லுலங்குமனு நெறி முறைமையும்

வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ வன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, நல்ல - நன்மை பொருந்திய, தேவாலயம் - தெய்வங்கள் தங்கியிருக்கும் கோவில்களில், பூசனை நடப்பதும் - பூஜைகள் நடந்தேறிவருவதும்; நாடோறும் - தினந்தோறும், மழை பொழிவதும் - மாரி சொரிவதும்; நாடிய - முத்தியை எண்ணிய, தபோதனர்கள் - முனிவர்கள், மா - சிறந்த, தவம் புரிவதும் - தவத்தைச் செய்வதும்; நவில் - உயர்த்திக் கூறப்படுகின்ற, வேதம் - வேதத்தையுடைய, வேதியரெல்லாம் - மறையோர்களெல்லாரும், சொல்அரிய-அளவிட்டுச் சொல்வதற் கரியனவாகிய, யாகாதி கருமங்கள் செய்வதும்-யாகம் முதலிய நற்கருமங்களைப் புரிவதும்; தொல்-பழமையான, புவி - இப் பூமியிலுள்ளவர்கள், செழிக்கும் - வளர்ந்தோங்குவதற் குதவியான, நலமும் - நற்பயன்களும்; சுபம் - நன்மை பொருந்திய, சோபனங்களும் - மங்கல காரியங்களும்; கொற்றவர்கள் - அரசர்களுடைய, செங்கோல் - அரசாட்சியானது, துலங்கும் - விளங்குகின்ற, மனுநெறி முறைமையும் - மானிட நீதி ஒழுங்கும்; வெல் அரிய - பகைவரால் வென்று கைப்பற்றிக்கொள்வதற் கரிய, சுகிர்தமொடு - இன்பமும்; வர்த்தகன் - வியாபாரி, கொள் விலையும் - கிரயத்திற்குக் கொள்கின்ற விலைப்பொருளும், விற்பனையும் - அப்பொருளை விற்று இலாபஞ் சம்பாதித்தலும்; அதிக புகழும் - மிக்க கீர்த்தியும்; மிக்க - மிகுந்த, அதிகாரமும் - உத்தியோக

மும்; தொழிலாளர் - தொழில் புரிவாருடைய, சீவனமும் - கால க்ஷேபமும்; வீரம் - மேன்மை பொருந்திய, ரணசூர வலியும் - யுத்த வீரவன்மையும்; வல்லமைகள் சகலமும் - இன்னும் எல்லா வல்ல மைகளும், வேளாளர் - பூவைசியருடைய, மேழியின் - கலப்பையா லேற்படும் பயிர்த்தொழிலின், வாழ்வினுல் - வாழ்க்கையினுலே, விளைவ - உண்டாவனவாம்.

(வி - ரை.) வேளாளர் பயிர்த்தொழிலைச் செய்து தானியம், பழம், தேங்காய், புஷ்பம் முதலியன உண்டானுல் மாத்திரந்தான் தேவாலய பூஜைகள் நடக்கும்; அவர், வேளாண்மையின் விளைவி னுல், இந்திர விழா முதலியவற்றைச் செய்வதாலும், தான தரு மங்க ளியற்றுவதாலுமே மழை பொழியும்; பயிர்த்தொழிலாளர் தபோதனர்களுக்கு உணவு முதலியன வளித்து உதவி செய்தால் மாத்திரந்தான் அவர்கள் கவலையற்றுத் தவமியற்றுவார்கள்; இதனை, "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை," என்பதா லுணர்க; உலகத்திற் பயிர்த்தொழில் சிற ந்து விளை வதிகரித்து அதனுல் அரசன் செழித்தால் மாத்திரந்தான் வேதியராற் செய்யப்படும் யாகாதி கருமங்கள் நடைபெறும்; வே ளாண்மையினுலேயே புவியிலுள்ளாரும் செழிப்படைவார்கள்; சுப சோபன காரியங்களும் வேளாண்மை விளைவின்றி நடக்கமாட்டா; அரசன் செங்கோன் முறையும் பயிர்த்தொழில் மிகுந்தால் மட்டுமே நடக்கும்; வேளாண்மை விளைவில்லாவிடின் எவர்க்கும் இன்பமுண் டாகமாட்டாது; வியாபாரிகள் பொருளைக் கொள்ளுதலும் விற்றலு மாகிய தொழில்களும் பயிர்த்தொழில் மிகுந்து நாடு செழித்தால் மட்டுமே நடைபெறும்; உலகத்தில் பயிர்த்தொழிலால் பல விளை வும் உண்டானுல் மாத்திரந்தான் அவற்றின்மூலம் தான தருமங்க ளைச் செய்து மனிதர் புகழைத் தேடுவார்கள்; இராஜாதிகாரமுதல் எல்லா அதிகாரங்களுமே நிலம், விளைந்தால் மாத்திரந்தான் உண்

டாகும்; தானியங்கள் விளைவதனாலேயே பல தொழிலாளிகளும் தங்கள் தொழில்களை நடத்திச் சீவனஞ் செய்தற் கேதுவுண்டாகும்; மேன்மையான போர்வீர வல்லமையும் நிலத்தால் வரும் பலன்களைத் தின் றனுபவித்தால் மாத்திரமே யுண்டாகும்; இன்னு மற்ற எல்லா வல்லமைகளுமே மேழித்தொழி லில்லாவிடின் நடைபெற மாட்டா. ஆதலின், 'சகலமும் மேழியின் வாழ்வினால் விளைவனன்றோ' என்றார் ஆசிரியர். இதனால், மற்றைய தொழில்களினும் வேளாள ராற் செய்யப்படும் பயிர்த்தொழிலே உலகத்திற் சிறந்ததென்பது பெறப்படும். இதனை, "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல் லாம், தொழுதுண்டு பின்செல் பவர்," என்பதனா லுணர்க. நாடோறும் - இதில், 'தோறும்' என்பது தொழில் இடம் முதலியவற்றின் பன்மைப் பொருளைத் தரும் இடைச்சொல். தபோதனர் - தவத்தையே தனமாகக் கொண்டவர். புவி - இடவாகுபெயர். மேழியென்பது கலப்பையி னொருறுப்பு; இது கலப்பைக்காய், அது பயிர்த்தொழிற் காயினமையின் இருமடியாகுபெய்ர். அன்றோ - அசை. (கு)

பிதாக்கள்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
 தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
 சார்ந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல
 வாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
 வன்புள முனோனொரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
 கலிதவிர்த் தவனொரு பிதா

காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
 கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
 மதலையென வருகுரு பரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மவுலிதனில் - சடாமகுடத்தில், மதி-சந்திரனையும், அரவு - பாம்பையும், புனை - சூடுகின்ற, விமலர் - குற்றமற்றவராகிய சிவபெருமான், உதவு-தந்தருளிய, சிறுமதலை என - சின்னக் குழந்தை என்று பலருங் கொண்டாடும்படி, வரு - சரவணப்பொய்கையிலே தோன்றிவந்த, குருபரா-அச்சிவபெருமானுக்கும் ஆசிரியனாகிய கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, (மனிதனுக்கு) தவமது செய்தே - விரதங்களைப்புரிந்து, பெற்றெடுத்தவன் - தன்னை ஈன்றெடுத்தவன், முதற் பிதா - பிரதம தந்தையாவன்; தனை வளர்த்தவன் - தன்னை விருத்தியடையும்படி செய்தவன், ஒரு பிதா - ஒரு தந்தையாவன்; தயைஆக-கருணையாக, வித்தையை - கல்வியை, சாற்றினவன் - தனக்குரைத்தவன், ஒரு பிதா - ஒரு தந்தையாவன்; சார்ந்த-பொருந்திய, சற்குரு-நற்குணத்தையுடைய ஞானசிரியன், ஒரு பிதா - ஒரு தந்தையாவன்; அவம் அறுத்து-பாவத்தை நீக்கி, ஆள்கின்ற-தன்னை ஆட்சிபுரிகின்ற, அரசு-மன்னன், ஒரு நல்ல பிதா-ஒரு நல்ல தந்தையாவன்; ஆபத்து வேளைதன்னில் - அபாயமுற்ற காலத்தில், அஞ்சல் என்று - பயப்படாதேயென்று, உற்ற - அவ்வாறு வந்து பொருந்திய, துயர் தீர்த்துளோன் - துன்பத்தை நீக்கியிருப்பவன், ஒரு பிதா - ஓர் அப்பனாவான்; அன்பு உள்ள - விசுவாசமுடைய, முன்னோன்-தமையன், ஒரு பிதா - ஓர் அப்பனாவான்; கவளம் இடும் - சோற்றுத்திரளையை வட்டிக்கின்ற, மனைவியை-தன் இல்லாளை, பெற்றுளோன் - ஈன்று தனக்கு மணஞ்செய்து கொடுத்திருப்பவன், ஒரு பிதா-ஒரு தந்தை

யாவன்; கலி-தரித்திரத்தை, தவிர்த்தவன் - நீக்கியவன், ஒரு பிதா-ஒரு தந்தையாவன்; (ஆதலின்) காசினியில் - இப்பூமியில், இவரை-இவர்களை, நித்தம் - தினந்தோறும், பிதா என்று - தந்தையர் என்று, உளம் - மனதில், கருதுவது - நினைப்பது, நீதியாகும்-ஒழுங்காகும்.

(வி - ரை.) மானிடனாகிய ஒருவன், ஒரு தந்தையின் தவத்தாற் பிறந்து, பாலப்பருவத்தில் ஆகாராதிகளால் இடையூறின்றி வளர்ந்து, உரிய பருவத்தே கல்விகற்று, ஞானோபதேசம் பெற்று, அரசரால் தீங்கு நீக்கி ஆளப்பட்டு, தக்க துணைவரால் ஆபத்துக்கள் நீங்கப்பெற்று, தமையன்முதலிய சகோதரர் உதவிபெற்று, நல்ல மனைவியை யடைந்து, மாமனாலும் அன்பு செலுத்தப்பெற்று, நல்லோருதவியால் தரித்திர நீங்கிச் செல்வ முடையனாய் வாழ்ந்தால் மாத்திரமே அவன் மானிடப் பிறப்பைச் சார்ந்தவனாவான். இத்தகையருதவியின்றித் திரிவோன் மனிதவகுப்பைச் சார்ந்தவனாகமாட்டான்; ஆதலின் ஒருவனை மனிதத்தன்மை யடையும்படி செய்பவராகிய அவனைப் பெற்றோனையும், வளர்த்தவனையும், அவனுக்கு வித்தை கற்பித்தவனையும், ஞானோபதேசஞ் செய்தவனையும், அவனை அவமறுத்தாளு மரசனையும், அவனுக்கு ஆபத்துவேளையிற் றுயர்தீர்ப்பவனையும், அவன் தமையனையும், மாமனையும், அவன் வறுமை தீர்த்தோனையும் அவனுக்குப் பிதாக்களெனக் கூறினார் ஆசிரியர். 'மனிதனுக்கு' என்னுஞ் சொல் முதலில் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. ஞானோபதேசமானது முத்தியிற் சேர்க்கத்தக்க தாகலின், அதனைச் செய்தவன் எல்லோரினுஞ் சிறந்தவனென்பது தோன்ற, 'சற்குரு' என்றார். 'சற்குரு' என்பதற்கு, 'நல்லாசிரியன்' என்பது பொருள். முன்னோன் - தனக்கு முதலிற் பிறந்தவன்; தமையன். மதி அரவு என்பவற்றில் இரண்டனுருபுகளும், எண்ணும்மைகளும் தொக்கன. விமலர் - மலமற்றவர். குமாரக்கடவுள், சிவபெருமானுக்கும் ஒருசமயம் பிரணவப்பொருளைச் செவியிற் புகமொழிந்தவராதலின் அவரை, 'குருபரா' என்றார் ஆசிரியர். (சு)

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவறு திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும விடந்தனில்
விண்டுவின் களையிருக் கும்
விண்டுவின் களைபூண் டிருக்கும விடந்தனின்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்
வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சத்தியம் - மெய்ம்மையை விட்டு, தவறு திருப்பவ ரிடத்தினில் - நீங்காதிருப்பவர்பால், திருமாது - பொன்மகள், சார்ந்து இருக்கும் - எப்பொழுதும் பொருந்தியிருப்பாள்; திருமாது - அந்த இலக்குமி, சந்ததம் - தினந்தோறும், இருக்கும் அவ் விடந்தனில் - தங்கும் அவ்விடத்திலே, தனது - அந்தத் திருமகளினுடைய, பாக்கியம் - சம்பத்தானது, இருக்கும்-தங்கும்; மெய்த்து - அங்ஙனம் மெய்ம்மையானதாக, வரு - வளர்கின்ற, பாக்கியம் இருக்கும் - செல்வம் தங்கும், அவ்விடந்தனில் - அவ்விடத்திலே, விண்டுவின் - மகாவிஷ்ணுவின், களை - சாயையானது, இருக்கும்-தங்கும்; விண்டுவின் - அந்த விஷ்ணுவினுடைய, களை பூண்டு-காந்தி பொரு

ந்தி, இருக்கும் அவ்விடந்தனில் - தங்குகின்ற அந்த ஸ்தானத்திலே, மிக்கான - மிகுதியான, தயை - கருணை, இருக்கும் - தங்கும்; பத்தியுடன் - விசுவாசத்துடனே, இனிய - இனிமையாகிய, தயை உள்ளவரிடந்தனில் - கருணை பொருந்தியவரிடத்திலே, பகர் - உயர்வாகச் சொல்லப்படுகின்ற, தருமம் - அறமானது, மிக இருக்கும் - அதிகமாகத் தங்கும்; பகர் - அங்ஙனம் கூறப்படுகின்ற, தருமம் உள்ளவரிடந்தனில் - அறம் பொருந்தியவரிடத்திலே, சத்துருபலாயன - பகைவர் நிலைகுலையும்படியான, திறல் - வெற்றியானது, இருக்கும் - குடிகொண்டிருக்கும்; இசை மிகுந்த - கீர்த்தி மிக்க, திறல் வைத்துள்ளவரிடத்தில் - வெற்றியைத் தம்மிடத்தே வைத்திருக்கின்றவரிடத்தில், வெகு மன்னுயிர் - அநேகமாகப் பொருந்திய சீவர்களெல்லோரும், சிறக்கும் - சிறப்புற்று வாழ்வார்கள்.

(வி - ரை.) மெய்ம்மை யுடையாரிடத்தில் திருமாது சேர்வள்; அங்ஙனம் அவள் சேரவே, அவளா லேற்படுஞ் செல்வம் தானே வந்து சேரும்; அங்ஙனம் பாக்கியஞ் சேரவே அத்திருமகட்குரிய நாயகனாகிய மகாவிஷ்ணு அங்குத் தானே வந்து சேர்வதால் அவனுடைய காந்தியானது பிரகாசித்துக்கொண்டிருக்கும்; அங்ஙனம் விஷ்ணுவின் ஒளி பரவவே அவன் காத்தற்கடவுளாதலின் அவனுக்குரிய தயாகுணமானது தானேவந் தவண் குடிபுகும்; அங்ஙனம் தயைவந் தெய்தவே அத்தயையினால் தருமம் வந்து நிலைபெறும்; அங்ஙனம் தருமந் தங்கவே அவ்வறத்தின் பயனாகச் சத்துரு சங்கார வெற்றிவந்து குடியேறும்; அங்ஙனம் வெற்றி மிகவே எல்லா வுயிர்களும் தீங்கின்றி வாழு மியல்புண்டாம். இவ்வகைத் தன்மைகளையெல்லாம் பெறவே அங்ஙனம் பெற்றோர் முடிவில் அழியாப் புகழ் பெற்று நற்கதி யடைவர். இவற்றிற் கெல்லாம் முதற்காரணம் சத்தியமே யாதலின், இத்தகைய நிலைமைகளை யடைய விரும்புவோர் மெய்ம்மையை அவசியந் தேடல்வேண்டுமென்பது இதன்

கருத்து. "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே," என்ற விதிப்படி, 'திருமாது' என்னும் பெண்பாற் படர்க்கைப்பெயர், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றாகிய, 'இருக்கும்' என்பதனைக் கொண்டு முடிந்தது. மெய்த்து - உண்மையானது; மெய் - பகுதி. து - அஃறிணையொன்றன்பாற் படர்க்கைவிகுதி, த் - சந்தி, 'வைத்திசை மிகுந்த திறலுள்ளவர்' என்பதை, 'இசை மிகுந்த திறல்வைத் துள்ளவர்' என மாற்றுக. உயிர் என்பது ஆகுபெயராய் உயிருள்ள சீவர்களை யுணர்த்திற்று. உயிர் என்னும் அஃறிணைப்பெயர்க் கேற்ப, 'சிறக்கும்' என்று அஃறிணைமுடிபாற் கூறினர். உயிர் என்பதை ஆகுபெயராக்கிச் சீவர்கள் என உயர்திணைப் பலர்பாலாகப் பொருள் கூறினமையின் அதற்கேற்ப, 'சிறக்கும்' என்பதற்கு, 'சிறப்புறுவார்கள்' எனப் பொருளுரைத்தாம். (எ)

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளேதெய்வ
  மன்பான மாணுக் கருக்
கரியகுரு வேதெய்வ மஞ்சினோர்க் காபத்
  தகற்றினோ னேதெய்வ மாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
  கணவனே மிக்க தெய்வங்
காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
  காக்குமன் னன்தெய்வ மாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வ
  முயர்சாதி மாந்தர் யார்க்கு
முறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ளபேர்க்
  குற்றசிவ பத்தர் தெய்வம்

மாதயைபி ஞற்சூத் திரர்க்குமறை யோர்தெய்வம்
வானவர்க் குத்தெய்வ நீ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஆதுலர்க்கு - தரித்திரர்களுக்கு, அன்னம் கொடுத்தவர்களே - சோறளித்தவர்களே, தெய்வம் - தெய்வமாவர்; அன்பான - பக்தியையுடைய, மாணுக்கருக்கு - வித்தியார்த்திகளுக்கு, அரிய - அருமையாகிய, குருவே - ஆசிரியனே, தெய்வம் - தெய்வமாவன்; அஞ்சினோர்க்கு- இடையூற்ருற் பயந்தவர்களுக்கு, ஆபத்து- அவ்விடையூற்றை, அகற்றினோனே - தீர்த்தவனே, தெய்வமாம் - கடவுளாவன்; காதல் உறு - கணவன்மார் பிரியங் கொள்கின்ற, சற்புடைய - பதிவிரதா தன்மத்தையுடைய, மங்கையர் தமக்கெல்லாம்- மாதர்களெல்லோருக்கும், கணவனே - நாயகனே, மிக்க தெய்வம் - மிகுந்த தெய்வமாவன்; காசினியில் - இப்பூவுலகத்தில், மன் உயிர் தமக்கெல்லாம் - நிறைந்த சீவர்களெல்லோருக்கும், குடி மரபு-குடித்தனக்காரர் வமிசங்களை, காக்கும் - பாதுகாக்கின்ற, மன்னன் - அரசனே, தெய்வமாம் - கடவுளாவன்; ஓது அரிய - நன்மைகளை அளவிட்டுச் சொல்வதற் கரியனவாகிய, பிள்ளைகட்கு-குழந்தைகளுக்கு, அன்னை தந்தையர் - மாதாபிதாக்களே, தெய்வம் - தெய்வமாவர்; உயர் சாதி - உயர்ந்த வகுப்பிற் பிறந்த, மாந்தர் யார்க்கும் - மனிதர்களெல்லோருக்கும், உறவின் முறையார் - பந்துக்களே, தெய்வம் - கடவுளாவர்; விசுவாசம் உள்ளபேர்க்கு - அடியார்பக்தி யுள்ளவர்களுக்கு, உற்ற - சன்மார்க்கத்திற் பொருந்திய, சிவபத்தர் - சிவனடியார்களே, தெய்வம் - தெய்வமாவர்; சூத்திரர்க்கு - நான்காவது வருணத்தவர்க்கு, மா - சிறந்த, தயையினுல் - கிருபையைச் செலுத்துவதினுலே, மறையோர் தெய்வம் - வேதியர்களே கடவுளராவர்; வானவர்க்கு - தேவர்களுக்கு, நீ தெய்வம் - நீயே தெய்வமாவாய்.

(வி - ரை.) தரித்திரர்களுக்குப் பசிவேளையில் அன்ன மிட்டவர்கள் அந்தத் தரித்திரர்களுடைய தளர்ச்சியை நீக்கியவராதலின், அந்த ஆதுலர்கள் அவர்களைத் தெய்வம்போலக் கருதவேண்டும்; குரு, மாணுக்கனுக்குச் சன்மார்க்கங்களை யெல்லாம் உபதேசித்து அவனை மேன்மையடையச் செய்வதனாலே அந்த மாணுக்கன் குருவைத் தெய்வமெனப் பாவிக்கவேண்டும்; துன்பத்தால் பயந்தவர்களுக்கு ஆபத்தை நீக்கினவர்கள், சுகவாழ்வு தந்த தலைவரா யிருப்பதனாலே அவர்களால் அங்ஙனம் துன்பம் நீங்கி நன்மை யடைந்தவர்கள் அவர்களைத் தெய்வமென்றே கொள்ளவேண்டும். கற்புடைய மங்கையர்க்குப் புருஷரே எல்லா விஷயத்திலும் துணைவரா யிருப்பதனாலே அவர்களே தெய்வமாவர்; "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை," என்ற திருக்குறளால், கற்புடைய மங்கையர் கணவனைத் தெய்வமாகக் கருதவேண்டுமென்பது புலப்படும்; அரசன், மனிதர்க்கு வருந் துன்பங்களை யெல்லாம் நீக்கி அவர்களை ஆளக்கூடியவனாதலினாலே சீவர்களுக்கெல்லாம் அவனே தெய்வமாவான்; தாய் தந்தையர் பிள்ளைக்கு எவ்வகைத் துன்பமும் வராமல் உணவூட்டி அரும்பெரும்பிரயாசையுடன் அவனை வளர்க்கக்கூடியவ ராதலின், அவன் அவர்களைத் தெய்வமாகக் கொள்ளவேண்டும்; உயர்குலத்தவர்களுக்கு, அச்சாதியிலுள்ள சுற்றத்தார் மிகவும் ஒற்றுமையுடையராய் ஆபத்துவந்த காலத்தில் பேருதவி செய்வார்க ளாதலால், அவர்களே தெய்வமாவர்; குலவொற்றுமையுள்ள சாதியார்கள், தங்களைச் சார்ந்த ஒருவனுக்குத் துன்பம் வந்தால் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவ்வாபத்தை நீக்கி அவனைக் காப்பாற்றுவர்; எச்சாதியா யிருந்தாலும் இவ்வகைக் குணமுடைய சாதியே சிறந்ததாம்; அதுபற்றியே, 'உயர்சாதி மாந்தர்யார்க்கும்', என்று கூறினர் ஆசிரியர். இதனால், உயர்ந்த சாதியிற் பிறந்தவரே சுற்றவொற்றுமையுட னிருப்பாரென்பதும், மற்றையர் நாய்களைப்போலச் சுற்றப் பகையுடையரா யிருப்பரென்பதும் விளங்

கும். சிவநேயச் செல்வர்களுக்குச் சிவனடியார்களே அச்சிவனைப் போன்று எல்லா நன்மைகளையுந் தரக்கூடியவரா யிருத்தலினாலே அவர்களையே அச்சிவபக்தர்கள் தெய்வமாகக் கருதி அவர்களுக்குத் தொண்டு புரியவேண்டும். மறையோர், சூத்திரர்களுக்குச் சாஸ்திர வுண்மைகளைக் கூறுவதனாலும், சுபகாரியங்களை நடத்தி வைப்பதனாலும், வரும் நன்மை தீமைகளை விளக்கிக் காட்டுவதனாலும், தேவ பூசனை முதலியவற்றைச் செய்விப்பித்தலானும் அவர்களே தெய்வமாவர். சுப்பிரமணியர் தேவசேனாதிபதியாய்ச் சூரன் முதலியோரை நாசப்படுத்தித் தேவர்களுக்கு வந்த துன்பங்களை யெல்லாம் ஒழித்து அவர்களைக் காப்பாற்றியவ ராதலினாலே அவரே அத்தேவர்களுக்குத் தெய்வமாவார். கற்பு - தொழிற்பெயர்; கணவனுடைய ஆணைவழி நிற்றலைக் கற்றுக்கொள்ளுதல் என்பது இதன் பொருள்; 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை,' என்பதனாலும் இஃதுணரப்படும். உறவின்முறையார் - நேயத்தின் ஒழுங்கைச் சார்ந்தவர்கள். பத்தர் - பத்தியை யுடையவர்கள். மறையோர் - வேதத்திற் குரியவர்கள். வானவர்-வானுலகத்தி லிருப்பவர்கள். "மவ்வீ றொற்றொழிந் துயிரீ றொப்பவும், வன்மைக் கினமாத் திரிபவு மாகும்," என்ற சூத்திர விதிப்படி, 'தெய்வம் நீ' என்பதனிடையில் மகரவொற்றுக் கெட்டது. (அ)

இவர்க்கிது நினைவெனல்.

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லேநினைவு
நல்லறிவு ளோர் தமக்கு
நாடோறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னி னினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
வஞ்சாத திருடருக் கிங்

கனுதினங் களவிலே நினைவுதன வணிகருக்
காதாய மீது நினைவு
தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தனினினைவு கற்ப வர்க்குத்
தருகல்வி மேனினைவு வேசியர்க் கினியபொரு
டருவோர்கண் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமே னினைவெற்கு
மாறுதன் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஞானநெறியாளர்க்கு-உண்மையறிவு மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கு, மோக்ஷத்திலே-முத்தியிலே, நினைவு - ஞாபகமாய்; நல் அறிவு உள்ளோர் தமக்கு - நன்மையான விவேகத்தை யுடையவர்களுக்கு, நாள்தொறும் - தினந்தோறும், தருமத்திலே - அறஞ் செய்வதிலேயே, நினைவு - எண்ணமாம்; மன்னர்க்கு - உலகத்தை ஆளும் அரசர்க்கு, ராச்சியந்தன்னில் - இராஜாதிகாரத்தில், நினைவு-கருத்தாய்; ஆன - மனத்தி லெழுந்த, காமுகருக்கு - பெண் விருப்புடையார்க்கு, மாதர்மேலே நினைவு-பெண்களின்மீதிலேயே ஞாபகமாம்; உள் - மனதிலே, அஞ்சாத - சாவுக்கும் அவமானத்திற்கும் பயப்படாத, திருடருக்கு - கள்ளருக்கு, இங்கு - இவ்வுலகத்திலே, அனுதினம் - தினந்தோறும், களவிலே - சோரத்தொழில் புரிவதிலேயே, நினைவு-எண்ணமாம்; தனம் - திரவியத்தையுடைய, வணிகருக்கு - வியாபாரத் தொழிலுடைய வைசியர்க்கு, ஆதாயமீது - வியாபாரத்தில் வரும் இலாபத்தில், நினைவு - எண்ணமாம்; தானம் மிகு - ஈகை மிகுந்த, குடியாளருக்கெல்லாம் - பயிர்த்தொழில் செய்யும் குடித்தனக்காரர்க ளெல்லோருக்கும், வேளாண்மைதனில் - பயிர்த் தொழில் செய்து பலர்க்கும் உபகாரிகளா யிருப்பதிலேயே, நினைவு-

எண்ணமாம்; கற்பவர்க்கு - நூல்களைப் படிப்போர்க்கு, தகு கல்வி மேல் - ஒதத்தகுந்த படிப்பின்மேலேயே, நினைவு - எண்ணமாம்; வேசியர்க்கு - பரத்தையர்க்கு, இனிய - இனிமையாகிய, பொருள் தருவோர்கள்மீது - திரவியங்கொடுப்பவர்கள்மேல், நினைவு-சிந்தனையாம்; மானபரனுக்கு - பெருந்தன்மையான செய்கையை யுடையவனுக்கு, மரியாதைமேல் - ஒழுக்கத்தின்மேலே, நினைவு - எண்ணமாம்; எற்கு - எனக்கு, உன்மீது-நின்மேல், மாறாது நினைவு - நீங்காமல் எண்ணமாம்.

(வி - ரை.) மோக்ஷ விருப்புடையவர்களுக்கு உலகத்திலுள்ள மற்றவைகளெல்லாம் நிலையற்றனவாகத் தோற்றுமாகலின், அவர்கள் நிலையற்ற பொருள்களிற் சிந்தனையின்றி நிலைத்த இன்பமாகிய மோக்ஷத்திலேயே நினைவு வைத்துக்கொண்டிருப்பார்கள். நல்லறிவுள்ளோர்க்குத் தருமத்தைத் தவிர உலகத்திற் சிறந்த வேறு பொருளில்லையென்பது தோற்று மாதலின் அவர்கள் அறத்தைத் தேடுவதிலேயே சிந்தையைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். மன்னர் எல்லாச் சுகங்களையும் அடைதற்கு இராஜ்ஜியமே முக்கிய காரணமாயிருத்தலால் அவர்கள் அந்த அரசை நிலைநிறுத்துவதிலேயே நினைவு வைத்துக்கொண் டிருப்பார்கள். பெண் விருப்புடையவர்களுக்கு அதுவே உலகத்திற் சிறந்த இன்பமாகத் தோற்றுமாதலின், அவர்கள் வேறொன்றிலும் சிந்தையைச் செலுத்தாமல் பெண்கள் பேரிலேயே மனதைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். திருடர்களுக்கு வேறு சன்மார்க்கங்களில் எவ்வளவு பொருள் கிடைப்பினும் அவர்கள் திருப்தி யடையமாட்டார்கள்; திருட்டால் வரும் பொருளே அவர்களுக்குச் சந்தோஷத்தைத் தரக்கூடியதாயிருக்கும்; ஆதலின், அவர்கள் அந்தத் திருட்டுத் தொழிலிலேயே சிந்தை வைத்துக்கொண்டிருப்பார்கள். வணிகர்க்கு வியாபாரத்தில் கிடைக்கும் இலாபமே சிறந்ததாகத் தோற்றுமாகலின், அவர்கள் மேலும் மேலும் நல்ல

வியாபாரங்களைச்செய்து பொருளீட்டுவதிலேயே மனதைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். குடித்தனக்காரருக்கு, பயிர்த்தொழிலே பல தான தருமங்களைச் செய்து மேன்மையடைந்து பிறர் சகாயத்தை எதிர்பாராது வாழ்வதற்கு ஏதுவாயிருத்தலினாலே அவர்கள் அந்த வேளாண்மை செய்வதிலேயே புத்தியைச் செலுத்திக்கொண்டிருப்பார்கள். கல்வி கற்போர்க்கு அதுவே இம்மை மறுமைப் பயன்களை யடைவிக்கக் கூடியதாய்த் தோற்றுமாகலின், அவர்கள் அந்தக் கல்வியை மேலும் மேலும் கற்றுக்கொள்வதிலேயே விருப்பம் வைத்திருப்பார்கள். வேசியர்க்குப் பிறரிடமிருந்து கவரும் பொருளே தங்கள் ஜீவனத்திற் கேதுவாயிருத்தலால் அவர்கள் அங்ஙனம் பொருள் கொடுப்போரையே தேடிக்கொண்டிருப்பார்கள். மானமுடையோனுக்குத் தன்னுடைய ஒழுங்கு தவறின் மானக்கேடுண்டாகுமாதலின், அவன் அந்த ஒழுக்கத்தை விடாமல் காப்பாற்றுவதிலேயே மனதைச் செலுத்திக்கொண்டிருப்பான். இந்நூலாசிரியர் சுப்பிரமணியரையே தமக்குரிய மெய்க்கடவுளாக்கிக்கொண்டவராதலின், அவர்க்கு அந்தக் குமாரக்கடவுள்மீதிலேயே இடைவிடாது மனம் பற்றி நிற்கும். ஞானம் - தெளிவு; அதாவது:— இன்னதுதான் நிலைத்த பொருளென்று கொள்ளும் நிச்சயம். ஞானநெறியாவது: அந்த உண்மைப் பொருளின் நிச்சயத்தைப்பற்றிய மார்க்கம். காமுகர் : காம் - பகுதி, அர் -விகுதி, க் - சந்தி, உ - சாரியை. காமம் என்னும் பகுதி அம் விகுதி குன்றிக் காம் என நின்றது. இதில், உகரச்சாரியை யின்றிக் காமு என்பதே ஏவற்பகுதியெனவுங் கொள்ளலாம்; இங்ஙனங் கொள்ளின் காமுதல் என்ற தொழிற்பெயர் தல்லீறு கெட்டு முதனிலைத் தொழிற்பெயராய் காமு என்னும் பகுதியாய் நின்றது என்க. காமுகர் என்பதற்குக் காமுதலையுடையார் என்பது பொருள். மாதர்-விருப்பத்தை யுடையவர்கள்; மாது - விருப்பம்; அதனையுடையார் மாதர். வேளாண்மை - உபகாரம்; பயிர்த்தொழிலானது பலர்க்கும் உபகாரமுடையதாதலின்

உபகாரமெனப் பொருள்படும் வேளாண்மையென்னும் பெயரானது ஆகுபெயராய் அப்பயிர்த்தொழிலை விளக்கிற்று. கல்வி - தொழிற் பெயர். 'எனக்கு' என்பது, 'எற்கு' எனத் திரிந்து வந்தது; இதில் என் - பகுதி, கு - விகுதி, விகாரத்தால் னகரம் றகரமாயிற்று. (க)

இன்னவர்க் கின்ன தில்லையெனல்.

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை
வேந்தற்கு நன்றி யில்லை
மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமிலை
மிலேச்சற்கு நிறைய தில்லை
ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்கு
ளகமில்லை மூர்க்கன் றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற்
கழகில்லை சித்த சுத்தன்
பூசைக்கு நிலங்க சுத்தியிலை யாவுமுணர்
புலவனுக் கயலோ ரிலை
புல்லனுக் கென்றுமுசி தானுசித மில்லைவரு
புலையர்க் கிரக்க மில்லை
மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக் கிசைந்த வழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மாசைத் தவிர்ந்த - களங்கத்தைவிட்டு நீங்கிய, மதி- சந்திரன்போன்ற, முகம் - முகத்தையுடைய, தெய்வயானையொடு - தெய்வயானையென்னும் பெண்ணுடனே, வள்ளிக்கு - வள்ளி நாயகிக்கும், இசைந்த - நாயகனுகப் பொருந்திய, அழகா - வனப்பை யுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை

மேவு குமரேசனே!—, வேசைக்கு - பரத்தைக்கு, நிசம் இல்லை - உண்மையில்லை; திருடனுக்கு - கள்ளனுக்கு, உறவு இல்லை - சிநேகமில்லை; வேந்தற்கு - மன்னனுக்கு, நன்றி இல்லை - பிறரால் செய்யப்படும் நன்மை இல்லை; மிடியற்கு - பொருளற்ற தரித்திரனுக்கு, விலைமாதர்மீது - பொருட் பெண்டிர்கள்மேல், வங்கணம் இல்லை - சிநேகமில்லை; மிலேச்சற்கு - அறிவீனனுக்கு, நிறையது இல்லை - உறுதிப்பாடில்லை; ஆசைக்கு - பேராசையுள்ளவனுக்கு, வெட்கம் இல்லை - நாணமில்லை; ஞானியானவனுக்குள் - உண்மைப்பொருள் இன்னதென்றறிந்த தெளிவுள்ளவனிடத்திலே, அகம் இல்லை - அகங்காரமில்லை; மூர்க்கன் தனக்கு - ஆங்காரமுடையவனுக்கு, அன்பு இல்லை - எவ்விடத்தும் கருணையில்லை; காமிக்கு - பெண்ணாசை அதிகமாகவுள்ளவனுக்கு, முறை இல்லை - வரம்பில்லை; குணம் இல்லோர்க்கு - நற்குண மில்லாதவனுக்கு, அழகு இல்லை - ஒழுங்கில்லை; சித்த சுத்தன் பூசைக்கு - மனத்தூய்மையுடையவனாற் செய்யப்படும் தேவ பூசனைக்கு, நவில் - சாஸ்திரங்களில் அவசியமென்று கூறப்படுகின்ற, அங்கசுத்தி இல்லை - வெளிக்குச் செய்யும் தேகசுத்தி அவசியமில்லை; யாவும் - எல்லாவற்றையும், உணர் - அறிகின்ற, புலவனுக்கு - வித்வானுக்கு, அயலோர் இல்லை - எவ்விடத்திலும் அன்னியரில்லை; புல்லனுக்கு - அற்பனுக்கு, என்றும் - எந்நாளும், உசிதம் அனுசிதம் இல்லை - தகுதியும் தகுதியின்மையும் இல்லை; வரு - உலகத்திலே தோன்றுகின்ற, புலையர்க்கு - நீசருக்கு, இரக்கம் இல்லை - தயாளகுணமில்லை.

(வி - ரை.) வேசை பலரிடத்தும் பொய்யன்பு காட்டிப் பொருள் கவரும் இயற்கையுள்ளவளாதலின் அவள் எல்லா விஷயத்திலும் பொய்யையே கூறுவாள். திருடன் நெஞ்சிரக்கமின்றி எவரிடத்தும் எச்சமயத்திலும் பொருள் கவர்தல் ஒன்றையே பெரிதாக நினைத்துத் திருடும் சுபாவமுடையவனாதலின், அவன் ஒருவரிடத்

தும் உறவு வைக்கமாட்டான்; சிநேகமாயிருக்குமிடத்திலும் திருடுவான். வேந்தர் எல்லாச் செல்வங்களு முடையவராயிருப்பதினாலே அவர்க்குப் பிறர் நன்றி செய்யவேண்டிய அவசியமில்லை; அவர்களே மற்றையர்க்கு உபகாரிகளாயிருப்பர். தாசிகள் பொருள் கொடுப்பார்க்கே வசப்படு மியற்கையுடையவராதலின், பொருளற்ற தரித்திரர்க்கு அவர் நேயம் பெறுதல் அருமையாம். அறிவீனன் எவரிடத்திலும் எவ்விஷயத்திலும் நிலையான பற்றில்லாதவனாய் நிமிஷந்தோறும் மாறி மாறி வெவ்வேறு சிநேகங்கொள்ளு மியல்பினையுடையவனாதலின், அவனுக்கு எப்பொழுதும் உறுதிப்பாடிராது. பேராசைக்காரன் அவமானப்பட்டாயினும் தான் குறித்த பொருளையே பெற விரும்புவானாதலின், அவனுக்கு எவ்விஷயத்திலும் வெட்கமேற்படாது. அகங்காரத்தை விடுதலே ஞானத்திற்கு முக்கிய சாதனமாதலின், ஞானிக்கு எப்பொழுதும் அகங்காரமிராது. அற்ப விஷயத்திற்கும் ஆங்காரங் கொள்ளத்தக்கவன் எப்பொழுதும் கொலை முதலிய கொடுஞ் செய்கைகளையே புரிவானாதலால், அவனுக்குக் கருணையிராது. அடங்கா மோகத்தை யுடையவன், இன்னவரிடம் நெருங்குதல் தகும், இன்னவரிடம் நெருங்குதல் தகாது என்னும் நியாயத்தை யுணராமல் எவரையும் கற்பழிக்கத் துணிவானாதலால் அவன் முறையைப் பெரிதாகக் கருதமாட்டான். நற்குணமில்லாதவன், கெட்ட செய்கைகளையே விரும்பிச் செய்வானாதலின் அவனிடம் ஒழுங்கிராது. பூசனைக்கு மன சுத்தியே சிறந்ததாகலானும், வெளிக்குப் பிறர் மதிக்கச் செய்யும் ஸ்நான முதலிய தேகசுத்தி அவ்வளவு சிறந்ததன்றாகலானும் அவனுக்கு அங்கசுத்தி அவசியமில்லையாம். எல்லா முணர்ந்த புலவன் எங்குச் செல்லினும் ஆங்காங்குள்ள மனிதர்கள் கல்வியின் பொருட்டு அவனோடு சிநேகங்கொண்டு அவனைக் கொண்டாடுவாராதலின் அவனுக்கு எவ்விடத்தும் அன்னியரில்லை; எங்கும் அன்னியரா யிருப்பவரும் சொந்தக்காரர்போலவே அவனுக் குதவிசெய்வர். அற்பனா யிருப்பவன், இன்னது செய்யத்

தகும், இன்னது செய்யத்தகாது என்னும் பகுத்தறிவின்றி எந்தக் கேவலமான செய்கையையும் துணிந்து செய்யக் கூடியவனுதலின், அவன் தகுதியையும், தகுதியின்மையையும் உணரமாட்டான். புலையர் கோவதை, மனிதவதை, பிணஞ்சுடுதல் முதலிய கொடுஞ் செய்கைகளை யுடையவராதலின் அவர்க்கு எப்பொழுதும் இரக்கமிராது. ஆசை-ஆகுபெயர்; இஃது அதனையுடைய மனிதனை யுணர்த்திற்று. கீழ் என்பது கீழ்மக்களை யுணர்த்துவதுபோல இதுவும் பேராசை யுள்ளவனை விளக்கிற்று. உசித, அநுசிதம் - உசிதானுசிதம்; இது, தீர்க்கசந்தி யென்னும் வடமொழிப் புணர்ச்சி. புலை - கொலைத்தொழில், அதனையுடையார் புலையர். மதிமுகம் - உவமத்தொகை. (௧௦)

இப்படிப்பட்டவ ரிவரென்னல்.

நியாயநெறி தவறும லுலகபரி பாலன
நடத்துமவ னேயரச னும்
ராசயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந் திரி
நயமுட னேதன் சரீரத்தை யெண்ணுத
நிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு
நிபுணகவி யேகவிஞ னும்
ஆயதொரு வாகடந் தாதுவி னிதானமு
மறியுமதி யோன் வைத்திய
னகமின்றி மெய்யுணர்ந் தைம்புல னொழித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மாயவர் - திருமாலின், சகோதரி - தங்கையாகிய, மனோன்மணிக்கு - மனத்திலுள்ள உயர்ந்தமணிபோன்ற பார்வதி தேவிக்கு; அன்பான - கருணைநிறைந்த, வர - சிரேஷ்டமாகிய, புத்திர - குமரனே! வடிவேலவா - கூர்மைதங்கிய வேலாயுதத்தையுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, நியாயநெறி - சத்தியமார்க்கத்தினின்றும், தவறாமல் - பிசகாமல், உலகபரிபாலனம் - உலகத்தவரைப் பாதுகாத்தலை, நடத்துமவனே - நடத்துகின்றவனே, அரசனும் - மன்னனுவன்; ராசயோசனை தெரிந்து - இராஜாங்கத்தைப்பற்றிய ஆலோசனைகளை நன்குணர்ந்து, (ஒரு காரியத்தில் செய்யத்தகுந்த) உறுதியாகிய செய்தி - நிலையானகாரியத்தை, நவிலுமவனே - சொல்கின்றவனே, மந்திரி - அமைச்சனுவான்; நேயமுடனே - விருப்பத்துடனே, தன் சரீரத்தை - தன்னுடைய தேகத்தை, எண்ணுத - (போய்விடுமேயென்று) கருதாத, நிர்வாகியே-சாமர்த்திய முடையவனே, சூரனும்-சூரத்தன்மை யுடையவனுவான்; நிலைபெறும் - மனத்தில் உறுதியாகத் தங்குகின்ற, இலக்கணம் - இலக்ஷணநூலும், இலக்கியம் - இலக்கண நூலுக்கிணங்க முன்னோர்தந்த செய்யுட்களடங்கிய நூல்களும், அறிந்து - நன்குணர்ந்து, சொல்லும் - கவிகளைக் கூறுகின்ற, நிபுண கவியே - விவேகம் பொருந்திய வித்வானே, கவிஞனும்-கவி சொல்லும் சாமர்த்தியமுடைய பாவலனுவான்; ஆயது-பெரியோர்களாற் செய்யப்பட்டு உண்டானதாகிய, ஒரு - ஒப்பற்ற, வாகடம் - வைத்திய சாஸ்திரத்தையும், தாதுவின் - நாடிகளின், நிதானமும் - நிச்சயத்தையும், அறியும் - தெரிந்திருக்கின்ற, முதியோன் - விருத்தாப்பியனே, வைத்தியன்-மருத்துவனுவான்; அகம் இன்றி - மனத்தில் அகங்காரமில்லாமல், மெய் உணர்ந்து - உண்மைப்பொருளையறிந்து, ஐம்புலன் - பஞ்ச அறிவுகளையும், ஒழித்துவிட்டவனே - பஞ்சவிஷயங்களிற் செல்லாமல் நீக்கியவனே, மெய்ஞ்ஞானி எனலாம் - உண்மை ஞானியென்று சொல்லலாம்.

(வி - ரை.) அரசர்களுக்குத் தருமநெறி தவறாமல் உலக பரி பாலனஞ்செய்யுந் தன்மைபொருந்தி யிருக்கவேண்டும்; அக்குணமில் லாதார் அரசராகமாட்டார். 'மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்,' என்கிறபடி அரசனுக்கு வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்துணர்ந்து சமயத்தில் அரசனுக்கு நிச்சயமாக ஜெயமுண்டாகத்தக்க காரியங்க ளைக் கூறுவோனே மந்திரியாவன். தேகத்தில் அபிமான முடைய வன் எப்பொழுதும் பயந்தோடுவான்; அதில் அபிமான மில்லாத வனே நிலைத்து நின்று தன்னுடைய சூரத்தன்மையைச் சாதிப்பான். இலக்கண விலக்கிய ஆராய்ச்சி யில்லாமல் தான்றோன்றியாய்க் கவி பாடித் திரிவோனும் கவிப்பிரசங்கம் செய்வோனும் எப்பொழுதும் வித்வானாகமாட்டார்கள்; இவர்கள், பாமர ஜனங்களால் கொண்டா டப்படினும் அறிஞர் கூடிய சபையில் கேட்ட கேள்விக்கு விடை கூறும் ஆற்றலின்றி அவமான முறுவர்; ஆதலின், முறைப்படி இலக்கண விலக்கியங் கற்றவனே வித்வானவன். வைத்தியனுக்கு வாகட சாஸ்திரங்களின் உணர்ச்சி நன்கமைந் திருத்தல்வேண்டும்; தாதுவின் நிதானமும் நிச்சயமாகத் தெரிந்திருக்கவேண்டும்; இன் னும் அவன் விருத்தாப்பியனாகவு மிருத்தல்வேண்டும்; அங்ஙனம் அவன் நூலுணர்ச்சியும், தாதுநிதானமும், விருத்தாப்பிய தசையு முள்ளவனா யிருந்தால் மாத்திரந்தான் வியாதிகளை உண்மையாக வுணர்ந்து நிதானமாக வைத்தியஞ் செய்வான்; அங்ஙனமின்றி வைத்தியன் நூலுணர்ச்சி யில்லாதவனாயும், தாதுநிதான மறியாதவ னாயும், பாலியனாயுமிருந்தால், வியாதியின் தன்மையை உணராமல், எதையும் அவசரப்பட்டுச் செய்து தீங்கை யுண்டாக்கிவிடுவான். மெய்ஞ்ஞானியா யிருப்பவன் ஐந்தறிவுகளை மடக்கி அகங்காரத்தை யொழித்துவிடவேண்டும்; அங்ஙன மவற்றை அடக்காமல் பொய்ச் சாமியார் வேடம் பூண்டிருப்பவன் ஒருபோதும் ஞானி யாகமாட் டான்.

உலகம் - ஆகுபெயர்; இதற்கு உலகத்தவர் என்பது பொருள். இலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இவை

ற்றி னியல்புகளைக் கூறும் நூல். இலக்கியம்-இலக்கண நூலிற்குப் பொருத்தமாக முன்னோர் செய்த செய்யுட்க ளடங்கிய நூல். கவி - ஆகுபெயர்; இது கவி சொல்வோனாகிய வித்வானை யுணர்த்தும். கவிஞன் : இதில் கவி - பகுதி, அன் - ஆண்பாற்படர்க்கை விதி, ஞ் - பெயரிடைநிலை. ஆகியவென்பது நடுக்குறைந்து ஆய என நின்றது. முதுமையன் என்னும் பண்படியாகப் பிறந்த ஆண்பாற் படர்க்கைப் பெயர் முதியன் என விகாரப்பட்டு வந்தது. 'குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி, மிகலுமாம்..." என்கிற விதிப்படி மெய்ஞ் ஞானி யென்பதில் ஞகரமெல்லொற்று மிக்கது. மன உன்மணி யென்பது மனோன்மணி யென்றாயது; இது வடமொழிப் புணர்ச்சியாகிய குணசந்தி யெனப்படும். மனம்-மனத்திலுள்ள, உன்மணி - உயர்ந்தமணி; இதற்கு மனத்தில் உன்னத்தக்க மணியென்றும் பொருள் கூறலாம். (கக)

விரைந்தடக்கத்தகுவன விவையெனல்.

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளைவளர் பயிர்கொள் களையை
யஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை
யகிர்த்தியப் பெண்க ளார்ப்பைக்
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமையைக்
களவுசெய் யுந் திருடரைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக்
கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யவையுதா சீனத்தை
வினைமூண்டி டுஞ் சண்டையை
விஷமேறு கோரத்தை யன்றடக் குவதலான்
மிஞ்சவிட லாகாது காண்

மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
    மணஞ்செய்த பேரழக னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மைக்கு இனிய-அஞ்சனம் சேர்ந்திருப்பதற்கினிய விடமாகிய, கண்ணி-கண்களையுடையவளாகிய, குறவள்ளி - வேடர் குலத்திற் பிறந்த வள்ளிநாயகியையும், தெய்வானையை - தெய்வயானையையும், மணம் செய்த-கலியாணம் புரிந்துகொண்ட, பேரழகனே - பெருமையான அழகு தங்கியவனே !, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே !—, அக்கினியை - பொருள்களில் பற்றி யெரியும் நெருப்பையும்; வாய் முந்து-கெட்ட வார்த்தைகளைப் பேசுவதற்கு வாய்முன்னேறுகின்ற, துர்ச்சனரை - துஷ்டரையும்; வஞ்சமனையாளை-சூதான எண்ணத்தையுடைய இல்லாளையும்; வளர் - விருத்தியாகின்ற, பயிர் கொள் களையை-பயிர்கள் கொண்டிருக்கின்ற புற்களாகிய குற்றங்களையும்; அஞ்சா - பயப்படாத, விரோதிகளை - பகைஞரையும்; அனியாய மூண்டயோரை - நியாயமற்ற பாவிகளையும்; அகிர்த்தியப் பெண்கள்-கெட்ட செய்கையையுடைய மாதர்களின், ஆர்ப்பை - இரைச்சலையும்; கைக்கு இனிய- உதவி செய்வதால் கரங்களுக்கு இனிமையாகிய, தொழிலாளியை - கிராமத் தொழிற்காரனையும்; கொண்ட - ஊழியக்காரனுகப் பெற்றுக்கொண்ட, அடிமையை - தொண்டுசெய்வோனையும்; களவு செய்யும் - சோரம் புரியும், திருடரை - கள்வரையும்; கருதிய-மனத்தால் நினைக்கப்பட்ட, விசாரத்தை-கவலையையும்; அடக்கம் இல் - ஒழுக்கமில்லாத, பலிசையை - பூத்தவளாகிய சிறு பெண்ணையும்; கடிது ஆன - கொடுமையாகிய, கோபந்தனை - வெகுளியையும்; மெய்க்கு- தேகத்திற்கு, இனிது அல்லா - சுகமாகாத, பிணியை - நோயையும்; அவை உதாசீனத்தை - சபையில் தூஷணமாகப் பேசுதலையும்; வினை - தீவினையானது, மூண்டிடும்-அதிகரிக்கும், சண்டையை -

யுத்தத்தையும்; விஷம் எறு - விடமானது அதிகரிக்கின்ற, கோரத்தை - கொடுமையையும், அன்று-உண்டான அப்பொழுதே, அடக்குவது அல்லால்-அடக்கிவிடுவதல்லாமல், மிஞ்சவிடலாகாது-அதிகரிக்கும்படி விட்டுவிடலாகாது. (அங்ஙனம் விடின் தீங்குண்டாகும்.)

(வி-ரை.) நெருப்பொன்றிற் பற்றினால் அதனை உடனே அவிக்காவிடில் ஊரையெல்லாம் பற்றி யெரிக்கும். வாய்த் துடுக்காகப் பேசும் துஷ்டர்களை உடனே அடக்காவிடின் அவர்கள் அகங்கரித்து மேன்மேலும் தீங்கையே செய்துகொண்டிருப்பார்கள். வஞ்சகம் பொருந்திய மனையாளை அடக்காவிடின் அவள் கெட்டகாரியங்களை மிகுதியாகச் செய்து கணவனுக்கு அபகீர்த்தியை உண்டாக்குவாள். பயிரிற் பற்றிய களையை ஆரம்பத்திலேயே நீக்காவிடில் அது மிகுந்து பயிரை மீறவொட்டாமல் அழித்துவிடும். பகைவரை அவர் பலப்படுவதற்கு முந்தியே அடக்கிவிடவேண்டும்; அங்ஙனம் அடக்காவிடின் அவர்கள் நாளடைவில் பலப்பட்டுத் தீங்கு புரிவர்; பின்னர் அவர்களை வெல்லுதல் அரிதாம். அனியாயக்காரர்களை உடனே அடக்காவிட்டால் அவர் பலர்க்கும் தீங்கியற்றி உலகத்திற்கே மிக்க கேட்டை விளைவிப்பார்கள். அகிர்த்தியமுடைய பெண்கள் கூடிய விடத்தில் வாய்ச்சண்டையே மிகுந்திருக்கும்; அங்ஙன மவர்கள் இரைச்சலிடுவதை உடனே அடக்காவிடின், பலவித தாழ்ந்த வார்த்தைகளைப் பேசி புருஷருக்குக் கேவலத்தை யுண்டாக்குவார்கள். கிராமத் தொழிற்காரனை மிஞ்சவிடாமல் அடக்கிக்கொண்டே வர வேண்டும்; அங்ஙனமின்றி அவனை மிஞ்சவிடின், சமயத்தில் ஆக வேண்டிய வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்கமாட்டான்; அதனால் குடித்தனக்காரருக்குப் பயிர்த்தொழில் செய்வதற் கிடையூறுண்டாகும். அடிமைக்காரனை அடக்கிக்கொண்டே வரவேண்டும்; அங்ஙனம் அடக்கிவராவிடின், அவன் எஜமானனுக் கடங்கிப் பணி புரியமாட்டான். திருடர்களை அகப்பட்டசமயத்தில் அடக்கிவிடவேண்டும்;

அவ்விதம் அடக்காவிட்டால் அவர்களுடைய திருட்டுத் தொழில் விருத்தியடைந்து அதனுல் பலர்க்கும் கேடு விளையும். மனத்தி லெழும் விசாரத்தை அப்பொழுதே அடக்காவிட்டால் அது நிமிஷத்திற்கு நிமிஷம் விருத்தியடைந்து எத்தொழிலையும் செய்யவொட்டாமல் வேதனை செய்துகொண்டேயிருக்கும். மங்கைப்பருவ மடைந்தும் அடக்கமில்லாமல் திரியும் சிறு பெண்ணை அடக்கிக்கொண்டே வரவேண்டும்; அங்ஙனமின்றி அவளைச் சுயேச்சையாகத் திரியவிடின் அவள் இச்சைபோல் வியபிசாரம் முதலிய கெட்ட தொழில்களிற் பிரவேசித்துச் சுற்றத்தவர்க்கும், பெற்றவர்க்கும் இழிவையுண்டாக்குவாள். கோபத்தை யடக்காவிட்டால் கொலை முதலிய கொடுஞ் செயல்களுண்டாய் உயிர்க்கு அபாயத்தை விளைவிக்கும். தேகத்திலுண்டான பிணியை உடனே அவுடதப் பிரயோகஞ்செய்து நீக்காவிடின் அது விருத்தியடைந்து தான் பற்றியவனைக் கொல்லும். சபையில் உதாசீனமாகப் பேசுதலை உடனே ஒழித்துவிடல்வேண்டும்; அங்ஙனம் நீக்காவிடின், பல பெரியோர்களின் பகை யேற்பட்டுத் தாழ்வுண்டாகும். கொலை முதலிய பாவச்செய்கைகளுண்டாகும் சண்டையையும் உடனே நீக்கவேண்டும்; அங்ஙன மதனை நீக்காவிடின் பல தீங்கு விளைவதற் கேதுவுண்டாகும். விஷம் ஏறுகின்ற கொடுமையை உடனே நீக்கிப் பரிகாரஞ் செய்யாவிடின் உயிர்க் கிறுதியுண்டாம். ஆதலின், இவற்றையெல்லாம் விரைந்தடக்கவேண்டுமென்றார் ஆசிரியர். இச்செய்யுளில் உயர்திணையும், அஃறிணையும் விரவி வந்திருப்பினும், "திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும், மிகவினு மிழிபினு மொருமுடி பினவே," என்னும் நன்னூற் பொதுவியற் சூத்திர விதிப்படி இழிவு குறித்து இங்கே 'இவற்றையெல்லாம்' என அஃறிணை முடிபாக வரைந்தாம். இது பற்றியே இச்செய்யுளின் தலை யங்கமும், 'விரைந்தடக்குவன இவை யெனல்,' என்று எழுதப்பட்டது. கிர்த்தியம் - செய்கை; அகிர்த்தியம் - செய்கையல்லாதது; அதாவது, கெட்ட செய்கை. தொழி

ளாளி யென்றது, கொல்லன், தச்சன், தோட்டி, மடையன் முத லிய கிராமத்தொழிலாளிகளை; இத் தொழிலாளிகள் பலராயினும், எல்லோரும் ஒரு கூட்டத்தவராயிருக்கும் ஒற்றுமைபற்றி, 'தொழி லாளி' என ஒருமைப்படக் கூறினர்; இது ஜாதி யொருமையெனப் படும். கிராமத்தொழிலாளிகள்: கொல்லன், தச்சன், குயவன், அம்பட்டன், வண்ணான், தோட்டி, மடையன், காவற்காரன், அம் பலக்காரன் என்னும் ஒன்பதின்மருமாவர்; இவர் ஒன்பது கூற்றர் எனப்படுவார்; ஒன்பது கூற்றர் - ஒன்பதுவகைப் பங்காளிகள்; கிரா மத்தில் வரும் சுதந்தர வரும்படியை இவ் வொன்பதின்மரும் பங் கிட்டுக்கொள்ளக்கூடியவர்கள். இவர்கள் ஒன்பதின்மராயினும் ஒற் றுமைபற்றிக் கிராமங்களில், 'ஒன்பது கூற்றன் சுதந்தரம்,' என்ற ஒரு சொல் ஒருமையாகவே வழங்கிவருகின்றது; இவ்வழக்கத்தைப் பாண்டிநாட்டிற் காணலாம். இவ்வழக்கம் பற்றியே ஆசிரியரும், 'தொழிலாளி' என ஒருமையாகக் கூறினரென்க. அடிமை - ஊழி யத்தொழில்; இஃதாகு பெயராய் அதனையுடைய மனிதனை யுணர்த் திற்று. 'பலிதை' என்பது மொழியிறுதித் தகரத்துக்குச் சகரம் போலியாய், 'பலிசை' என வந்தது; பலிதை-பலித்தலையுடையவள்; அதாவது: பூத்தவள்; பூத்தவள் என்பதற்கு ருதுவானவள் என்பது பொருள், பலி - பகுதி, ஐ-விகுதி, த் - சந்தி. (கஉ)

இவர்க்கிது துரும்பெனல்.

தாராள மாகக் கொடுக்குந் தியாகிக
 டமக்குநற் பொரு டுரும்பு
தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
 தளமெலா மொரு துரும்பு
பேரான பெரியருக் கற்பரது கையினிற்
 பிரயோச னந் துரும்பு

பெரிதான மோக்ஷசிந் தனையுள் ளவர்க்கெலாம்
பெண்போக மொரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்த னொரு துரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாராரு மணிகொள்தன வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடி வேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) வார் ஆரும் - கச்சுப்பொருந்திய, மணி கொள்-முத்து மாலையைக்கொண்ட, தனம் - கொங்கைகளையுடைய, வள்ளி தெய் வானையை - வள்ளியையும் தெய்வயானையையும், மணம் புணரும் - கலியாணத்தாற் சேர்ந்த, வடி - கூர்மைதங்கிய, வேலவா - வேலாயுத த்தையுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, தாராளமாக - மிகுதியாக, கொடுக்கும் - ஈகி ன்ற, தியாகிகள் தமக்கு - கொடையாளருக்கு, நல் பொருள் - நல்ல பொருளானது, துரும்பு - துரும்பைப்போல அற்பமானதாம்; தன் உயிரை - தன்னுடைய சீவனை, எண்ணுத - பெரிதாக நினையாத, சூரனுக்கு-வீரத்தன்மை யுடையவனுக்கு, எதிராளி-பகைவனுடைய, தளம் எல்லாம் - சேனையெல்லாம், ஒரு துரும்பு - ஒரு துரும்பைப் போல்வதாம்; பேர் ஆன-எங்கும் பெருமை படைத்த, பெரியருக்கு- மகான்களுக்கு, அற்பரது-கீழ்மக்களுடைய, கையினில் - கையிலிரு ந்து வரும், பிரயோசனம்-பயன், துரும்பு - அற்பமாம்; பெரிதான- எல்லாவற்றுள்ளும் உயர்ந்ததான, மோக்ஷசிந்தனை உள்ளவர்க்கெல் லாம்-முத்தி விருப்புடையவர்க ளெல்லோருக்கும், பெண் போகம் - மாதரின்பம், ஒரு துரும்பு - ஒரு திரணமாம்; தீராத - இலகுவில் ஒழியாத, சகலமும் - உலகவியாபார மெல்லாவற்றையும், வெறுத்த-

அருவருத்து நீக்கிய, துறவிக்கு - நீத்தோனுக்கு, விறல் சேர் - வெற்றிபொருந்திய, வேந்தன் - அரசன், ஒரு துரும்பு - ஒரு துரும்புக்கு நிகராம்; செய்ய-செம்மையாகிய, கலை - சாஸ்திரங்களையுடைய, நாமகள் - சரஸ்வதியினது, கடாக்ஷம் உள்ளோர்க்கெல்லாம் - கடைக்கண் பார்வை யுள்ளவர்க ளெல்லோருக்கும், செந்தமிழ்க்கவி - செந்தமிழ்ப்பா கூறுதல், துரும்பாம் - அற்பமாம்.

(வி - ரை.) மிகுந்த கொடையாளர், கேட்டதையெல்லாம் கொடுக்கு மியல்பினராதலின், அவர் பொருள் செலவாவதைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளார். சூரன் தன் வீரமொன்றையே நிலை நிறுத்த விரும்புவானாதலின், அவன், தன்னுயிர் போவதையும் சிந்திக்கமாட்டான்; இத்தகைய சூரனுக்கு எதிரி படையாவும் துரும்புக்கு நிகராவதியற்கை. பெரியோர் பெறுதற் கரிதொன்றில்லையாதலால் அவர்கள் அற்பர் கையினின்று மடையும் பிரயோசனத்தைப் பெரிதாக நினைக்கமாட்டார்கள். 'ஜாதி பேதத்தையும் மாதர் மோகத்தையுந் தள்ளிவைப்பது சமாதி,' என்றபடி மாதர் மோகத்தை நீக்கிச் சமாதியிலிருப்பவர்களே மோக்ஷ விருப்புடையவராதலின், அவர்களுக்குப் பெண்ணாசை துரும்புபோல அற்பமானதாம். துறவுடையோன் எல்லா ஆற்றலு முடையவனாதலின், எல்லோரையும் அடக்கியாளத்தக்க அரசர்க்கும் மேற்பட்டவனவன்; துறவி கோபங் கொள்ளின் சாபத்தால் அவ்வரசனையும் தன்னிலைமை குன்றச் செய்வான்; இதுபற்றியே, 'துறவிக்கு விறல்சேர் வேந்தனொரு துரும்பு,' என்றார் ஆசிரியர்; இன்னும் துறவிகள் மன்னரையே யன்றித் தேவர்களையும் அடக்கி யாளத்தக்க வல்லமை பெற்றவராவார்; இதனை, "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்புளார் கோமான், இந்திரனே சாலுங் கரி," என்பதனா லுணர்க. சரஸ்வதி கடாக்ஷ முள்ளோர் எச்சமயத்தும், எவரிடத்தும், எவ்வளவு கவிகளானாலும் தட்டின்றிப் பாட வல்லுநராதலின் அவர்க்குக் கவி சொல்லுதல் எளிதாம். துரு

ம்பு - சிறு குச்சி; இஃதுவமையாகுபெயராய் அற்பமென்னும் அள வின் நுட்பத்தை யுணர்த்திற்று. நாமகள் - நாவிலிருக்கும் பெண்; பிரமனுடைய நாவில் சாஸ்வதி குடிகொண்டிருக்கின்றன ளென்பது புராணங்களின் றுணிபு. கடை அக்ஷமென்பது கடாக்ஷமெனப் புணர்ந்தது; அக்ஷம் - கண்; கடாக்ஷம் - கடைக்கண்; கடைக்கண் பார்வையைச் செலுத்துதலே அன்பிற் கறிகுறியாதலின் அவ்வன் பிற்குக் கடாக்ஷமெனப் பெயராயது. மணம் புணரும் - மூன்றும் வேற்றுமைத்தொகை; மணத்தாற் சேரும் என விரியும். (கஙு)

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல
மிசைவிளக் குவது சுதியூ
ரிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி
யினியசொல் விளக்குவ தருள்
புகழ்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவது நூல்
மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பகல் விளக்குவது - பகற்காலத்தைப் பிரகாசிக்கச்

செய்வது, இரவி - சூரியன்; நிசி - இராக்காலத்தை, விளக்குவது - விளங்கும்படி செய்வது, மதி - சந்திரன்; பார் - பூமியை, விளக்குவது - செழிப்புடன் பிரகாசிக்கச் செய்வது, மேகம் - கொண்டல்; பதி - கணவனை, விளக்குவது - புகழுடன் பிரகாசிக்கச் செய்வது, பெண் - (நற்குணம் வாய்ந்த மனைவியின்) பெண்தன்மையாம்; குடி விளக்குவது - குடிகளைச் செல்வத்துடன் விளங்கச்செய்வது, அரசு - மன்னனால் நடத்தப்படும் செங்கோன்மையாம்; பரி - குதிரையை, விளக்குவது - வல்லமையுடையதாகப் பிரகாசிக்கச் செய்வது, வேகம் - அதனுடைய விரைவாம்; இகல்-வெற்றியை, விளக்குவது - தோற்றச் செய்வது, வலி - வல்லமையாம்; நிறை - பெண்களின் கற்பை, விளக்குவது - பிரகாசிக்கும்படி செய்வது, நலம் - பெண்களுடைய நற்குணமாம்; இசை - சங்கீதத்தை, விளக்குவது - பிரகாசிக்கச் செய்வது, சுதி - சுருதியாம்; ஊர் இடம் - ஊரின் இடத்தை, விளக்குவது - அழகுடன் விளங்கச் செய்வது, குடி - குடி ஜனங்களாவர்; உடல் விளக்குவது - தேகத்தை அழகுடன் பிரகாசிக்கச்செய்வது, உண்டி - நல்லுணவாம்; இனிய சொல்-இனிமையான வார்த்தையை, விளக்குவது - பிரகாசிக்கச் செய்வது, அருள் - கிருபையாம்; புகழ் விளக்குவது - கீர்த்தியை விளங்கும்படி செய்வது, கொடை - ஈகையாம்; தவம் விளக்குவது - விரதத்தைப் பிரகாசிக்கச் செய்வது, அறிவு - விவேகமாம்; பூ விளக்குவது - மலரை உயர்வானதாக விளங்கும்படி செய்வது, வாசம்-மணமாம்; பொருள் விளக்குவது - செல்வத்தைப் பிரகாசிக்கும்படி செய்வது, திரு - இலக்குமியாவள்; முகம் விளக்குவது - முகத்தை அழகுடன் விளங்கும்படி செய்வது, நகை - பற்களாம்; புத்தியை விளக்குவது - அறிவைப் பிரகாசிக்கும்படி செய்வது, நூல் - சாஸ்திரங்களாம்; மகம் விளக்குவது - யாகங்களை விளங்கும்படி செய்வது, மறை-வேதமாம்; சொல் விளக்குவது - சொல்லை மேன்மையுடையதாகப் பிரகாசிக்கும்படி செய்வது, நிசம் - உண்மையாம்; வாவியை விளக்குவது -

தடாகத்தைச் செழிப்புடையதாகப் பிரகாசிக்கும்படி செய்வது, நீர் - ஜலமாம்.

(வி-ரை.) சூரியன் பிரகாசித்தால்மாத்திரந்தான் பகற்காலம் செழிப்புடன் விளங்கும். சந்திரன் பிரகாசிக்கும் இரவே சிறப்புடன் விளங்கும். மேகம் மழையைச் சொரிந்தால்மாத்திரந்தான் புற்பூண்டு மாம் செடி கொடி முதலியன தழைத்துப் பூமி செழிப்புடன் தோன்றும். இல்லாள் நற்குணமுடையவளா யில்லாவிடின் கணவனுக்கு எவ்வித சிறப்பு முண்டாகமாட்டாது; "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன், ஏறுபோற் பீடு நடை," என்னுந் திருக்குறளும் இதனை விளக்கும். அரசன் நீதியுடையவனாய் அரசு செலுத்தினால்மாத்திரந்தான் குடிகள் செழிப்படைவார்கள். குதிரை வேகமுடையதாயிருந்தால்மாத்திரந்தான் அதனைச் சிறப்புடையதாக எல்லோருங் கொண்டாடுவார்கள். ஒருவனுக்கு வலிமை யிருந்தாற்றான் அவனுடைய வெற்றி எங்கும் பிரகாசிக்கும். பெண்களுக்கு நற்குணங்க ளமைந்திருந்தால்மட்டுந்தான் அவர்களுடைய கற்பு நிலைபெற்று விளங்கும். சங்கீதமானது சுருதியுட னிசைந்தால் மாத்திரந்தான் செவிக் கின்ப முடையதாகத் தோற்றும். நல்ல குடிகள் அமைந்திருந்தால்மட்டுந்தான் ஊர் சிறப்புடையதாக விளங்கும். நல்ல உணவுகளை யருந்தினால்மாத்திரந்தான் தேகம் புஷ்டியாய் விளங்கும். கிருபையுடனே வெளிப்படுஞ் சொல்லே இனிய மொழியெனப்படும். ஒருவனுக்கு ஈகை யிருந்தால்மாத்திரந்தான் அவனுடைய கீர்த்தி எங்கும் பிரகாசிக்கும். தவம் அறிவோடு கூடிச் செய்தால்மாத்திரந்தான் சிறப்புறும்; மூடஞானத்தால் செய்யுந் தவமானது பயன்படாது; மூடஞானத்தால் செய்யும் விரதமாவது: பகவான்மீது பக்தி செலுத்துவதை விட்டு, வீடுவாசல்களைச் சுத்தி செய்வதிலும், ஸ்நானஞ் செய்வதிலும், மடி கட்டிக்கொள்வதிலும், பிறர் தன்னைத் தொடக்கூடாதென்று ஒதுங்கித் திரிவதிலும், சமயல் பதார்த்தங்களை வகைவகையாகச் செய்வதிலும், இன்னும் பலர்

தன்னைப் பார்த்து மதிக்கப் பயனற்ற காரியங்களைச் செய்வதிலுமே புத்தியைச் செலுத்திக்கொண் டிருப்பதாம்; இக்குணம் பெரும் பான்மையும் அவிவேகிகள் வீட்டுப் பெண்களிடத்தும், மூடஞானங் கொண்ட ஆண்மக்களிடத்தும் உண்டு; இவ்வகை அஞ்ஞானத்தை ஒழித்து ஞானத்தோடு கூடிச் செய்யுந் தவமே சிறந்ததாகுமென்பது தோன்ற, 'தவம் விளக்குவது அறிவு' என்றார் ஆசிரியர். மண மில்லாவிட்டால் மலருக்கு எவ்வித சிறப்புமில்லை. ஓரிடத்தில் இலக் குமி வாசஞ்செய்தால்மாத்திரந்தான் பொருள் அதிகரிக்கும். முத் துப்போன்ற பற்கள் இருந்தால்மாத்திரந்தான் முகம் அழகுடன் பிரகாசிக்கும்; அது சரியா யில்லாவிடின் முகம் எவ்வளவு நல்ல வடிவ முள்ளதா யிருந்தபோதிலும், பளபளப்புள்ளதா யிருந்தபோதி லும் அவலக்ஷணமே தோன்றும். நூலாராய்ச்சி அதிகமா யிருந்தால் மாத்திரந்தான் அறிவு விருத்தியாகும்; "நூலளவே யாகுமாம் நுண் ணறிவு," என்பதும் இதனை விளக்கும். வேதத்திற் சொல்லப்படும் கிரமங்களினாலேயே யாகம் நடைபெறும்; அஃதின்றேல் யாகம் நடைபெறமாட்டாது. உண்மை யிருந்தால்மாத்திரந்தான் ஒருவ னுடைய சொல்லானது உயர்வுற்று விளங்கும்; உண்மையில்லாத சொல் சொல்லாகமாட்டாது. நீர் நிறைந்திருந்தால் மாத்திரந்தான் தாமரை முதலியன மலர்ந்திருப்பதாலும், பல ஜெந்துக்கள் நிறைவ தாலும், மனிதர் கூடுவதாலும் தடாகமானது சிறப்புற்று விளங்கும். 'விளக்குவது' என்னும் அஃறிணை வினையாலணையும ஒன்றன்பாற் பெயருக்கேற்ப, 'பெண்' என்பதற்கு 'பெண்மை' எனப் பொருள் கூறப்பட்டது; பெண் என்பது ஆகுபெயராய்ப் பெண்தன்மையை யுணர்த்திற்று. அரசு என்பதனையும் இங்ஙனமே கொள்க. சுருதி - சுரஸ்தானப்படி பாட்டிற் குதவியா யிருக்குமாறு வாத்தியக்கருவி களில் அமைக்கப்படும் ஒருவகை நாதம்; பாடுவோர் தங்கள் சாரீரம் இதனோடு ஒற்றுமை யாகும்படி பாடினால்மாத்திரந்தான் சங்கீதம் உயர்வானதாகும்; இதை விட்டுப் பாடினால் அது சங்கீதமாகாது;

இந்தச் சுதியும், லயமும் (தாளமும்) சங்கீதத்திற்கு இன்றியமையா தவை. இவற்றை இசைக்குத் தாயுந் தந்தையுமெனச் சொல்வர் கீத நூலார்; 'சுதி மாதா லயம் பிதா,' என்னும் வாக்கியத்தால் இவற்றி னுயர் வுணரப்படும். (கஅ)

நல்லிடஞ் சேரினுங் கெட்டவை நல்லவை யாகாவெனல்.

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகம்து
  தீஞ்சொல்புகல் குயிலாகு மோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
  செங்கஞ்ச மலராகு மோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
  தானையின் கன்றாகு மோ
வாண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு
  மசடர்பெரி யோராவ ரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
  சாலக்கி ராம மாமோ
தடமேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
  சாரசர்க் கரையாகு மோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
  வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மங்காத - குறையாத, செந்தமிழ் - செம்மையாகிய தமிழையுடைய, குறுமுனிக்கு - அகத்தியமுனிவனுக்கு, உபதேசம்- ஞானபோதனையை, வைத்த - மனத்திலே பதித்துவைத்த, மெய்ஞ் ஞான குருவே - சத்தியம் பொருந்திய ஞானசிரியனே! மயிலேறி

விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சிங்காரம் - அழகு பொருந்திய, வனமதில் - சோலையிலே, உதிப்பினும் - பிறந்தாலும், காகமது-காகமானது, தீஞ்சொல் - சுகமான சொல்லை, புகல் - கூவுதலாற் கூறுகின்ற, குயில் ஆகுமோ - கோகில மாகுமோ, (இல்லை.) கொட்டி - கொட்டிமலரானது, திரை எறியும் - அலைகளைக் கரையில் வீசுகின்ற, வாவியில் - தடாகத்திலே, பூத்தாலுமே - மலர்ந்தாலும்கூட, செம் கஞ்சமலராகுமோ-சிவந்த தாமரைப் புஷ்பமாகுமோ, (இல்லை.) முயலானது - சசமானது, அம்-அழகிய, கானகத்திற் பிறந்தாலும் - காட்டில் உற்பவித்தாலும், ஆனையின் கன்றாகுமோ - யானையினது கன்றாய்விடுமோ, (இல்லை.) அசடர் - குற்றம் பொருந்திய கீழ்மக்கள், ஆண்மை ஆகிய - வலிமை பொருந்திய, நல்ல குடியில் - நற்குடியிலே, பிறந்தாலும் - தோன்றினாலும், பெரியோர் ஆவரோ - உயர்ந்தாராவரோ, (இல்லை.) நத்தை - நந்துவானது, சங்கு ஆடு - சங்குகள் விளையாடுகின்ற, பாற்கடல் - பாற்சமுத்திரத்திலே, பிறந்தாலும்-தோன்றினாலும், சாலக்கிராமமாமோ-சாலக்கிராமமென்னும் சிலையாகுமோ, (இல்லை.) உப்பு - இலவணமானது, தடம் மேவு - விசாலம் பொருந்திய, கடல் நீரிலே - சமுத்திர ஜலத்திலே, விளையினும் - உண்டாயினும், சாரம் - கரும்பின் சத்தாகிய, சர்க்கரை ஆகுமோ - கன்னலாய்விடுமோ, (இல்லை.)

(வி - ரை.) காகம் சோலையிற் பிறந்தாலும் குயிலாகமாட்டாது. கொட்டி தடாகத்திற் பூத்தாலும் செந்தாமரை மலராகாது. முயல் காட்டகத்திற் பிறந்தாலும் யானைக்கன்றாகாது. நத்தை பாற்கடலிற் பிறந்தாலும் சாலக்கிராம மாகாது. உப்பு கடல் நீரிலே விளைந்தாலும் சர்க்கரையாகா; இவைபோல அசடர் நல்லகுடியிற் பிறந்தாலும் பெரியோராகமாட்டார். தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவைகள் உயர்ந்த விடத்திற் பிறந்தாலும் தங்கள் சாதி யியற்கை யுள்ளவைகளா யிருக்குமேயன்றி இட விசேஷத்தால் உயர்ந்தவைக ளாகமாட்டா வென்

பது இச்செய்யுட் கருத்தால் பெறப்படும். வனமென்னுஞ் சொல் பொதுவாகக் காட்டை யுணர்த்துவதேனும், சிங்காரமென்கிற அடையடுத்து வந்ததனாலே சோலையென்பது பெறப்பட்டது. குயிலானது பேசுஞ்சுபாவ மில்லாத பறவையாயினும், 'அக்கா' என்னும் சொல்லின் இசைபடக் கூவுதலால், அதனை, 'தீஞ்சொல்புகல் குயில்' என்றார் ஆசிரியர். செம்மை கஞ்சமென்பது செம்மையின் மையீறு கெட்டு மகரம் ஙகரமாய்ச் செங்கஞ்ச மென்றானது. அசடு - குற்றம்; அதனையுடையார் அசடர். சாலக்கிராமம் சமுத்திரத்தி லுற்பத்தியாகும் ஒருவகைச் சிலை; இது, தெய்வம்போல வைத்துப் பூஜிக்கத் தகுந்தது. குறுமுனி - உருவத்திற் குறுகிய முனிவன்; அகஸ்தியர் குறுகிய வடிவின ரென்பது பிரசித்தம்; இவர் பொதிகைக்கு வந்த காலத்தில் சுப்ரமணியர் இவருக்குத் தமிழிலக்கணத்தையும் ஞானத்தையும் உபதேசித்தன ரென்பதும், அதன்பின்னரே இவர் தமிழ்ப் பாஷையை இலக்கண வரம்புடையதாகச் செய்தன ரென்பதும் புராணத்தா லுணரப்படும். உதிப்பினும், பூத்தாலும், பிறந்தாலும், விளையினும் என்பவற்றிலுள்ள உம்மைகள் இழிவுசிறப்புப் பொருளன. 'பிறந்தாலும் அவை தாழ்ந்தவைகளே' என்று அவ்விடங்களின் முகமாக அவற்றின் இழிவை விளக்குதலால் அவை இழிவுசிறப்புப் பொருளனவாயின. ஆகுமோ, ஆவரோ என்பவற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. ஆகுமோ என்றதனாலே இல்லையென்பது பெறப்படும். (கஉ)

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரசற் குணமுடைய
 கோவுமுற் றுணிபுவி னீருங்
கூட்டமிடு மம்பலத் தறுதருவி னீழலுங்
 குடியாளர் விவசாய முங்

கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மரமுங்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலும்
காவேரி போலூற்ற மும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருதசீ தமும்
விவேகியெனு நல்லோ னிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வண்டு - வண்டினங்கள், இமிர் - மொய்த்தொலிக்கின்ற, கடப்பமலர்மாலை - கடப்பம் பூவினுற் றொடுக்கப்பட்ட மாலையை, அணி - சூடுகின்ற, செம் களபம் - சிவந்த சந்தனக் கலவைச்சாந்து பூசப்பெற்ற, மார்பனே - நெஞ்சை யுடையவனே!, வடி - கூர்மைதங்கிய, வேலவா - வேலாயுதத்தைக் கையிற்றரித்தவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கொண்டல் - மேகமானது, பொழி - சொரிகின்ற, மாரியும் - மழையும்; உதாரம் - ஈகைத்தன்மை பொருந்திய, சற்குணமுடைய - நல்ல குணத்தையுடைய, கோவும் - அரசனுளுகையும்; ஊருணியின் நீரும் - ஊருக்குச் சமீபத்திலிருக்கும் தடாகத்தின் ஜலமும்; கூட்டமிடும் - பலர்வந்து சேருகின்ற, அம்பலத்து - சபை வெளியிடத்திலே, உறு - பொருந்தியிருக்கின்ற, தருவின் நீழலும் - மரத்தின் நிழலும்; குடியாளர்-குடித்தனக்காரருடைய, விவசாயமும் - பயிர்த்தொழிலும்; கண்டவர்கள் எல்லாம் - உலகத்தைப் பார்த்தவர்களெல்லாரும் (அதாவது: உலகத்திற் றோன்றிய எல்லோருமே), வரும் - தடையின்றி வந்து சேர்தற்கிடமாகிய, பெரும் - பெரிய,

சந்தியில் - நாற்றெருக் கூடுமிடத்திலே, பல கனி பழுத்த-பல பழங் களைப் பழுத்த, மரமும் - தருவும்; கருணையுடனே-மனிதர் கிருபை யுடனே, வைத்திடும் - வைக்கின்ற, தண்ணீர்ப்பந்தலும் - குளிர்ந்த நீர்ப்பந்தலும்; காவேரிபோல்-காவிரி நதியைப்போலும், ஊற்றமும்- நீர்ப்பெருக்கையுடைய ஊற்றும்; விண்தலத்து - ஆகாயத்தினிடத் திலே, உறை - தங்குகின்ற, சந்திர ஆதித்த கிரணமும் - சந்திரசூரி யர்களுடைய பிரகாசமும்; வீசும்-எங்கும்பரவுகின்ற, மாருதசீதமும்- காற்றின் குளிர்ச்சியும்; விவேகி என்னும்-அறிவுடையோன் என்று பலராலும் புகழ்ந்து சொல்லப்படுகின்ற, நல்லோனிடத்தில்-நற்குண முடையவ னிடத்திலே, உறு - பொருந்தியிருக்கின்ற, செல்வமும்- ஐசுவரியமும்; வெகு சனர்க்கு - அநேகம் மனிதர்களுக்கு, உபகார மாம் - உதவியாகும்.

(வி - ரை.) மாரியானது பிரதிபிரயோசனத்தை விரும்பாது எல்லோருக்கும் எவ்விடத்தும் பாரபக்ஷமின்றிப் பெய்யக்கூடிய தாதலின் அது பலர்க்கும் பயன்படுவதாம்; "கைம்மாறுவேண்டாக் கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு," என்கிற திருக்குறளானு மிஃதுணரப்படும். சற்குணமுடைய அரசன் பார பக்ஷமின்றி நடுநிலைமையோடு அரசு செலுத்திப் பலர்க்கும் உப காரியா யிருப்பானுதலால் அவனுளுகை எல்லோர்க்கும் பயன் படுவதாம். ஊருணி நீர் எவரும் பருகுதற்குத் தடையற்றதாதலின் அது பலர்க்கும் பயன்படுவதாம். அம்பலத்திற் பொருந்திய மாத்தி ணிழல் எவரும் போயிருத்தற் குரியதாதலால் அஃதெல்லாருக்கும் பிரயோசனப்படுவதாம். பயிர்த்தொழிலால் வரும் விளைவை, மனித ரில் அரசன்முதலாக உயர்ந்தோரும், நீசன் திருடன் முதலாகத் தாழ்ந்தோரும், ஜந்துக்களில் சகலமும் அனுபவிக்கின்றமையினுலே குடியாளரால் செய்யப்படும் விவசாயமானது சகலருக்கும் பயன்படுவ தாம். நாற்றெருக் கூடுமிடத்திலுள்ள மரத்திற்பழுத்த கனிகளை எவ

ரும் தடையின்றி அருந்துவராதலின் அம்மரம் பலர்க்கும் பயன் படுவதாம். தண்ணீர்ப் பந்தலானது எவ்வகுப்பாரும் போய் நீர்பருகித் தாகவிடாய் தணிதற் குரியவிடமா யிருத்தலினாலே அது யாவருக்கும் பிரயோசனந் தருவதாம். பெருக்கெடுத் தோடுகின்ற ஊற்றானது மானிடவர்க்கத்தாரும், மற்ற ஜந்துக்களும், ஆங்காங்கே தங்கள் தங்களுக்குரிய விடங்களில் நின்று ஸ்நானஞ் செய்தற்கும் ஜலம் பருகுதற்கும் உதவியாக விருத்தலினாலே அதுவும் எல்லோர்க்கும் எப்பிராணிகட்கும் எச்சமயத்தும் தட்டின்றிப் பயன்படத் தக்கதாம். சந்திர சூரியருடைய கிரணங்கள் நல்லோர், தீயோர், நல்லன, கெட்டன என்னும் பாகுபாடின்றி எல்லா விடங்களினும் பரவி ஆங்காங்குள்ளவர்க ளெல்லார்க்கும் உதவிசெய்வன வாதலின் அவைகளும் பலர்க்கும் பயன்படுவனவாம். காற்றின் குளிர்ச்சியும் இவைபோன்றதே. விவேகி தன்னிடமிருக்குஞ் செல்வத்தைப் பலர்க்கும் உபகரிப்பதிலேயே செலவிட விரும்புவானாதலின், அதுவும் பலர்க்கும் பயன்படுவதாம்.

கோ என்னும் அரசன் பெயர் ஆகுபெயராய் அவனால் ஆளப்படும் ஆளுகையை யுணர்த்திற்று; இதனை ஆகுபெயராகக் கொள்ளாமல் அரசனெனவே கொண்டு பொருள் கூறினும் அமையும்; அங்ஙனம் பொருள்கொள்ளின், இப்பெயர் அஃறிணைப் பெயர்களோடு விரவி அவ்வஃறிணை முடிபாகிய, 'உபகாரமாம்' என்பதனை யேற்றது, "திணைபால் பொருள்பல விரவின," என்னும் நன்னூற் பொதுவியற் சூத்திர விதிபற்றி யென்க. ஊருணி - ஊராரால் நீரை உண்ணப்படுவது; இது, ஊர் - உண் - இ - எனப் பிரியும். இதில், இ - செயப்படுபொருள் விகுதி. அம்பலம் - சபை கூடும் வெளியிடம். கண்டவர்கள் என்பதற்கு உலகத்தைப் பார்த்தவர்கள் (அதாவது உலகத்தில் தோன்றியவர்கள்) என்பது பொருள். இதனால் உலகத்தில் வந்தவர்க ளெல்லோரும் என்பது பெறப்படும்;

இதுபற்றியே, 'சகலரும்' என்பதற்கு, 'கண்டகண்டபேர்கள்' என்னும் ஒருசொல் வழங்கிவருகின்றது; ஆதலின், 'கண்டவர்க ளெல்லோரும்' என்பதற்கு, 'சகலரும்' என்று பொருள் கொள்க. நீர் பெருகி நெடுந்தூரம் ஆறுபோலோடும் ஊற்றே பலர்க்கும் பயன்படும்; சிறிய ஊற்று அங்ஙனம் எல்லோர்க்கு மிடங்கொடாது. ஆதலின் அது நீண்ட ஆற்றென்பது தோன்றற் பொருட்டே, 'காவேரிபோ லூற்றமும்' என்றார். ஊற்றம் - தொழிற்பெயர்; இதில் அம்-தொழிற்பெயர் விகுதி. "உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்" என்கிற விதிப்படி இமிர் என்னும் உயிர் முதன்மொழி வர வண்டு என்னுஞ்சொல் ஈற்றுகரங் கெட்டுப் புணர்ந்து, 'வண்டிமிர்' என்றாயது. (கசு)

தாமழியினுந் தங்குணமழியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந்
தன்னொளி மழுங்கி டாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணங் குன்றி டாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவு றாது
போதமே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய்வி டாது
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டாலுந்
துலங்குகுண மொழியாது பின்
றொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறுகு மோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாச னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மங்களம் - சுபம் பொருந்திய, கல்யாணி - திருமணத்தை யுடையவளான, சுரம் - காட்டிற் சஞ்சரித்த, குறமங்கை-வேடுவர் பெண்ணென்னும் வள்ளியையும், குஞ்சரியை - தெய்வயானையையும், மருவும் - கூடுகின்ற, திண் - வலிமையுற்ற, புயவாசனே - தோள்களின் மணத்தையுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, தங்கமானது - பொன்னனது, தழலில் நின்று-அக்கினியிலே நிலைபெற்று, உருகி-இளகி, மறுகினும் - சுழன்றுடினும், தன் ஒளி-தன்னுடைய பிரகாசம், மழுங்கிடாது - மங்கமாட்டாது; சந்தனக்குறடு - சந்தனமரத் துண்டானது, மெலிந்து - குறைந்து, தேய்ந்தாலும் - உரைபட்டாலும், தன் மணம் - தன்னுடைய வாசனை, குன்றிடாது-குறைவுபடமாட்டாது; பொங்கம் மிகு - பொலிவு மிகுந்த, சங்கு - சங்கமானது, செம் தழலில் - சிவந்த நெருப்பில், வெந்தாலும் - வேக்காடுற்றாலும், பொலி - அழகு விளங்காநின்ற, வெண்மை - தன் வெள்ளைநிறம், குறைவுறாது - குன்றமாட்டாது; நன் பால் - நல்ல பாலானது, போத - திருத்தியாக, காய்ந்து - நெருப்பிற் காய்ச்சலுற்று, குறுகினாலும் - தன்னளவிற் குறைந்தாலும், பொருந்து - தன்னிடத்தே சேர்ந்திருக்கின்ற, சுவை - உருசி, போய்விடாது - நீங்கமாட்டாது; துங்கம் - உயர்வாகிய, மணி-இரத்தினமானது, சாணையில் - சாணைக் கல்லிலே, தேய்ந்துவிட்டாலும் - உராய்ப்பட்டு மெலிந்துபோனாலும், துலங்கு - பிரகாசிக்கின்ற, குணம் - தன்னுடைய ஒளித்தன்மையானது, ஒழியாது - நீங்கமாட்டாது; (இவைபோல) தொன்மைதரு - பழமையான, பெரியோர் - புகழைத்தேடிய உயர்ந்தோர், பின் - தங்கள் வாழ்நாள்களுக்குப் பின்னே, மடிந்தாலும் - இறந்து போனாலும், அவர்களது - அவர்களுடைய, தூய - பரிசுத்தமாகிய, நிறை-மாட்சிமையானது, (அதாவது : புகழானது) தவறு ஆகுமோ-நீங்குமோ, (இல்லை.)

(வி - ரை.) தங்கம் உருகியோடினாலும் தன்னுடைய பிரகாசங் குறையாது. சந்தனக்கட்டை தேய்ந்துபோனாலும் தன் மணங் குறை

யாது. சங்கு நெருப்பில் வெந்துபோனாலும் தன்னுடைய வெண்மை நிறங் குன்றாது. பால் காய்ந்து குறுகினாலும் தன்சுவை குறையமாட்டாது. இரத்தினம் சாணைக்கல்லிற் றேய்ந்தாலும் தன்னுடைய ஒளி மழுங்காது. இவைபோலப் பெரியோர் இறந்தாலும் அவர்களுடைய புகழானது என்று மழியாமல் நிலைபெறும்.

தங்கம் ஒளி மழுங்காது, சந்தனக்குறடு மணங் குன்றிடாது, சங்கு வெண்மை குறைவுறாது, பால் சுவை போய்விடாது, மணி குண மொழியாது என்பவற்றுள் சினைவினை முதலொடு முடிந்தது. குறடுதான் என்பதில் தான் அசை. தேய்ந்தாலுமே, வெந்தாலுமே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் அசைநிலைப்பொருளில் வந்தன. போதவே என்பதில் ஏகாரம் அசை. நன்மையென்னும் பண்புச் சொல்லில் மையீறுமட்டும் கெட்டு நன் என நின்று பாலொடு புணர்ந்தது; நன் பால் என்பது பண்புத்தொகையாதலின் வலிமுன் னகரம் றகரமாகத் திரியாமல் இயல்பாயிற்று; "அல்வழிக்கு அனைத்து மெய்வரினு மியல்பா கும்மே," என்பது விதி. தொன்மைதரு-பழமையைத் தருகின்ற என்பது பொருள்; 'பழமையைத் தருகின்ற' எனவே 'முதிர்ந்த' என்பது பெறப்படும். நிறை - மாட்சிமை; இஃது ஆகுபெயராய்த் தன்னாலாகிய புகழை யுணர்த்திற்று. தவறு - தவறுதல், தொழிற்பெயர். 'குறமங்கை சுர' என்பதை 'சுரகுறமங்கை' என மாற்றுக. குமாரக்கடவுளின் புயங்களில் இயற்கை மணம் பொருந்திய வள்ளி தெய்வயானை சேர்தலாலும், கடப்ப மலர்மாலை சேர்ந்திருத்தலாலும் வாசனை எப்பொழுதும் பரிமளித்துக்கொண்டிருக்கும்; ஆதலின், 'புயவாசனே' என்றார் ஆசிரியர். (கஎ)

நரகில் வீழ்வோர் இன்னவரெனல்.

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப் பாதகர்

மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதார
மருவித் திரிந்த பேர்கள்
அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோ
ரரசடக் கிய வமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
ருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக் குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினத்தவர்கண்
முழுதும்பொ யுரைசொல்லு வோர்
மன்னொருவர் வைத்தபொரு ளபகரித் தோ ரிவர்கண்
மாநரகில் வீழ்வ ரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, மன்னரை - தம்மைப் பலநாளும் பாதுகாத்து வந்த அரசரை, சமரில் விட்டு - போரிலே தனிமையாகத் துன்பப் படவிட்டு, ஓடினவர் - தங்கள் உயிரைப் பெரிதாக நினைத்தோடின வர்களும்; குரு மொழி - ஆசாரிய வாக்கியத்தை, மறந்தவர் - ஞாப கத்தில் வைக்காதவர்களும்; கொலைப்பாதகர் - உயிர்வதை செய்யும் பாவிகளும்; மாதா பிதாவை - அன்னை தந்தையரை, நிந்தித்தவர்கள்-தூஷித்தவர்களும்; பரதாரம் - அன்னியர் மனைவியை, மருவித் திரிந்தபேரும் - கூடியலைந்தவர்களும்; அன்னம் கொடுத்தபேருக்கு-பசித்துழன்ற சமயத்தில் தமக்கன்னமிட்டுத் தம்மைக் காப்பாற்றிய வர்களுக்கு, அழிவை எண்ணினோர் - நாசத்தைச் செய்ய நினைத்த வர்களும்; அரசு - மன்னனை, அடக்கிய - சமயத்தில் எதிரிகளுடன் சேர்ந்து ஒடுங்கச்செய்த, அமைச்சர் - மந்திரிகளும்; ஆலயம்-தெய்வ ஸ்தலங்களை, இகழ்ந்தவர்கள் - நிந்தித்தவர்களும்; விசுவாச காதகர் -

பத்தியைக் கெடுப்பவர்களும்; அரும் தவர் தம்மை - அருமையாகிய தவத்தையுடைய முனிவர்களை, பழித்தோர் - தூஷித்தவர்களும், முன் - முன்னே, உதவியாய் - துணையாகி, செய்த - ஒருவர் தமக் கியற்றிய, நன்றியை மறந்தவர் - நன்மையை நினையாதவர்களும்; முகஸ்துதி - முகத்துக்கு நேரே துதிக்கும் உபசார வார்த்தையின் பொருட்டு, வழக்கு உரைப்போர் - பாரபக்ஷமான நியாயத் தீர்ப்புச் சொல்வோரும்; முற்று - பத்தியிற் பூரணமான, சிவ பத்தரை - சிவ நேயச் செல்வர்களை, நடுங்க-நெஞ்சந் திடுக்கிடும்படி, சினத்தவர்கள்-கோபித்தவர்களும்; முழுதும் - தாம் பேசுவதெல்லாம், பொய் உரை சொல்லுவோர்-பொய்வார்த்தையாகவே பேசுவோரும்; மன்-பொருந் திய, ஒருவர் - ஒரு மனிதர், வைத்த பொருள் - பத்திரப்படுத்தி வைத்த திரவியத்தை, அபகரித்தோர் - திருடினவர்களும் (ஆகிய), இவர்கள் - இம்மனிதர்கள், மா நரகில் - பெரிய நரகத்திலே, வீழ்வர் - பாய்ந்து வருந்துவார்கள்.

(வி-ரை.) மன்னர், தமக்குப் போர்மூண்ட காலத்தில் துணையாய் உதவும்பொருட்டே பலரைத் தமக்குறுதிச் சுற்றமாகச் சேர்த்து அவர்களை எப்பொழுதும் பாதுகாத்துவருவர்; அங்ஙனம் பாதுகாக்கப்பட்டு வந்த அவர்கள் போர் நிகழ்ந்த காலத்தில் மன்னனைத் தனியேவிட் டோடுவார்களானால் அச்செய்கை மகா பாதகமாம்; ஆதலால், அவர்களுக்கு நரகங் கிடைப்பது திண்ணம். குரு வாக்கிய மானது, பாவங்களைப் போக்கிப் புண்ணியத்தை யடையச் செய்வ தாதலால், அதனை மறப்பின் நிச்சயமாக நரகங் கிடைக்கும். பஞ்சமா பாதகங்களுள் கொலையே மிகுந்த பாவமாதலால் அதனைச் செய் வார்க்கும் நரகங் கிடைக்கும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய் வம்," என்றபடி உலகத்தில் மனிதர்க்கு மாதாபிதாக்களே சிறந்த வர்க ளாதலானும், அவர்கள் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதில் அதிகம் சிரம மெடுத்துக்கொள்பவராதலானும், அவர்களை நிந்திப்

பவர்களும் மீளா நரகிற் காளாவர். "பகைபாவ மச்சம் பழியென நான்கு, மிகவாவா மில்லிறப்பான் கண்," என்றபடி பிறர் மனையாளை விரும்புவோனிடத்தில், பகை பாவம் அச்சம் பழி ஆகிய நான்கும் சேர்வது திண்ணமாதலால் அவனுக்கும் நரகம் சித்தியாம். எல்லாத் தருமங்களினும் அன்னதான கருமம் சிறந்ததாகலின், அன்ன மிடு வோர்க்குத் தீங்கு செய்வோரும் நரகத்திற் புகுவது திண்ணம். அரசன் எல்லா விஷயங்களிலும் மந்திரியையே நம்பியிருப்பன்; அப்படியிருக்கும் அவனை அமைச்சன் பகைஞருடன் சேர்ந்து அடக்குவானாயின் அது மகா பாதகமாம்; ஆதலின், அவனுக்கும் உறுதியாக நரகஞ் சித்திக்கும். தேவாலயமானது தன்னை யடைந்தவரின் பாவங்களைப் போக்கி அவர்களை நற்கதியிற் சேர்க்கத்தக்கது; அத்தகைய ஆலயத்தை நிந்தித்தல் மகா தோஷமாம்; ஆதலின் அதனை நிந்திப்போரும் நரகிற் சேர்வர். ஒருவர்மீதொருவர் வைத்திருக்கும் விசுவாசத்தைக் கெடுத்து மித்திரபேதஞ் செய்து அவர்களுக் கிடையில் பகையை யுண்டாக்குதல் மகா பாவமாம்; ஆதலின், அங்ஙனம் புரிவாரும் நரகிற் சேர்வது திண்ணம். தவசிகள் உலகப்பற்றை யெல்லாம் விட்டவராதலானும், எவர்க்கும் தீங்கியற்று வியல்பின ராதலானும் அவர்களைப் பழித்தல் கொடிய பாவமாம்; ஆதலின், அங்ஙனம் தோஷமற்ற அவர்களைப் பழிப்பார்க்கு நரகம் நிச்சயமாகக் கிடைக்கும். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு," என்றபடி செய்ந்நன்றி மறந்தவர்க்குச் சுகவாழ்வென்பதே கிடையாதாதலின், அவரும் நரகில் வீழ்வது நிச்சயம். தம்மிடம் முகஸ்துதியாகப் பேசும் நேயர் பொருட்டு நடுநிலைமையை விட்டுப் பாரபக்ஷமாக வழக்குத் தீர்ப்புச் செய்தல் எல்லாப் பாவங்களினும் சிறந்த பாவமாதலின், அங்ஙனஞ் செய்வாரும் நரகத்திற் சேர்வர். சிவபத்தர் அச்சிவனையே நிகர்த்த மகா சாதுக்களாவர்; அத்தகையரைக் கோபித்தல் மகா பாவமாம். பொய் வார்த்தையையே எப்பொழுதும் பேசிக்கொண்டு திரிவோர், பலரை

யும் ஏமாற்றும் மகா பாவிகளாதலின் அவரும் நிச்சயமாக நரகில் வீழ்வர்.ஒருவர் வைத்தபொருளை அபகரித்துவிட்டால் அப்பொருளை யிழந்தவர் பலவிதமான துன்பங்களை யடைதற் கேதுவாம்; ஆதலின், அச்செய்கை மகா தோஷமாம்; ஆகையினாலே அங்ஙனம் பிறர் பொருளை அபகரித்தோரும் நரகத்தை யடைவர்.

ஓடினவர், மறந்தவர், கொலைப்பாதகர், நிந்தித்தவர்கள், திரிந்த பேர்கள், எண்ணினோர், அமைச்சர், இகழ்ந்தவர்கள், காதகர், பழித்தோர், நன்றியை மறந்தவர், வழக்குரைப்போர், சினத்தவர்கள், சொல்லுவோர், அபகரித்தோர் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. விசுவாசம் - பத்தி, காதகம் - கொலை; விசுவாசகாதகம் - பத்தியைக் கொல்லுதல், அதாவது : பத்தியைக் கெடுத்தல்; ஆகவே, விசுவாசகாதகர் என்பதற்கு நேசத்தைக் கெடுப்பவர்கள் என்பது பொருள். அருந்தவர் - பண்புத்தொகை. முகஸ்துதி வழக்கு - நான்காம் வேற்றுமைத்தொகை; முகஸ்துதிக்கு வழக்கு என விரியும். முகஸ்துதியாவது : முகத்துக்கு நேரே துதியாகப் பேசுதலாம்; முகஸ்துதி யென்பதற்கு மனதில் விசுவாசமில்லாமல் வெளிக்கு மாத்திரம் முகத்தால் துதி பேசுதல் என்றும் பொருளாதலால், முகஸ்துதி வழக்குரைப்போர் என்பதற்கு, 'மனத்தில் பகையை வைத்துக்கொண்டு வெளிக்கு மாத்திரம் முகமலர்ச்சியோடு வழக்குரைப்போர்' எனப் பொருளுரைத்தலு மொன்று. வீழ்வரன்றே என்பதில் அன்றே - அசை. (கஅ)

சரீரசுகத்திற் கேதுவானவைகள்.

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
 மறுவறுவி ரோசனந் தான்
வருஷத் திரண்டுவிசை தைலம் தலைக்கிடுதல்
 வாரத் திரண்டு விசையாம்

மூதறிவி னொடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா லீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவளவா னாலும் புசித்தபின்
ருகந் தனக்கு வாங்கல்
தையாக வுண்டபி னுலாவலிவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவகு மாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்த சரசா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மா தவ குமாரி - சிறந்த தவத்தினை யுடையவனாகிய முனிவன்புத்திரியான, சாரங்கத்துஉதித்த-மான்வயிற்றிலே பிறந்த, குற வள்ளிக்கு வேடரால் வளர்க்கப்பட்ட வள்ளிநாயகிக்கு, உகந்த-திருப்தியான; சரசா - பரிகாச விளையாட்டை யுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, (ஒருவன்) மாதத்து - ஒரு மாசத்திலே, இரண்டுவிசை -இருமுறை, மாதரை - உரிய பெண்களை, புல்குவது - கூடுவதும்; வருஷத்து - ஒரு வருடத்தில், இரண்டுவிசை-இருமுறை தேகத்திலுள்ள அசுத்த சத்துக்கள் கழியும்படி, மறுவு அறு-குற்றமற்ற, விரேசனம்-பேதிமருந்தை உபயோகித்தலும்; வாரத்து - ஒரு வாரத்திலே, இரண்டுவிசை-இருமுறை, தைலம் தலைக்கு இடுதல் - தலைக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்தலும்; ஆம் - உண்டாகின்ற, மூதறிவினொடு-பேரறிவோடு, தனது வயதினுக்கு இளைய - தன் பருவத்திற்குக் குறைந்தவளாகிய, ஒரு - ஒப்பற்ற, மொய் குழலுடன்-நெருங்கிய கூந்தலையுடைய பெண்ணுடனே, சையோகம் - கலத்தலும்; முற்று - நன் பக்குவம் பூரணமான (அதாவது நன்றாகத் தோய்ந்த) தயிர் - தயிரை

உபயோகித்தலும்; காய்ச்சு பால்-சுண்டக் காய்ச்சிய பாலைப் பருகுத லும்; நீர் மோர் நீரொடு கலந்த மோரைப் பானஞ் செய்தலும்; உரு க்கு நெய் - உருக்கிய நெய்யை உபயோகித்தலும்; முதிரா-முற்றாத, வழுக்கை இளநீர் - வழுக்கையையுடைய இளநீரை யுபயோகித்தலும்; சாதத்தில் - சோற்றில், எவ்வளவானாலும் - எவ்வளவினதானாலும், புசித்தபின் - அவ்வளவையும் உண்டபின், தாகந்தனக்கு-தாகத்திற்கு, வாங்கல் - ஜலத்தை உள் வாங்குதலும் (அதாவது: தண்ணீர் பருகுதலும்), தயை ஆக - தன் தேகத்திற் கிருபையுடனே, உண்டபின்-போசன மருந்திய பின்னர், உலாவல் - குறுநடை கொள்ளுதலும்; (ஆகிய) இவை - இவற்றை, மேலவர் - உயர்ந்தோர், சரீர சுகமாம் என்பர் - தேகசுகத்திற் கேதுவானவைகளாமென்று கூறுவர். (ஆத லின், தேகசுகத்தை யடைய விரும்புவோர் இவற்றை அனுசரித்தல் வேண்டும்.)

(வி - ரை.) ஒரு மாதத்தில் இரண்டுமுறை பெண்ணின்ப நுகரின், தேகத்திலுள்ள வலிமை குறையாது; நல்ல சந்ததி விருத்திக் கேதுவுண்டாம்; நீண்ட ஆயுளுட னிருக்கலாம்; பிணியற்ற வாழ் வெய்தலாம்; இவ்வரம்பு தவறி அளவுக்கு மிஞ்சிய சேர்க்கையை விரும்பின், தேகவலி குன்றிப் பலவித நோய்களுண்டாய்ச் சந்ததி விருத்தி குறைந்து அற்ப ஆயுளடைவதற் கேதுவாம். தேகத்தில் அசுத்த சத்துக்கள் அதிகமாகச் சேரின் பலவித நோய்க ளுண்டா மாதலின், அச்சத்துக்களை ஆறுமாதத்துக் கொருமுறை பேதிமருந் தால் வெளிப்படுத்திவிடவேண்டும்; அங்ஙன மவற்றை வெளிப்படு த்திவிடின் தேகத்திற் பிணி யணுகாது. வாரத்திற் கிரண்டுமுறை எண்ணெய் ஸ்நானஞ் செய்துவருவதால் தேகத்தி லுண்டாம் உஷ் ணம் சாந்தப்பட்டு அவயவங்களுக்கு நல்ல வலிமை யுண்டாய்ச் சுகத் துடனிருப்பதற் கேதுவாம். மூத்தவளோடு சேரின் அவளுடைய முதுமைப்பருவம், அங்ஙனம் சேர்வோனுக்கு வரும், இளையாளோடு

சேரின் அவளுடைய இளமைப்பருவம் வந்தடையும். தோயாத தயிரும், காயாத பாலும், நீர் கலவாத மோரும், உருக்காத கட்டி நெய்யும், முற்றல் தேங்காயும் அஜீரண முதலியவற்றை யுண்டாக்கித் தேகசுகத்தைக் கெடுப்பனவாதலால், இவற்றை நீக்கித் தோய்ந்த தயிரையும், சுண்டக் காய்ந்த பாலையும், நீர்மோரையும், வழுக்கை யிள நீரையும் உபயோகிக்கவேண்டும். போசன முண்ணும்போது மத்தியில் மத்தியில் தண்ணீர் பருகினால் அது ஆகாரங்களின் இடைக்கிடை சேர்ந்து, அவ்வாகாரங்கள் இரைப்பையில் பக்குவப்படுதலைக் கெடுத்துவிடு மாதலால், போசன முண்டபின்னரே தாகத்துக்கு நீர் பருகவேண்டும். உண்டபின் உலாவுதல், ஆகாரங்கள் சீரணமாவதற் கேதுவாமாதலால், போசன முடிந்தபின் குறுநடை கொள்ளுதல் நன்மையாம்; "உண்டதற்பின் குறுநடையும் கொள்வோம்," என்பதனாலும் இஃதுணரப்படும். இங்குக் கூறியவைக ளெல்லாம் வாகட நூற்களின் விதியாதலின், தேகசுகத்தோடிருக்க விரும்பும் ஒவ்வொருவரும் இக்கிரமங்களை அனுஷ்டிக்கவேண்டும்.

ஒருவன் என்னுஞ் சொல் முதலில் வருவித்துரைக்கப்பட்டது. விரேசனம் என்பதற்குப்பின் உபயோகித்தல் என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. தயிர், பால், மோர், நெய், இளநீர் ஆகியவற்றின் பின் உபயோகித்தல், பருகுதல், பானஞ்செய்தல், முதலிய சொற்கள் வருவிக்கப்பட்டன. தாகந்தனக்கு வாங்கள் என்பதற்கிடையில் ஜலம் என்னுஞ்சொல் இடைப்பிறவரலாக வருவித்துரைக்கப்பட்டது; "உருபுமுற் றீரெச்சங் கொள்ளும், பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன," என்பது நன்னூற் பொதுவியற் சூத்திரம். வள்ளி, சிவமுனிவன் விந்துக்கு மான் வயிற்றில் ஜனித்தவளாதலின், அவளை 'மாதவ குமாரி' என்றார் ஆசிரியர். வள்ளியும் தெய்வயானையும் முற்பிறப்பில் திருமாலின் புத்திரிகளாதலின், மாதவ குமாரி யென்பதற்கு மாலின் புத்திரியாகிய தெய்வயானையெனப்

பொருள் கொண்டு, தெய்வயானைக்கும் வள்ளிக்கும் உகந்த சரசா என் றெழுதினு மமையும்; இன்னும் அதனை, முன்னே திருமாலின் புத்திரியாகிய வள்ளி எனப் பொருள் கொண்டு அவளுக்கே அடைமொழி யாக்கினும் பொருந்தும். வள்ளி குறவரால் எடுத்து வளர்க்கப்பட்டவ ளாதலின், 'குறவள்ளி' எனப்பட்டாள். வள்ளியும் தெய்வயானையும் முன்னே மாலின் புத்திரிகளாகிய சுந்தரி, அமுதவல்லி யென்பவராவ ரென்பது புராணகதை. சுந்தரி வள்ளியாகப் பிறந்தாள்; அமுதவல்லி இந்திரன் மகளாகத் தோன்றி ஐராவதத்தினிடம் வளர்ந்தாள். (கக)

தங்கள் விதியை அனுபவித்தே தீரவேண்டுமெனல்.

தேசுபெறு மேருப்ர தக்ஷணஞ் செய்துமதி
 தேகவடு நீங்க வில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவண்ணன்
 செறும்பகை யொழிந்த தில்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
 றிலாமலே வாயு வாகு
மினியகண் ணுகிவரு பரிதியா னவனுக்
 கிராகுவோ கனவி ரோதி
ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு
 மமைத்தபடி யன்றி வருமோ
வவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
 மல்லால் வெறுப்ப தெவரை
வாசவனு மும்பரனை வரும்விசய சயமென்று
 வந்துதொழு தேத்து சரணு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வாசவனும் - இந்திரனும், உம்பர் அனைவரும் - மற்றத் தேவர்க ளெல்லோரும், வந்து - சமீபத்திற் சேர்ந்து, விசயம் - அடைக்கலம், சயம் - போற்றி, என்று - என்று சொல்லி, தொழுது - வணங்கி, ஏத்து - துதிக்கின்ற, சரண - பாதங்களை யுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!-, மதி - சந்திரன், தேசு பெறு - ஒளிபொருந்திய, மேரு - பொன் மலையை, ப்ரதக்ஷணம் செய்தும் - தினந்தோறும் வலமாக வந்தும், தேக வடு - அவனுடைய உடம்பி லேற்பட்ட களங்கமானது, நீங்க வில்லை - அகலவில்லை; திருமால் - இலக்குமி நாயகனான விஷ்ணு, உறங்கிடும் - நித்திரை செய்யும், (சயனமாகிய) சேடனுக்கு - ஆதி சேஷனுக்கு, (அவன் அவ்வாறு விஷ்ணுவினிடஞ் சேர்ந்திருந்தும்) உவணன் - கருடனுடைய, செறும் - கொல்லத்தக்க, பகை - விரோதமானது, ஒழிந்ததில்லை - நீங்கினதில்லை; ஈசன்-சிவபெருமானுடைய, கழுத்தில் - கண்டத்திலே, உறு - ஆபரணமாகப் பொருந்திய, பாம்பினுக்கு - அரவத்துக்கு, (அங்ஙனம் எல்லோரினும் உயர்ந்தவனாகிய சிவன்பாற் சேர்ந்திருந்தும்) வேறு இரை இல்லாமலே - வேறே ஆகாரங் கிடையாமலே, வாயு இரை ஆகும் - காற்றே ஆகாரமாகும்; (அச்சிவபெருமானுக்கே) இனிய - இனிமையாகிய, கண் ஆகி - வலது நேத்திரமாகி, வரு - தினந்தோறும் உதயமாகி ஆகாயத்தில் வருகின்ற, பரிதி ஆனவனுக்கு - சூரியனுக்கு, (அங்ஙனம் சிவனுக்கு வலக்கண்ணாக அமைந்தும்) இராகு கனவிரோதி - இராகுவானவன் வருடந்தோறும் அவனை யெடுத்து விழுங்கும்படியான பெரிய விரோதியா யிருக்கின்றான்; (ஆதலால், மனிதர்கள்) ஆசு இல்லா - குற்றமற்ற, பெரியோர் இடத்தினில் - உயர்ந்தோருடைய சமீபத்தில், அடுக்கினும் - சேர்ந்திருந்தாலும், (அவர்க்கு அனுபவம்) அமைத்தபடி அன்றி - இறைவன் ஏற்படுத்தியவிதமாகவே யல்லாமல், வருமோ - வேறுவிதமாக வந்துசேருமோ, (இல்லை; அதனால், மனிதராயினர்) அவரவர்கள் அனுபோகம் - அவரவர்களுக் கேற்

பட்ட அனுபவிக்கையை, அனுபவித்திடல் வேண்டுமெல்லால் - அனுபவித்திடல்வேண்டுமே யல்லாமல், (அதன்பொருட்டு) எவரை வெறுப்பது - யாரை நிந்திப்பது? (ஒருவரையும் நிந்தித்தல் கூடாது. ஆதலால் எவரும் ஒன்றும் பேசாமல் வந்த விதியை அனுபவிக்க வேண்டும்.)

(வி - ரை.) மதி மேருப் பிரதக்ஷணஞ் செய்தும் அதன் வடு நீங்கவில்லை; ஆதிசேஷன் திருமாலுக்குச் சயனமாக அமைந்தும் அவனுக்குக் கருடன்பகை நீங்கவில்லை. அரவமானது ஈசனுக்குக் கழுத்தாபரணமாக அமைந்தும் அது தனக்கிரை அகப்படாமல் வாயு பக்ஷணஞ் செய்கின்றது. சூரியன் சிவனுக்கு வலக்கண்ணு யமைந்தும் அவனுக்கு இராகுபகை நீங்கவில்லை. ஆதலால், மனிதராயினோர் எவ்வகைப்பட்ட பெரியவிடங்களிற் சார்ந்திருந்தாலும் தங்கள் விதியை அனுபவித்தே தீரவேண்டுமென்பது இதன் கருத்து.

திருமால் என்பதற் கிடையில், 'நாயகன்' என்னுஞ் சொல் இடைப்பிறவரலாக வருவித் துரைக்கப்பட்டது. உறங்கிடுஞ் சேடன் என்பதற்கிடையிலும் அங்ஙனமே 'சயனம்'என்னுஞ் சொல்லும் வருவிக்கப்பட்டது. கழுத்தில் உறு என்பதற் கிடையில், 'ஆபரணமாக' என்னுஞ் சொல்லும் அங்ஙனமே வருவிக்கப்பட்டது. இரை யென்பது தீபகமாக இரண்டிடத்துங் கூட்டப்பட்டது. விரோதி யென்பதனீற்றிலும் முன்னும், 'வருடந்தோறும் எடுத்து விழுங்கும்படியான' என்பன முதலிய சொற்கள் இசையெச்சமாக வருவிக்கப்பட்டன. வருமோ என்பதற்கு முன்னும், 'வேறுவிதமாக' என்னுஞ் சொல்லும் வருவிக்கப்பட்டது. "மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும், வன்மைக் கினமாத் திரிபவு மாகும்,"என்கிற விதிப்படி விசயம், சயம் என்பவற்றி னீற்றுமகரங் கெட்டு நின்றது; இவ்விரண்டும் வடமொழியாதலின் விசயம் என்பதனீற்றுமகரம் வன்மைக்கினமாத் திரியவில்லை; விசயசய - என்பதற்கு, 'நாங்களுன்

அடைக்கலம்; எங்களை நீ பாதுகாப்பாய்,' என்பதுபொருள். விசயம்-அடைக்கலம், சயம் - போற்றி; போற்றி யென்பதற்குப் பாதுகாக்கக்கடவா யென்பது பொருள். 'விசயசய' என்பதற்கு, 'வெற்றி வெற்றி,' என்னும் அடுக்காகக்கொண்டு பொருள்கூறினும் அமையும்; இவ்வடுக்கு, 'ஜயம் ஜயம்' என்னும் வாழ்த்து போன்றதாம். சந்திரன்: கார்த்திகை, உரோகணி ஆகியவர்க ளிடமாத்திரம் அன்பு வைத்ததை முன்னிட்டுத் தக்ஷனிடம் சாபம் பெற்றதால் தன் கலைகள் குறையும் வடிவைப் பெற்ருன். கருடன் தாயாகிய விநதையை ஆதிசேடன் தாயாகிய கத்துரு மாறுபாடாக அடிமை கொண்டதால் நாகருக்கும் கருடனுக்கும் பகை யுண்டாயிற்று. நாகம் வாயுபக்ஷணம் செய்வதியற்கை. அமுதங் கடையுங் காலத்தில் இராகு கேதுக்களின் வஞ்சவுருவை சூரியன் விஷ்ணுவுக்குக் காட்டியபடியால் அவர் பகையைப் பெற்றனன். (௨௦)

ஒன்றின்றியொன்று சிறவாதவை.

குருவிலா வித்தைகூ ரறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமி லாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகர மிலாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
லுண்மையில் லாத வசனம்
யோசனையி லாமந்த்ரி தைரிய மிலாவீர
முதவியில் லாத நட்பு

மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென் பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, குரு இல்லா - ஆசாரியனில்லாது ஒருவன் தானே கற்றுக்கொண்ட, வித்தை-கல்வியும்; கூர் - மிகுந்த, அறிவு இல்லா-விவேகமில்லாத, வாணிபம்-வியாபாரமும்; குணம் இல்லா - நல்லொழுக்கமில்லாத, மனைவி ஆசை - இல்லாளின் விருப்பமும்; குடி நலம் இல்லா - குடிச்செழிப்பற்ற, நாடு-தேசமும்; நீதி இல்லா-சத்தியமில்லாத, அரசு-அரசாட்சியும்; குஞ்சரம் இல்லாத - யானைப் படையில்லாத, வெம் போர் - கொடுமையான சண்டையும்; திரு இல்லா-செல்வமில்லாத, மெய்த்திறமை-தேகவல்லமையும்; பொறை இல்லா - அடக்கமில்லாத, மா தவம் - பெரிய விரதமும்; தியானம் இல்லாத - தேவசிந்தனையில்லாத, நிஷ்டை - யோகமும்; தீபம் இல்லாத - விளக்கில்லாத, மனை - வீடும்; சோதரம் இல்லாத - உடற் பிறப்பற்ற, உடல் - தேகமுள்ள மனிதனும்; சேகரம் இல்லாத-முடியற்ற, சென்னி - சிரசும்; உரு இல்லா-அழகில்லாத, மெய் வளமை-உடற்செழிப்பும்; பசி இல்லா-வயிற்றில் பசியற்றபோது கிடைக்கும், உண்டி - உணவும்; புகல் - சொல்கின்ற, உண்மை இல்லாத - சத்தியமற்ற, வசனம் - பேச்சும்; யோசனை இல்லா - நன்மைதீமைகளை ஆராய்ந்தறியுந் தன்மையில்லாத, மந்திரி - அமைச்சனும்; தைரியம் இல்லா - மனோவன்மையில்லாத, வீரம் - உடல்வலியும்; உதவி இல்லாத - உபகாரமில்லாத, நட்பு-சிநேகமும்; மரு இல்லா-வாசனையற்ற, வண்ணமலர் - அழகுபொருந்திய புஷ்பமும், பெரியோர் இல்லாத - உயர்ந்தோரில்லாத, சபை - அம்பலமும்; வையத்து - இப்பூமியில், இருந்து-இருப்பதனாலே, என் பயன் - யாது பிரயோசனம்?, (ஒரு பயனுமில்லை).

(வி-ரை.) குருவில்லாத வித்தை விஷய வுணர்ச்சி யற்றதாயும், நல்லதைக் கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவும் கூறும் இயல்பினையுடையதாயும், சபையேறாததாயுமிருக்குமாதலின் அது பயனற்றதாம். அறிவில்லாதவன் வியாபாரம் நடத்தப்புகின், தனக்கு இலாபம் வரும்வழியை யுணராமலும், ஜனங்களிடம் நேயங்காட்டித் தன்னுடைய வியாபாரத்தை விருத்தி யடையச்செய்யும் தந்திரத்தைத் தெரிந்து கொள்ளாமலும், கல்லைப்போலிருந்து மனிதரிடம் சுடுசுடுத்த முகங்காட்டிக் கடுஞ்சொற்கூறி ஒழுங்கீனமாக வியாபாரஞ் செய்வானாதலின் அவனுக்கு இலாபம் வராமல் நஷ்டமே வரும்; ஆதலின் அறிவில்லாத வியாபாரமும் பயனற்றதாம். குணமில்லாத மனைவி எவ்வளவு அழகுடையவளாயிருந்தாலும், தன்னுடைய துஷ்டச் செய்கையால் கணவனுக்கு இடைவிடாத் துன்பத்தையே உண்டாக்கிக்கொண்டிருப்பா ளாதலால், அவள் அழகின்மீது வைக்கும் ஆசையும் பயனற்றதாம். குடிகள் செழித்திருந்தால்மாத்திரம் நாடு சிறப்புடையதாகும்; அங்ஙனம் குடிச்செழிப் பில்லையேல் அந்நாட்டால் பயனின்றாம். நீதியோடு கூடி நடத்தும் அரசுதான் பலராலும் கொண்டாடப்படும்; ஆதலின், அவ்வகை நீதியில்லாத அரசும் பயனற்றதாகும். போருக்கு யானைப்படையே சிறந்ததாதலால், அவ்வகை யானைப்படையில்லாமல் நடத்தும் யுத்தமும் பயனற்றதாம். ஒருவனுக்கு எவ்வளவு தேகவல்லமை யிருந்தாலும் பொருளிருந்தால்மட்டுந்தான் அவ்வன்மை பிரகாசிக்கும்; அஃதின்றேல் அவ்வல்லமையை எவ்விடத்தும் செலுத்தமுடியாதாதலால் அது பயனற்றதாகும். தவஞ்செய்வோர் அடக்கத்தோடிருந்து செய்தால் மாத்திரந்தான் அதனால் பிரயோசனமுண்டு; பொறுமை யில்லாமல் அவசரப்பட்டுப் பலர்க்கும் தீங்குசெய்துகொண்டு தவஞ்செய்வார்களேயானால் அதனால் எவ்வித பயனுமின்றாம். நிஷ்டை செய்வோர் தெய்வ சிந்தனையோடு கூடிச்செய்தால் மாத்திரந்தான் அவர்க்கு நற்பதவி கிடைக்கும்; அங்ஙனமின்றி வேறுபல சிந்தனைகளைச் செய்து

கொண்டாவது, தெய்வசிந்தனை முதலிய நற்சிந்தனை யொன்று மில்லாமலாவது செய்யப்புகின் அவர்க்குத் துர்க்கதியே கிடைக்கும்; ஆதலின் அவ்வாறுசெய்யும் நிஷ்டை பயனற்றதாம். தீபமில்லாத மனை எவ்வளவு செல்வங்களை யுடையதா யிருப்பினும் இருள்சூழ்ந்து மூதேவிக்கு இருப்பிடமா மாதலால் அதுவும் பயனற்றதாம். ஒருவனுக்கு உடன்பிறந்தாரிருந்தால் ஆபத்துவந்த காலத்தில் கையைப் போல உதவிபுரிவர்; அங்ஙன மில்லாதார் ஆபத்திற்சிக்கி வருந்துவர்; ஆதலின், உடற்பிறப்பில்லாத உடலையுடைய மனிதரும் பயனற்றவராவர். சிரசுக்கு முடியிருந்தால்மட்டுந்தான் அது சிறப்புடன் விளங்கும்; அஃதின்றேல் அச்சென்னி பயனுடையதாகாது. உடம்பிற்கு அழகிருந்தால் மட்டுந்தான் அது பெருத்துப் பளபளத்துத் தோற்றுவதால் சிறப்புற்று விளங்கும்; அழகில்லாமற் புஷ்டியாகுமானல் அந்தப் புஷ்டியே பெரிய விகாரமாகத் தோற்றும். பசித்திருக்கும் போ தகப்படும் ஆகாரந்தான் பிரயோசனப்படும்; பசி யில்லாதபோது எவ்வளவு சுவையுள்ள ஆகாரமகப்படினும் அஃதுண்பதற் குபயோகமாகாது. உண்மையில்லாமல் பொய்யாகவே பேசப்படும் வசனம் பலர்க்கும் தீங்கைச் செய்வதாதலானும், பலராலும் இகழப்படுவதாதலானும் எவ்வகைப்பயனு மற்றதாம். நன்மை தீமைகளை ஆராய்ந்து சொல்லும் மந்திரியிருந்தால் மாத்திரந்தான் அரசு நிலைபெறும்; அவ்வகை ஆலோசனையில்லாத அமைச்சனிருப்பின் அரசு நிலைபெறாது; ஆதலின், அவ்வகைமந்திரி யிருந்தும் பிரயோசனமில்லையாம். ஒருவன் உடம்பில் எவ்வளவு வன்மை யிருந்தாலும் தைரியமிருந்தால் மாத்திரந்தான் அவ்வன்மையை எதிரிபாற் செலுத்தலாம்; அஃதின்றேல் அவன் இரவில் தோற்றும் பனைமரத்தையும் பைசாசமென்று நினைத்து நெஞ்சந் திடுக்கிட்டு வீழ்ந்திறப்பன். நட்பாளர் உதவிசெய்தால்மாத்திரந்தான் அந்நட்பால் பயனுண்டாம்; அங்ஙனமின்றேல் அதனால் எவ்வித பயனுமில்லை. மலருக்கு வாசனையிருந்தால்மாத்திரந்தான் அதனைப் பலரும் சிரசில் சூட்டிக்கொண்

டாடுவர்; அஃதின்றேல் எவ்வளவு அழகுடையதா யிருப்பினும் அதனை ஒருவரும் கொண்டாடமாட்டார்கள்; ஆதலின், வாசனை யில்லாத மலர் பயனற்றதாம். ஒரு சபை கூடினால் அதில் பெரியோ ரிருந்தால்மாத்திரந்தான் அவர்கள் நன்மை தீமைகளை ஆராய்ந்து நடுவுநிலைமையாக வழக்குத் தீர்ப்பர்; அவர்களின்றேல் அச் சபையில் நியாயமிராது; ஆதலின், பெரியோரில்லாத சபை பயனற்றதாம்.

சோதரம் என்பது சகோதரம் என்னும் வடமொழித்திரிபு. சக உதரம் என்பது சகோதரம் என்றாயது; இதற்கு வயிற்றின் கூட்டு என்பது பொருள். இஃதாகுபெயராய் இங்கே வயிற்றில் உடன்வந்தவனை யுணர்த்திற்று. சக - கூட, உதரம் - வயிறு. சகோதரன் என்பதும் இதனடியாகப் பிறந்த பெயரே; இதற்கு வயிற்றிற் கூட வந்தவன் என்பது பொருள். உடல் - ஆகுபெயராய் அதனை யுடைய மனிதனை யுணர்த்திற்று. 'என் பயன்' என்பது எதிர்மறை யெச்சம்; பயனில்லை யென்பது இதன் பொருள். (உ௧)

பகைக்கத்தகாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு
மரியகரு ணீகர் பகையு
மடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
மருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
முறவின்முறை யார்கள் பகையு
முற்றதிர வியமுளோர் பகையுமந் திரிபகையு
மொருசிறிது மாகாது காண்

வரநதியின் மதலையென வினியசர வணமிசையில்
வருதருண சிறு குழவியே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வரம் - சிரேஷ்டம் பொருந்திய, நதியின் - கங்கையின், மதலை என - குழந்தையென்று எல்லோரும் சொல்லும்படி, இனிய - இனிமையாகிய, சரவணமிசையில் - சரவணப்பொய்கையின்மேல், வரு - தோன்றிவந்த, தருணம் - எப்பொழுதும் நீங்காத இளமையையுடைய, சிறு குழவியே - சின்னக் குழந்தையே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அரசர் பகையும் - மன்னர் விரோதமும்; தவம் புரி - தவத்தைச் செய்கின்ற, தபோதனர் பகையும் - முனிவர்களுடைய விரோதமும்; அரிய - அருமையாகிய, கருணீகர் பகையும்-கணக்கருடைய விரோதமும்; அடுத்துக் கெடுப்போர் - நெருங்கிச் சிநேகஞ் செய்து வெளிக்குச் சிநேகிதர்போலிருந்து கேடு செய்யும்பகைவர்களுடைய, கொடும் பகையும் - கொடிய விரோதமும்; உட்பகையும் - பகைவர்க்கிதஞ் செய்பவராய் வெளி நேயங் காட்டி உள்ளேயிருந்து பகையான காரியங்களைச் செய்வோர்களுடைய இரகசியப்பகையும்; அருள் இல்லா - கிருபையற்ற, கொலைஞர் பகையும் - கொலைகாரருடைய விரோதமும்; விரகு மிகும் - சமர்த்து மிகுந்த, ஊரிலுள்ளோருடன் பகையும் - ஊரிலிருக்கின்ற மனிதர்களுடனே செய்துகொள்கின்ற விரோதமும்; மிகு-மிகுந்த, விகடப் பிரசங்கி பகையும்-பரிகாசமான விஷயங்களைப் பலரறியச் சொல்வோனது விரோதமும்; வெகுசனப் பகையும் - அநேகம் மனிதர்களுடைய விரோதமும்; மந்திரவாதியின் பகையும் - மந்திரவித்தைக்காரனுடைய விரோதமும்; விழை-எல்லோரும் விரும்புகின்ற, மருத்துவர்கள் பகையும்-வைத்தியர்களுடைய விரோதமும்; உரம் மருவு - ஞானம் பொருந்திய, கவிவாணர் பகையும் - கவியினாலே வாழ்கின்ற வித்வான்களுடைய

விரோதமும்; ஆசான் பகையும் - குருவினுடைய விரோதமும்; உறவின்முறையார்கள் பகையும் - சுற்றத்தார்களுடைய விரோதமும்; உற்ற-அதிகமாகப் பொருந்திய, திரவிய முள்ளோர் பகையும் - தனவந்தர்களுடைய விரோதமும்; மந்திரி பகையும் - அமைச்சனுடைய விரோதமும்; ஒரு சிறிதும் - அற்பமும், ஆகாது - மனிதர் கொள்ளுதல் கூடாது.

(வி - ரை.) மனிதர்க்கு அரசர் பகை யேற்பட்டால் அவர்கள் எல்லா வல்லமையுமுடையவராதலின், அம்மனிதரை உடனே நாசப்படுத்திவிடுவர்; 'அரசன் அன்றொறுக்கும் தெய்வம் நின்றொறுக்கும்,' என்பதனு லிஃதுணரப்படும். தவசிகளுடன் மனிதர் பகை கொள்ளின் அவர்கள் அம்மனிதரைச் சாபமிட்டுக் கெடுப்பர்; "குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி, கணமேயுங் காத்த லரிது," என்பதனு லுணர்க. கணக்கருடனே பகை கொள்ளின் அவர்கள், கணக்குகளில் பல மாறுபாடுகள் செய்து கெடுத்துவிடுவர். அடுத்துக் கெடுக்கும் தந்திரக்காரருடன் பகை கொள்ளின் அவர்கள் நேயரைப் போல் அடுத்திருந்து சமயம் பார்த்துக் கெடுத்துவிடுவர். பகைவர்க் குதவியாகி, ஒருவரிடம் மேலுக்கு நேயங் காட்டி உள்ளே கெடுதி செய்யும் வஞ்சகருடன் பகை கொண்டால், அவர்கள் இரகசியமாக விரோதிக் குளவு சொல்லிக் கேடு புரிவர். கொலைஞருடன் பகை கொண்டால் அவர்கள் அஞ்சாமற் கொல்வர். ஊரிலுள்ளவருடன் பகைத்துக்கொண்டால் அவர்க ளெல்லோரும் ஒன்று சேர்ந்து பெரிய தீமைகளையும் சுலபமாகச் செய்து கெடுத்துவிடுவர்; "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்," என்பதனு லிஃதுணரப்படும். விகடப் பிரசங்கியுடன் பகை கொண்டால் அவன் பற்பல விடங்களிலும் கூசாமல் இழிவான விஷயங்களைப் பேசி மானக்கேட்டை யுண்டாக்குவான். பல ஜனங்களுடன் பகை கொண்டால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்திலும் கெடுதியைச் செய்துகொண்டே யிருப்பார்கள்; அதனுல் அங்ஙனம் பகை கொண்டார்க்கு இடை

விடாத் துன்ப மிகுந்துகொண்டே யிருக்கும். மந்திரவாதியுடன் பகை கொண்டால் அவன் மாரணம் முதலிய தொழில்களாற் கொல்வன். வைத்தியருடன் பகை கொண்டால் அவர்கள், வியாதி கொண்ட சமயத்தில் சரியான சிகிச்சை செய்யாமற் கெடுப்பதோடு ஔஷதப் பிரயோகஞ் செய்யுங் காலத்தில் விடங் கலந் தூட்டியுங் கொல்வர். வித்வான்களுடன் பகை கொண்டால், அவர்கள் வசை பாடிக் கெடுத்துவிடுவர். குருவின் பகை கொண்டால், அவன் நன் மார்க்கங்களை உபதேசிக்கமாட்டான்; அதனுல் மனிதர் ஞானமில்லாமல் செய்யத்தகாத காரியங்களைச் செய்து பாவங்களைத் தேடிக் கொள்வதற் கேதுவாகும்; இன்னும் அவன் தன்னுற் றறிவிக்கப் பட்ட வித்தை பலிக்காமற் போகும்படிக்கும் சாபமிடுவன்; கர்ணனுக்குப் பரசுராமர் சாபத்தால் சமயத்தில் வில்வித்தை உதவாமற் போன கதையினுல் இஃதுணரப்படும். சுற்றத்தாரோடு பகை கொள்ளின் அவர்கள் சுப காரியங்களிலும் துக்க காரியங்களிலும் வந்து உதவி செய்யமாட்டார்கள்; அதனுல், அக்காரியங்களில் உதவுவாரின்றித் தனியே வருந்துதற் கேதுவுண்டாகும். திரவிய முள்ளவரிடம் பகை கொண்டால், அவர்கள் மிகுந்த பணச்செலவு செய்து பெருந் தீமையான காரியங்களையும் செய்து முடித்துப் பல கேடுகளைச் செய்வர்; அவரை எக்காரியத்திலும் வெல்லுதல் முடியாது. அரசன் மந்திரியோடு பகை கொண்டால், அவன் இராஜகாரியங்களின் உளவையெல்லாம் பகைவர்க்குச் சொல்லி அவர்க்கு ஜெயமுண்டாக்கி அரசனைக் கெடுத்துவிடுவான். ஆதலின், உலகத்தில் கவலையற்று வாழ விரும்புவோர் இத்தகைய பகைகளை அடியோடு ஒழித்துவிடவேண்டும்.

தபோதனர் - தவத்தையே தனமாகக் கொண்டவர்கள்; முனிவர்கள் வேறொன்றையுங் கருதாது தவத்தையே தங்கட்குரிய செல்வமாகக் கொண்டு செய்பவராதலின் அவர்க்கு இப்பெய ரேற்பட்

டது. அரிய என்பது கணக்குக் கடைமொழி; 'அரிய கருணீகர்' என்பதற்கு, 'உள்ளே யிருக்கும் சூதை பிறரால் கண்டுபிடித்தற் கரிய கணக்கை யுடையவர்கள்' என்பது பொருள். 'உட்பகை'என்ப தற்குத் 'தம்மைச் சார்ந்தவர்களுக்குள்ளே பகையும்' எனப் பொருள் கோடலு மொன்று; உள் என்பது ஆகுபெயராய் உள்ளே யிருப்ப வரை யுணர்த்தும்; அங்ஙனம் உள்ளே யிருப்பவரோடு பகை கொண் டால் அவர்கள் பகைவர்க்கு உள்ளே யிருக்கும் இரகசியங்களை யுணர்த்திக் கெடுப்பர். மந்திரவாதி - மந்திரத்தால் வாதமிட்டு எதிரி களை வெல்வோன். மருந்து என்பது மருத்து என வலித்தல் விகா ரம் பெற்றது. மருத்துவர் - மருந்தை யுடையவர்; அதாவது ஔஷ தப் பிரயோகஞ் செய்பவர். கவிவாணர் - கவி சொல்வதனால் வாழக் கூடியவர்கள். ஒரு சிறிதும் என்பதில், 'ஒரு' என்பது அளவின் சிறுமையை விசேடித்துக் காட்டவந்த ஒருவகை எண்ணிடைச் சொல். சுப்பிரமணியர் கருவை, கங்கை யேந்திச் சென்று சரவணப் பொய்கையிற் சேர்த்தவளாதலானும், அவள் சிவபெருமானுக்கு நாயகியாதலானும் குமாரக்கடவுளைக் கங்கா புத்திரனெனப் புராணங் கள் கூறும். ஆகாது என்னும் முடிபுக்கேற்ப கொள்ளல் என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. (உஉ)

பேயெனப்படுவோ ரிவரெனல்.

கூடலுதவு போர்வந்து கேட்கும்வேளையின் முகங்
    கடுகடுக் கின்ற பேயுங்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
    கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
    தகப்பட் டுழன்ற பேயு
மாசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
    யானதை யுரைத்த பேயும்

இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளேச்சற்று
மெண்ணு துரைத்த பேயு
மினியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்ட பேயும்
மடமனே யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்க ளன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கடன் உதவுபேர் வந்து - கடன் கொடுத்தவர்கள் வந்து, கேட்கும் வேளையில் - கொடுத்த பணத்தைக் கேட்குஞ் சமயத்தில், முகம் கடுகடுக்கின்ற - முகம் கடுகடுத்துப் பேசுகின்ற, பேயும்- பேய்போன்ற மனிதனும்; கனம் மருவு - உயர்வு சேர்கின்ற, பெரிய தனம் - அதிகரித்த திரவியம், வந்தவுடன் - தன்னிடத்தே சேர்ந்தவுடன், இறுமாந்து - அகங்காரங் கொண்டு, கண் விழிக்காத - கண்ணைத் திறந்து மனிதருடன் பேசாமல் மூடிக்கொண்டு திரிகின்ற, பேயும் - பைசாசம்போன்ற மனிதனும்; அடைவுடன் - முறையாக, சத்துருவின் பேச்சை - விரோதியின் வஞ்சகமான வார்த்தையை, விசுவாசித்து - நேயங்கொண்டு நம்பி, அகப்பட்டு - அவர்களுடைய வஞ்சனையிற் சிக்கி, உழன்ற - வருந்திய, பேயும்-பைசாசம் போன்ற மனிதனும்; ஆசை மனையாளுக்கு - நேயம் பொருந்திய இல்லாளுக்கு, நேசமாய் - ஆசையாக, உண்மை மொழியானதை - தான் நடத்திய இரகசியமான விஷயத்தைப்பற்றிய மெய்யான வார்த்தையை, உரைத்த - சொன்ன, பேயும் - பேய்போன்ற மனிதனும்; இடர் இல்லா - துன்பமில்லாத, நல்லோர்கள்-நன்மை யுடையவர்களாகிய, பெரியோர்களை - உயர்ந்தோர்களை, சற்றும் எண்ணுது - சிறிதும் உயர்ந்தவராகக் கருதாமல், உரைத்த பேயும்-இகழ்ந்து கூறிய பைசாசம் போன்ற மனிதனும்; இனிய - தன் மனத்திற் கினிமை செய்வ

தாகிய; பரிதானத்தில்-இலஞ்சத்தில், ஆசை கொண்டு - விருப்பம் வைத்து, ஒருவற்கு - ஒருவனுக்கு, இடுக்கண்செய்திட்ட - துன்பஞ் செய்த, பேயும் - பேய்போன்ற மனிதனும், மடம் - இளமை பொருந்திய, மனை இருக்க - இல்லாளிருக்கும்போது, பரத்தையை-வேசியை, புணர் - கூடுகின்ற, பேயும் - பேய்போன்ற மனிதனும்; வசை பெற்ற - உலகத்தில் நிந்தையடைந்த, பேய்கள் - பைசாசங்களேயாவர்.

(வி - ரை.) கடன்கொடுத்தவர் வந்து பணத்தைக் கேட்கும்போது, 'கொடுத்தபணத்தைத்தானே வந்து கேட்கின்றார்கள்; நாம் அவர்க்கு நல்ல வார்த்தையோடு கொடுக்கவேண்டியது நியாயந்தானே,' என்று அவர்களுடனே இனியமொழி பேசாமல் முகங் கடுகடுத்துப் பேசுவோன் மனிதனுயிருப்பினும், இன்னவரைக் கோபிக்கலாம் இன்னவரைக் கோபிக்கலாகாது என்னும் பகுத்தறிவில்லாமல் எவர்மீதும் கோபித்துப் பாய்கின்ற பேய்க்கு நிகராவனுதலின், அவன் பேயேயாவன். மிகுந்த செல்வம் வரும் பக்ஷத்தில், 'இது நிலையற்றது; ஆதலின் இஃதிருக்கும்போதே இதனைப் பலர்க்கும் உதவி இதன்மூலம் பலருடைய சிநேகத்தையும் பெற்றுப் புகழ்பட வாழவேண்டும்,' என்று கருதிப் பலர்க்கும் உபகாரியாய் வாழாமல், அச்செல்வத்தால் இறுமாந்து பழகினவர் எதிரில் வரினும் அறியாதவன் போன்று கண்மூடி விழிக்காமலும் அவருடன் பேசாமலுந் திரிவோன் பேய்க்கு நிகராவனுதலின் அவனும் பேயாவன். சத்துருவாயிருப்பவன் எச்சமயத்தினும் கொல்வானென்பது உலகப்பிரசித்தியாயிருந்தும் அவனுடைய பேச்சை நம்பித் துன்பத்தி லகப்படுவோன், மனிதனுயினும் அறிவில்லாப் பேய்த்தன்மையுடையனுதலின் அவனும் பேயாவன். எப்பேர்ப்பட்டவளாயிருந்தாலும் பெண்ணுயிருப்பவள் இரகசியத்தை மனதிலடக்காமல் வெளிவிடுவாளாதலால் அவளிடம் இரகசியம் சொல்லக்கூடாதென்பது தெரிந்திருந்தும் தன் மனையாளிடம் தான் இரகசியமாக நடத்

திய காரியத்தின் உண்மையைத் தெரிவிப்பவன் அறிவற்ற பைசாசத்துக்கு நிகராவனுதலின், அவனும் பேயாவன். மனைவியிடம் சொல்லும் இரகசியம் எப்படியும் வெளிப்படுமென்பதற் குதாரணமாவது:—ஓரூரில் பயிர்த்தொழிலாளரில் இருவர், வயலுக்கு இராக்காலத்தில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கும்போது அவ்விருவருக்கும் சண்டையுண்டாயிற்று; அப்போது ஒருவன் மற்றொருவனைப் பிடித்துக் கீழேதள்ளி மிதித்துக்கொண்டு கொலை செய்யும் பொருட்டு மண்வெட்டியை மேலே தூக்கி ஓங்கினான்; அத்தருணத்தில் கீழே கிடந்தவன், அங்கே வேறொருவரு மில்லாமையால், ஆகாயத்திலுள்ள சந்திரனை நோக்கி, 'நிலவே நீயே சாக்ஷி,' என்றான்; அவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும்போதே அவனைக் கீழே தள்ளி மண்வெட்டியை ஓங்கினவன் வெட்டிக் கொன்று அவனுடலை மண்ணிற்குள் புதைத்துப் போய்விட்டான்; இச்செய்கை ஒருவருக்கும் தெரியாது; பலதினங்கள் கழிந்துவிட்டன. அதன்மேல் ஒருநாளிரவில் கொலைசெய்தவன் தன் வீட்டு முற்றத்தில் படுத்து மனைவியுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தான்; அப்போது மேலே சந்திரன் பிரகாசித்தது; அதைக்கண்டவுடனே அவன் "நாம் செய்த காரியம் வெளிப்படாமல் பலநாட்களும் கழிந்துவிட்டனவே; இனி மேல் நம்மை எவர் என்னசெய்யப் போகிறார்கள்? அவன் இந்த நிலவை சாக்ஷி வைத்தானே; இந்த நிலவு எவரிடம் சாக்ஷி கூறப் போகின்றது?" என்று தனக்குள்ளே நினைத்து அந்த நிலவைப் பார்த்து, தன் மனைவிக்கும் கேட்கும்படி, "நிலவே! நீதானோ இனி சாக்ஷி கூறப்போகின்றாய்?" என்று சொன்னான். அதைக்கேட்டவுடனே மனைவி, "என் சந்திரனைப் பார்த்து அவ்வாறு கூறினை?" என்று வினவ, அவன் பலநாட் கழிந்துவிட்டபடியால் இனிமேல் ஒன்றும் நடவாது எண்றெண்ணி அவளிடம் நடந்ததைக் கூறிவிட்டான்; அவள் இரகசியமாகத் தன்னோடு சிநேகமானவளுக்குச் சொன்னாள்; அவள் தன் சிநேகிக்குக் கூறினாள்; இப்படியே ஒவ்வொருத்தி

யும் ஒவ்வொருத்திக்குச் சொல்ல அச்சங்கதி ஊரெங்கும் பரவி அதிகாரிகளுக்குமெட்ட அவர்கள் வந்து உடனே பிணத்தைத் தோண்டியெடுத்துக் கொலை செய்தவனுக்கும் மரணதண்டனை விதித்தனர். இதனால் ஸ்திரீகளுக்கு இரகசியங் கூறலாகாதென்பது விளங்கும். பெரியோர்களைப் பழிப்பதால் நிச்சயமாகக் கேடுண்டாகுமென்பதை யுணர்ந்திருந்தும் அவர்களைப் பழிப்போன் பேய்த்தன்மை யுடையவனாதலின் அவனும் பேயாவன். இலஞ்சம் வாங்கிக்கொண்டு நல்லோர்க்குத் துன்பஞ் செய்வோன், சாராயம் ஆடு கோழி முதலியவைகளின் பலியை யேற்றுக்கொண்டு மந்திர வித்தைக்காரரின் ஏவல் கேட்டு நியாயத்தை யுணராமல் நல்லோர்மீதும் பாய்ந்து அவரைக் கொல்லுகின்ற பேய்க்கு நிகராவனாதலின் அவனையும் பேயெனக் கூறுதல் தகும். பரத்தை எவ்விதத்தாலும் அன்பில்லாதவளென்பது தெரிந்திருந்தும் அன்புள்ள மனைவியை விட்டு அவளைக் கூடுவோன் பேய்க்குணமுடையனாதலின் அவனையும் பேயெனல் தகும்.

பேய் என்பது உவமையாகுபெயராய் அப்பேய்த் தன்மையையுடையவனை யுணர்த்திற்று. இவர்களெல்லோரும் பேயினும் தாழ்ந்த பேயென்று தோன்ற ஒவ்வொருவருக்கும் பேயென்றோர் பெயர் கூறி ஈற்றில் எல்லோரையுஞ் சேர்த்து, 'வசை பெற்ற பேய்களன்றோ,' என்றார் ஆசிரியர். நல்லோர்கள் பெரியோர்கள்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை; நல்லோர்களாகிய பெரியோர்கள் என விரியும். (உ௬)

தம் தம் இனத்தி லுயர்ந்தவை இன்னவை யெனல்.

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
 தத்தினிற் சோம வாரம்

தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
    தலத்திற் சிதம்பர தலம்
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
    தேனுமுனி வரினா ரதன்
செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி
    தேமலரி லம்போ ருகம்
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
    பெலத்தின்மா ருதம் யானையிற்
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம்
    பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
    மகாமேரு வாகு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேச னே.

(இ — ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—தருவில்-விருக்ஷங்களிலே, சந்தனம் - சந்தன மரமும்; நதியினில் - ஆறுகளிலே, கங்கை - கங்காநதியும்; விரதத்தினில் - விரதங்களிலே, சோமவாரம் - திங்கட்கிழமை விரதமும்; தகை பெறு - மேன்மை பொருந்திய, நிலத்தினில் - பூமியிலே, காஸ்மீரகண்டம்-காஸ்மீரதேசமும்; தலத்தில்-புண்ணிய க்ஷேத்திரங்களிலே, சிதம்பரதலம் - சிதம்பர க்ஷேத்திரமும்; சீர் உலவு - சிறப்புப் பொருந்திய, ரிஷிகளில்-இருடியர்களிலே, வசிட்டர்-வசிஷ்டரும்; பசுவில் - கோக்களிலே, காமதேனு - காமதேனுவென்னும் தெய்வப்பசுவும்; முனிவரில் - தபோதனர்களிலே, நாரதன் - நாரத முனிவனும்; செல்வம் - சிறப்புப்பொருந்திய, நவமணிகளில் - ஒன்பதுவகை ரத்தினங்களிலே, திகழ் - விளங்காநின்ற, பதுமராகமணி-செம்பரத்தினமும்; தேம்-வாசனைதங்கிய, மலரில்-புஷ்பங்களிலே, அம்போருகம்-தாமரைமலரும், பேர் உலவு-கீர்த்திபரவிய, கற்பினில்-

பதிவிரதா தன்மங்களில், அருந்ததி - அருந்ததி யென்பவள் கற்பும்; கதித்திடு-மிகுகின்ற,பெலத்தில்-வலிமையுள்ளவைகளிலே, மாருதம்-காற்றும்; யானையில்-யானைகளுக்குள்ளே, பேசில்-சிறந்தவைகளைப் பற்றிப் பேசுமிடத்து, ஐராவதம் - இந்திரன்பட்டத்து யானையாகிய ஐராவதமும்; தமிழினில் - தமிழ்நூல்களிலே, அகத்தியம் - அகத்தியமென்னும் இலக்கண நூலும்; மந்திரத்தில்-மந்திரங்களுக்குள்ளே பிரணவம் - ஓங்காரமும்; வாரிதியிலே - சமுத்திரங்களிலே, திருப்பாற்கடல் - அழகியக்ஷீராப்தியும்; குவட்டினில் - மலைகளிலே, மகாமேரு - பெரிய பொன் மலையும், ஆகும் - உயர்ந்தவையாகும்.

(வி - ரை.) தருக்களிலே சந்தனமரமானது மிக்க வாசனையுடைய தாதலானும், கலியாணமுதலிய சுபகாரியங்களுக்கும், தேவபூஜை முதலியவற்றிற்கும் உரித்தாயிருத்தலானும் சிறந்ததாம். நதிகளிலே கங்காநதியானது, சிவபெருமான் சடையினின்று முற்பத்தியாயினமையானும், தன்னிடத்தே மூழ்குவாரின் பாவங்களைப் போக்கக்கூடிய தாதலானும் சிறந்ததாம். விரதங்களிலே சோமவாரத்தில் அனுஷ்டிக்கப்படும் விரதமானது சிவபெருமானுக் குகந்ததாதலானும், மிக்க புண்ணியத்தை விளைவிக்கத் தக்கதாதலானும் அதுவே சிறந்ததாம். எல்லாக் கண்டங்களிலும் காஸ்மீரதேசமானது மிகச் செல்வம் பொருந்தியதும், புண்ணியமுடையது மாதலினாலே அஃதுயர்ந்ததாம். பஞ்சபூத சிவஸ்தலங்களுக்குள்ளே சிதம்பரஸ்தலமானது ஆகாயஸ்தல மாதலினாலே அது சிறந்ததாம். இருடியர்களுக்குள்ளே வசிஷ்டர், அருந்ததியை மனைவியாகப் பெற்றவராதலானும், அரிச்சந்திரன், இராமன் முதலிய மகா கீர்த்திமான்களாகிய சூரிய குலத் தரசர்களுக்கு குருவானவ ராதலானும் அவர் உயர்ந்தவராவர். காமதேனு, தன்னையடுத்தோர் விரும்பிய வுணவையெல்லா மளிக்கக் கூடிய தாதலின் அது பசுக்களிலே சிறந்ததாம். நாரதர் உலகத்தில் நடக்கும் விவகாரங்களைக் கலகத்தின்மூலம் கிளப்பிவிட்டு முடிவில் அவற்றை ஒழுங்குசெய்து எல்லோர்க்கும் நலம்புரியக் கூடியவ ராத

லானும், திரிலோகசஞ்சாரி யாதலானும், சதாகாலமும் தேவபஜனை செய்துகொண் டிருப்பவ ராதலானும், அவர் முனிவர்களுக்குள்ளே சிறந்தவராவர். நவமணிகளுள்ளே பதுமராகமே இலக்குமிபோன்ற தேஜசுடையதாய் விளங்கக் கூடியதாதலின், அது சிறந்ததாம். தாமரைப் பூவானது இலக்குமி வாசஞ்செய்யக் கூடியதா யிருப்பதனுலே அது சிறந்ததாம்; "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே," என்பதனு லுணர்க. அருந்ததி, கலியாண காலங்களில், ஒவ்வொரு பெண்களுக்கும், 'நீங்களும் அவளைப்போல் கற்புடையவர்களா யிருங்கள்,' என்று காட்டுமாறு வடமீனென்று சொல்லப்பட்டு உத்தரதிசையில் பத்தினிக் கடவுளாய் நாளும் விளங்குகின்றமையினுலே அவள் பதிவிரதைகளுக் குள்ளே சிறந்தவளாவள். வாயு,சேடனுடனே வாதிட்டகாலத்தில் மேருவின் சிகரத்தையும் பெயர்த்தெறிந்த தாதலின், அது பலமுடையவைகளுக்குள்ளே சிறந்ததாம். ஐராவதமானது, தேவேந்திர பட்டத்துக்குரிய யானையா யிருத்தலினுலே சிறந்ததாம். அகத்தியமென்னும் இலக்கண நூலானது, இலக்கண வரம்பின்றி யிருந்த தமிழ்ப் பாஷையை ஒழுங்கு செய்வதற் குதவியாகும் பொருட்டு அகஸ்தியரால் செய்யப்பட்டதாதலின், அது மற்றைய தமிழ் நூல்களிற் சிறந்ததாம். மந்திரங்களிலே ஓம் என்னும் பிரணவாக்ஷரமில்லாவிடின் அவை பிரயோசனப்படா வாதலின் அந்தப் பிரணவம் எல்லா மந்திரங்களினும் சிறந்ததாம். திருப்பாற்கடலானது, தேவர்க்கு அமுதம்முதலிய செல்வங்களை நல்கினதாதலானும், இலக்குமியைத் தோற்றுவித்த தாதலானும், திருமால் பள்ளி கொள்ளுதற் கிடமாயமைந்த தாதலானும் அது சமுத்திரங்களுக்குள்ளே சிறந்ததாம். மேருவானது பொன்வடிவ மாதலானும், உமாதேவியைப் புத்திரியாகப்பெற்ற தாதலானும் அது மற்றைய மலைகளினுஞ் சிறந்ததாம்.

தருவென்பது தாருவென முதனீண்டது. சந்தனமென்பதும் சந்தானமென இடை நீண்டது. தரு, நதி, விரதம், நிலம், தலம்,

பசு, மலர், கற்பு, பலம், யானை, தமிழ், மந்திரம், வாரிதி, குவடு என்பனசாதி யொருமைச் சொற்கள். ரிஷிகள் - குடும்ப சன்னியாசிகள்; முனிவர்-உலகப்பற்றைக் கோபித்து நீக்கியவர். பதுமராகம்-தாமரை போன்ற நிறமுடையது; பதுமம் - தாமரை; ராகம் - நிறம். அம்போருகம்-முதலாகுபெயர். அருந்ததி யென்பதற்குப் பின் கற்பு என்பது இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. பெலமென்பது குணவாகுபெயராய் வலிமை யுள்ளவைகளை யுணர்த்திற்று. தமிழ் என்பது கருவியாகுபெயராய் அதனாலாகிய நூல்களை யுணர்த்திற்று. ஆகும் என்பதற்குப் பின் 'உயர்ந்தவை' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. (உச)

ஒவ்வொருவருக்கும் பெலமாவன.

அந்தணர்க் குபர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரியசௌ ரியமே பெல
மானவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயினே ருழவே பெலம்
மந்திரிக் குச்சது ருபாயமே பெலநீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமடவி யர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்
தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்குநிறை கல்வி பெலமாம்
வந்தனை செயும்பூசை செப்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) வாலவடிவான-பாலரூபமான, வேலா-வேற்படையை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—அந்தணர்க்கு - வேதியர்களுக்கு, உயர் - மேலான, வேதமே பெலம் - வேதமே வலிமையாம்; சொற்றவர்க்கு - அரசர்க ளுக்கு, அரிய - அருமையாகிய, சௌரியமே - வீரமே, பெலம் - வலிமையாம்; ஆன - உலகத்திலுண்டாகிய, வணிகர்க்கு - வைசியர்க ளுக்கு, நிதியே - திரவியமே, பெலம் - வலிமையாம்; ஆயின் - ஆராயு மிடத்து, சூத்திரர்க்கு-சூத்திரர்களுக்கு, நேர் - பொருந்திய, உழவே- பயிர்த்தொழிலே, பெலம்-வலிமையாம்; மந்திரிக்கு-அமைச்சனுக்கு, சதுர் உபாயமே - நான்குவகைத் தந்திரங்களுமே, பெலம் - வன்மை யாம்; நீதிமானுக்கு - சத்தியவந்தனுக்கு, நடுவே - நடுநிலைமையே, பெலம் - வன்மையாம்; மாதவர்க்கு-சிறந்த தவத்தினையுடைய முனி வர்க்கு, தவசு - தவமே, பெலம் - வன்மையாம்; மடவியர்க்கு-பெண் களுக்கு, நிறை - நிறைந்த, மானம் மிகு - பெருமைமிகுந்த, கற்பே- பதிவிரதா தர்மமே, பெலம் - வன்மையாம்; தந்திரம் மிகுத்த - உபா யம் மிகுந்த, கனம் - பெருமையையுடைய, சேவகர் தமக்கெல்லாம்- பணிவிடைக்காரர்க ளெல்லோருக்கும், சாமி காரியமே - எசமான னுடைய காரியத்தைச் செய்துகொண் டிருத்தலே, பெலம்-வன்மை யாம்; சான்றவர்க்கு - அறிஞர்க்கு, பொறுமையே - அடக்கமே, பெலம் - வன்மையாம்; புலவோர்தமக்கு - வித்வான்களுக்கு, நிறை- பூரணமாகிய, கல்வி - நூற்பயிற்சியே, பெலமாம் - வன்மையாம்; வந்தனைசெய்யும் - தெய்வ வழிபாடு புரிகின்ற, பூசை செய்பவர்க் கெல்லாம்-பூசனை புரிகின்றவர்க ளெல்லோருக்கும், அன்பு-பக்தியே, பெலம் - வலிமையாம்.

(வி - ரை.) அந்தணர், வேதமோதுதலைக் கொண்டே ஜீவிப் பவ ராதலின், அவர்க்கு வேதமே பலமாம். வீரமிருந்தால் மாத்தி ரமே அரசுரிமை நிலைக்குமாதலின் அரசர்க்கு சௌரியம் பலமாம். வியாபாரத் தொழில் நிதியிருந்தால்மாத்திரமே சிறப்புற்று நடக்கு

மாதலின், அத்தொழிலையுடைய வணிகர்க்கு நிதி பலமாம். பயிர்த்தொழில் மிகுந்தால் மட்டும் சூத்திரர் சிறப்புற்று விளங்குவாராதலின், அவர்களுக்கு உழவுத்தொழிலே பலமாம். சதுர்வகை உபாயங்களைக் கற்றிருந்தால் மாத்திரம் மந்திரி அரசை நிலைபெறச் செய்து தானுஞ் சிறப்புறவனாதலின், அவனுக்கு அந்த நால்வகை உபாயங்களுமே பலமாம். நடுவுநிலைமையாயிருந்தால் மாத்திரம் ஒருவன் நீதிமானென்று கொண்டாடப்படுவானாதலால், நீதிமானுக்கு நடுவுநிலைமையே பலமாம். தவசிகள், தவத்தினாலேயே சிறப்புறுவாராதலின், அவர்க்குத் தவமே பலமாம். மாதர்கள் கற்பினாலேயே சிறப்புற்று விளங்குவாராதலின், அவர்க்கு நிறையே பலமாம். எஜமானனுடைய் காரியங்களைத் தவறுது செய்தால் மாத்திரமே சேவகர்க்குச் சிறப்புண்டாமாதலின் அவர்க்கு எஜமானனுடைய காரியத்தை நிறைவேற்றுதலே பலமாம். ஒருவர் பொறுமையுடையரா யிருத்தலே அவரை அறிஞரெனப் பலருங் கொண்டாடுதற் கேதுவா மாதலின், அறிஞர்க்குப் பொறுமையே பலமாம். நிறைந்த கல்வியே வித்வான்களுக்குச் சிறப்பையுண்டாக்குவதாதலால் அவர்களுக்குக் கல்வியே துணையாம். அன்புள்ள பூஜையே சிறப்புறுமாதலின், பூசனைபுரிபவர்க்கு அவ்வன்பே பலமாம்.

அந்தணர் - அழகிய தண்மையை யுடையவர்; குளிர்ந்த வியல்பையுடையவரென்பது பொருள். சதுர் உபாயங்களாவன :— சாமம், பேதம், தானம், தண்டம் என்பவையாம். இவற்றுள் சாமம்: சமாதானத்தாற் காரியங் கொள்ளல்; பேதம் - பகைவருடைய நட்பைப் பிரித்துப் பேதப்படுத்திக் காரியங் கொள்ளல்; தானம்: பொருள் கொடுத்துக் காரியங் கொள்ளல்; தண்டம் : சண்டையால் பகைவரைத் தண்டித்துக் காரியங் கொள்ளல். பால என்பது வால எனத் திரிந்துவந்தது. (உ௫)

இருந்தும் பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
றந்தென தராம லென்ன
தாராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட ளுண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றெனபெ றாம லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித்தெனவி டுக்கி லென்ன
தெருளாக மானமில் லாதவொரு சீவனஞ்
செய்தெனசெ யாம லென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தெனமு றிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தெனவ ராம லென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே!—, தருணத்தில் - தளர்ந்த சமயத்தில், உதவி செய்யாத - துணைபுரியாத, நட்பாளர் - சிநேகிதர், - பின் அந்தத் தளர்வு நீங்கிய பின்னர், தந்து - ஒரு பொருளைக் கொடுத்ததனால், என்ன - என்ன பயன்? தராமல் - அதனைக் கொடாமலிருந்ததனால், என்ன- என்ன குறைவு? தாராதரம் - ஒழுங்கையும் ஒழுங்கின்மையையும், அறிந்து - தெரிந்து, முறை செய்யாத-ஒழுங்கான காரியங்களைப் புரியாத, மன்னரை - அரசரை, சார்ந்து என்ன - சேர்ந்திருப்பதனால் என்ன பிரயோசனம்? நீங்கில் என்ன - அவரைவிட்டு நீங்குவதனால் என்னகுறை? பெருமையுடன் - உயர்வுடனே, ஆண்மை இல்லாத - ஆண்தன்மையற்ற, ஒரு பிள்ளையை - ஒரு புத்திரனை,

பெற்று - பெறுவதனால், என்ன-என்ன பிரயோசனம்? பெறாமல்- பெறாதிருப்பதனால், என்ன - என்ன குறைவு? பிரியமா - விருப்ப மாக, உள் - மனதிலே, அன்பில்லாதவர்கள் - நேயமில்லாதவர்க ளுடைய, நேசம் - உறவை, பிடித்து - பற்றுவதனால், என்ன-யாது பயன்? விடுக்கில் - அதனை விடுவதனால், என்ன - யாது நஷ்டம்? தெருளாக - தெளிவாக, மானமில்லாதவொரு - மரியாதை யில்லாத தாகிய ஒரு, சீவனம்-உயிர்வாழ்தலை, செய்து-செய்ததனால், என்ன- யாது பயன்? செய்யாமல் - அதைச் செய்யாததனால், என்ன-யாது குறைவு? தேகி என - யாசகன் என்று சொல்லி, வருபவர்க்கு - பொருள்பெற விரும்பி வருகின்றவர்க்கு, ஈயாத - கொடுக்கப் படாத, செல்வம் - பாக்கியமானது, சிறந்து - சீர்பெற்று வளர்வத னால், என்ன - யாது பயன்? முறிந்து - அது கெட்டுப்போவதனால், என்ன - யாது குறைவு? மருவு - சேருகின்ற, இளமைதன்னில் - இளம்பருவத்தில், இல்லாத - கூடுதற்கில்லாமற்போன, கன் னிகை - பருவமங்கை, பின்பு - விருத்தாப்பியதசை வந்த பிற் காலத்திலே,-வந்து - வருவதனால், என்ன - யாது சுகம்? வராமல் - அவள் அப்போது வராதிருப்பதனால், என்ன - யாது குறைவு?

(வி - ரை.) " உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, யிடுக்கண் களைவதா நட்பு," என்றபடி நட்பினராயிருப்பவர் துன்பம் வந்தகாலத்தில், ஆடை நழுவியவன் கையானது அதனைக் கட்டுவ தற்கு எப்படி விரைவாக முந்துறுமோ அதுபோல அத் துன் பத்தை நீக்கிப் பொருளாலும் செய்கையாலும் உதவிபுரிய முந் துறவேண்டும்; அங்ஙனம் தருணத்தில் உதவி செய்யாத நட்பினர் பின்னர் பொருள் கொடுத்தும் பிரயோசன மில்லையாம். ஒழுங் கையும் ஒழுங்கின்மையையும் பகுத்தறிந்து செய்வனசெய்து நீதி புரியும் மன்னரிடமே சார்ந்திருத்தல் தகுதியாம்; அங்ஙன மின்றி நன்மை தீமை யுணராமல் அற்பரைப் புகழ்ந்து கொண்டாடி அவர்

க்கு நன்மை புரிந்தும், ஒழுக்கமுடையாரை இகழ்ந்து அவர்க்குத் தீங்கு புரிந்தும் மூடமாக ஆட்சி புரியும் மன்னரைச் சார்வதால் யாதொருபயனு மின்றாம். மனிதர்க்கு ஆண்தன்மையே சிறந்ததாம்; அஃ தில்லாதவர் பேடிகளாவர்; அவர்கள் இருந்தும் பயனில்லை; ஆதலின், ஆண்மையற்ற பிள்ளைகளைப் பெறுவதிலும் பிள்ளை யில்லாதிருத்தலே நலமாம். "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத், தகநக நட்பது நட்பு," என்றபடி உள்ளே அன்பில்லாமல் வெளிக்குமாத்திரம் முகமலர்ந்து பேசி வெளிநேயங் கொள்வது சிநேகமாகாது; உள்ளன்போடு மனமகிழ்ந்து செய்யும் சிநேகமே சிறந்ததாம்; ஆதலின், அன்பில்லாதவர் நேயங் கொள்வதினும் அவர் நேயமில்லாதிருத்தலே நலமாம். எவ்வளவு சுகமுற்று வாழ்ந்தாலும் மானம் போனால் அவ்வாழ்வினால் எவ்வகைப் பயனு மின்றாதலின், மானங் கெட்டு வாழ்வதிலும் தரித்திரத்தை யடைவதே நலமாம். இரப்பார்க்குப் பொருள் கொடுத்தால் மாத்திரந்தான் எங்கும் புகழ் பரவிச் செல்வத்திற்குச் சிறப்புண்டாகும்; கொடை யில்லாதவரிடம் செல்வமிருப்பினும் அது பிரகாசியாது; ஆதலின், அந்தச் செல்வம் இருந்தும் பயனில்லையாம். இளமைப்பருவத்தில் ஒருவனுக்கு ஒருகன்னிகை கிடைத்தால் மாத்திரந்தான் அவளின்பத்தை யனுபவித்தற் கேதுவாகும்; தேகவளம் குறைந்து பெண்ணாசையை வெறுக்கும் முதுமைப் பருவத்தில் அவள் கிடைப்பின்ஒருவித நலத்தையு மடைதற் கேதுவில்லாமற் போம்; ஆதலின், முதுமையிற் பருவமங்கை கிடைப்பினும் பயனின்றாம்.

என்ன என்னும் வினாவிடைச் சொற்களுக்குப் பின், 'பயன்' 'குறைவு' என்னுஞ் சொற்கள் இசையெச்சமாக வருவிக்கப்பட்டன; இதில், 'என்ன' என்று வரும் இவ் வினாவிடைச் சொற்களனைத்தும் எதிர்மறை யெச்சங்களாம்; இவைகள் இல்லையென்னும் பொருள் தந்து நின்றன. தந்து, சார்ந்து, பெற்று, பிடித்து, செய்து, சிறந்து,

முறிந்து,வந்து என்பன தெரிநிலைவினையெச்சங்கள். தராமல்,நீங்கில், பெருமல், விடுக்கில், செய்யாமல், வாராமல் என்பன குறிப்பு வினையெச்சங்கள். தேகி - தியாகியென்னும் வடமொழித்திரிபு; தியாகி-கொடைக்குரியவன்; அதாவது: கொடையை ஏற்றுக்கொள்ளத்தக்க யாசகன்; தியாகி என்பதற்குக் கொடையாளன் என்றும் பொருள். தெருளாக என்பதற்கு எங்குந் தெரிய என்பது பொருள். (உசு)

உபகார மில்லாதவை.

கடனீர் மிகுந்தென்ன வொதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானின்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்திநில மெல்லாங் குவிந்தென்ன
வரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழைபல
வரியநூ லோதி யென்ன
திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாஞ்
சித்திரத் துற்று மென்ன
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, கடல் நீர் - சமுத்திர ஜலமானது, மிகுந்து-அதிகரிப்பதனால், என்ன - யாது பயன்?, ஒதி - உதியமரமானது,

பெருத்து - பெருப்பதனால், என்ன - யாது பிரயோசனம்? காட்டு இலவு - காட்டிலேயிருக்கின்ற இலவமரமானது, மலரில் - மலருவதனாலே, என்ன - யாதுபயன்? கருவேல் - கருவேல் மரமானது, பழுத்து - பழுப்பதனாலே, என்ன-என்னபிரயோசனம்? நாய்ப்பால்- நாயின் பாலானது, சுரந்து - ஊறுவதனாலே, என்ன - யாது பயன்? கானில் - காட்டினிடத்தே, மழை - மாரியானது, பெய்து-சொரிவதனாலே, என்ன - யாது பயன்? அடர் - நெருங்கிய, கழுதைலத்தி - கழுதையின் சாணமானது, நிலமெல்லாம் - பூமியெல்லாம், குவிந்து-திரளுவதனாலே, என்ன - யாது பயன்? அரிய - அருமையாகிய, குணம் இல்லாத - நற்குணமற்ற, பெண் - ஸ்திரீயானவள், அழகாயிருந்து - அழகுடனே யிருப்பதால், என்ன - யாது சுகம்? ஆஸ்தான கோழை - சபையச்ச முள்ளவன், பல - பல விதமான, அரிய - அருமையாகிய, நூல் - சாஸ்திரங்களை, ஓதி - படிப்பதனாலே, என்ன - யாது பயன்? திடம் - வலிமையுள்ள, பூதம் - பேயானது, இனிய - இனிமையாகிய, வெகு - மிகுதிப்பட்ட, பொன் - திரவியத்தை, காத்திருந்து - காவல்புரிந்து கொண்டிருப்பதனாலே, என்ன - யாது பயன்? திறல்மிகும் - வலிமை அதிகரித்த, கரடி மயிர் - கரடியின் உரோமமானது, செறிவாகி - நெருக்கமாகி, நீண்டு - வளர்வதனாலே, என்ன - என்னபிரயோசனம்? வஸ்திர பூஷணம் எல்லாம் - ஆடையாபரணங்களெல்லாம், சித்திரத்து- சித்திரிக்கப்பட்ட படத்திலே, உற்று - பொருந்தியிருப்பதனாலே, என்ன - யாது பயன்? (இவைகளினாலெல்லாம் ஒரு பிரயோசனமுமில்லையாம்; இவை) மடம் மிகுந்து-மூடம் அதிகரித்து, எவருக்கும்- யாருக்கும்,உபகாரம் இல்லாத - உதவியற்றிருக்கின்ற, வம்பர் - தீச்செய்கையுடையவரது, வாழ்வுக்கு-பயனற்ற வாழ்க்கைக்கு, நிகராம்-ஒப்பாகும்.

(வி - ரை.) சமுத்திர ஜலமானது எவ்வளவு பெருகி யிருந்தாலும் மனிதர் பருகுதற் குபயோக மாகாது. உதியமரம் எவ்வளவு

பருத்தாலும் கதவுநிலை உத்திரம் முதலிய எவ்வகை வஸ்துக்களுக்கு முதவாது. காட்டிலவமலர் மணமும், மனிதர் சூடு மியல்பு மற்ற தாகலின் அது மனிதர்க்குப் பயனற்றதாம். கருவேல் எவ்வளவு பழுத்தாலும் அப்பழம் மனிதர் தின்பதற் குபயோகப்படாது. நாய்ப் பாலை எவரும் பருகுவா ரின்மையால், அது எவ்வளவு சுரப்பினும் பயனில்லையாம். நாட்டில் மழைபெய்தால் பயிர்கள் செழித்துக் குடிக ளுக்கு க்ஷேமமுண்டாகும்; காட்டில் மழை பெய்ததால் மனிதர்க்குப் பிரயோசனமில்லை. பசுச்சாணம் முதலியவை வீடுகளைச் சுத்தஞ் செய்தற்கும், உரம் முதலியவற்றிற்கும் உபயோகமாம்; அவைபோ லக் கழுதைச்சாணம் எதற்கும் பயன்படுவதன்றாம். பெண்களுக்கு நற்குணமே சிறந்த அழகாதலின், அக்குணமில்லாவிடின் அவர்க ளிடம் எவ்வளவு அழகு பொருந்தியிருந்தாலும் பயனில்லையாம். சபைக்கோழையாயிருப்பவன், தான் எவ்வளவு நூல்களைக் கற்றிருப்பி னும், அங்ஙனம் கற்றுக்கொண்ட விஷயங்களைச் சபையில் தீரமாக எடுத்துச்சொல்ல அஞ்சுவானாதலின், அவன் சாஸ்திரங்களைக் கற்றத னால் பயனில்லையாம். பூதம், பொன்னைக் காத்துக்கொண் டிருப்பி னும் அதன் பயனை தானும் அனுபவிக்காது; பிறரையும் அனுபவிக்க விடாது. மற்ற பிராணிகளின் மயிர்: மெத்தை, கம்பளம் முதலியவற் றிற் குதவுதல்போல காடிமயிர் ஒன்றுக்கு முதவாது. வஸ்திரம், ஆப ரணம் முதலியவற்றைச் சித்திரத்திலே யெழுதி'யிருப்பதனால், அவை பார்வைக்கு மாத்திரம் தோற்றுமே யன்றி எவரும் அனுபவித்தற் குதவா; இங்ஙனம் இவை பயனற்றவையா யிருத்தலின், ஒருவருக்கு முதவியில்லாத வம்பர் வாழ்வுக்கு நிகராம்.

கான்-மரஞ் செடி யில்லாத பாலைக்காடு; மரம் முதலியன மனி தற்குப் பயன்படுவன வாதலின், கான் என்பதற்கு இங்ஙனம் பாலைக் காடெனப் பொருள் கோடலே சிறந்ததாம். பெய்தும் என்பதிலுள்ள உம்மை இசைநிறைப் பொருளில் வந்தது. 'நிடமிஷியாடிதம்' என்

பதை, 'திடபூதம் இனிய' என மாற்றுக. இங்ஙனம் மாற்றிப் பொருள் கோடல், எட்டுவகைப்பொருள் கோள்களுள் மொழிமாற்றுப்பொருள்கோ ளெனப்படும். சித்திரம் ஆகுபெயராய்ச் சித்திரிக்பட்ட படத்தை யுணர்த்திற்று. (௨எ)

பதரெனப்படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா றுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்ச்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளி யாக்கும் பதர்
மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—தன் பெருமை சொல்லியே - தன்னுடைய உயர்வைக் கூறிக்கொண்டே, தன்னைப் புகழ்ந்த - தன்னைத்தானே துதித்த, பதர் - பதர்போன்றவனும்; சமர் கண்டு-போர் நிகழ்வதைக் கண்டு, ஒளிக்கும் - (அதில் வீரத்துடனே சென்று சண்டை புரிவ

தற்கஞ்சி) மறைகின்ற, பதர் - பதர்போன்றவனும்; தக்க - தகுதி யாகிய, பெரியோர் புத்தி - உயர்ந்தோர் கூறும் அறிவான வார்த்தை களை, கேளாத - கேட்டு அவற்றின்படி நடவாத, பதர் - பதர்போன் றவனும்; தோழர்தம்மொடு - சிநேகிதருடனே, சலிக்கும் - வீணே துக்கமான வார்த்தைகளைக் கூறி விரோதித்துக்கொள்கின்ற, பதர்-பதர்போன்றவனும்; பின்பு - ஒருவருக்குப் பின்னாலே, காணு இடந் தன்னிலே - அவரைக் காணாதவிடத்திலே, (அவரைப்பற்றிப்) பல புறணி - புறங்கூறுதலாகிய பல நிந்தைகளை, பேசி - தன்னைச் சார்ந் தவரிடம் சொல்லி, களிக்கும்-சந்தோஷிக்கின்ற, பதர் பதர்போன்ற வனும்; பெற்ற - தன்னையீன்ற, தாய் தந்தை-அன்னையும் பிதாவும், துயர் பட - தரித்திரத்தால் துன்பத்தை யனுபவிக்க, வாழ்ந்திருந்த-தான்மாத்திரம் செல்வத்துடனே ஜீவித்துக்கொண்டிருந்த, பதர் - பதர்போன்றவனும்; பெண் புத்தி-பேதையராகிய ஸ்திரீகள் கூறும் அறிவை, கேட்கும் - கேட்டு நடக்கும், பதர் - பதர்போன்றவனும்; பொன் பணம்-தன்னிடத்தே பொற்காசு, இருக்க - மிகுதியா யிருக் கும்போது, (மேலும் பேராசைகொண்டு) போய் - பலரிடமும் சென்று, இரக்கின்ற - யாசிக்கின்ற, பதர் - பதர்போன்றவனும்; பொய்சாட்சி சொல்லும்-(பிறர் கொடுக்கும் கைக்கூலியை விரும்பி நியாய விரோதமாக நீதிதலத்தில்) பொய்யான சாட்சி கூறுகின்ற, பதர் - பதர்போன்றவனும்; புவியோர் - பூமியிலுள்ள உயர்ந்தோர்க ளுடைய, நடத்தையை - ஒழுங்கான நடக்கையை, இகழ்ந்த - ஒழுங் கீனமானதென்று தனைப்போன்ற பதர்களுடன்கூடி நிந்தித்த, பதர்-பதர்போன்றவனும்; தன் மனைவி - தன்னுடைய இல்லாள், புணர் தல் - தன்னோடுகூடி மகிழும் இரகசியத்தை, வெளியாக்கும் - அன் னியரிடங்கூறி வெளிப்படுத்துகின்ற, பதர் - பதர்போன்றவனும்; மன் புணரும் - எப்பொழுதும் தற்பெருமையே சேர்ந்திருக்கின்ற, வேசையுடன் - பரத்தையுடனே, விபசரிக்கின்ற - கூடி வியபிசாரம் புரிகின்ற, பதர் - பதர்போன்றவனும்; மனிதரில் - மானிடருக்

குள்ளே, பதர் என்பர் - பயனற்றவரென்று அறிவுடையோர் கூறுவர்.

(வி - ரை.) பதர் என்பது அரிசி பிடிக்காத தானியத்தின் பெயர்; இஃது உவமையாகுபெயராய்த் தன்னைப்போன்ற பயனற்ற மனிதனை யுணர்த்திற்று. ஒருவனைப்பற்றிப் பிறர் புகழவேண்டும்; அங்ஙனம் புகழ்தலே என்றும் நிலைபெறும்; அங்ஙனம் இயற்கைப் புகழுண்டாகத்தக்க செய்கையைப் புரியாத ஒருவன் புகழை விரும்பித் தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு திரிவானாயின் அவனைப் பலரும் பயித்தியக்காரனென்று நிந்திப்பர்; ஆதலின், அவன் உலகத்திற் பயனற்றவனாவான். போர்நிகழுங் காலத்தில் வீரத்துடனே சென்று போர்புரிந்து தன் வல்லமையைக் காட்டுபவனே மனிதரிற் சிறந்தவனாவான்; அங்ஙனமின்றிப் போர்கண்டொளிப்பவன் மனிதர்க்குள்ளே மிகவும் தாழ்ந்தவனாதலின் அவன் மனிதரிற் பதரெனப் படுவான். பெரியோர் புத்தி கேளாதவன் தன் மனம்போனபடி நடந்து பலர் நிந்தைக் காளாவனாதலின் அவன் மனிதரிற் பயனற்றவனும். தோழருடனே எப்பொழுதும் முகமலர்ந்து பேசி சிநேகத்தை விருத்திசெய்தலே மனிதர்க்கழகாம்; அங்ஙனமின்றி அவர்மீது வீணே குற்றங் கற்பித்து அவருடனே சலித்துக்கொள்ளுதல் அழகாகாது; ஆதலின், அவ்வாறு சலித்துத் தோழருக்கு வெறுப்பை யுண்டாக்குவோன் பயனற்றவனும். எல்லாப் பாதகங்களினும் ஒருவரைப் பற்றிப் புறங்கூறுதல் மகாபாதகமாதலின், அங்ஙனம் புறங்கூறிக் களிப்போரும் பதராவர்; "அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே, புறனழீஇப் பொய்த்து நகை," என்பது திருக்குறள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,"என்றபடி மனிதர்க்குத் தாய்தந்தையர் தெய்வத்தினுஞ் சிறந்தவராதலின், அவரை எப்பொழுதும் பாதுகாக்கவேண்டும்; அங்ஙனம் பாதுகாவாவிடின் மகாதோஷமாம்; ஆதலின், தாய்தந்தையரைப் பேணுதவன் பதராவன். பெண்கள் பேதைமையுடைய ராகலின், அவர் சொற்படி நடந்தால் பெருமை யுண்டாக

மாட்டாது; ஆதலின், பெண்புத்தி கேட்பவன் பதராவன்; "அறவினையு மான்ற பொருளும் பிறவினையும், பெண்ணேவல் செய்வார்கணில்," என்பது திருக்குறள். இல்லாதவன் யாசித்தலே தீது; அங்ஙனமிருப்ப, திரவியமுள்ளவன் யாசித்தல் தீதினுந் தீதாம்; ஆதலின், பொன்னிருந்தும் யாசிப்பவன் பதராவன்; "நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலக, மில்லெனினு மீதலே நன்று," என்பது திருக்குறள். நீதிக்கு விரோதமாகப் பொய்ச்சாக்ஷி கூறுவோன் பலராலும் நிந்திக்கப்படுவானாதலின் அவன் மனிதரிற் பயனற்றவனாவன்; புவியிலுள்ள பெரியோரின் நடத்தையை உயர்வாகக் கொள்ளாமல் நிந்திப்பவன் அறிவுடையோர் பலராலும் வெறுக்கப்படுவானாதலின் அவன் மக்களிற் பதராவான். ஒருவன் தன்மனைவி தன்னுடன்கூடி மகிழும் செய்கையை வெளிப்படுத்துதல் மிகவும் இழிவாம்; ஆதலின், அதனை வெளியிடுவோன் பதராவன். வேசையர் சேர்க்கை உலகத்தில் மிகவும் தாழ்ந்ததாதலின், அதனைச் செய்வோனும் பதராவன்.

தாய் தந்தை என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. 'வாழ்ந்திருந்த' என்பதில் 'இருந்த' என்பது துணைவினை. பெண்புத்தி-மூன்றாம் வேற்றுமைத்தொகை. "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்றபடி பூ வென்னும் பொதுச்சொல் சிறப்பு நோக்கி மலர்களிற் சிறந்த தாமரையை உணர்த்துதல்போல், 'புவியோர்'என்னுஞ் சொல், உலகத்திற் சிறந்தவர்களாகிய பெரியோர்களையே உணர்த்திற்று.மன்-பெருமை. தாசிகள் எவ்வளவு தாழ்ந்தவர்களா யிருப்பினும் எப்பொழுதும் தற்பெருமையே கூறிக்கொண்டிருக்கும் இயல்பினையுடையவராதலின், மன் என்பதற்குத் தற்பெருமையெனப் பொருள்கொண்டு, 'மன் புணரும்' என்பதற்குத் 'தற்பெருமைசேரும்' என உரை வரையப்பட்டது. 'மன்புணரும் வேசை' என்பதற்கு, 'அரசன் கூடும் தாசி' எனப் பொருள் கோடலுமொன்று; எவ்வகையிலும் எவர்க்கும் பரத்தையர் சேர்க்கை தீங்குடையதே யாதலின் அங்ஙனம் பொருள் கோடல் அத்துணைச் சிறப்பன்றென்க. (உஅ)

தமக்குரியவற்றைக் காணாவிடில் துயருறுபவை.

இரவிகா ணாவனச மாரிகா ணாதபயி
ரிந்துகா ணாத குமுத
மேந்தல்கா ணாநாடு கரைகள்கா ணாவோட
மின்சொல்கா ணாவி ருந்து
சுரபிகா ணாதகன் றன்னைகா ணாமதலை
சோலைகா ணாத வண்டு
தோழர்கா ணாநேயர் கலைகள்கா ணாதமான்
சோடுகா ணாத பேடு
குரவர்கா ணாதசபை தியாகிகா ணாவறிஞர்
கொழுநர்கா ணாத பெண்கள்
கொண்டல்கா ணாதமயில் சிறுவர்கா ணாவாழ்வு
கோடைகா ணாத குயில்கள்
வரவுகா ணாதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணாவிளமை யாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

((இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, இரவி காணா - சூரியனைப் பாராத, வனசம் - தாமரையும்; மாரி காணாத - மழை முகத்தைப் பாராத, பயிர் - பயிரும்; இந்து காணாத - சந்திரனைப்பாராத, குமுதம் - அல்லியும்; ஏந்தல் காணா - அரசனைப்பாராத, நாடு - தேசமும்; கரைகள் காணா - இறங்கும் எல்லைகளைக்காணாத, ஓடம் - தெப்பமும்; இன் சொல் காணா - இனிய வார்த்தைகளைக் கேட்டறியாத, விருந்து - விருந்தினரும்; சுரபி காணாத - தாய்ப்பசுவைப் பாராத, கன்று - இளங்கன்றும்; அன்னை காணா - தாய்முகம் பாராத, மதலை - குழந்தையும்;

சோலை காணாத - பூங்காவனத்தைப் பாராத, வண்டு - சுரும்பும்; தோழர் காணா - துணைவரைப் பாராத, நேயர்-நண்பினரும்; கலைகள் காணாத-ஆண்மான்களைப் பாராத, மான் - பெண்மான்களும்; சோடு காணாத - தன் இணையாகிய ஆணைக்காணாத, பேடு - பெண்பறவையும்; குறவர் காணாத - குருமாராகிய பெரியோரைக் காணாத, சபை-அவையும்; தியாகி காணா - கொடையாளனைப் பாராத, வறிஞர்-தரித்திராகிய யாசகரும்; கொழுநர் காணாத - நாயகனைப் பாராத, பெண்கள் - குலஸ்திரீகளும்; கொண்டல் காணாத மேகத்தைப் பாராத, மயில் - மயூரமும்; சிறுவர் காணா - பிள்ளைகளைப் பாராத, வாழ்வு - இல்வாழ்க்கையும்; கோடை காணாத - வேனிற்காலத்தைப் பாராத, குயில்கள் - கோகிலங்களும்; வரவு காணாத - வருவாயைப் பாராத, செலவு - செலவும்; (ஆகிய) இவை எல்லாம்-இவைகளெல்லாம், புவிமீதில் - இப் பூமியின்மேல், வாழ்வு காணா - சுக வாழ்க்கையைப் பாராத, இளமை ஆம் - இளமைப் பருவத்தைப் போல வருத்த முறுவனவாம்.

(வி-ரை.) சூரியன் தாமரை நாயகனாதலின், அவனைக் கண்டால் மாத்திரமே தாமரை மலரும்; காணாவிடில் கூம்பியிருக்கும். பயிரானது மழையைக் கண்டால் மாத்திரம் செழித்து வளரும்; இல்லாவிடில் வாட்டமுறும். சந்திரன் அல்லிக்கு நாயகனாதலின் அவனைக்கண்டால் மாத்திரமே அல்லி மலரும்; இல்லாவிடில் குவிந்திருக்கும். தேசத்திலுள்ளவர்கள் அரசனைக் கண்டால் மட்டுமே தீங்கற்றுச் செழிப்புற்று வாழ்வார்கள்; அவ்வரச னில்லாவிடின் வாட்ட மடைவார்கள். தெய்பத்தி யுள்ளவர்கள் கறைகளைக் கண்டால் மட்டும் சந்தோஷ மடைவார்கள்; இல்லையேல் கலக்க முறுவார்கள். விருந்தினர்கள் இன் சொல்லைக் கேட்டால் மாத்திரமே களிப்புடன் விருந்துண்பார்கள்; அங்ஙனம் இனிய வார்த்தை கேளாவிடின் அவர்கள் விருந்துண்ணினும் விருப்புடன் உண்ணமாட்டார்கள்; "மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து,

நோக்கக் குழையும் விருந்து," என்பது திருக்குறள். பால் பருகும் கன்றானது பசுவைக்கண்டால் மட்டுமே முகச் செழிப்புறும்; காணாவிடில் கதறி வாட்டமடையும். தாய் முகங் காணாத பிள்ளையும் அங்ஙனமே முகவாட்ட முறும். வண்டுகள் சோலைகளைக் கண்டால் மாத்திரமே தேனைப் பருகி மகரந்தங்களில் ஆடி மலர்களைக் குடைந்து விளையாடிக் களிக்கும்; அச் சோலையைக் காணாவிடில் அவை தங்களுக் குணவு முதலியவை அகப்படாமையால் வருந்தும். நண்பிற் சிறந்தவர்கள் தோழரைக் கண்டால் மாத்திரமே இன்புறுவர். பெண்மான்கள் கலைமான்களைக் கண்டால் மாத்திரமே களிப்புறும்; இல்லாவிடில் துன்புறும். பெண் பறவைகளும் அங்ஙனமே தங்கள் ஆண்பறவைகளைக் கண்டால் மட்டுமே களிப்படைவனவாம். பெரியோரிருந்தால் மாத்திரம் சபை சிறப்படையும். யாசகன், கொடையாளனைக் கண்டால் மட்டுமே தான் விரும்பியவற்றைப் பெற்றின்புறுவன்; அங்ஙனம் கொடையாளனைக் காணாவிடில் தனக்கொன்றுங் கிடையாமையால் வருந்துவான். குலஸ்திரீகளா யிருப்பவர் தங்கள் நாயகரைக் கண்டால் மாத்திரமே களிப்படைவர்; இல்லையேல் துன்புறுவர்; இங்ஙனம் துன்புறுவரென்பதை, "கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய, மம்மர் கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள், கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா ணேயில்வார்க், கிம்மாலை யென்செய்வ தென்று," என்னும் நாலடிச் செய்யுளா னுணர்க. மயிலானது மேகத்தைக் கண்டால் மாத்திரமே களிப்புற்றுத் தன் கலாபத்தை விரித்தாடும்; இல்லையேல் துன்புறும். பிள்ளைகளையுடைய இல்வாழ்க்கையே சிறப்புறும்; அங்ஙனம் சந்ததியில்லாத வாழ்வு பயனற்றதாம்; இதனை, "கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும், சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி, மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர், இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை யென்னும்," என்னும் பாரதச்செய்யுளா னுணர்க. வேனிற்காலமே குயில்

கள் களிப்புற்றுச் சஞ்சரிப்பதற் குரியகால மாதலின் அக்காலத்தைக் காணுவிடின் அவை துன்புறும். வரவிருந்தால் மாத்திரமே செலவு தாராளமாகச் செய்யலாம்; அங்ஙனம் வருவாயின்றிச் செலவு செய்யப்புகின் அச்செலவினால் மிகுந்த கஷ்டமே எற்படும். சுகத்துடன் வாழ்தலே இளமைப்பருவத்தில் அடைய வேண்டிய பயனும்; அங்ஙனம் சுகவாழ்வு கிடைக்காவிடின் அவ்விளமைப்பருவமானது மிகவும் துக்கமுடையதாகும்; இஃது எல்லாத்துக்கங்களினும் மிகைப்பட்டதாதலின், மற்றவற்றிற்கு இதனையே உவமை கூறினர் ஆசிரியர்.

வனசம் - ஜலத்திற் பிறப்பது. நாடு ஆகுபெயராய் அதிலுள்ள மனிதரை யுணர்த்திற்று. ஓடமும் ஆகுபெயராய்த் தன்னிடத்துள்ள மனிதரை யுணர்த்தும். விருந்து - புதுமை; இஃதாகுபெயராய்ப் புதிதாக வந்தவரை யுணர்த்தும். 'இன்சொல் காணு' என்பதற்கு 'இனிய வார்த்தைகளைக் கேளாத' என்பது பொருள். இதிற் கூறிய காணுதல் நோக்கல் நோக்கமெனப்படும்; 'மனத்தால் நோக்கினுன்' என்பதற்குப் பொருள் கொள்ளல்போல இவ்விடத்துக் கொள்ளல் வேண்டும். (உகூ)

வியாதிக்கு மூலங்கள்.

கல்வினுன் மாபிரினுன் மீதூண் விரும்பலாற்
 கருதிய விசாரத்தி னுற்
 கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
 கனிபழங் கறியுண்ண லால்
நெல்லினு லுமியினு லுண்டபின் மூழ்கலா
 னித்திரைக ளில்லாமை யா
 னீர்ப்பகையி னுற்பனிக் காற்றினுட னேதலா
 னீடுசரு கிலையூற லால்

மெல் விரல் லார்கவ்வி யதிகமுள் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னுன்
மிகுசுமை யெடுத்தலா லிள வெயிற் காய்தலான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சாகாதி யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கல்லினுல் - ஆகாரத்திற் சேரும் கற்களினுலும்; மயிரினுல் - உணவிற்சேரும் உரோமத்தினுலும்; மீது - (முன்னே ஆகாரமுண்டிருந்தும் அது சீரணமாவதற்கு முன் அதன்) மேலும், ஊண்விரும்பலால் - உணவை யுண்ண ஆசை கொண்டுண்ணுதலாலும்; கருதிய - இடைவிடாதெண்ணிய, விசாரத்தினுல் - மனத்துயரத்தினுலும்; கடு வழி - (வெயிலும் முள்ளும் கல்லும் செறிந்து நெடுந்தூரமான) கடுமையாகிய பாதையிலே, நடக்கையால் - பிரயாணமாக நடப்பதனுலும்; மலசலம் - மலத்தையும் நீரையும், அடக்கையால் - அடக்குதலினுலும்; பழங்கனி - பழையகனி (அதாவது அழுகிப்போன கனியையும்), பழங் கறி - பழைய கறியையும், உண்ணலால் - தின்பதனுலும்; நெல்லினுல் - சாதத்துடன் சேரும் நெல்லினுலும்; உமியினுல் - உணவுடன் கலக்கும் உமியினுலும்; உண்டபின் - உணவுட்கொண்ட பிறகு, மூழ்கலால் - குளித்தலினுலும்; நித்திரைகள் இல்லாமையால் - தூக்கங்கள் இல்லாமையினுலும்; நீர்ப்பகையினுல் - ஜல விரோதத்தினுலும் (அதாவது: தேகத்திற்கு ஒத்துக்கொள்ளாத ஜலத்தினுலும்); பனிக்காற்றில் - பனியோடு கலந்த குளிர்காற்றில் திரிந்து, உடல் - தேகமானது, நோதலால் - வேதனையடைதலாலும்; நீடு - நீண்ட, சருகு - உலர்ந்த இலைகளும், இலை - பச்சை இலைகளும்,

ஊறலால் - உபயோகிக்கும் ஜலத்திற் கிடந்தூறுவதனாலும் (அதாவது இலை சருகு முதலியவை கிடந்தூறும் ஜலத்தினாலும்); மெல்லி - மெல்லிய தன்மை யுடையாராகிய, நல்லார் - பெண்களின், கலவி - சேர்க்கையை, உள் - மனதிலே, அதிகம் விரும்பலால் - அளவுக்கு மிஞ்சி விரும்புதலாலும்; வீழ் - வெளியில் வீழ்கின்ற, மலம் - மலமானது, சிக்குகையினால் - தாராளமாக வெளிப்படாமல் பந்தப்படுவதனாலும்; மிகு சுமை - அதிகமான பாரத்தை, எடுத்தலால் - தாங்கிச்செல்வதனாலும்; இளவெயில் - காலையிற்றோன்றும் இளவெயிலிலே, காய்தலால்-உடம்பு காய்வதனாலும்; மெய் வாட - உடம்பு மிகுந்த வாட்டத்தையடையும்படி, வேலை செய்யலால் - கடினவேலை புரிவதனாலும்; வல் இரவில் - வலிய இராத்திரியிலே, தயிர்கள் - பலவிதமான தயிர்களையும், சாகாதி - இலைக்கறி முதலியவைகளையும், உண்ணலால் - உண்பதனாலும்; வன் பிணிக்கு - வலிய நோய் பற்றுவதற்கு, இடம் என்பர் - தேகத்தில் இடமாகுமென்று கூறுவர் அறிவுடையோர்.

(வி - ரை.) ஆகாரத்தில் கற்கள் சேர்ந்தால் நீர்த்துவாரம் முதலியவற்றிற்போ யடைத்துக்கொண்டு நீரடைப்பு முதலிய வியாதிகளை யுண்டாக்கும். மயிர் சேர்ந்தால் குடலைச் சுற்றிக்கொண்டு வயிற்றுநோவு முதலியவற்றை யுண்டாக்கும். முன்னே உண்ட ஆகாரம் ஜீரணிக்குமுன் மேலும் ஆகாரத்தை யுண்டால் அஜீரணவியாதி யுண்டாகும். விசாரம் அதிகப்பட்டால் அதன் மூலம் ஆகாரம் முதலியன சரியாகச் செல்லாமல் பலவித நோய்க ளுண்டாகும். கஷ்டவழியில் நடந்து பிரயாணஞ் செய்தால் கால் கை முதலிய கருவிகள் ஓய்ந்து தேகத்தில் உஷ்ணம் அதிகப்பட்டுப் பலநோய்க ளுண்டாகும். மலஜலத்தை உரிய நேரங்களில் கழித்துவிடவேண்டும்; அங்ஙனம் கழிக்காமல் அடக்கினால் அந்த அசுத்த சத்துக்கள் நரம்புகளின் மூலம் சிரசுக்கேறி தலைநோவு சுரம் முதலிய கஷ்டவியாதிக ளுண்

டாகும். அழுகிப்போன பழத்தையும் பழைய கறியையுந் தின்றால் அவற்றின் கெட்ட சாரம் உடம்பில் வியாபித்து வியாதிகளை உற்பத்திசெய்யும். சாதத்துடன் நெல்லேனும் உமியேனுங் கலந்து வயிற்றினுட் புகுந்தால் அஜீரணமாய் வயிற்றுநோவு முதலியவற்றை யுண்டாக்கும். உண்டபின் நீரிற் குளித்தால் நரம்புகளின் வழியே நீர்ச் சத்தேறி ஜீரணக் கருவிகளைக் கெடுக்க அதனால் பல வியாதிகளுண்டாகும். நித்திரை யில்லாதிருந்தால் தேகத்தில் அதிக உஷ்ண முண்டாய் அசதியும் சோம்பலும் ஏற்பட்டுப் பலவியாதிகளும் ஆயுட் குறைவு முண்டாகும். தேகத்திற்கு ஒத்துக்கொள்ளாத நீரில் ஸ்நானஞ் செய்தால் உடனே ஜலதோஷ முதலியன ஏற்படும். பனிக் காற்றில் திரிந்து உடல் வருந்துவதால் சைத்தியம், தலைநோவு முதலிய வியாதிகளுண்டாகும். சருகும் இலையும் ஊறிய ஜலத்தைப் பருகினால் அந்த ஜலத்திலுள்ள கெட்டசத்து உடம்பில் பரவி வாந்திபேதி முதலிய கொடிய பிணிகளுண்டாம். அளவுக்கு மிஞ்சிய பெண் சேர்க்கையை விரும்பினால் தேகத்தில் இரத்தங்கெட்டு நரம்புகளின் வலிகுன்றி மேகம் வெட்டை முதலிய கடின ரோகங்களுண்டாகும். மலச்சிக்க லேற்பட்டால் உடம்பிற் சகல வியாதிகளு முற்பத்தியாம். அளவுக்கு மிஞ்சிய சுமையெடுத்தால் இளைப்பதிகரித்து அவயவங்கள் பின்னப்பட்டு நரம்புப்பிடிப்பு முதலிய நோய்களேற்படும். காலைவெயிற் காய்வதனாலே தேகத்தில் பித்தம், அசதி முதலியன மேலிட்டுப் பித்த சம்பந்தமான பலபிணிக ளுண்டாம் தேகம் வாடும்படி அதிகமான வேலைசெய்தால் எல்லாக் கருவிகளும் ஓய்ந்து பலபிணிக ளுற்பத்தியாவதற் கேதுவாம். இரவிலே தயிரும் இலைக் கறியு முண்டால் சீதளம்முதலிய பலபிணிக ளுண்டாம்.

'பழம்' என்பது, கனி, கறி ஆகிய இரண்டிடத்துங் கூட்டப்பட்டது; இங்ஙனம் நடுவில் நிற்கும் ஒருசொல் முன்னும் பின்னுமுள்ள சொற்களுடன் பொருந்துதல், பொருள்கோளெட்டில் தாப்பிசைப் பொருள்கோளென்று சொல்லப்படும்; இதனை வடநூலார் மத்தி

மதீப மெனக் கூறுவர். தாம்பு - ஊசல்; தாப்பிசை யென்பதற்கு, தாம்புபோல (அதாவது ஊஞ்சல் போல) நடுவில் நின்று இரண்டு பக்கத்திலுஞ் செல்லுஞ் சொல் என்பது பொருள். பலதினங் களி லேற்படும் நித்திரையின்மையைக் குறிக்கும் பொருட்டு, 'நித்திரைகள்' எனப் பன்மையாற் கூறினர் ஆசிரியர். ஊறல், என்பது ஆகுபெயராய், சருகு இலை முதலியவை ஊறுதலையுடைய் ஜலத்தை யுணர்த்திற்று. 'வல்லிரவு' என்பதற்கு, 'மிகுந்தஇரவு' என்று பொருள். தயிர்: ஆட்டுப்பால், மாட்டுப்பால் முதலிய வற்றினின்றும் பலவகையாக உண்டாகக் கூடியதாதலின் 'தயிர் கள்' என்று பன்மையாகக் கூறினர் ஆசிரியர். கல்லினல், மயி ரினல், விரும்பலால், விசாரத்தினல் முதலியவைகள் ஒருவகைக் குறிப்பு வினையெச்சங்கள்; இவை பிணிக்கிடமாகும் என்னும் வினைமுற்ரோடு முடியும். (௩௦)

செத்தும் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரகரங்கள் செய்த பெரியோர்
தனை யொப்பி லாப்புதல்வனைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாருத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளிம்

மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராவ ரன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அனைவர்க்கும் - எல்லோருக்கும், உபகாரமாம் - உதவியாகின்ற, வாவி - தடாகங்களையும், கூவம் - கிணறுகளையும், உண்டாக்கினோர் - ஏற்படுத்தியவர்களும்; நீதி - நியாயத்தையுடைய, மன்னர் - அரசர்களும்; அழியாத - என்றும் சேதமுறாத, தேவாலயம் - தெய்வத்திற்குரிய கோவிலை, கட்டி வைத்துள்ளோர் - கட்டிவைத் திருக்கின்றவர்களும்; அகரங்கள் - பார்ப்பனச் சேரிகளை, செய்த - உண்டாக்கின, பெரியோர் - உயர்ந்தோர்களும்; தனை ஒப்பு இல்லா - தனக்கு நிகரில்லாத, புதல்வனை - கல்வி கேள்விகளிற் சிறந்த புத்திரனை, பெற்றபேர் - ஈன்றவர்களும்; பொருது - எதிர்க்கின்ற, சமர் - போரில், வென்ற - வீரர்களைக் கொன்று வெற்றியடைந்த, சுத்த வீரர் - களங்கமற்ற சூரர்களும்; தரணிதனில் - இப்பூமியில், எந்நாளும் - எந்த நாளிலும், நிலைநிற்க - உறுதியாக நிற்கும்படி, மாறாத - வேறுபடாத, தருமங்கள் - அறங்களை, செய்தபேர்கள் - இயற்றியவர்களும்; கனவித்தை - உயர்வு பொருந்திய கல்வியை, கொண்டவர்கள் - கற்றுக்கொண்டவர்களும்; ஓயாத - ஒழிவுறாத, கொடையாளர் - ஈகையாளரும்; காவியம் செய்த - காப்பியங்களை இயற்றிவைத்த, கவிஞர் - கவிராஜர்களும்; கற்பினில் - பதிவிரதாதன்மத்திலே, மிகுத்த - அதிகரித்த, ஒரு - ஒப்பற்ற, பத்தினி - இல்லாளாகிய, மடந்தையை - பெண்ணை, கடிவாசனையிருந்த, மணம் செய்தோர்கள் - கலியாணஞ் செய்துகொண்டவர்களும்; (ஆகிய) இம்மனிதர்கள் - இந்த மானிடர்களுடைய, சரீரங்கள் போகினும் - தேகங்கள் அழிந்தாலும், இவர் - இவர்கள்,

சாகாத மனிதர் ஆவர் - இறவாமல் என்றும் நிலைபெற்ற மனிதராவார்கள்.

(வி - ரை.) எல்லோருக்கு முபகாரமான தடாகம், கிணறுகளையும், அழியாத தேவாலயங்களையும், பார்ப்பனச் சேரிகளையும், ஒருவர் கட்டிவைத்தால் அவை நெடுங்காலம் அழியாதிருக்கும்; அவற்றைச் செய்தவர் தேகம் அழிந்துபோனாலும் அவை நிலை நிற்பதன் மூலம் அவர் பெயர் அழியாமல் விளங்கிக்கொண்டிருக்கும். நீதி பொருந்திய மன்னர் பெயர் அந்நீதியால் என்று மழியாதிருக்கும். உவமையில்லாத சிறப்புவாய்ந்த புதல்வனைப் பெற்றால், அவன் உலகத்தில் என்றும் நிலைநிற்கும்படி பல புகழ்ச்சியான காரியங்களைச் செய்வான்; அவற்றின்மூலம் அவனைப் பெற்றோருடைய பெயர் என்று மழியாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும். பெரியபோரில் ஜெயங் கொண்டவருடைய சரித்திரம் நூல்களின்மூலம் என்றும் விளங்கிக்கொண்டிருக்கு மாதலின் அவர் பெயரும் என்றும் அழியாமல் நிலைநிற்கும். என்றும் நிலைத்து நிற்கும்படி அன்னதான சத்திரம், பாடசாலைமுதலிய தருமங்களை யேற்படுத்தினால் அவை நெடுங்காலம் நிலைநிற்பதன்மூலம் அவற்றைச் செய்தவருடைய பெயர் பிரகாசித்துக்கொண்டிருக்கும். மேலான கல்வியைக் கற்றவர்கள் பலநூல்களையும் செய்வார்களாதலின் அவை நெடுங்காலம் நிலைத்து நிற்பதன்மூலம் அவர்களுடைய பெயரும் அழியாதிருக்கும். கொடையாளர் புகழானது பலநூல்களினும் எடுத்துக் கூறப்பட்டு என்று மழியாதிருக்கு மியல்பினை யுடையதாகலின், அப் புகழின்மூலம் அவர் பெயர் நெடுங்காலம் உலகத்தில் அழியாதிருக்கும். காப்பியங்களைச் செய்தால் அவை பல வித்வான்களாலும், பிரபுக்களாலும் கொண்டாடப்பட்டு உலகத்தில் நெடுங்காலம் நிலைத்துநிற்கு மாதலின், அவை உள்ள வரையிலும் அவற்றைச் செய்த கவிஞருடைய பெயர் அழியாது. கற்புடைய மங்கையரைக் கலியாணஞ் செய்துகொண்டால் அம்மங்கையர் கற்பாலேற்படும் புகழ் உலக

மூள்ளளவும் அழியாதிருக்கு மாதலின், அப் புகழின்மூலம் அப் பெண்களை மணந்து கொண்டவர்களுடைய பெயரானது நெடுங் காலம் அழியாமலிருக்கும்.

தனை ஒப்பு - உருபுமயக்கம். சுத்தவீரர் என்பதில் சுத்தம் என்னும் அடைமொழி வீரத்தின் உயர்வை விளக்குதற் பொருட்டுவந்தது. தாரணி' யென்பது, 'தரணி' என் முதற் குறுகிவந்தது. கொடை-தொழிற்பெயர். காவியம் என்பதற்குக் காப்பியமென்றும், தொடர்நிலைச் செய்யுளென்றும் பெயர்; இது, சொற்றொடர்நிலை, பொருட்டொடர் நிலையென இருவகைப்படும்; இவற்றுள், சொற்றொடர் நிலையாவது: சொற்களைத் தொடர்ந்து அந்தாதிச் செய்யுட்களாலாவது; பொருட்டொடர் நிலையாவது: பொருள்களைத் தொடர்ந்து பலவிகற்பச் செய்யுட்களாலேனும் ஒருவகைச் செய்யுட்களாலேனும் அமைவது; இப்பொருட்டொடர்நிலை: பெருங் காப்பியமென்றும், சிறு காப்பியமென்றும் இருவகைப்படும். அவற்றுள் பெருங்காப்பியமாவது: வாழ்த்து, தெய்வ வழிபாடு, தலைமைப் பொருள்கூறல் என்னும் மூவகை மங்களங்களுள் ஒன்றனை முதலிற்பெற்று, அறம் பொருள் இன்பம் வீடென்னும் புருடார்த்தங்கள் நான்கையுந் தருந் தன்மையதாய், சிறப்புற்ற வொருதலைவன் கதை மேற்றாய், நாடு நகர் மலைகடல் காலம் சந்திர சூரியர் உதயாஸ்தமனம், விவாகம், முடிசூட்டல், பொழில் விளையாட்டு, நீர்விளையாட்டு, மதுபானம், மக்கட்பேறு, கலவியிற்களித்தல், புலவியிற் புலத்தல், மந்திரம், தூது, போர்ச்செலவு, போரிடல், வெற்றி முதலிய பல வருணனைகளை யுடையதாய், சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் முதலிய பிரிவுகள் பொருந்தி, வீரம்முதலிய சுவைகளும் அவற்றை விளக்குங் கருத்துக்களும் தோன்ற, செவிக்கினிய ஒருவகைச் செய்யுட்களாலேனும் பலவகைச் செய்யுட்களாலேனும் கட்டுரையாலேனும் கற்றோரா வியற்றப்படுவது; இஃதிங்குக் கூறப்பட்ட வருணனைகளுள் சில குறைந்தும் வரும்.

சிறு காப்பியமாவது:—மேற்கூறியவாறு பல வருணனைகளைப் பெருமலும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஒன்றும் பலவும் குறைந்தும் வரக் கற்ரோரால் இயற்றப்படுவதாம். இது பலவகைப்படும்; அவை: ஆற்றுப்படை, உலா, பரணி, கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, அந்தாதி முதலியனவாம். (௬க)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாருத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்
தூருக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்
வீருக மனையா டனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்து விடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறு மசடர்
மாருக விவரெலா முயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, மாருத - தீராத, வறுமையோர் - தரித்திரத்தை யுடையவர்களும்; தீராத - நீங்காத, பிணியாளர்-நோயை யுடையவர்களும்; வரு - தம்மனைவி வந்த, வேட்டகத்தில் - மாமி

யார் வீட்டில், உண்போர் - எப்பொழுதும் உணவுண்டு ஜீவிப்பவர்களும்; மனைவியை - தம் இல்லாளை, வழங்கி - வேறொருவர்க்கு அபிமானதாரமாகக் கொடுத்து, சீவனம் செய்குவோர் - அவள் மூலம் வரும் வருவாயைக் கொண்டு ஜீவிப்பவர்களும்; மன்னும் - பொருந்திய, ஒரு-ஒப்பற்ற, ராசசபையில்-மன்னரவையில், தூருக- பழியாக, நிந்தை செய்து - அரசனால் அபிமானிக்கப்படும் நல்லோரை இகழ்ந்துரைத்து அரசனுக்கு அவர்மீது வெறுப்பை யுண்டாக்கித் தாம் நல்லோர்போல் நடித்து அரசனது சிநேகத்தைப் பெற்று அதன்மூலம், உய்குவோர் - வரும்படி பெற்றுப் பிழைப்பவரும்; சிவிகைகள் சுமந்தே - பல்லக்குகள் தூக்கி, பிழைக்கின்ற பேர் - ஜீவிக்கின்றவர்களும்; தொலையா - நீங்காத, விசாரத்து - மனோவியாகுலத்திலே, அழுந்துவோர் - ஆழ்ந்து வருந்துவோரும்; வார்த்தையில் - நியாயஸ்தலத்திலிருந்து வழக்குத் தீர்க்கும்போது நடுவுநிலைமையாகக் கூறும் நீதி வாக்கியங்களிலே, சோர்வு படல் உற்ற - பாரபக்ஷமாகத் தவறுதல் பொருந்திய, பெரியோர் - நியாயாதிபதிகளாகிய உயர்ந்தோர்களும்; மனையாள் தனக்கு அஞ்சி- உலோபகுணமுள்ள இல்லாளுக்குப் பயந்து, வந்திடு - தம்மை நாடி வந்த, விருந்தினை-விருந்தினரை, வீருக - வேகமாக, ஒழித்துவிடுவோர் - நீக்கிவிடுவோரும்; வீம்புடன் - பெருமையுடனே, செல்லாத - நியாய சபையிற் போகத்தகாத, விவகாரமது கொண்டு- பொய்வழக்கைக் கொண்டு, மிக்க - நீதி மிகுந்த, சபை - நியாய சபையிலே, ஏறும் - ஏறிச் செல்கின்ற, அசடர் - கீழ்மக்களும்; (ஆகிய) இவர் எல்லாம் - இவர்களெல்லோரும், (உயிருள்ளவர்களாயிருந்தாலும்) மாருக - நல்லோரியற்கைக்கு விரோதமாக, உயிருடன் - பிராணனுடனே, செத்த சவம் ஆகி - இறந்த பிணம் போலத் தோன்றி, ஒளி மாய்வர் - பிரகாசங் குன்றுவர்.

(வி - ரை.) இடைவிடாத வறுமையுடையார், தாங்கள் ஜீவனஞ் செய்யும் விஷயத்தில் ஓயாத கஷ்டத்தை யடைந்து கொண்

டிருப்பாராதலின் உலகத்தில் அவர் வாழ்வு பயனற்றதாம்; ஆதலின், அவர் உயிருடனிருந்தும் செத்தவரேயாவர். தீராத நோயை யுடையவர் ஒருநாளேனும் திருப்தியுடன் வாழார்களாதலின் அவரும் உயிருடனிருந்தும் செத்தவரேயாவர். மனிதர் தம் தொழில் மூலம் ஜீவித்தலே சிறந்ததாம்; அங்ஙனமின்றிப் பெண் கொண்ட வீட்டில் உண்டு ஜீவித்தால், 'இவர் ஒன்று மியலாதவர்' என்று உலகத்தில் பலராலும் நிந்திக்கப்படுவர்; ஆதலின், அந்நிந்தைக் காளாவோர் ஜீவித்திருப்பினும் இறந்தவரேயாவர் மனையாளைப் பிறர்க்குக் கொடுத்து ஜீவித்தல், உலகத்திலுள்ள தாழ்மையான காரியங்களிலெல்லாம் மிகவும் தாழ்ந்ததாம்; ஆதலின், அத்தகைய ஜீவனமுடையாரைப் பார்த்தவர்களெல்லோரும் காரியுமிழ்ந் திகழ்வர்; இவ்வகை இகழ்ச்சியுடையார் பார்வைக்கு மனிதரூபமுடையவராய்த் திரியினும் நடைப்பிணமாவர். தம் ஜீவனத்தின் பொருட்டு, இராஜ சபையில், அரசனுக்கு நண்பரான ஒருவர்மீ நிந்தை கூறிப் பகையை யுண்டாக்கி அவரை நீக்கிவிட்டு அவரடைந்த பயனைத் தாமடைவோர் மகா பாவிகளாவர்; ஆதலின், இவரும் உயிருள்ளவராயினும் பிணம்போற் பயனற்றவரேயாவர். உலகத்தில் தருமஞ் செய்யாத பாவிகளே மனிதர்க்கு வாகனமாய்ப் பல்லக்குச் சுமப்பாராதலின் இவரும் உயிர்ப்பிணமாவர்; "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தா னிடை," என்னுந் திருக்குறளால் இஃதுணரப்படும். எப்பொழுதும் நீங்கா விசாரத்தழுந்தி யிருப்பார்க்கு நிமிஷ நேரமாயினும் மனக்களிப் பேற்படாது; மனக்களிப்பில்லாத வாழ்வு பயனற்றதாதலின் இத்தகைய துக்கமயமான வாழ்வை யுடையாரும் பிணத்துக்கு நிகராவர். நியாய சபையிலிருந்து வழக்குத் தீர்க்கும்போது நடுவுநிலைமையுடன் நீதி வாக்கியங்களைத் திடமாகக் கூறாது, பாரபக்ஷமாகத் தவறுதலான வார்த்தை கூறுவோர் பலராலும் நிந்திக்கப்பட்டு நற்கதியை யிழப்பர்; ஆதலின், இவர் பேருக்குப் பெரியரா யிருப்பினும் உயிர்ப்பிணமேயாவர். உலகத்திற் செய்யத் தக்க தருமங்களிலெல்லாம் விருந்தோம்புதல் சிறந்த தர்மமாதலின், அதனைச் செய்யாதார்க்கு நற்பதவி கிடைத்தல் அரிதாம்; அதனோடு பெண்ணுக்கடங்கி நடத்தல் பகா இழிவாம்; ஆதலின், மனையாளுக் கஞ்சி விருந்தினரை உபசரிக்காமல் விடுவோர் உயிருடனிருப்பினும் செத்தவரேயாவர் பொய்வழக்குக் கொண்டு திரிவோர், கீழ்மக்களை,

னப் பலராலும் நிந்திக்கப்படுவர்; அவர் உலகத்திலிருந்தும் எவ வகைப் பயனுமின்றாம்; ஆதலின், அவரும் பிணத்தையே நிகர்ப்பர்.

வேட்டல்-கலியாணஞ்செய்தல்; வேட்டகம்-கலியாணஞ்செய்த வீடு; அதாவது மாமியார்வீடு. 'வரு' என்னுஞ் சொல்லுக்குமுன் 'மனைவி'யென்னுஞ் சொல் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. ஒளிமாய்வர் என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. ()

சிறிதும் பயன்படாதவர்.

பதராகி லுங்கன விபூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகி லும்
பலருக்கு மறைவாகு மாடுரிஞ் சிடுமலம்
பன்றிகட் குபயோக மாம்
கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்கும்வன்
கழுதையும் பொதி சுமக்குங்
கல்லெனிற் றேவர்களு மாலயமு மாம்பெருங்
கான்புற்று மரவ மனையாம்
இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெயு
மிழிவுறு குரங் காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ
லேற்றமா ளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பதராகிலும்-பயனற்ற நெற்றானியமாயினும்

கனம் - மேன்மை பொருந்திய, விபூதி - திருநீற்றை, விளைவிக்கும்- உண்டாகச்செய்யும்; பழமை பெறு-பழயதன்மை பெற்ற, சுவராகி லும் - குட்டிச்சுவரானாலும், பலருக்கும் - பலஜனங்களுக்கும், மறை வாகும் - மல்ஜலங்கழிக்க மறைவிடமாகும், மாடு-மாடுகள், உரிஞ்சி டும் - தினவுதீர அதில் உராயும்; மலம் - எல்லாப்பொருள்களினும் தாழ்ந்த பொருளாகிய மலமும், பன்றிகட்கு-ஊர்ப்பன்றிகளுக்கு, உபயோகமாம்-ஆகாரமாக உபயோகப்படும்; கதம்மிகு-கோபமிகுந்த, கடாவென்னில் - எருமைக்கடாக்களானாலும், உழுது-வர் உழுது பயிர்த்தொழிற்குதவியாய், புவி - உலகத்திலுள்ளவர்களை, காக்கும் - (தானியங்களின் விளைவை உண்டாக்கிக் கொடுத்தல் மூலம்) காப் பாற்றும்; வன் கழுதையும்-வலிமை பொருந்திய கழுதையும், பொதி சுமக்கும்-வண்ணானுடைய அழுக்குத்துணிச் சுமை முதலியவற்றைத் தாங்கும்; கல் எனில்-சிலையென்றாலும், தேவர்களும் - தேவர்மூர்த் தங்களும், ஆலயமும்-கோவில்களும், ஆம்-ஆகும்; பெரும்-பெரிய, கான்-காட்டிலுள்ள, புற்றும்-கறையானாலுண்டாக்கப்படும் புற்றும், அரவம்-நாகத்திற்கு, மனையாம்-வீடாகும்; இதம் இல்லா-இனிமை யில்லாத, சவமாகிலும் - பிணமானாலும், சிலர்க்கு-சிலவகுப்பார்க்கு, உதவி செய்யும்-உபகாரம் புரியும்; இழிவு உறு-தாழ்மைபொருந்திய, குரங்காயினும் - வானரமானாலும், இரக்க-தன்னை ஆட்டுவித்துக் காட்டி யாசகஞ் செய்தற்பொருட்டு, பிடித்தவர்க்கு-தன்னைப் பிடித்து வைத்திருப்பவர்களுக்கு, உதவிசெய்யும்-வரும்படி தேடிக்கொடுத்து உபகாரம் புரியும்; வாருகோல்-துடைப்பமும், ஏற்ற-பொருந்திய மாளிகை-வீடுகளை, விளக்கும் - தூசுநீக்கிப் பிரகாசிக்கச்செய்யும்;, மதமது-உன்மத்தமானது, மிகும்-அதிகரிக்கின்ற, பரம லோபரால்சு மிகுந்த லுலுத்தரால், மற்றொருவருக்கு-வேறொருவருக்கு, உபகார முண்டோ-உதவியுண்டோ? (இல்லை).

(வி - ரை.) பதர் - நெல்லில் பயனற்றது; இதனைப் பவின் சாணத்துடன் கலந்து பிசைந் துண்டையாக்கி நெருப்பிற் புடமிட்டு

விபூதி யுண்டாக்குவது வழக்கம். குட்டிச்சுவர் மலஜலங் கழிப் போர்க்கு மறைவிடமாவதன்றி மாடு உராய்ந்து தினவு தீர்த்துக் கொள்ளற்கும் உபயோகமாம். மலம் எல்லாப் பிராணிகளும் அருவருக்கத்தக்கதாயினும் பன்றிமாத்திரம் அதனைத் தனக்கு ஆகாரமாகத் தின்னும். எருமைக்கடா தாழ்ந்ததாயினும் பயிர்த்தொழிற்கு உபயோகமாம். கழுதை மூதேவி வாகனமாயும் தாழ்ந்த பிராணியாயுமிருப்பினும் வண்ணான் பொதி உப்புப்பொதி முதலியவற்றை யெடுத்துச் சில வகுப்பார்க்கேனு முதவிசெய்யும். கல்லினால் தேவதாவடிவங்களைச் செய்து வைத்து வணங்குவதும், கோவில்களைக் கட்டுவதும் இயற்கை. கறையானால் கட்டப்படும் மண்புற்றில் அரவம் குடிபுகுந்திருப்பது இயற்கை. சவம் வெறுக்கத்தக்கதாயினும் அதன் மூலம், மேளக்காரரும், பறையரும், பண்டாரங்களும், தோட்டிகளும், வண்ணார் அம்பட்டர் முதலியவர்களும் வரும்படியை அடைவார்கள். குரங்கானது ஆங்காங்கே பல ஆட்டம் புரிந்து வேடிக்கைகள் காட்டி, தன்னைப் பிடித்து வைத்திருப்பவர்க்கு வரும்படி தேடிக் கொடுக்கும். துடைப்பம் தாழ்ந்ததாயினும் வீடுகளிலுள்ள அசுத்தங்களை நீக்கிச் சுத்தஞ் செய்யும். இவையெல்லாம் இங்ஙனம் ஒவ்வொரு வகையில் பிரயோசனப்படினும், உலோபரால் எவ்வகை உதவியுமில்லை. பதர், சுவர், மலம் முதலியவைகளும் ஒவ்வொரு வகையில் பிரயோசனப்படும், உலோபி எவ்வகையிலும் பிரயோசனப்படான் என்வே, அவன் மலம் முதலியவற்றினும் மிகத்தாழ்ந்தவனென்பது பெறப்படும்.

பதர் சுவர் முதலியவற்றிலுள்ள உம்மைகள் இழிவுசிறப்புப் பொருளன. மற்றொருவருக்கும் என்பதிலுள்ள உம்மை இசைநிறைப் பொருளில் வந்தது. 'உண்டோ' என்பது எதிர்மறையெச்சம். (௩௩)

உலுத்தரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந்
தேடிப் புதைத்து வைப்பார்
சீலைநல மாகவுங் கட்டார்க ணல்லமுது
செய்துண் ணறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப்
புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னோடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்று முதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுக்கு தினுமளவில்
வெகுபணஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண்
மற்றொருவ ருக் கீவரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, லோபியர்கள்-ஈகையில்லாத வுலுத்தர்கள், திரவியம்-புதை பொருளை, காக்கும்-ஒருவருக்கும் பயன்படாமல் காத்திருக்கும், ஒரு - ஒப்பற்ற, பூதங்கள்போல்-முனிகளைப்போல, பணம் தேடி-பொருளைச் சம்பாதித்து, புதைத்துவைப்பார்-ஒருவருக்கும் பயன்படாமற்போகும்படி பூமிக்குள்ளே புதைத்துவைத்துக் காத்துக்கொண்டிருப்பார்; நலம் ஆகவும்-அழகாகவும், சீலை கட்டார்கள்-துணி கட்டமாட்டார்கள்; நல் அமுது-நல்ல உணவும், செய்து-சமைத்து, உண்ணார்-சாப்பிடமாட்டார்கள்; அறமும்-தருமங்களையும், செய்யார்-புரியமாட்டார்கள்; (பின்னையெவருக்கீவரெனில்,) புரவலர் செய்-அரசர்கள் புரிகின்ற, தண்டம்தனக்கும்-தண்டனைக்கும்,

வலுவாக-வலிமையாக, புகும்- கொள்ளையடிக்கப் புகுகின்ற, திருடருக்கும் - கள்வருக்கும், ஈவார்-கொடுப்பார்கள்; புலவரைக் கண்டவுடன்-பொருள்பெறும் பொருட்டுக் கவிபாடிவரும் வித்வான்களைப் பார்த்தவுடனே, (அவருக்கேதேனுங் கொடுத்தற்கஞ்சி) ஓடி-அவர் கண்ணுக்ககப்படாமல் விரைந்து சென்று, பதுங்குவார்-மறைவார்கள்; புராணிகர்க்கு-புராணப்பிரசங்கிகட்கு, ஒன்றும் உதவார்-ஒரு பொருளும் கொடுக்கமாட்டார்கள்; விரகு அறிந்து-புத்தியறிந்து, பிள்ளை-புத்திரன், சோறு கறி-அன்னம் பதார்த்தங்களை, தின்னும் அளவில்-உண்ட பருவத்தில், வெகு பணம் - அநேகம் பொருள்கள், செலவாகலால் - விரயமாவதனாலே, (அதன்பொருட்டு வயிற்றெரிச்சல் கொண்டு, அவ்வகைச் செலவுகள் நேராதிருத்தற்கேதுவான) விளையாடு - எல்லோரும் பரிகசித்து விளையாடுகின்ற, கிழவனும் பிள்ளையே-விருத்தாப்பியனும் பிள்ளையே, பிள்ளை என-நல்ல பிள்ளை என்று, மிகு-செட்டிலே மிகுந்த, செட்டி-ஒருவணிகன், சொன்ன-கூறிய, கதைபோல் - சரித்திரத்தைப்போல வரவு - தமக்கு வரும் வரும்படியை, பார்க்கின்றதே அல்லாது-பார்ப்பதேயல்லாமல், மற்றொருவருக்கு - மேற்கூறியவர்களுக் கன்றி வேறொருவருக்கு, ஈவரோ-கொடுப்பார்களோ? (இல்லை).

(வி - ரை.) உலோபியர்க்குப் பொருளிருந்தால் அதனை அனுபவிக்க வேண்டியவிதந் தெரியாமலும் அதன் மூலம் அறங்களைச் செய்து நற்பயனை யடையுமார்க்கந் தெரியாமலும், பூதம் ஒருபயனுமின்றிப் பொருளைப் புதைத்துவைத்துக் காத்துக்கொண்டிருத்தல் போல மேன்மேலும் பொருள்களைத் தேடிப் பூமிக்குள் புதைத்து வைப்பார். நல்ல வஸ்திரங் கட்டினால் அதன்மூலம் அதிகப்பணம் செலவாகிவிடு மென்று நினைத்துத் தாழ்ந்த ஆடைகளை முழங்காலுக்குமேலே கட்டிப் பணத்தை மீதிப்படுத்துவர். உணவையும் அற்ப ஆகாரமாகக் குறைத்து அதன்மூலமாகவும் பொருளைச் சேர்ப்பார். தானதருமங்கள் செய்யாமலும் பொருளீட்டுவர். புலவரையும்

புராணிகரையுங் கண்டு ஏதேனுங் கொடுத்தற்கஞ்சி யோடி மறைந்து செலவைச் சுருக்குவர். பிள்ளைகள் பலவகை ஆகாரங்களை உண்ணும் பருவத்தில் அதிகமாகச் செலவாகிறதென்று நினைத்து அவர்களையும் வெறுப்பர். கிழவருக்கு ஆகாரம் அதிகமாகச் செல்லாததால் செலவு சுருக்கமென்று நினைத்து அவர்களைக் கொண்டாடுவர். இங்ஙனம் எப்பொழுதும் எவ்வகையிலும் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களேயன்றி மற்றொருவருக்குக் கொடுக்க மனமிசையமாட்டார்கள், இவர்கள் இங்ஙனம் பொருளைச் சேர்த்து வைப்பினும் பகுதி முதலியவை கட்டும்படி அரசர்கள் செய்யும் தண்டனைக்கும், திருடர்செய்யும் கொள்ளைக்கும் தாம்சேர்த்துவைத்த பொருளை எளிதிற் கொடுத்துவிடுவார். ஒரு செட்டி, தன் பிள்ளை, அதிகமாகச் செலவாகும்படி இளம்பருவத்தில் பலவுணவுகளை உண்பதையும், தன்வீட்டிலிருந்த கிழவன் கஞ்சியும் உட்கொள்வதற்குச் சக்தியில்லாமல் தள்ளாடிக்கொண்டிருப்பதையும் பார்த்து, செலவுக்குக் காரணமான தன் பிள்ளையை வெறுத்தும், செலவுக்குக்காரணமாகாத கிழவனைப் புகழ்ந்தும், 'விளையாடு கிழவனும் பிள்ளையேபிள்ளை,' என்று கூறினனென்பது பழங்கதை.

'அறமுஞ் செய்யார்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. புரவலர்-காத்தற் றொழிலில் வல்லவர். புலம்-அறிவு, புலவர்-அறிவுடையார். சோறு கறி-உம்மைத்தொகை. செட்டி-செட்டையுடையவன். (௩௪)

திருவாழிடங்கள்.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலா சனந்தன்னி லுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காவியின் கூட்டத்தி லும்

நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
  நல்லோ ரிடந்தன்னி லு
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
  ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலு
  மருந்துளசி வில்வத் திலு
மலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
  மதிகுண மான ரூப
மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
  மாறு திருப்ப ளன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கடம்-மதம் பொருந்திய, வாரணத்திலும்- பட்டத்து யானையினிடத்திலும்; கங்காசலத்திலும்-கங்கை நீரிலும்; கமலாசனந்தன்னிலும் - ஆசனமாகிய தாமரைமலரிலும்; காகுத்தன்-மகாவிஷ்ணுவினுடைய, மார்பிலும் - நெஞ்சகத்திலும்; கொற்றவரிடத்திலும் - அரசர்களிடத்திலும்; காலியின் - பசுக்களுடைய, கூட்டத்திலும் - கும்பலிலும்; நடம் ஆடு-அழகாக நடத்தலைச் செய்கின்ற, பரியிலும்-பட்டத்துக் குதிரையினிடத்திலும்; பொய்வார்த்தை சொல்லாத - பொய்மொழி கூறாத, நல்லோரிடந்தன்னிலும் - நல்லவர்களிடத்திலும்; நல்ல - நன்மையான, சுப லக்ஷணம்-சுகம் பொருந்திய அழகானது, மிகுந்த-அதிகரித்த, மனைதன்னிலும் - மாளிகையிலும்; இரணம்-போர்த்தொழிலையுடைய, சுத்தவீரர்பாலும்-சுத்தம் பொருந்திய சூரனிடத்திலும்; அடர்-இராஜாங்கத்தில் நெருங்கிய, கேதனத்திலும் - வெற்றிக்கொடியிலும், சுயம்வரம் தன்னிலும் - கலியாணத்திலும், அரும் - அருமையாகிய, துளசி - துளவத்திலும்; வில்வத்திலும் - வில்வபத்திரத்திலும்; மலர் தரு-மலர் தருகின்ற, கடப்பமலர்

தன்னிலும்-கடப்பம் பூவிலும்; இரதத்திலும்-தேரிலும்; அதிக குண மான-மிக்க நற்குணம் பொருந்திய, ரூபம்-அழகையுடைய, மடவார் இடத்திலும்-பெண்களிடத்திலும்; திருமாது - மகாலட்சுமியானவள், மாறாது - தன்னிலே வேறுபடாது (அதாவது: நீங்காமல்), குடி கொண்டு-கோவில்கொண்டு, இருப்பள்-தங்குவாள்.

(வி - ரை.) பட்டத்து யானையானது கோவில்களுக்கும் அரச னுக்கும் திருமஞ்சனம் முதலியன எடுக்கக்கூடியதா யிருத்தலானும், அரசனைத்தாங்கிச் செல்லக்கூடிய அலங்காரம் பொருந்தியிருத்தலா னும், அரசன் வெளியேறிச் செல்லுங்காலத்தில் முன் செல்லக்கூடிய சிறப்பு வாய்ந்ததாயிருத்தலானும் அதனிடத்தே திருமகள் விருப்பத் துடனே வாசஞ்செய்வாள். கங்காசலம் சகல பாவங்களையும் போக்கக் கூடிய புனிதம் வாய்ந்ததாயிருத்தலினாலே அதனிடத்தும் அவள் அன்புடன் தங்குவள். தாமரைப்புஷ்பம் எல்லாப் புஷ்பங்களினும் சிறந்ததாயும், குளிர்ச்சியுடையதாயும், சூரியனுக்கு நட்புடையதாயும், திருமாலுக்கு உந்தியாயும் அமைந்திருத்தலினாலே அதனிடத்தே இலக்குமி எப்பொழுதும் நீங்காது தங்குவாள். மகாவிஷ்ணு காத்தற் கடவுளாதலின் எப்பொழுதும் அவருடைய இருதயத்தில் ஜீவ காருண்யமே பொருந்தியிருக்கு மாகையினாலேயும், அவர் தனக்கு நாயகனாயிருப்பதை முன்னிட்டும் அவரிடத்தே தன்னுடைய விருப் பத்தை அதிகமாகக் காட்டும்பொருட்டுத் திருமகள் அவருடைய நெஞ்சகத்திலே எப்பொழுதும் குடியாயிருப்பாள். அரசர்கள், மகா விஷ்ணுவின் அம்சமாய் உலகத்தைப் பாதுகாக்கக்கூடியவர்களா யிருத்தலினாலே அவர்களிடத்தும் அவள் அன்புடன் தங்குவாள். பசுக்கள் யாகாதி கிரியைகளுக்குப் பால், நெய், தயிர் முதலியவற்றை யுதவலானும், திருநீற்றுக்கும், மனைகளைச் சுத்திகரிப்பதற்கும் சாணம் கோமயம் முதலியவற்றைக் கொடுத்தலானும், அவற்றின் அவயவங்களில் பல தேவதைகள் தங்கியிருத்தலானும், அவற்றின் சிறப்பு நோக்கி அவைகளிடத்தும் அவள் ஆசையுடன் குடியிருப்

பள். பட்டத்துக்குதிரை உலகத்தைக் காக்கின்ற அரசனைத் தாங்கிச் செல்லும் சிறப்புப்பொருந்தி யிருத்தலினாலே அதனிடத்தும் அவள் தங்குவள். பொய்வார்த்தை சொல்லாத நல்லோர் எல்லா சீவ ராசிகளிடத்தும் அன்புடையவராயும், மகாவிஷ்ணுவைப்போன்று கௌரவமுடையவராயும் விளங்குவராதலின், அவர்களிடத்தும் இலக்குமி வாசஞ்செய்வாள். நல்ல சுப லக்ஷணம் அமைந்த மனையிலே நல்லோர்கள் குடியிருந்து கருணையுடையவராய்த் தானதருமங்களை நடத்துவதால் மகாவிஷ்ணுவின் சாயை அங்கே பிரகாசித்துக்கொண்டிருக்குமாதலின் அவ்வகைச் சிறப்பு நோக்கி அவ்விடத்திலும் திருமாது நீங்காது குடியிருப்பாள். சுத்தவீரர் போரில், கொடியராகிய பகைவரை வென்று உலகத்தாருக்கு நன்மை செய்வதால் காத்தற் கடவுள்போல விளங்குவாராதலின், அவர்பாலும் அவள் பக்ஷமோடு குடியிருப்பாள். வெற்றிக்கொடியானது உலகத்தைக் காக்கும் அரசரின் ஜெயவாழ்க்கைக் குறிகுறியாய் எப்பொழுதும் விளங்கிக்கொண்டிருக்குமாதலின் அதனிடத்தும் அவள் மேவியிருப்பள். கலியாணத்தில் மங்களமான பல காரியங்களும், பலரும் திருப்தியடையும் படியான விருந்து முதலியனவும் நடக்குமாதலினாலும், புஷ்பம் சந்தனம் முதலிய பல வாசனை வஸ்துக்கள் நிறைந்திருக்குமாதலினாலும், மந்திரகோஷ்டம் மங்களவாத்திய கோஷ்டம் முதலியன முழங்குமாதலினாலும் அங்கே திருமகள் சந்தோஷத்துடனே வாசஞ் செய்வள். துளசி, மகாவிஷ்ணு விருப்பத்துடன் சூடும் பத்திரமா யிருப்பதனாலே அதனிடத்தும் அவள் வசிப்பள். வில்வம் சிவபெருமான், விநாயகர் முதலிய பல சிறந்தேவர்கள் அணியக்கூடியதா யிருப்பதனாலே அதனிடத்தும் அவள் தங்குவள். கடப்பமலர் தன் மருமகனாகிய குமாரக்கடவுள் மிகவும் விருப்பமாகச் சூடக்கூடியதா யிருத்தலினாலே அதனிடத்தும் அவள் தங்குவள். இரதமானது உலகத்தைக் காக்கும் தேவர்களையும் அரசர்களையும் தாங்கக்கூடியதா யிருத்தலினாலே அதனிடத்தும் அவள் பிரியங்கொண்டு தங்குவாள்.

நற்குணமும் அழகும் பொருந்திய பெண்கள், என்றும் நிலைபெற்ற கீர்த்தியுடையவர்களாயும், தன்னை நிகர்த்த சிறப்புவாய்ந்தவர்களாயுமிருத்தலினாலே அவர்களிடத்தும் அந்தத் திருமகள் விருப்பமேவித் தங்குவாள். இவ்விடங்களில் திருமகள் தங்குவாளெனவே இவ்விடங்களை யெல்லாம் மனிதர் அவள் குடியிருக்கும் கோவில்களாகவே பாவித்து மேன்மையாகப் பாராட்டவேண்டுமென்பதுதானே பெறப்படும்.

கொற்றவர் - வெற்றியையுடையவர்; கொற்றம் - வெற்றி; அதனையுடையார் கொற்றவர். சுயம்வரம்-பெண்ணானவள் தானே சுயமாகக் கணவனை வரித்தல்; வரித்தல்-நியமித்தல். இங்ஙனம் பெண்ணானவள் சுயமாகக் கணவனை வரித்தல் எனவே, அது கலியாணமென்பது தானே பெறப்பட்டது; பெண்கள் மணப்பந்தலில் தாங்களே இஷ்டமான நாயகனைப் பார்த்து நியமித்துக்கொள்ளல் பண்டைக்காலத்தில் வழக்கமாக நடந்துவந்தது. (ருடு)

மூதேவி வாழிடங்கள்.

சோரமங் கையர்கணிச முறையார்கள் வாயினிற்
　　சூதகப் பெண்க ணிழலில்
சூளையிற் சூழ்தலுறு புகையிற் களேபரஞ்
　　சுடுபுகையி னீசர் நிழலில்
காரிரவி லசுநிழ லிற்கடா நிழலினொடு
　　கருதிய விளக்கு நிழலில்
காமுகரி னிஷ்டையில் லாதவர் முகத்திற்
　　கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்தயிரி
　　விழியுமது பானர் பாலி

இலைவேல் விளாநிழலி னிதமழுக் கடைமனையி
லேனநா யசகரத் தூள்
வாரிய முறத்தூள் பெருக்குதூண் மூதேவி
மாறு திருப்ப னென்பார்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—,சோரம்-நாயகனை வஞ்சித்துச் செய்கின்ற திருட்டுக் கலவியையுடைய, மங்கையர்கள் - பெண்களிடத்திலும்; நிசம் - உண்மையை, உரையார்கள் - சொல்லாதவர்களுடைய, வாயினில் - நாவிலும்; சூதகம் - தீட்டையுடை, பெண்கள் - மாதர்களுடைய, நிழலில்-சாயையிலும்; சூளையில்-(செங்கல் சுண்ணாம்பு முதலியவை சுடும்) காளவாயிலே, சூழ்தல் உறு-நெருங்குதல்பொருந்திய, புகையில்- தூமத்திலும்; களேபரம் சுடு-பிணத்தைச் சுடுகிறதனாலுண்டாகும், புகையில்- தூமத்திலும்; நீசர்-கீழ்மக்களுடைய, நிழலில்-சாயையிலும்; கார்-கரிய, இரவில்-இராத்திரியிலும்; அரசுநிழலில்-அரசமரத்தின் நிழலிலும்; கடா - எருமைக்கடாவின், நிழலினொடு-சாயையிலும்; கருதிய-உயர்ந்ததாக எண்ணிய, விளக்கு நிழலில்-விளக்கின் சாயையிலும்; காமுகரின்- தூர்த்தரிடத்திலும்; நிஷ்டை இல்லாதவர் - நற்சிந்தனையின் உறுதியில்லாதவர்களுடைய, முகத்தில்-முகத்திலும்; கடும் - கடினமாகிய, சினத்தோர்-கோபமுள்ளவர்களுடைய, சபையினில்-சபையிலும்; ஈரம் இல்லா-சிறிதும் குளிர்ச்சி இல்லாத, களர் நிலத்தினில்-உப்புநிலத்திலும்; இராத்தயிரில்-இராத்திரியிலுள்ள தயிரிலும்; இழியும்-மரத்திலிருந்துவருகின்ற, மதுபானர் - கள்ளைப் பருகுவோருடைய, பாயில்-இடத்திலும்; இலை-இலைகளையுடைய, வேல் நிழலில்-வேலமரத்தின் நிழலிலும்; விளா நிழலில்-விளாமரத்தின் நிழலிலும்; நிதம் - தினந்தோறும், அழுக்கு அடை-மாசுசேர்கின்ற, மனையில்-வீட்டிலும்; ஏனம்-பன்றி, நாய் -

சுணங்கன், அசம் - ஆடு, காம் - கழுதை, (ஆகிய இவற்றுெலெழும்) தூள் - புழுதியிலும்; வாரிய - வஸ்துக்களை அள்ளிய, முறத்தூள்-முறத்தைப் புடைப்பதாலெழுந் தூளிலும்; பெருக்கு தூள் - துடைப்பத்தைக்கொண்டு கூட்டுவதாலெழுந் தூளியிலும், மூதேவி-மூத்த தேவியானவள், மாறாது-நீங்காமல், இருப்பள் என்பார் - குடியிருப்பாளென்று அறிஞர் கூறுவர்.

(வி - ரை.) வியபிசாரமுடைய பெண்களிடத்தில் வாம்பின்றிப் பலர் தேகசம்பந்தம் ஏற்படுமாதலின் அவர்களிடம் பரிசுத்தமிராது; அதனால், அவர்கள்பால் மூதேவி சேர்வள். பொய்கூறுவோர், மிகுந்த பாவதோஷ முடையவர்களா யிருப்பதனாலே அவர்கள் வாயினிடத்தும் மூத்தவள் குடியிருப்பாள். சூதகப்பெண்கள் மிகவும் அசுத்தமுடையவர்க ளாகையினாலே அவர்கள் நிழலிலும் மூதேவி தங்கியிருப்பாள். சூளைப்புகையும் பிணஞ்சுடுபுகையும் துர்நாற்றமும் அசுத்தமு முடையன வாதலாலே அவற்றிலும் மூத்தவள் தங்குவள். நீசர், பிணஞ்சுடும் சண்டாளர்க ளாகையினாலும், மிகுந்த அசுத்தமுடையவர்க ளாகையினாலும் அவர்கள் நிழலிலும் மூதேவி தங்குவள். மிகுந்த இருளானது தூக்கத்துக் குரிய காலமாயும், சோரம் கொலை முதலிய கொடுந்தொழில்கள் நடத்தற்குரிய காலமாயும், இராக்கதர்களும், பூதகணங்களும், கோட்டான்களும், துஷ்டமிருகங்களும் சஞ்சரித்தற்குரிய காலமாயு மிருத்தலினாலே அக்காலத்தில் மூதேவி தங்குவள். அரசுநிழல், அம்மரத்தில் விசேஷமாகத் தங்கும் பறவைகளிடும் எச்சங்களும், அவற்றால் கூடு கட்டும்பொருட்டுக் கொண்டுவந்து போடப்படும் முட்கள் குச்சிகள் முதலியவைகளும், இலை சருகு முதலியவைகளும் நிறைந்து அசுத்தமாயிருக்குமாதலினாலே அதனிடத்தும் மூதேவி தங்குவள். எருமைக்கடா; உயிர்களைப் பிடித்து வருத்தும் எமன்வாகன மாதலினாலும், அசுத்தமுள்ளதாதலினாலும் அதனிழலிலும் மூதேவி சேர்வள். விளக்கு நிழலில் அவ்விளக்கின் பிரகாசத்தால் ஒதுக்கப்படும் இருளெல்லாம் திரண்டு

தங்கியிருக்கு மாதலின் அது பரிசுத்த மற்றதாம்; ஆதலின், அவ்விடத்திலும் மூதேவி சேர்வள். காமுகர் பலசாதி மாதர்களையும் வரம்பின்றிச் சேரக்கூடியவர்களாதலின் அவர் நீசத்துவ முடையவராம்; ஆதலின் அவர்களிடத்தும் மூதேவி சேர்வள். தேவதா சிந்தனையாகிய நிஷ்டையில்லாதவர்கள் முகத்தில் இலட்சுமி தங்காமல் அசுத்தமே தங்கியிருக்குமாதலின், அவர்களிடத்தும் மூதேவி குடியிருப்பாள். கோபமுடையவர்கள் கூடியசபையில் கொடுந்தொழில்களும் அசுத்தமான காரியங்களுமே நிகழுமாதலின் அவ்விடத்திலும் மூதேவி விரும்பித் தங்குவள். ஈரமில்லாத உப்பு நிலம் வேறு ஜீவஜந்துக்களும் புற்பூண்டு மரஞ்செடி முதலியவைகளும் தங்குவதற்கு யோக்கியமில்லாமல் மிகுந்த வெப்பமுடையதா யிருத்தலினாலே அவ்விடத்திலும் மூதேவி தங்குவள். முதல்நாள் தயிரை மறுநாள் இரவுவரை வைத்திருந்தால் அது மிகவும் புளிப்பெய்தி அசுத்தமுடையதா யிருக்கும்; ஆதலின், அதிலும் மூதேவி குடியிருப்பாள். மதுபானஞ் செய்வோர், பல ஜந்துக்களும் வீழ்ந்து செத்து அசுத்தசத்தூறிய மதுவைப் பல ஜாதியாரும் வாய்வைத்துக் குடிக்கும் கலசத்திலூற்றிக் குடித்தலால் அவர்களிடத்தில் அளவுக்கு மிஞ்சிய அசுத்தமே தங்கியிருக்கும். ஆதலின், அவர்கள்பாலும் மூதேவி தங்குவாள். வேலாமரம், விளாமரம் ஆகியவற்றின் நிழல்களில் முட்களே அதிகமாக நிறைந்து மனிதர் தங்குவதற்கு யோக்கிய மில்லாமலும் அசுத்தமாயும் இருக்குமாதலினாலே அந்நிழல்களிலும் மூதேவி தங்குவாள். தினந்தோறும் அழுக்குச் சேரும் வீடானது பரிசுத்தமற்றதாகையினாலே அதிலும் மூத்தவள் குடியேறுவள். பன்றி நாய் ஆடு கழுதை ஆகியவைகள் செல்வதா லெழும்பும் தூசிகளும், தானியம் குப்பை முதலியவற்றை முறத்தால் வாரிப் புடைத்துக் கொட்டுவதா லெழுந் தூசியும், துடைப்பங்கொண்டு பெருக்குவதா லெழுந் தூசியும் அசுத்தமுள்ளவைக ளானபடியினாலே இவற்றிலும் மூதேவி தங்கியிருப்பாள். இத்தகைய விடங்களில் மூதேவி தங்கியிருப்பாள்

என்றதனாலே இங்குக்கூறிய ஒவ்வோரிடத்திலும் மனிதர் சேரக்கூடாதென்பது தானே பெறப்படும். ஆதலின், சௌக்கியத்தோடிருக்க விரும்புவோர் இவ்விடங்களிற் சேரலாகாது. (௩௬)

திருத்தினுந் திருந்தாதவை.

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினுங்
கதிபெறுங் குதிரை யாமோ
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினுங்
கொடுவிட மலாது தருமோ
குக்கனெடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங்
கோணு மலே நிமிருமோ
ஒட்டியே குறுணிமை யிட்டாலு மூனமா
வுறுவிழிகண் ணாகி விடுமோ
வுலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினு
முள்ளியின் குணமாறு மோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமறி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—கட்டி எரு - கட்டியாகிய சாணியை, இட்டு - உரமாகத் தூரில்போட்டு, செழுந்தேனை - செழுமையாகிய தேனை, வார்க்கினும் - ஊற்றிவளர்த்தாலும், காஞ்சிரம் - காஞ்சிரமரமானது, கைப்பு விடுமோ - கசப்பு நீங்குமோ; கழுதையை - கர்த்தபத்தை, கட்டிவைத்து - அசுவமேதயாக சாலையிற் பிணித்துவைத்து, ஓமம் வளர்க்கினும் - மந்திராக்கினி வளர்த்து யாகஞ்செய்தாலும் (அது)

கதி பெறும் - அழகிய நடைபொருந்திய, குதிரை ஆமோ - அசுவமாகுமோ; அரவுக் குட்டிக்கு-நாகத்தின் குட்டிக்கு, அமுது அளித்து-பால்கொடுத்து, வளர்க்கினும் - (அதை) வளர்த்தாலும், (அது) கொடு விடம் அல்லாது - கொடிய விஷத்தை யல்லாமல், அமுது தருமோ-பாலைக்கொடுக்குமோ; குக்கல்-நாயினுடைய, நெடுவாலுக்கு-நெடுமையாக வளைந்தவாலுக்கு, மட்டையைக் கட்டினும்-கோணல் நிமிரும்படி இருபக்கத்திலும் மட்டையைவைத்து நீட்டிக் கட்டினலும், (அது தன்னியற்கைப்படி) கோணுமல் - வளையாமல், நிமிருமோ - நிமிர்ச்சியுறுமோ; ஒட்டி-பொருத்தி, குறுணி மை - ஒரு மரக்கால் அஞ்சனத்தை, இட்டாலும்-பூசினுலும், ஊனமா-கேடாக, உறு - பொருந்திய (அதாவது கெட்டுப்போன), விழி - குருட்டு விழியானது, கண்ணுகிவிடுமோ-அழகிய நயனமாய்விடுமோ; உலவு-சுற்றுப்பக்கங்களிற் பாவிச் சஞ்சரிக்கின்ற, கனம் - உயர்ச்சியுற்ற, பல கர்ப்பூரவாடை-பலவிதமான கர்ப்பூரவாசனைகளை, கூட்டினும்-சேர்த்தாலும், உள்ளியின்-வெள்ளைப்பூண்டின், குணம்-துர்வாடையான குணமானது, மாறுமோ - வேறுபடுமோ; மட்டிகட்கு - மடையர்களுக்கு, ஆயிரம் புத்தி-ஆயிரம்விதங்களான அறிவுகளை, சொன்னலும் - கூறினுலும், அதின் - அந்தச்சொல்லின், மார்க்கம் - வழியிலுள்ள, மரியாதை-ஒழுங்கானது, வருமோ-உண்டாகுமோ (இல்லை).

(வி - ரை.) கட்டிச்சாணியை உரமாக விட்டுத்தேனை வார்த்து வளர்த்தாலும் காஞ்சிரமரமானது தன்னியற்கைக் குணமாகிய கசப்பைக் காட்டுமேயன்றித் தேனின் சுவை யேறித் தித்திப்புடையதாக மாட்டாது. கழுதையைக்கட்டிவைத்து எவ்வளவு ஓமம் வளர்ப்பினும் அது தன்னியற்கைமாறிக் குதிரையாகமாட்டாது. பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் அது தன்னிடத்துள்ள விஷம் நீங்கி அமுதத்தைத் தரமாட்டாது. நாயினுடைய கோணல் வாலுக்கு ஒழுங்கு பெற மட்டையைவைத்து நீட்டிக்கட்டினலும் அது தன்னுடைய கோணல் நிமிராது. குருட்டுக்கண்ணுக்கு குறுணி மையிட்டாலும்

அது நல்ல கண்ணாகமாட்டாது. கர்ப்பூரவாசனை கூட்டினாலும் வெள்ளைப்பூண்டின் துர்வாசனை நீங்கமாட்டாது. இவைபோல மூடருக்கு எவ்வளவு புத்தி கூறினாலும் அவர்கள் நேரானவழியிற் றிரும்பமாட்டார்கள். இச்செய்யுட் கருத்தால், கெட்ட குணமுண்டயவைகள் எவ்வளவு முயற்சி செய்யினும் தம்மியற்கை மாறாவென்பதும், அவற்றைத் திருத்த முயற்சிப்பது கூடாதென்பதும் உணரப்படும்.

கட்டியெரு, செழுந்தேன் ஆகியவை பண்புத்தொகைகள். 'கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினும்' என்னுஞ் சொற்றொடருக்குப் பின், 'அது' என்னும் எழுவாயும், 'குட்டியரவுக் கமுதளித்தே,' என்பதற்குப் பின், 'அதை' என்னுஞ் செயப்படுபொருளும், அதை யடுத்து வரும், 'வளர்க்கினும்' என்னுஞ் சொல்லுக்குப் பின், 'அது' என்னும் எழுவாயும் வருவித் துரைக்கப்பட்டன. 'அமுது' என்பது தீபகமாக இரண்டிடத்துங் கூட்டப்பட்டது. அளித்தே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப்பொருளது. 'ஒட்டியே குறுணிமை யிட்டாலும்' என்பதற்குப் பின் இடக்கரான மொழி பிரயோகிக்கப்பட்டிருந்ததாதலின், அது, அறிஞர்க்கு அருவருப்பை யுண்டாக்குமென்பதை யுத்தேசித்து, அதனை நீக்கி, 'ஊனமா வுறுவிழி' எனத் திருத்திக் 'குருட்டுக் கண்' எனப் பொருளுரைத்தாம். சிலர், மூலபாடத்தைத் திருத்தியதைமுன்னிட்டுக் குறைகூறக்கூடும். அத்தகையார் அச்சொல்லின் தன்மையை நோக்குவாராயின் ஒருபொழுதும் குறை கூறார். கண்ணாகிவிடுமோ என்பதில், 'விடு' துணிவுப்பொருளை யுணர்த்தும் விகுதி. உலவு என்னும் அடைமொழியை வாடைக்கும், 'கனம்' என்னும் அடைமொழியைக் கர்ப்பூரத்துக்கும் கூட்டுக. உலவுவாடை-வினைத்தொகை. கனகர்ப்பூரம்-பண்புத்தொகை. விடுமோ, ஆமோ, தருமோ, நிமிருமோ, மாறுமோ முதலிய சொற்கள் எதிர்மறை யெச்சங்கள். ஒன்றும் இல்லையென்றே பொருள்படும். (கூஎ)

குறிப்பறிதல்.

மனதிற் கடும்பகை முகத்தினு லறியலா
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினு லறியலா நல்லார்பொ லார்தமை
மக்களா லறிய லாகும்
கனமருவு சூரரைச் சமரினு லறியலாங்
கற்றவொரு வித்துவா னைக்
கல்விப்ர சங்கத்தி னுலறிய லாங்குணங்
களைநடையி னுலறிய லாம்
தனதன மடுத்தது பளிங்கினு லறியலாஞ்
சாதிசொல் லாலறிய லாந்
தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளாலறிய லாம்
வனசவிக சிதவதன பரிபூர ணுனந்த
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) விகசிதம்-மலர்ச்சியையுடைய, வனசம் - தாமரை போன்ற, வதனம் - முகத்லைதயும், பரிபூரணம் - மிகவும் நிறைந்த, ஆனந்தம் - சந்தோஷத்தையுமுடைய, வாலவடிவான - குமாரரூபம் பொருந்திய, வேலா-வேற்படையையுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, மனதில்-ஒருவர் மனத்திலேயுள்ள, கடும் பகை-கொடியவிரோதத்தை, முகத்திஞல்-அவருடைய முகக் குறிப்பினுலே, அறியலாம்-தெரிந்து கொள்ளலாம்; மா நிலம்-சிறந்த பூமியிலுள்ள, பூடுகள் எல்லாம்-புற்பூண்டுகளின் தன்மைகளை யெல்லாம், மழையினுல்-மாரியினுலே, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம்; நல்லார் பொல்லார் தம்மை-நல்ல

வர்களையும் கெட்டவர்களையும், மக்களால்-அவர்களுடைய பிள்ளைகளினாலே, அறியலாகும்-தெரிந்துகொள்ளலாகும்; கனம் மருவு-உயர்வு பொருந்திய, சூரரை-வீரரை, சமரினால் - அவர்கள் வீரத்துடனே புரியும் போரினாலே, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம்; கற்ற - பலநூல்களையும் படித்துத்தேறிய, ஒரு-ஒப்பற்ற, வித்துவானை-புலவனை, கல்விப்பிரசங்கத்தினால்-அவன் வித்தியா பிரசங்கத்தினாலே, அறியலாம் - தெரிந்துகொள்ளலாம்; குணங்களை-மனிதருடைய இயற்கைகளை, நடையினால்-அவர்களுடைய நடக்கைகளினாலே, அறியலாம் - தெரிந்துகொள்ளலாம்; பளிங்கினால் - ஸ்படிகத்தினாலே, தனது அகம் அடுத்தது-தன்னிடம் சேர்ந்த வஸ்துவை, அறியலாம்-உள்ளபடி தெரியலாம்; சாதி-ஒருவருடைய குலவியற்கையை, சொல்லால்-அவர்களுடைய வார்த்தையினாலே, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம்; தரும்-மேன்மையைத் தருகின்ற, நீதி-ஒழுங்கை, கேள்வியால்-சாஸ்திரக்கேள்விகளினாலே, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம்; பிணிகளை-நோய்களை, தாதுக்களால்-நாடிகளினாலே, அறியலாம்-தெரிந்துகொள்ளலாம்.

(வி - ரை.) ஒருவர் மனதிலே பகையிருந்தால் அவர்களுடைய முகம் மலர்ச்சியின்றிக் கடுகடுப்பாகத் தோன்றும்; அக்குறிப்பினாலே அவர்களுடையமனத்திலிருக்கும் கடும்பகையைத் தெரிந்துகொள்ளலாம்; "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டு முகம்," என்னுந் திருக்குறளால் இஃதுணரப்படும். பூமியிலுள்ள புற்பூண்டுகளெல்லாம் மழையிருந்தால் மிகவும் செழிப்படைந்திருக்கும்; மழை யில்லாவிட்டால் வாட்டமுற்றிருக்கும்; ஆதலின், அவற்றினியல்பை மழையினால் தெரிந்துகொள்ளலாகும். உலகத்தில் ஒருவர் நல்லவரா யிருந்தால் அவர்களுக்கு நல்ல புத்திரன் பிறப்பான்; கெட்டவர்களா யிருந்தால் பலரும் நிந்திக்கத்தக்க கெட்ட புத்திரன் உதிப்பான்; இப்புத்திரர்களாலேயே அவர்களின் தந்தையரை நல்லவரென்றும் கெட்டவரென்றும் தெரிந்துகொள்ளலாம்; "தக்கார்

தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப்படும்,'' என்பது திருக்குறள். நல்ல சூரராயிருப்பவர்கள் போரில் பின்னிடாமல் யுத்தம் புரிந்து ஜெயம் பெறுவார்கள், சூரரல்லாதார் தைரியமின்றிப் புறங்காட்டியோடி அபஜெய முறுவர்; இச்செய்கைகளினுலே சூரரையும் சூரரல்லாதவரையும் தெரிந்துகொள்ளலாகும். சகலகலைகளையுங் கற்ற புலவன், பல சாஸ்திரக் கருத்துக்களையும் மேற்கோள்களாக எடுத்துக்கூறிப் பிரசங்கத்திற் பேசுவான்; கல்வியில்லாதவன் வாய்க்கு வந்தபடி உபயோகமற்ற விஷயங்களை, கேட்போர் அருவருக்கும்படி எடுத்துக் கூறுவான்; இச்செய்கைகளினுலே படித்த வித்வானுடைய இயல்பையும் படிக்காதவனுடைய இயல்பையும் தெரிந்துகொள்ளலாம். நற்குணங்களையுடையவர்கள் நற்செய்கைகளையே புரிவர்; கெட்டகுணங்களையுடையவர்கள் தீச் செயல்களையே செய்வர்; இச்செய்கைகளினுல் மனிதருடைய நல்ல குணத்தையும் கெட்ட குணத்தையும் தெரிந்துகொள்ளலாம். பளிங்கினுற் செய்யப்பட்ட கண்ணுடியானது, தன்னிடம் எந்தப்பொருள் அடுத்தாலும் அவற்றின் இயற்கையை உள்ளபடி காட்டிவிடும்; இதனுல், கண்ணுடியினெதிரிற் சாரும் பொருள்களின் இயற்கையை நன்குணர்ந்து கொள்ளலாம்; 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்,' என்பதா லிஃது ணரப்படும். ஒவ்வொரு ஜாதியார்களும், தாங்கள் வெவ்வேறு ஜாதியார்போல நடிப்பினும், பேசுங்காலத்தில் அவர்கள் குலத்திற்குத்தகுந்த வார்த்தைகள் தாமே வந்துவிடும்; அதனுல் அவர்கள் தாழ்ந்த குலத்தின ரென்பதும், உயர்ந்த குலத்தின ரென்பதும் தாமே விளங்கிப்போகும்; ''குலவித்தை கல்லாமற் பாதி,'' என்பது ஆன்றோர் வாக்கு. நீதிகளெல்லாம் சாஸ்திரங்களிற் கூறப்படுவனவாதலின், அந்த சாஸ்திரக் கேள்வியிருந்தால்மாத்திரந்தான் நீதிகள் விளங்கும். வாதம், பித்தம், சிலேற்பனம் என்னும் மூன்றுவகை நாடிகளினியல்புகளை நன்குணர்ந்திருந்தால் தேகத்திலுண்டாம் பிணிகளை, இன்னதோஷத்தா லுண்டானவை யென்றறிந்து அவற்றிற்குத்

தக்க பரிகாரஞ் செய்யலாம்; தாதுக்களி னிதான முணராவிடின் வியாதிகளி னிதான முணருதல் துர்லபம்.

இங்ஙனம் ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றினல் உணரலா மெனவே, இக்குறிப்புக்களைக்கொண்டு இங்குக் கூறப்பட்டவைகளை நன்குணர்ந்து அவற்றிற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டுமென் பது பெறப்படும். மாநிலம்-பண்புத்தொகை. நல்லார், பொல்லார்-பண்புப்பெயர்கள். கற்ற-பெயரெச்சம்; கல்-பகுதி, அ-விகுதி, த்-இடைநிலை. கல்வி-தொழிற்பெயர்; கல்-பகுதி, வி-தொழிற்பெயர் விகுதி. நடை-தொழிற்பெயர். கேள்வி-தொழிற்பெயர். 'வனசவிகசிதம்' என்பதை 'விகசிதவனசம்' என மாற்றுக. (௩அ)

கயவர் குணத்தை மாற்றுதல் அரிதெனல்.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நயகுணங்
கொண்டுட் படுத்தி விடலாங்
கொடியபல விடநோய்க ளியாவுமௌ ஷதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்
உணர்விலாப் பிரபராட் சசிமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டி விடலா
முபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
யுண்டாக்க லாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச் செய்யலாம்
பிணியையு மகற்றலாங் காலதூ துவரையும்
பின்புவரு கென்று சொலலாம்
மணலையுங் கயிறுத் திரிக்கலாங் கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, குணம் இல்லா - நற்குணமில்லாத, துஷ்டமிருகங்களையும் - தீச்செயல்களையுடைய விலங்கினங்களையும், நயகுணம் கொண்டு-நல்ல குணத்தைக்கொண்டு, உட்படுத்திவிடலாம்-(மனிதர்) தமக்குட்பட்டு நடக்கும்படி செய்துவிடலாம்; கொடிய - கொடுமையுள்ளனவாகிய, பல விட நோய்கள்யாவும்-பலவிதமான விஷப்பிணிகளெல்லாவற்றையும் ஒளஷதமது கொடுத்து - நல்ல மருந்தைக்கொடுத்து, திருப்பிவிடலாம் - இறங்கும்படி மாற்றிவிடலாம்; உணர்வு இல்லா - அறிவற்ற, பிரமராட்சசிமுதல் - பிரமராக்ஷசி முதலாகிய, பேய்களை - பைசாசங்களையும், (மந்திரோச்சாரணத்தாலே) உகந்து-சந்தோஷித்து, கூத்து ஆட்டிவிடலாம் - கூத்தாடும்படி செய்துவிடலாம்; உபாயத்தினல் - தந்திரத்தினாலே, பெரும் பறவைக்கு - அறிவற்ற பெரியபக்ஷிகளுக்கும், நல் புத்தி-நல்லறிவை, உண்டாக்கலாம்-உற்பத்தி செய்துவிடலாம்; பிணமதை - உயிரற்ற சவத்தையும், உயிர் பெற-உயிரடையும்படி, எழுப்பலாம் - எழுப்பிவிடலாம்; அக்கினி - நெருப்பை, சுடாமல் - சுடாதபடி, பெரும் புனல் என - பெருமையுடைய ஜலத்தைப்போலக் குளிர்ச்சியுடையதாக, செய்யலாம்-செய்துவிடலாம்; பிணியையும்-தீராத நோய்களையும், அகற்றலாம் - (ஒளஷதப் பிரயோகத்தாலும் மந்திரபலத்தாலும்) நீக்கிவிடலாம்; கால தூதுவரையும்—உயிரைக்கவர்ந்து செல்லவரும் எமதூதர்களையும், (பார்த்து) பின்பு வருக என்று-இந்த நேரம்விட்டு மற்றொரு நேரத்தில் வரக்கடவாயாக என்று, சொல்லலாம்-சொல்லிவிடலாம்; மணலையும் - நுண்ணிய மணலையும், கயிறு - வடமாக, திரிக்கலாம் - முறுக்கிவிடலாம்; (இவற்றையெல்லாம் இங்ஙனம் செய்தாலும்) கயவர் கீழ்மக்களுடைய, குணம் மட்டும்-துர்க்குணத்தை மாத்திரம்

திருப்ப - நல்வழிக்கு வரும்படி மாற்ற, வசமோ - அது கீழ்ப்படிதலாகுமோ? (ஒருபோதும் வசப்படாது).

(வி - ரை.) மனிதர், தம்முடைய உலகவசியம் பொருந்திய நல்ல குணத்தினாலே, ஒருவர்க்கும் வசப்படாத துஷ்டமிருகங்களின் மனத்தையும் வசப்படுத்தி அவற்றைத் தம் ஏவற்படி நடக்கும்படி செய்யலாம்; வேடிக்கைத் தொழில் செய்வோரிடத்தில் மிருகங்கள் இங்ஙனம் வசப்பட்டு நடப்பதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். திடமென மனிதரைக்கொல்லும் விஷநோய்கள் தலைக்கேறிவிட்டாலும் உடனே தக்க ஔடதப் பிரயோகஞ்செய்து அவற்றைத் தணித்துவிடலாம். ஒருவருக்கும் வசப்படாமல் அறிவின்றித்திரியும் பிரமராக்ஷதப் பேய்களையும் மந்திரோச்சாரணத்தால் வசப்படுத்தித் தலைவிரித் தாடும்படி செய்துவிடலாம். தந்திரத்தால் பறவைகளுக்கு நற்புத்தியையுண்டாக்கி அவற்றை மனிதர்க்கு வசப்பட்டு நடக்கும்படி செய்யலாம்; கிளி, நாகணவாய்ப்புள், தூக்கணங்குருவி முதலிய பறவைகள் மனிதரால் கற்றுக்கொடுக்கப்படும் பேச்சுக்களைக் கற்றுக்கொண்டு பேசும்; சில ஏவற்றொழில்களையும் புரியும்; புறா, கிளி முதலியவை மனிதர்க்குக் கடிதங் கொண்டுபோய்க் கொடுக்கும் அருஞ்செயலைப் பண்டைய நூல்களாலும், இக்காலத்தில் அனுபவத்திலும் அறியலாம். சஞ்சீவியைக்கொண்டு அனுமார், செத்தபிணங்களை யெழுப்பியதை இராமாயணத்தா லுணரலாம். தவத்திற் சிறந்தவர்கள், தங்களுடைய மகிமையினாலே அக்கினியையும் குளிரும்படி செய்துவிடுவார்கள்; சீதை அக்கினியிற் புகுந்து எரியாமல் வெளியேறி வந்ததை இராமாயணத்தா லுணர்க. தீராத நோய்களையும் மகான்கள், தக்க அவுடதங்கொடுத்து நீக்கிவிடுவார்கள்; மந்திரபலத்தாலும் நீக்குவார்கள்; இங்ஙனம் தீராத நோய்களும் மகான்களால் தீர்ந்ததைப் பல சரித்திரங்களாலுணர்க. எமவாதனைக்கும் அஞ்சாதிருக்கலா மென்பதை மார்க்கண்டன் கதை முதலியவற்றா லுணரலாம். கயிறாகத் திரிக்க முடியாத மணலையும் சில பசை வஸ்துக்களுடன் சேர்த்துக் கயிறுபோல நீட்டி

விடலாம். இங்ஙனம் இந்த அரிய காரியங்களை யெல்லாம் செய்து முடித்தாலும் கீழ்மக்களுடைய குணத்தைமாத்திரந் திருப்புதல் முடியாது. ஆதலின், மூடர்க்குப் புத்தி கூறுதலை ஒழித்துவிட வேண்டும்.

துஷ்ட-பெயரெச்சம். நயகுணம்-பண்புத்தொகை. கொடிய-பெயரெச்சம்; இது கொடுமையென்னும் பண்புச்சொற்றிரிபு. விட நோய் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பிரமராக்ஷதன் அவமரண மடைந்த பிராமணனுவி யெடுக்குமிராக்ஷதப்பேய்; பிரமராக்ஷி - இந்த வகுப்பிற் பெண்பேய். பெரும்பறவை-பண்புத்தொகை. (௩௧)

இந்நீக்குணத்தோ ரிவ்விலங்குபோல்வரெனல்.

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினு லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குரை ஞமலி யாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா
சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யந்நாளி லீசனை
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மாம்பழந்தனை - சிவபெருமான் கரத்தில் வைத்திருந்த மாங்கனியை, வேண்டி - பெறவிரும்பி, அந் நாளில் - அங்ஙனம் விரும்பிய அந்த நாளிலே, ஈசனை - அந்தச் சிவபெருமானை, வலம் ஆக- பிரதக்ஷிணமாக, வந்த - சுற்றிவிரைந்தோடிவந்த, முருகா- இளமையுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலை மேவு குமரேசனே!—தாம் பிடித்தது - தாம் மனதில் மதியீனமாகப் பற்றியதே, பிடிப்பு என்று - சரியான பற்றுதல் என்று, மேலவர் புத்தி - உயர்ந்தோர் கூறும் அறிவை, தள்ளி - மனத்திற் கொள்ளாமல் விலக்கிவிட்டு, செய்வோர் - தம்மிஷ்டம்போல் மதியீனமாகிய காரியங்களை நடத்துவோர், குரங்கு - விஷமச் செய்கைகளையுடைய வானரங்களாவர்; சபையில் - பெரியோர்கூடிய அவைக்களத்திலே, குறிப்பு அறியமாட்டாமல் - பெரியோர் காட்டும் சாடையை யுணர்ந்து அதன்வழி காரியம் நடத்த முடியாமல், நின்றவர்-நின்றவர்கள், பயன் இல்லாத - பயனற்ற, மரமாம் - தருக்களாவர்; வீம்பினால் - தற்பெருமையினாலே, எளியவரை-ஏழைகளை, எதிர் பண்ணி-எதிர்த்தலைச்செய்து (அதாவது விரோதித்து), நிற்கும் - அவர்களைக் கெடுக்கும் வழியிலே நிற்கின்ற, ஒரு - ஒப்பற்ற, வெறியர் - பித்தர்களே, குரை - வீணே குலைக்கின்ற, ஞமலி ஆவார் - நாய்களாவார்கள்; மிக- மிகுதியாக, நாடி - ஏதேனும் பெறவேண்டுமென்று தம்மைத்தேடி, வருவோர் - வருகின்ற ஏழைகளுடைய, முகம் - வறுமையால் வாடியமுகத்தை, பார்த்திடா - இரக்கத்தோடு பார்த்து ஏதேனும் உபகாரஞ் செய்யாத, லோபர் - பிசுனத்தன முடையவர்களே, மேன்மை இல்லாத-உயர்வற்ற, கழுதை-கர்த்தபங்களாவர்; சோம்பலோடு - மயக்கத்துடனே, பெரியோர் சபைக்குள் - உயர்ந்தோர் கூடியிருக்கின்ற சபைக்குள்ளே, படுத்திடும் - படுத்துறங்குகின்ற, தூங்கலே - சோம்பேறியே, சண்டிக்கடா - உரோசமற்ற எருமைக் கடாவாவன்; சூதுடன்-வஞ்சனையுடனே, அடுத்தோர்க்கு-தம்மையே தஞ்சமென்று அண்டினவர்களுக்கு, இடுக்கணே செய்திடும் - துன்

பங்களையே புரிகின்ற, துஷ்டனே - தீயனே, கொட்டு - வேதனை அதிகப்படக் கொட்டுகின்ற, தேளாம் - விருச்சிகமாவன்.

(வி - ரை.) குரங்கு பாம்பைப் பிடித்தால் தனக்கேற்பட்ட பயத்தினல், அது நைந்து கீழேவிழும் வரையிலும் அதனை விடமாட்டாது; அறிவீனரும் பெரியோர் புத்தியைக் கேளாமல் தாங்கள் மனம்பற்றிச் செய்யுங் கெட்ட காரியத்தையே சரியானதென்று விடாமற் செய்வார்கள்; ஆதலால், இவர்கள் குரங்குக்கு நிகராவார்கள். சபையிற் கூடியிருக்கும் பெரியோர், வாயினற் சொல்லத்தகாத சில காரியங்களைக் குறிப்பாற் பக்கத்தி லிருப்பவர்க்குக் காட்டுவர்; அக் குறிப்பை யறிந்து அவர்கள் அக்காரியங்களை நிறைவேற்றவேண்டும்; அங்ஙனஞ் செய்யாவிடின் பல காரியக்கேடுகள் நேர்ந்து பெரியோர்க்கு அதிருப்தியுண்டாகும்; இவ்வாறு அதிருப்தி யுண்டாகும்படி சபையில் குறிப்பறிந்து காரியங்களை நடத்தாமல் நின்றவர்கள் ஒரு பயனு மில்லாதவர்களாதலின், பயனற்ற மரத்துக் கொப்பாவார்கள். நாயானது, தன்னுடைய இனத்தைச் சார்ந்த ஒரு நாய் தன்னிடத்துக்கு வரின், அது மிகவும் எளிய தன்மையுடையதா யிருந்தாலும், தன்னுடைய இனமாயிருந்தாலும் அதன்மீது இரக்கங்கொள்ளாமல் குலைத்து அதனைக் கடித்து உபத்திரவப்படுத்தும்; ஆதலால், எளியவர்மீது இரக்கங்கொள்ளாமல் அவர்களோ டெதிர்த்து அவர்க்குத் தீங்கு புரிவோர் இத்தகைய நாய்க்கு நிகராவர். கழுதை அழுக்குப் பொதியைச் சுமப்பதன்றி வேறு எவ்வகை உயர்ந்த காரியங்களையும் செய்வதில்லை; அதனல், அதனைக் கண்டோர் அருவருக்கின்றனர்; உலோபியர்களும் பெரியோர் அருவருக்கும் இயல்பினையுடையவராதலின், அந்த உயர்வற்ற கழுதைக்கு நிகராவர். சண்டிக் கடாவானது உயர்ந்த விடமென்றும் தாழ்ந்த விடமென்றும் பகுத்தறியாமல் எந்தவிடத்திலும் திடீரென விழுந்து புரளும்; எவரைக்காணினும் ஒதுங்காமல் உராயும்; ஆதலின், பலரும் அதிருப்தி யடையும்படி பெரியோர் சபைக்குள்ளே படுப்பவன் அந்தச் சண்டிக்கடாவுக்கு

நிகராவன். தேளானது, தன்னிடம் வருவோரை நல்லோரென்றும் தீயோரென்றும் பகுத்தறியாமல் எவரையும் சமீபத்தில் நெருங்கிய வுடனே கொட்டி உபத்திரவப்படுத்திவிடும்; ஆதலால், அடுத்தவர்க் குத் துன்பஞ் செய்யுந் துஷ்டன் இந்தத் தேளுக்கு நிகராவன்.

சிவபெருமான் ஒரு காலத்தில் ஒரு மாங்கனியைக் கரத்தில் வைத்துக்கொண்டு தம்முடைய பிள்ளைகளாகிய விநாயகரையும், குமா ரக்கடவுளையும் பார்த்து, "இந்த வுலகத்தை யெல்லாம் வலமாகச்சுற்றி முன்னர் என்பால் வந்தவர்க்கு இந்தக் கனியைக் கொடுப்பேன்," என்று சொல்ல, குமாரக்கடவுள், மயில் வாகனத்திலேறிப் புவனங் களையெல்லாம் விரைந்து சுற்றிவர, விநாயகர், எல்லா வுலகங்களும் சிவபெருமானுக் குள்ளேயே அடக்கமாதலால் அவரைச் சுற்றினால் உலகங்களை யெல்லாம் வலம்வந்ததற்குச் சமமாம் என்று கருதி அவ ரையே சுற்றி, குமாரக்கடவுள் வருவதற்குமுன் மாங்கனியைப் பெற் றுக்கொண்டன ரென்பது புராணகதை; இங்ஙனம் சுப்பிரமணியர் உலகங்களை யெல்லாம் சுற்றி ஈசனை வலம்செய்தவராதலின், ஈசனை வலமாகவந்த முருகா, என்றார் ஆசிரியர். குரங்கு, மரம், ஞமலி, கழுதை, என்பன ஜாதி யொருமைச் சொற்கள். எதிர்-ஈறுகெட்ட தொழிற்பெயர். தூங்கல்-உறங்குதல் என்னுந் தொழிற்பெயர்; இஃதாகுபெயராய் அதனையுடையாரை யுணர்த்திற்று. கொட்டுதேள்-வினைத்தொகை வலம்வருதல்-வலப்பக்கமாகச் சுற்றிவருதல்; இத ற்கு பிரதக்ஷணமென்று பெயர்; இடப்பக்கம் சுற்றி வருதலுக்கு அப் பிரதக்ஷணமென்று பெயர். (ச0)

அற்பருக்கு வாழ்வு வரிற் குணம் வேறுபடுமெனல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னல்விழிக்
கியாவரும் வுந்தோன் றிடா

தண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறி டாது
முற்பக்ஷ மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய் வராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலே யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரு மென்பார்
மற்புயந் தனினீப மாலையணி லோலனே
மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மல்-வலிமை பொருந்திய, புயந்தனில் - தோள்களிலே, நீபமாலை-கடப்பமலர் மாலையை, அணி - சூடுகின்ற, லோலனே-விருப்பமுடையவனே! நீபமாலை அணிமார்பனே - கடப்பமலர்மாலை யணிந்த நெஞ்சையுடையவனே! வடி-கூர்மை தங்கிய, வேலவா - வேலாயுதத்தை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அற்பர்க்கு-கீழ் மக்களுக்கு, வாழ்வு-செல்வம் பொருந்திய வாழ்க்கையானது, சற்று-சிறிது, அதிகம் ஆனல் - மிகுதியாகவுண்டானல், விழிக்கு-அவர்களுடைய கண்களுக்கு, யாவர் உருவும் - எவருடைய வடிவமும், தோன்றிடாது-தெரியமாட்டாது; (மனிதர்) அண்டிநின்று-அவர்பால் சமீபித்துநின்று, நல்ல வார்த்தைகள் - நன்மையான வாக்கியங்களை, உரைத்தாலும்-சொன்னாலும், (அந்த வார்த்தைகளின் சப்தமானது) அவர் செவிக்கு - அவர்களுடைய செவிகளில், ஏறிடாது-ஏறமாட்டாது; முன்-முன்னே, பக்ஷமானபேர்-சிநேகமாயிருந்தவர்கள், வரு

னும்-அவர்களிடம் வந்தாலும், (அவரைப்பார்த்து அன்புடனே பழைய சிநேகத்தைப் பாராட்டி) வாரும் என-வருவீராக என்று, மொழியவும்-சொல்லவும், வாய் வராது-அவர்க்கு வாய் வரமாட்டாது; (இன்னும் அவர்) மோதி-தேகம் பருத்து, வாதப்பிடிப்பு வந்ததுபோல-வாயுப் பிடிப்பு வந்து கால்களில் தங்கியதுபோல, முன்காலை-முன்னங்கால்களை, அகலவைப்பார்-பக்கங்களில் அகன்று வரும்படி தூக்கிவைப்பார்கள்; விற்பனம் மிகுத்த-கல்வி அதிகரித்த, பெரியோர்-உயர்ந்தோர், செய்தி சொன்னலும்-(அவர்களிடம்) நற்காரியங்களை யெடுத்துரைத்தாலும், (அவற்றை நன்மையானவைகளென்று கருதாமல் அவற்றின்மீது வெறுப்புக்கொண்டு) வெடுவெடுத்து - கோபித்துப் பேசி, (அங்ஙனங் கூறிய பெரியோரையும்) ஏசி - வைது, நிற்பார் - தாங்கள்கொண்ட அகங்காரக் கொள்கையிலேயே நிற்பார்கள்; (அவர்கள் இவ்வாறு நடக்கும்படி அவர்களை மதியீனத்தாற்பற்றிய) விருதா மகத்துவப்பேயது-வெறும் மகிமைப் பைசாசமானது, (வேறு எந்த மார்க்கத்திலும் தீராது; பின்னை எப்பொழுது தீருமெனில், அவர் துஷ்டர்கையிலகப்பட்டு அவர்மீது அத்துஷ்டரால் அடிக்கப்படும்) சவுக்கடி-சாட்டையடியானது, விழும்போது - பலமாக விழுங்காலத்தில், தீரும் என்பர்-நீங்குமென்று சொல்வார் பெரியோர்

(வி - ரை.) அற்பருக்கு வாழ்வு வந்தால், அவர் எப்பொழுதும் வாழ்வையறியாராதலால், திடுமெனக்கிடைத்த அவ்வாழ்வை முன்னிட்டு அவர்க்கு மிக்க அகங்காரமுண்டாகும்; அதனல் அவர்க்குக் கண்தெரியாது; மனிதருரைக்கும் நல்லவார்த்தையும் செவிக்கேறது; பழைய சிநேகிதரைக்கண்டாலும் பேசவாய்வாராது; அவர், கால்களை அகற்றி இறுமாப்புடன் ஆகாயத்தைப் பார்த்து நடப்பர்; பெரியோர் நற்செய்கைகளைக் கூறினுங் கேளாது அவரை வெடுவெடுத்துப் பேசுவார்; இந்த அகங்காரமானது வேறெதனலும் அவர்களை விட்டகலாது; அவர், துஷ்டரிட மகப்பட்டுச் சவுக்கடி வாங்கும்போது

தான் தீரும். 'தீபமாலையணி' என்னும் வாக்கியத்தொடர் இரண்டிடத்துங் கூட்டப்பட்டன. (௪௧)

இன்ன தீங்குள்ளோர் இன்ன கிரகம் போல்வரெனல்.

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
  வஷ்டமச் சனியாகு வா
னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கி
  லங்கார கச்சன்ம மாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
  சந்திராஷ் டகமென்ன லாந்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
  சார்ந்தசன் மச்சூரி யன்
கன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
  றாமிடத் தில்வியா ழம்
நாடொறும் விரோதமிடு கொண்டோன்கொடுத்துளோன்
  ராகுகே துக்க ளெனலாம்
மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
  மந்திர முரைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மன்-பொருந்திய, அயனை-பிரமனை, அன்று-அக்காலத்தில், சிறைதனில் இட்டு-சிறைக்கூடத்தி லடைத்துவைத்து, நம்பற்கு-சிவபெருமானுக்கு, மந்திரம் - பிரணவமந்திரத்தின் இரகசியத்தை, உரைத்த - சொன்ன, குருவே-ஞானாசிரியனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அன்னை தந்தையர் புத்தி-தாய் தந்தையர் கூறும் புத்தியை, கேளாத-கேட்டு நடவாத, பிள்ளை - புத்திரன், அஷ்டமச்சனி ஆகுவான்-எட்டாமிட

த்திலுள்ள சனியைப்போலாவன்; அஞ்சாமல்-பயப்படாமல், (புருஷ னிடத்தில்) எதிர்பேசி-எதிரான வார்த்தைகளைக்கூறி, நிற்கும் மனை யாள்-எதிர்த்து நிற்கின்ற மனைவி, வாக்கில்-வாக்குஸ்தானத்திலே, அங்காரகச் சன்மமாம்-செவ்வாயிருக்கின்ற ஜன்மமாவள்; (எஜமான னுக்கு) தன்னை மிஞ்சி-தனக்கு மிகுந்து, சொன்னவார்த்தை கேளா-தான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நடவாத, அடிமை-வேலைக் காரனை, சந்திராஷ்டகம் என்னலாம் - அஷ்டமத்திலுள்ள சந்திர னென்று சொல்லலாம்; தன் பங்கு - தன்னுடைய பாகத்தை, தா என்று - பிரித்துக்கொடு என்று, (தமையனுடனே வழக்கிட்டு) சபை ஏறு-நியாய சபையில் அவ்வழக்கைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுப் போய்ச்சேருகின்ற, தம்பி-தம்பியானவன் (அத்தமைய னுக்கு) சார்ந்த-பொருந்திய, சன்மச்சூரியன்-ஜன்மலக்கினத்திலுள்ள சூரியனுவான்; நன்னயம் இல்லாத-மிகுந்த நன்மையில்லாத, வஞ் சனை செய்த-தம்பிக்குப் பாகங்கொடுக்கும் விஷயத்தில் சூதுசெய்த, தமையன்-மூத்தவன், மூன்றுமிடத்தில் வியாழன் - மூன்றுமிடத்தி லுள்ள குருவாவன்; நாடோறும் - தினந்தோறும், விரோதம் இடு - சம்பந்த விஷயத்தில் பகை செய்துகொண்டிருக்கின்ற, கொண் டோன் - பெண்கொண்டவனும், கொடுத்துளோன் - பெண்ணைக் கொடுத்தவனும், ராகு கேதுக்கள் என்னலாம் - இராகுவும் கேதுவு மாகிய கிரகங்களென்று சொல்லலாம்.

(வி-ரை.) அஷ்டமச்சனியும், வாக்கிலுள்ள அங்காரகனும், எட்டாமிடச் சந்திரனும், சன்மச் சூரியனும், மூன்று மிடத்து வியாழனும், இராகு கேதுக்களும் கெட்டவைகளென்று கூறுவர் சோதிடநூலார். இங்குக் கூறியவர்களால், இக்கிரகங்களால் உண்டா குந் தீங்கைப் போன்ற தீங்கு உண்டாகுமாதலின் இவர்கள் அக்கிர கங்களுக்கு உவமை கூறப்பட்டனர். தன்னை மிஞ்சி - உருபுமயக்கம். நன்னயம்-ஒருபொருட் பன்மொழி. (சஉ)

நல்லினஞ் சேர்பயன்.

சந்தன விருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல
 தருவுமவ் வாசனை தருந்
 தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
 சாயல்பொன் மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
 பால்போ னிறங்கொடுக் கும்
 படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
 படியே குணங்கொடுக் கும்
அந்தமிகு மாகதக் கல்லைத் தரித்திடி
 லடுத்ததும் பசுமை யாகு
 மானபெரி யோர்களொடு சகவாச மதுசெய்யி
 லவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தவரி
 மருகமெய்ஞ் ஞான முருகா
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மந்தரம் - மந்தரமென்று சொல்லப்பட்ட, நெடுங் கிரியின் - நீண்டமலையினலே, முன் - ஆதியில், கடல்-பாற்கடலை, கடைந்த-அமுதம் பெறும்பொருட்டுக் கடைந்த, அரி-மகாவிஷ்ணுவி னுடைய, மருக-மருமகனே, மெய்-உண்மையான, ஞானம்-அறிவை யுடைய, முருகா-முருகக் கடவுளே!, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே!—,சந்தன விருக்ஷத்தை- சந்த னத்தருவை, அண்டிநிற்கின்ற - நெருங்கி நிற்கின்ற, பல தருவும் - வேறு பல மரங்களும், அவ்வாசனை தரும் - அச் சந்தனமரத்தின் வாசனையையே கொடுக்கும்; தங்கம்-பொன்மயமாகிய, மகமேருவை- மகா மேருகிரியை, அடுத்திடும் - சேர்ந்திருக்கின்ற, காக்கையும் - கரியநிறக் காகமும், பொன் மயமே தரும்-பொன்னினது அழகிய

நிறத்தையே கொடுக்கும்; பந்தம் மிகு - பக்ஷமிகுந்த, பாலுடன் - பாலுடனே, விளாவிய-கலந்த, தண்ணீர் எல்லாம் - குளிர்ந்த ஜலமெல்லாம், பால்போல்-அந்தப் பாலைப்போலவே, நிறம கொடுக்கும் - வண்ணந் தரும்; படிகமணிகட்கு உள்ளே-பளிங்கு மணிகளுக்குள்ளே, நிற்கின்ற-கோக்கப்பட்டு நிற்கின்ற, வடமும் - கயிறும், அப்படியே - அப்படிகத்தின் குணம்போலவே, குணம் கொடுக்கும்-அதன் நிறமாகிய குணத்தைத்தரும்; அந்தம் மிகு-அழகு மிகுந்த, மரகதக்கல்லை-பச்சை யிரத்தினக்கல்லை, தரித்திடில்-அணிந்தால், அடுத்ததும்-அதற்கடுத் திருப்பதும், பசுமை ஆகும்- பச்சை நிறமுடையதாகும்; (இவைபோல மனிதரும்) மான - பெருமையுடைய, பெரியோர்களோடு - உயர்ந்தவர்களுடனே, சகவாசம்து செய்யில்-சிநேகஞ் செய்தால், (அங்ஙனம் செய்வார்க்கு) அவர்கள் குணம் - அப்பெரியோரின் நற்குணங்கள், வரும் என்பர்-வந்து சேரும் என்று கூறுவர் அறிவுடையோர்.

(வி - ரை.) சந்தனவிருக்ஷம் முதலியவற்றைச் சார்ந்த தருக்கள் முதலியவை அவற்றின் நற்குணத்தை யடைதல்போலப் பெரியோரைச் சார்ந்தோரும் அவர் குணத்தை யடைவர். 'சாயல் பொன்மயமே' என்பதை, 'பொன்மயச்சாயலே' என மாற்றுக. சகவாசம்-கூடச் சஞ்சரித்தல்; சக-கூட, வாசம் - வாசஞ்செய்தல். (சு௩)

வலியோரையும் ஊழ் விடாதெனல்.

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்மு
னருங்கா டுறைந்த தென்ன
வண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்
காலம் லபித்த தென்ன
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்த தென்ன

மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன
என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையி னு
லெண்ணத்தி னுலொன்றும் வாராது பரமசிவ
னெத்தனப் படிமுடியு மாம்
மன்றுதனி னடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மன்றுதனில் - பொன்னம்பலத்திலே, நடனமிடு - நர்த்தனம் புரிகின்ற, கங்காதரன்-கங்கைமீது ஆசைவைத்தவனுகிய சிவபெருமான், பெற்ற-ஈன்றருளிய, வர-சிரேஷ்டம் பொருந்திய, புத்திர-மைந்தனே!, வடி - கூர்மைதங்கிய, வேலவா-வேலாயுதத்தை யுடையவனே!, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அன்று-அந்நாளிலே, இரகுராமன்-இரகுவமிசத்தி லுதித்த ராமபிரான், முடி சூடுவது இருக்க - தனக்கு முடிசூட்டும் மங்கள காரியம் ஏற்பட்டிருக்க, (அச்சமயத்திலேயே அதைத் தவிர்த்து) முன்-முன்னே, அரும்-மனிதர் வாசஞ்செய்தற்கருமை யாகிய, காடு-காட்டிற் சேர்ந்து, உறைந்தது-வாசஞ் செய்தது, என்ன-யாது காரணம்? அண்டர் எல்லாம்-தேவர்களெல்லோரும், (பாற் கடல் கடைந்த காலத்திலே அதிலுண்டாகிய) அமிர்தம் உண்டிட-அமுதத்தைப் பருக, பரமனுக்கு-எல்லாத் தேவர்களினும் உயர்ந்தவ ராகிய பரமசிவக்கடவுளுக்கு மட்டும், ஆலம்-கொடிய விஷமானது, இலபித்தது - உண்ணும்படி கிடைத்தது, என்ன-யாது காரணம்? வென்றி வரு-வெற்றிவளர்கின்ற, தேவர்-உம்பர்களை, சிறை மீட்ட-சிறையிலிருந்து விடுவித்த, நீ-மகாவல்லமைசாலியாகிய நீ, (சாமர்த் திய மற்றவன் போன்று) வேடிச்சியை-வேடுவர் எடுத்து வளர்த்த

காரணத்தால் வேடிச்சியாகிய வள்ளிநாயகியை, களவில்-சோரத்தனத்தால், சேர்ந்தது என்ன-கூடியது யாது காரணம்?, மேதினி-உலகத்தை, படைக்கும்-சிருஷ்டிக்கும் திறமைவாய்ந்த, அயனுக்கு-பிரமனுக்கு, ஒரு சிரம் போகி-ஒரு தலைபோக, (அவன்) வெம் சிறையில்-வெவ்விதாகிய சிறைக்கூடத்தில், உற்றது - பொருந்தியது, ஏன்ன-யாது காரணம்? என்றும்-எக்காலத்தும், ஒரு பொய் சொல்லா-ஒரு பொய்யேனுங் கூறாத, மன்னவன்-அரசனாகிய அரிச்சந்திரன், விலை போனது-பறையனுக்கு விலையாகிச் சுடலை காக்கச்சென்றது, என்ன-யாதுகாரணம்? (இவை யெல்லாம் ஊழ்வினைப்பயனேயாம்; ஆதலின்,) வல்லமையினால் - மனிதருடைய திறமையினாலும், எண்ணத்தினால் - சிந்தனையினாலும், ஒன்றும்-ஒரு காரியமேனும், வாராது-வரமாட்டாது; பரமசிவன் எத்தனப்படி-பரமசிவக் கடவுளின் நோக்கப்படியே, முடியும்-முடிவுபெறும்.

(வி-ரை.) இரகு - இராமனுடைய பாட்டன்; இராமன் இந்த இரகு பரம்பரையில் வந்தவனாதலின், இரகுராமன் எனப்பட்டான். அயனுடைய சிரம் ஒரு காலத்தில் சிவபெருமானால் கிள்ளப்பட்டதென்பதும், அவன் சுப்பிரமணியரால் சிறையிலடைக்கப்பட்டானென்பதும் புராணகதை. 'இவை யெல்லாம் ஊழ்வினைப் பயனேயாம்' என்பது இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. முடியுமாம் என்பதில் ஆம்- அசை. (சச)

பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன்
 தசரத குமார ராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
 தருமனுக் கிளைய நால்வர்

சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
  செய்தவ னரிச்சந் திரன்
 றேகியென் ரூர்க்கிலே யெனுவாக்ய பாலனஞ்
  செய்தவன் ருன கன்னன்
நிந்ததவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
  னின்பெல மிகுந்த வநுமா
 நிறையுடன் பர்த்தாவின் வாக்யபரி பாலன
  நிலத்தினு ளாகினி செய்தாள்
மந்தைவழி கோயில்குள மூங்குலவு தும்பிமுகன்
  மகிழ்தர வுகந்த துணைவா
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மந்தை-ஆடுமாடுகள் கூடித்தங்கும் வெளியிடங்களிலும், வழி-மார்க்கங்களிலும், கோயில்-தேவாலயங்களிலும், குளமும்-தடாகங்களிலும், குலவும் - உலாவிச் சஞ்சரிக்கின்ற, தும்பிமுகன் - யானை முகத்தையுடைய விநாயகக்கடவுள், மகிழ்தர-சந்தோஷிக்க, உகந்த-அவனோடுகூடி விளையாடுதற்கு மகிழ்வுகொண்ட, துணைவா-அவன் இளைய சகோதரனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு மலைமேவு குமரேசனே!—, தந்தைதாய்-பிதா மாதாக்களுடைய, வாக்கியம் - வார்த்தையை, பரிபாலனஞ் செய்தவன் - அதன்படி நடந்து காப்பாற்றியவன், தசரதகுமார ராமன் - தசரதனுடைய புத்திரனாகிய இராமனுவான்; தமையன் - மூத்த சகோதரனுடைய, அருள் - கிருபைதங்கிய, வாக்கியம் - வார்த்தையை, பரிபாலனம் செய்தோர்கள்-பாதுகாத்தவர்கள், தருமனுக்கு இளைய-தருமராஜனுக்கிளையவர்களாகிய, நால்வர் - நால்வருமாவர்; குரு-ஆசாரியனுடைய, வாக்கியம்-உறுதி வார்த்தையை, சிந்தையில் - மனத்தில், உணர்ந்து-உயர்வானதென்றறிந்து, பரிபாலனஞ் செய்தவன்-காப்பாற்றியவன், அரிச்சந்திரன் - அரிச்சந்திரனென்னு மன்னனுவன்; தேகி என்

ரோர்க்கு-கொடையாளனே எனக்குக்கொடு என்றுவந்த யாசகர்க்கு, இல்லை என்னு - இல்லையென்று சொல்லாத, வாக்கியபாலனம் செய்தவன் - கொடைவார்த்தையைப் பாதுகாத்தவன், தானம் - கொடையையுடைய, கன்னன் - கன்னனுவன்; நிந்தை தவிர் - பழிப்பு நீங்கிய, வாக்கியம் - இராமன்முதலிய பெரியோருடைய வாக்கியத்தை, பரிபாலனஞ்செய்தவன் - பாதுகாத்தவன், நீள் - விசுவரூபங் கொள்ளுங் காலத்தில் உடல் நீண்ட, பெலமிகுத்த-வல்லமை மிகுந்த, அநுமான் - ஆஞ்சனேயனுவன்; நிறையுடன் - கற்புடனே, பத்தாவின்-கணவனுடைய, வாக்கியம்-வார்த்தையை, பரிபாலனஞ் செய்தாள் - பாதுகாத்தவள், நிலத்தில் - இந்தப்பூமியில், நளாகினி - நளாகினி யென்பவளாவள்.

(வி - ரை.) பெரியோர் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்ய வேண்டு மென்கிற நீதியை யனுசரித்து இராமன், தந்தைதாய் சொற்படி, நாட்டை, கைகேசி புத்திரனுகிய பரதனுக்குக் கொடுத்து விட்டுக் காட்டிற்புகுந்து சஞ்சரித்தான். தருமனுக்கிளையவர்களாகிய வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வரும், அத்தருமன் சொல்லுக்கடங்கி, துரியோதனுதியர் செய்த சகிக்கமுடியாத தீங்குகளையெல்லாம் பொறுத்து வனவாசஞ் செய்தார்கள். அரிச்சந்திரன், தன்னுடைய குருவாகிய வசிஷ்டர், தேவேந்திரன் சபையில் தன்னைச் சத்தியத்திற் சிறந்தவனென்று கூறியதற்கேற்ப விசுவாமித்திரர் செய்த தீங்குகளுக் கெல்லா மஞ்சாது குருவுபதேசப்படியே கடைசிவரை சத்தியத்தை நிலைநிறுத்தி உலகத்தில் அழியாப் புகழ்பெற்முன். கன்னன், யாசித்து வந்தார்க்கு இல்லையென்னுது கேட்டவற்றை யெல்லாங் கொடுத்துக் கீர்த்திபெற்றுன். அநுமான்: இராமன், சுக்கிரீவன் முதலியவர்களுடைய சொற்படியே இராவணசம்மார காலத்தில் அரும்பெருஞ் செயல்களை யெல்லா மியற்றிப் புகழ்பெற்றுன். நளாயினியென்பாள், தன் கணவனை மனத்தலியுன், பலரும் அருவருக்கத்தக்க நோய் வடிவந்தாங்கிப் பல

வாறு தனக்குக் கஷ்டகங்ளை விளைவித்துத் தன் கற்பைச் சோதித்தும் தான் நிலை கலங்காது தன் பர்த்தாவின்மீ தன்புடையவளாய்க் கற்பை நிலைநிறுத்தி நற்பேறு பெற்றனள். இங்ஙனம் இவர்கள் பெரியோர் வாக்கியபரிபாலனஞ்செய்து பேறுபெற்றார்களெனவே, மற்றையரும் இவ்வாறு நடத்தல்வேண்டு மென்பது தானே போதரும்.

செய்தவன், செய்தோர் முதலியவைகள் வினையாலணையும் பெயர்கள். வாக்கியபரிபாலனம்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. தேகி-தியாகி யென்பதன்மரூஉ. தானகன்னன்-இரண்டாம் வேற்றுமைத்தொகை; இது வடமொழிப் புணர்ச்சியாகலின் இடையில் ககர வல்லொற்று மிகாது வந்தது. மந்தை - ஆடுமாடுகளின் கூட்டம்; அஃதிங்கே ஆகுபெயராய் அவை கூடுமிடத்தை யுணர்த்திற்று. மகிழ்தர என்பதில் தரு-துணைவினை. (சரு)

முயற்சியின் மிக்க தூழெனல்.

வங்காள மேறுகினும் வாருகோ லொருகாசு
 மட்டன்றி யதிக மாமோ
வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
 வண்ணப் பருந்தாகு மோ
கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
 காய்நல்ல சுரை யாகுமோ
கடலுக்கு ணாழியை யமுக்கியே மொண்டிடிற்
 காணுமோ நாழி தான்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னொடே
 படையாம னீங்கி விடுமோ
யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினு
 மமைத்தபடி யன்றி வருமோ

மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மங்காத - குறைவுபடாத, செந்தமிழ் - செம்மையாகிய தமிழ்ப் பிரபந்தத்தை, கொண்டு - ஏற்றுக்கொண்டு, நக்கீரர்க்கு - நக்கீரனென்னும் சங்கப்புலவர்க்கு, வந்த துயர்-எய்திய துன்பத்தை, தீர்த்த - நீக்கியருளிய, முருகா - இளமையையுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, வாருகோல்-துடைப்பமானது, வங்காளம்-விற்பனை செய்யும்பொருட்டு வங்காளத்துக்கு, ஏறினும் - கப்பலேறிப்போனாலும், ஒருகாசு மட்டன்றி-அதன்விலை ஒரு காசளவே யல்லாமல், அதிகம் ஆமோ - அதிகப்படுமோ? ஊர்க்குருவி - அடைக்கலங் குருவியானது, வான் ஏறி - ஆகாயத்திலேறி, உயர - உயரமாக, பறந்தாலும் - பரந்து சஞ்சரித்தாலும், வண்ணம் - அழகுபொருந்திய, பருந்தாகுமோ - கருடனாகுமோ? பேய்ச்சுரைக்காய் - பேய்ச்சுரைக்காயானது, கங்கா சலந்தன்னில் - கங்கை நீரிலே, மூழ்கினும் - மூழ்கினாலும், நல்ல சுரை ஆகுமோ - உணவுக்குத் தகுந்த நற்சுரைக் காயாகுமோ? நாழியை - ஒருபடியை, கடலுக்குள் - அளவற்ற நீர் நிறைந்த சமுத்திரத்திற்குள்ளே, அமுக்கி - அழுத்தி, மொண்டிடின் - முகந்திடினும், (அதிற்கொண்ட நீர்) நால் நாழி காணுமோ - நான்குபடி காணுமோ? (ஒருவன்) ஐங்காதம்-ஐந்து காததூரம், ஓடினும் - தவறிக்கொள்ளலாமென் றோடினாலும், (அவனுக்கு) தன் வினைகள் - தன்னுடைய கன்மங்கள், தன்னொடே அடையாமல் - தன்னுடனே சேராமல், நீங்கிவிடுமோ-தொலைந்துபோகுமோ? (இன்னும் அவன்) யாரிடம் சென்றாலும் - எவரிடம்போ யடுத்தாலும், வெகு தொலைகள் சுற்றினும் - நெடுந்தூரஞ் சென்று சுற்றி யலைந்தாலும், (அவனுக்குப் பலாபலன்கள்) அமைத்தபடி அன்றி-பிரமன் ஆதியில் ஏற்

படுத்தியபடியே யல்லாமல், வருமோ-வேறுவிதமாக வந்தடையுமோ? (இல்லை).

(வி - ரை.) துடைப்பமானது அதிக விலைபெறலா மென்று கப்பலேறி அன்னிய தேசமாகிய வங்காளத்துக்குச் சென்றாலும் அதன்விலை ஒரு காசளவே யன்றி அதற் கதிகப்படாது. அடைக்கலங் குருவியானது தான் உயர்ந்ததாக வேண்டுமெனக் கருதி ஆகாயத்தில் மிக்க உயரத்தில் பறந்தாலும் அது பக்ஷி ஜாதிகளில் உயர்ந்ததாகிய கருடனாகமாட்டாது. கசக்கும் இயல்பினையுடைய பேய்ச் சுரைக்காயானது நல்லதாக வேண்டுமென மிகவும் புனிதஞ் செய்கின்ற கங்காஜலத்திலே மூழ்கினாலும் அது கசப்பு நீங்கி நல்ல சுரைக்காயாகாது. ஒருபடியை மிகுந்த நீருள்ள கடலிலே அழுத்தி மொண்டாலும் அது தன்னளவுக்குமேல் ஜலங்கொள்ளாது. ஆதலின் உலகத்தில் எதுவும் என்ன முயற்சியைச் செய்தாலும் தனக் கேற்பட்ட விதியினின்றும் மாறுபடமாட்டாது. இதுபோல் மனிதரும் ஐங்காதமோடினாலும் அவர்களுடைய வினை அவர்களைத் தொடராமல் விடாது. எவரிடத்திற் சென்றாலும் அவர்க்கமைத்தபடி எதுவும் நடக்குமேயன்றி மாறுபட்டு வராது. ஆதலால், மனிதராயினோர் இதனையாராய்ந்து தமக்கேற்பட்டதை யனுபவித்துக்கொண்டு, பேராசையால் பயனற்ற காரியங்களிற் புகாமல் நற்காரியங்களை நாடிச் செய்தல்வேண்டும்.

வங்காளம் - ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று. ஏறினும், பறந்தாலும், மூழ்கினும், மொண்டிடில், ஓடினும், சென்றாலும், சுற்றினும் என்பவற்றிலுள்ள உம்மைகள் உயர்வுசிறப்புப் பொருளன. வாருகோல் - குப்பைகளை வாருகின்ற கோல். துடைப்பமானது பல சிறு கோல்களின் கூட்டமாயினும் ஜாதியொருமை பற்றிக் கோல் என வந்தது. வானேறி-ஏழாம்வேற்றுமைத்தொகை. ஊர்க்குருவி - ஊரில் சஞ்சரிக்கும் குருவி. பருந்தென்பது ஆண் பெண்ணாகிய விரண்டிற்கும் பொதுப்பெயராயினும், உயர்வு நோக்கி

இங்கே ஆண்பருந்தாகிய கருடனெனப் பொருள் கொள்ளப்பட்டது. பேய்ச்சுரை - காட்டிற் படர்ந்திருக்கும் விஷதருமமுடைய ஒரு வகைச்சுரை. காதம்--நாலு கூப்பிடுகொண்ட தூரம். செந்தமிழ்: கருவியாகுபெயராய் அதனாலுண்டாகிய நூலை யுணர்த்திற்று; அந்நூலானது திருமுருகாற்றுப்படையாம்; நக்கீரர் சோமசுந்தரக்கடவுளோடு வாதிட்டு அவர் சாபம் பெற்றுப் பெருநோய்கொண்டு காளத்திக்குச் செல்லுங் காலத்தில் வேறுபல வித்வான்களோடு ஒரு பூதத்தினிடம் குகையிலகப்பட்டு உயிர்க்கபாயம் நேர்ந்த காலத்தில் அவ்வாபத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு அந்நக்கீரரால் குமாரக் கடவுள்மீது பாடப்பட்டது இந்நூல்; இச்சரித்திரவிரிவு காளத்திபுராணமுதலியவற்றால் நன்குணரப்படும். நக்கீரர்-பெருமையுள்ள கீரர்; கீரர் என்பதற்கு முதலிலுள்ள நகரம் உயர்வுபொருளைத் தர வந்த ஒருவகை இடைச்சொல்லாகும். (சசு)

இடும்பால் அழிவு நேருமெனல்.

சூரபத் மன்பெலமு மிராவணன் வீரமுந்
 துடுக்கான கஞ்சன் வலியுந்
துடியான விரணியன் வரப்ரசா தங்களுந்
 தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னதிநுற் றுவாது
 பராக்கிரம மது கைடவர்
பாரிப்பு மாபெலித னண்மையுஞ் சோமுகன்
 பாங்கிலுறு வல்லமைக ளும்
ஏரணவு கீசகன் கனதையுந் திரிபுர
 ரெண்ணமுந் தக்க னெழிலு
மிவர்களது சம்பத்து நின்றவோ வவரவ
 ரிடும்பா லழிந்த வன்றோ

மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடி வேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மாரனை - மன்மதனை, கண்ணால் - நெற்றிக்கண்ணி னாலே, எரித்து-சாம்பலாக்கி, அருள்-பின்னே அவன் அரூபி யாய் உயிர்பெற்றெழக் கிருபைசெய்த, சிவன் தந்த-சிவபெருமான் பெற்றருளிய, வர புத்திர-சிரேஷ்டம் பொருந்திய புத்திரனாகிய, வடி - கூர்மைதங்கிய, வேலவா-வேலாயுதத்தை யுடையவனே! மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சூரபத்மன்-மாயையின் புத்திரனாகிய சூரபதுமனுடைய, பெலமும்- வல்லமையும்; இராவணன்-இலங்காதிபனாகிய இராவணனுடைய, தீரமும்-வீரத்தன்மையும்; தடுக்கான - தீக்குணமுள்ள, கஞ்சன் வலியும் - கம்சனுடைய வல்லமையும்; துடியான - செருவமுள்ள, இரணியன்-இரணியாசுரனுடைய, வரப்பிரசாதங்களும் - வரத்தின் பயன்களும்; தொலையாத-அழியாத, வாலிதிடமும்-வாலியின் தைரிய மும்; பாரம் மிகு-கனமிகுந்த, துரியோதனாதி நூற்றுவரது-துரி யோதனன் முதலிய நூறுபேர்களுடைய, பராக்கிரமம்-வல்லமையும்; மது கைடவர்-மது கைடவர் என்னும் அசுரர்களுடைய, பாரிப்பும்- அதிகரிப்பும்; மாபெலிதன் - மகாபலியினுடைய, ஆண்மையும்-வீர மும்; சோமுகன் பாங்கில்-சோமுகனென்னும் அசுரன் பக்ஷத்திலே, உறு - பொருந்திய, வல்லமைகளும்-தீரங்களும்; ஏர் அணவு-அழகு பொருந்திய, கீசகன்-கீசகனுடைய, கனதையும்-மேன்மையும்; திரி புரர்-திரிபுரவாசிகளுடைய, எண்ணமும்-கெடுநினைப்பும்; தக்கன்- தக்ஷனுடைய, எழிலும்-அழகும்; இவர்களது-இவர்களுடைய, சம் பத்தும்-செல்வமும், நின்றவோ-நிலைபெற்றனவோ? (அவையனைத் தும்) அவரவர்-அவரவர்களுடைய, இடும்பால்-தேசோபத்திரவச் செய்கையால், அழிந்த அன்றே-அழிந்தனவல்லவோ?

(வி - ரை.) சூரபதுமன், காசிபருக்கும் மாயாதேவிக்கும் புத்திரனாகத் தோன்றி, சிவபெருமானிடம் எவராலும் தன்னை ஜயிக்க முடியாத வரம்பெற்றுச் செருக்குடன் ஆயிரத்தெட்டண்டங்களையும் அரசாண்டும், தேவர்களுக்கிடும்பு செய்ததால் முடிவில் ஆறுமுகக்கடவுளால் அழிவுற்றான். எல்லா வலிமைகளையும் பெற்றுத் தேவர்களையும் ஏவல் கொண்டு இலங்கையை ஆண்ட இராவணன் சீதாதேவியை எடுத்துச்சென்ற இடும்பினால், இராமபிரானோடெதிர்த்துத் தன் கிளையோடு நாசமடைந்தான். கிருஷ்ணன் மாமனாகிய கஞ்சன், சிசுஹத்தி செய்துவந்த தோஷத்தால் கிருஷ்ணனோடு பகைகொண் டழிந்தான். இரணியன் சிவபெருமானிடம் பலவரங்களைப் பெற்று உலகத்தில் நிகரற்றவனாய் அரசு செலுத்தியும் தெய்வ விரோதியாயினமையால் முடிவில் நரசிங்கமூர்த்தியாற் கொல்லப்பட்டான். எதிர்த்தவர்களுடைய வல்லமையிற் பாதி தனக்கு வரும்படி வரம்பெற்று மகா மகாபலசாலியாய் வாழ்ந்துவந்த வாலி தன் சகோதரனாகிய சுக்கிரீவனுக்கு இடும்புசெய்து அவன் மனைவியையும் கைப்பற்றிக்கொண்டமையால், ஒருகாலத்தில் இராமபிரானாற் கொல்லப்பட்டான். துரியோதனாதி நூற்றுவர்களும் எல்லா ஐசுவரியங்களையும் பெற்று வாழ்ந்தும் பங்காளித் துரோகஞ் செய்து துரோபதையைத் துகிலுரிந்து பாண்டவர்க்குப் பல இடும்புகள் புரிந்தமையால் முடிவில் அவர்களுடைய கையினாலே சுற்றத்தாரோடு நாச மடைந்தார்கள். ஆதிசிருஷ்டி காலத்தில் தோன்றிய மதுகைடவரென்பவர் எல்லா வல்லமைகளையும் பெற்றிருந்தும் செருக்குற்றுக் கடலில் இறங்கித் திருமாலோ டெதிர்த்து நெடுங்காலம் போர்புரிந்தமையால், அவர் இவர்களைத் தொடைகளால் இடுக்கிக் கீழே தள்ளிக் கால்களால் மிதித்துக் கொன்றனர். மகாபலியென்பவன் வரப்பிரசாதத்தால் சகல வல்லமைகளையும் பெற்று அரசாண்டும், தேவர்களோடெதிர்த்து அவர்களையும் கீழ்ப்படுத்தியபடியால் அவர்களுடைய வேண்டுகோளால் விஷ்ணுமூர்த்தி வாமனாவதாரஞ்செய்து அவனி

டம்சென்று மூன்றடி மண்கேட்டு அவன் கொடுக்க, ஓரடியால் பூவுலகத்தையும், மற்ரோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்ருவது அடிக்கு இடமின்மையால் அவன் முடியில் பாதத்தை வைத்து அவனைப் பாதாளலோகத்தில் அழுத்தி அடக்கினர். சோமுகன் மிக்க வீரனுயிருந்தும் ஒரு காலத்தில் பிரமன் நித்திரை செய்யும்போது வேதங்களைக் கவர்ந்து கடலில் மறைந்தமையினலே தேவர்களின் வேண்டுகோளால் திருமாலானவர் மீனவதாரஞ்செய்து கடலிற் புகுந்து அவனைக் கண்டு கொன்று வேதங்களை யெடுத்துக்கொண்டு அன்னவடிவமாக மீண்டுபோய்ப் பிரமனிடம் சேர்த்தருளினர். விராடராஜன் மைத்துனனுகிய கீசகன், மிக்க பலசாலியா யிருந்தும் பாண்டவர்கள் விராடன் நகரத்தில் உருமறைத்து அஞ்ஞாதவாசஞ் செய்தகாலத்தில் துரோபதையின்மேல் மோகங்கொண்டு அவளுக்குத் தீங்கு புரிந்தமையால் வீமனல் ஓரிரவில் கொல்லப்பட்டான். தாரகாசுரன் புத்திரர்களும், திரிபுரவாசிகளுமாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் ஆகிய மூவரும் பிரமனிடம் வரப்ரசாதம் பெற்றுப் பறந்து செல்லும் பொன், வெள்ளி, இரும்பு மதில்களமைந்த மூன்று நகரங்களைப் பெற்றுச் செல்வத்துடன் வாழ்ந்தும், அவர்கள், தங்கள் நகரங்களோடு பறந்துசென்று தேவர் முனிவர் வாசஞ் செய்த பலவிடங்களையும் அழுத்தி நாசஞ்செய்து பலர்க்கும் இடும்பு செய்துவந்தமையால், தேவர்களின் வேண்டுகோளால் ஒருகாலத்தில் சிவபெருமான் அவர்களுடன் போர்க்கெழுந்து அவர்களையும் அவர்களுடைய நகரங்களையும் சிரித்தெரித் தழித்தனர். தக்ஷன் உமாதேவியைப் புத்திரியாகப் பெற்றுச் சிவபெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து அவருக்கு மாமனென்ற கௌரவத்தை யடைந்திருந்தும் ஒருகாலத்தில் சிவபெருமானையும் உமாதேவியையும் மதிக்காமல் யாகஞ்செய்ததால் சிவபெருமான் கோபங்கொண்டு வீரபத்திரக் கடவுளை யுண்டாக்கி அந்த யாகத்தை அழித்துவரும்படி யனுப்ப, அங்ஙனமே அக்கடவுள் சென்று தக்ஷனையும் அவனுடைய யாகத்தை

யும் அழித்தனர். ஒருகாலத்தில் சிவபெருமான் யோக நித்திரையி லிருக்கும்போது பிரமன் முதலிய தேவர்கள், தங்களுக்குச் சூரன் முதலிய அசுரர்களா லேற்பட்டிருக்கும் துன்பத்தை நீக்கிக்கொள் ளும்பொருட்டு அந்த யோகத்தைத் குலைத்துவரும்படி மன்மதனை யனுப்ப, அவன் பயத்துடன் சென்று சிவபெருமான்மீது மலரம்பு களை யெய்தமையால் அவர் யோகம்விட்டு விழித்து மன்மதன்மீது கோபங்கொண்டு நெற்றிக்கண்ணால் அவனை யெரித்துச் சாம்பலாக் கினார்; பின்னர் இரதிதேவியின் வேண்டுகோளால் அவனுக்கு உயிர் கொடுத்து அரூபியாயிருக்கும்படி அருள்புரிந்தனர்; அதனாலேயே மன்மதன் அனங்கன் என்னும் பெயர் பெற்றான்.

சூரபதுமன்-கோடாகோடி சூரத்தன்மையுள்ளவன்; பதுமம்-கோடாகோடி; அவனிடம் அளவிறந்த சூரத்தன்மைகள் பொருந்தி யிருந்தனவாதலின் அவனுக்கிப்பெயர் ஏற்பட்டது; கோடாகோடி அளவின் மிகுதியைக் காட்டும். இராவணன்-இருட்டைப்போன்ற நிறமுடையவன்; அதாவது கரியநிறத்தையுடையவன். இரணியன்-பொன்னையுடையவன்; இவன் மிகுந்த ஐசுவரியமுடையவனா யிருந்தமைபற்றி இப்பெயர் பெற்றான். வாலி-மிகுதிப்பாட்டை யுடைய வன்; வால்-மிகுதி. மதுகைடவர் - உம்மைத்தொகை; இதில் எண் ணும்மைகள் தொக்கன. திரிபுரம்-முப்புரம்; திரி-மூன்று. வரபுத்திர வடிவேலவன்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (சஎ)

நல்லோர் நட்புநிலை

மாமதியின் முயலான தறுதேய் வுழித்தேய்ந்து
வளரும்போது வளரும்
வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
பொங்குகா லந் தழைக்கும்

புண்டரிக் மிரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுடலி னேக்கிலுயிர் கூடவு மிளேக்குமது
தேறிலுயி ருஞ்சிறக் குஞ்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
சிநேகமிப் படியாகு மே
வாமனசொ ரூபமத யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வாமன சொரூபம் - குறுகிய வடிவத்தையுடைய, மதம் - மதம்பொருந்திய, யானைமுகனுக்கு - யானைமுகத்தினை யுடைய விநாயகக்கடவுளுக்கு, இளைய - இளமையாகிய, வால - குமாரப்பருவமுள்ள, குருபர - சிறந்தகுருவே, வேலவா - வேலாயுதத்தை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலை மேவு குமரேசனே! —, மா-சிறந்த, மதியில்-சந்திரனிடத்துள்ள, முயலானது - முயல்வடிவமாகிய களங்கமானது, அது தேய்வுழி-அந்தச் சந்திரனுனது தேயும்போது, தேய்ந்து - தானும் தேய்வுற்று, வளரும் அப்போது - அச்சந்திரன் வளரும் அக்காலத்தில், வளரும் - தானும் வளர்ச்சியடையும்; வாவிதனில்-தடாகத்தினிடமுள்ள, ஆம்பல் - அல்லிகளும், கொட்டிகள் - கொட்டிகளும், அதனில் - அக்குளத்தில், நீர் வற்றின்-நீர் வறண்டுபோமாயின், வற்றிடும் - தாமும் வறண்டுபோம்; பெருகில்-அக்குளத்திலே நீர் பெருகினல், உயரும்-தாமும் செழித்து வளர்ந்தோங்கும்; பூ-பூமியிலே, மருவு-பொருந்தியிருக்கின்ற, புதல்பூடு - புற்பூண்டுகள், கோடையில்-முதுவேனிற் பருவமாகிய கோடைகாலத்தில், தீய்ந்திடும் - காய்ந்துபோகும்; பொங்கு காலம்-பூமியானது செழிக்கின்ற கார்காலத்தில், தழைக்கும்-அவையெல்லாம் செழித்து வளரும்; புண்டரிகம்-தாமரை

யானது, இரவி-தன்சிநேகனாகிய சூரியன், போம் அளவில்-மறைந்து போகுமெல்லையாகிய இராக்காலத்தில், குவிந்திடும் - முகங்கூம்பிப் போகும்; போது-அச்சூரியன், உதயமாகின்-உலகத்தில் தோற்றினால், மலரும்-முகமலர்ச்சியுறும்; தேம் - தனக்கிடமாகிய, உடல்-தேகமானது, இளைக்கில் - வாட்டமடைந்தால், உயிரும்-அதனிடமிருக்கும் உயிரும், கூட - அத்தேகத்தோடுகூடவே, இளைக்கும்-வாட்டத்தையடையும், அது - அத்தேகமானது, தேறில் - வாட்டம் நீங்கித் தெளிந்தால், உயிரும்-அதனோடுகூட இளைத்த ஆவியும், சிறக்கும் - பலமுற்றுச் செழிப்படையும்; சேர்ந்தோர்க்கு-சிநேகமாக அடைந்தவர்க்கு, இடுக்கண் அது வந்தாலும் - துன்பமானது வந்து சேர்ந்தாலும் (இன்பம்வந்து சேர்ந்தாலும்) நல்லோர் சிநேகம் - உத்தமர்களுடைய உறவானது, இப்படி ஆகும்-இவ்விதமே இன்பம் வந்த காலத்தில் இன்பத்தையும் துன்பம் வந்த காலத்தில் துன்பத்தையும் அடைந்து உத்தமமாக) நடைபெறும்.

(வி - ரை.) சந்திரனிடத்துள்ள முயற்களங்கமானது, அது தேயுங் காலத்தில் தேய்ந்து வளருங்காலத்தில் வளர்வதுபோலவும்; ஆம்பலும் கொட்டியும் குளத்தில் நீர் வற்றியகாலத்தில் வறண்டும் நீர் நிறைந்தகாலத்தில் செழித்தும் தோற்றுவதுபோலவும்; புற்பூண்டுகள் பூமி செழிக்கும் மழைகாலத்தில் செழித்து, எல்லாந் தீயுங் கோடைக்காலத்தில் வறண்டுபோவது போலவும்; தாமரையானது சூரியனைக் காணாதபோது குவிந்து கண்டபோது மலர்வது போலவும்; உயிரானது தேகமிளைத்த காலத்தில் இளைத்து, செழித்த காலத்திற் செழிப்பதுபோலவும், நல்லோரா யிருப்பவர் தம்முடைய சிநேகர் துன்புறும்போது தாமும் துன்புற்று அவர் மகிழும்போது தாமும் மகிழ்வர்; கீழ்மக்களாயினோர், தம்முடைய சிநேகர் செழித்திருக்கும்வரை நெருங்கி யுறவாடி அவருடைய சுகங்களையெல்லாம் தாமும் அடைந்து அவர் கெட்டகாலத்தில் அறியாதவர் போல அவரை விட்டு நீங்குவர்; இவரே உலகத்தில் மகாபாவிக

வாவர். சந்திரகளங்கம் கொட்டி ஆம்பல் முதலியவற்றைப்போலவே சிநேகர் விஷயத்தில் இருக்கவேண்டுமென்பது இச்செய்யுட் கருத்து. பலநாளும் உறவாடிய சிநேகிதரோடு தமக்குக் காரியமில்லாதபோது முகத்தையும் ஏறெடுத்துப் பார்க்காமலும் ஒரு வார்த்தையேனும் பேசாமலும் செல்லும் மிருகத்தன்மை வாய்ந்தமக்கட் பதடிக ளெல்லோரும் கவனிக்கத்தக்கது இச்செய்யுள்.

தேய்வுழி-இதில் வந்த வுடம்படு மெய்யல்லாத வகரமெய்யானது, "எகரவினு முச்சுட்டின் முன்னர்" என்ற நன்னூற் சூத்திரத்தி னீற்றில், 'செறியே' என்ற மிகையாற் கொள்ளப்பட்டதாகும்; இது நன்னூலார் கொள்கைப்படி உடம்படு மெய்யன்றாயினும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இதனை மெய்யீற் றுடம்படுமெய் யென்பர். தேய்வுழி என்பதிலுள்ள உழியென்னும் ஏழனுருபு இங்கு எல்லைப் பொருளில் வந்தது. முயல்-சந்திரனிற்றோன் றும் முயல் வடிவமான களங்கம். கொட்டி-ஒருவகை நீர்ப்பூண்டு. பூடு-சிறு பச்சிலைச் செடிகள். தேம்-இடம். கூடவும் என்பதிலுள்ள உம்மை உயிருக்குக் கூட்டப்பட்டது. 'இடுக்கணது வந்தாலும்' என்பதனோடு 'இன்பம் வந்தாலும்' என்பது இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. விநாயகர், கால்கள் குறுகிக் குள்ளவடிவ முள்ளவராகத் தோற்றலின், 'வாமனசொரூப மதயானை முகன்' எனப்பட்டார்; இனி, வாமனம் என்பது தென்திசை ஆண்யானையின் பெயராதலின் தென்திக்கு யானைபோன்ற வடிவமுள்ளவரெனப் பொருள் கூறினும் அமையும். (௬௮)

கைப்பலனமைவை.

பிருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகை யும்
பலமினிய வாடிதனி லானைவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்

கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலுங்
காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடுகல்வி யும்
விருதரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகார மும்
வீணல்ல விவையெலாங் கைப்பலன தாகவபி
விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையுந் தண்டரள
மாலையும் புனைமார்ப னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மரு உலாவிய-வாசனை தங்கிப்பரவுகின்ற, நீபமாலையும் - கடப்பமலர் மாலையையும், தண் - குளிர்ச்சி பொருந்திய, தரள மாலையும்-முத்து மாலையையும், புனை - அணிகின்ற, மார்பனே-மார்பகத்தை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!— பருவத்திலே-இளமைப்பருவத்திலேயே, பெற்ற - ஈன்ற, சேயும் - பிள்ளையும்; புரட்டாசிபாதி - புரட்டாசிமாத நடுவிலே, சம்பா நடுகையும் - (இட்ட) சம்பாநெல் நடவும்; பலம் இனிய-பலன் (கொடுப்பதில்) இனிதாகிய, ஆடிதனில் - ஆடிமாதத்திலே, (பயிர் செய்யப்பட்டு) ஆனைவால்போல - யானையின் வாலைப்போல, பயிர் கொண்டு-பயிரைக்கொண்டு, வரு-வளர்ந்து வருகின்ற, கரும்பும் - கன்னலும்; கருணையொடு - கிருபையுடனே, மிக்க - மிகுந்த, நாணயம் உள்ளோர் - வாக்குப் பிசகாமை யுள்ளவர்களது, கையினில் - கரத்திலே, கடன் இட்டுவைத்த - கடனாகக் கொடுத்துவைத்த, முதலும் - முதற்பொருளும்; காலமது நேரில் - கல்வி கற்றற்குரிய சமயமானது வாய்க்கும் பக்ஷத்தில், (மனிதன்) தனக்கு உறுதியாக - தனக்குப் பலமாக, முன் - முன்னே, கற்று

உணர்ந்திடு - படித்தறிகின்ற, கல்வியும் - படிப்பும்; விருது - கொடி குடை முதலிய விருதுகளையுடைய, அரசரைக் கண்டு - மன்னரைப் பார்த்து, பழகிய - உறவாடிய, சிநேகமும்-இராஜநேயமும்; விவேகி கட்கு - அறிவுடையார்க்கு, (செய்த) உபகாரமும் - உதவியும், வீண் அல்ல-நிர்ப்பிரயோசன மானவைகளல்ல; இவ்வை எல்லாம் - இவைக ளெல்லாம், கைப்பலனதாக - கைப்பட்ட பிரயோசனமாக, அபிவிரு த்தியாய் - விசேஷ வளர்ச்சியாகி, வரும் என்பர்-வந்துகூடுமென்று சொல்வர் அறிவுடையோர்.

(வி - ரை.) இளம் பருவத்திலே பெற்ற பிள்ளை, தகப்பன் விருத்தாப்பியதசை யடைவதற்குள் பருவமடைந்து தக்க தொழில் களிற் பிரவேசித்துக் கைக்குதவியாவான். புரட்டாசி பாதிப்பட்டத் தில் நட்ட சம்பாப்பயிரானது, நன்றாக விருத்தியடைந்து மிக்க பல னைக் கொடுக்கும். ஆடிமாதத்துப் பட்டத்திற் செய்த கரும்புப் பயிரா னது ஆனைவாலைப்போல பருத்து நீண்டு நற்பலனைத் தரும். நாணய முள்ளவர் கையிற்கொடுத்த பணமானது எப்பொழுதும் இலாபத் துடன் கைக்குவரும். உரிய பருவத்தில் கற்ற கல்வியானது மன த்தைவிட்டகலாமல் விருத்தியடைந்து பலன்செய்யும். அரசருடைய சிநேகமிருந்தால் அது எப்பொழுதும் இலாபத்தையே கொடுத்துக் கொண்டிருக்கும். விவேகிகளுக்கு உபகாரஞ்செய்தால் செய்தவருக்கு ஆபத்துவந்த காலத்தில் அவரும் உதவிசெய்து காப்பாற்றுவர்.

புரட்டாசி பாதி யென்பதற்குப் பின், 'இட்ட' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. ஆடிதனில் என்பதற்குப் பின், 'பயிர் செய்யப்பட்டு' என்னுஞ் சொல்லும் வருவிக்கப்பட்டது. பல மினிய என்பதற்கிடையில், 'கொடுப்பதில்' என்னுஞ்சொல்லும் வரு விக்கப்பட்டது. விவேகிகட்கு என்பதற்குப் பின், 'செய்த' என்னுஞ் சொல்லும் வருவிக்கப்பட்டது. (சக)

சமயத்துக் குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடுவித்தை யுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடிவாழ்க் கையு
மேறுமா றுகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லுவஞ் சகர் நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தி லுதவாது காண்
வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காள நேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) வல் ஆன - சூதாடு கருவியாகிய சொக்கட்டான் காயைப்போல உருவாகிய, கொங்கை-தனபாரங்களையுடைய, மடம்-இளமைப்பருவம் பொருந்திய, மாது - பெண்ணான, தெய்வானை - தேவயானை, குறவள்ளி - வேடுவகுலத்தாரால் வளர்க்கப்பட்ட வள்ளி நாயகி, (ஆகியவர்களுடைய) பங்காள - கூட்டை யுடையவனாகிய, நேயா - நேசனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, கல்லாது-படிக்காமல், புத்தகந்தனில்-புத்தகத்திலே, எழுதி - வரைந்து, வீட்டினில் - இல்லத்திலே, கட்டி வைத்திடு - கட்டிப் பத்திரப்படுத்தி வைக்கின்ற, வித்தையும் - கல்வியும்; காலங்களுக்கு - கஷ்டம்வந்த சமயங்களுக்கு, உதவவேண்டும் என்று-உதவியாக வேண்டுமென் றெண்ணி, அன்னியன் கையிற்

வேற்றுமனிதன் கையிலே, கொடுத்த பொருளும்-கொடுத்துவைத்த திரவியமும்; இல்லாளை - ஒருவன் தன் மனையாளை, நீங்கி - விட்டுப் பிரிந்து, பிறர் பாரி-அன்னியருடைய மனைவி, சதம் என்று - நிலையென்றெண்ணி, இருக்கின்ற - அவளோடு சோரத்தனமாகக் கூடியிருக்கின்ற, குடிவாழ்க்கையும்-குடித்தனவாழ்வும்; ஏறுமாறாக-மனக்குழப்பமாக, தேசாந்தரம் போயிருக்கின்ற-பரதேசம்போயிருக்கின்ற, பிள்ளை வாழ்வும்-புத்திரனுடைய வாழ்க்கையும்; சொல்லானது ஒன்றும் - வாயில்வருஞ் சொல்லானது ஒருவிதமாகவும், அவர் மனமானது ஒன்றுமா-அவர்களுடைய மனம் ஒருவிதமாகவும், சொல்லும்-உள்ளே அன்பில்லாமல் முகநட்புவார்த்தை பேசுகின்ற, வஞ்சகர் நேசமும் - சூதுடையவர்களது உறவும்; சுகியமா - சுகித்தற்குரியனவாக, உண்டு என்று - இருக்கின்றன என்று, இருப்பதெல்லாம் - எண்ணியிருக்கின்ற நினைப்புமுழுதும், தருண துரிதத்தில் - அவசரமான சமயத்தில், உதவாது - கைகூடமாட்டாது (அதாவது: இவையெல்லாம் எப்பொழுதும் உதவாமற்போகு மாதலினாலே அந்த எண்ணம் நிறைவேறாது.)

(வி - ரை.) கல்வியைக்கற்றால் மாத்திரந்தான் அது தருணத்தி லுதவும்; அதை எழுதிக் கட்டிவைப்பதால் சமயத்தில் எடுத்துச் சொல்லிப் பெருமையடைய ஏதுவிராது. தன் கைப்பொருளை அன்னியனிடம் கொடுத்தால், அவன் நாணய முடையவனா யிருப்பினும் கேட்ட சமயத்தில் அவன் கையிலில்லாமற்போதல், அவன் எங்கேனும் சென்றுவிடல் முதலிய காரணங்களால், அது சமயத்தி லுதவாமற்போகும்; "தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்,பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே," என்பது இதனை வலியுறுத்திக் கூறும். அன்னியன் மனைவி எவ்வளவு நேயமுடையவளா யிருப்பினும் தளர்ச்சியுற்ற சமயத்தில் சொந்தமனைவிபோல் வந்து உரிமையோடு பணிவிடை முதலியன செய்து உபசரிக்கமாட்டாள். மனக்குழப்பமாகத் தேசாந்தரம் போயிருக்கின்ற பிள்ளைவந்து சேர்வது

நிச்சயமில்லை; ஆதலால், அவன் எவ்வளவு செல்வமுடையனாய் வாழினும் அவனுடைய வாழ்க்கையானது, தந்தையின் ஆபத்து காலத்திலுதவமாட்டாது. மனத்தில் அன்பில்லாமல் முகஸ்துதி பேசுகின்ற வஞ்சநேயமுடையார் தங்கள் காரியமாகுமளவும் நெருங்கியிருந்து, அங்ஙனம் நெருங்கியவர்க்கு ஆபத்துநேர்ந்த காலத்தில் சொல்லாமல் நீங்குவாராதலின் அவர் எப்பொழுதுமே சிநேகிதருக்குத் தருணத்திலுதவிசெய்யமாட்டார்கள்.

மனிதர்க்குப் பல சந்தர்ப்பங்களில் துன்பம் நேர்வது இயற்கையாதலின், காலத்தைப் பலவாகப் பிரித்து, 'காலங்களுக்கு' எனப் பன்மையாற் கூறினர் ஆசிரியர். இல்லாள் - வீட்டுக்குடையவள்; இல் - வீடு. பாரி - பாரத்தையுடையவள்; அதாவது குடும்பபாரத்தைத் தாங்குபவள் என்பது இதன்பொருள். ஏறு - உயர்ச்சி; ஏறுமாறு-உயர்வுமாறுபடல்; அதாவது உறுதிகெட்டு மனக்குழப்பமாதல். அந்தரம் - வெளி; தேசாந்தரம் - வெளிதேசம். சுகியம்-சுகித்தற்குரியவை. 'தருணதுரிதம்' என்பதைத் 'துரிததருணம்' என மாற்றுக. வல் - நுனிசிறுத்தும் அடிபுடைத்துமிருக்கும் சொக்கட்டான்காய்; இது சூதாடுகருவியென்று சொல்லப்படும். (௬௦)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளையு
மானைவா யிற் கரும்பு
மரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினி
லகப்பட்டு மெலி காக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமு
நாய்வேட்டை பட்ட முசலும்

தேடியுண் பார்கைக்கு ளானபல வுடைமையுந்
 தீவாதை யான மனையுந்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளுந்
 திரும்பிவா ராவென்பர் காண்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
 வாழவந் திடுமுதல் வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மாடமிசை - மாளிகைகளின் மேலுப்பரிகையிலே, அன்னக் கொடித்திரள் - அன்னதான மிடுவதற் கறிகுறியாக நாட்டப்பட்ட கொடிக் கூட்டங்களை, கொள் - கொண்டிருக்கின்ற, சோணாடு - சோழநாட்டி லுள்ளவர்கள், வாழ-வாழும்பொருட்டு, வந்திடு முதல்வனே-எழுந்தருளிவந்த தலைவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஆடு-படமெடுத்தாடுகின்ற, அரவின் வாயினில்-நாகத்தின்வாயிலே, அகப்பட்ட-சிக்கிக்கொண்ட, தவளையும் - மண்டூகமும்; ஆனை வாயில் - யானையின் வாயிலே அகப்பட்ட, கரும்பும்-கன்னலும்; அரிதான-செய்தற் கருமையான, கப்பலில் - கப்பலிலே, பாய்மரக் காற்றினில்-பாய்மரக் காற்றினிடமாக, அகப்பட்டு-சிக்கி, மெலி-இளைக்கின்ற, காக்கையும் - காகமும்; நாடு அறிய-தேசத்தாரறியும்படி, தாரை வார்த்து - தாரைநீர்விட்டு, கொடுத்ததும்-தத்தஞ் செய்த பொருளும்; நமன்-எமனுடைய, கைக்குள் ஆன-கைக்குட்சிக்கிய, உயிரும்-ஆவியும்; நலமாக-நன்மையாக, அணைகடந்திட்ட-கரையைத் தாண்டிய, வெள்ளமும்-நீர்ப்பிரவாகமும்; நாய் வேட்டைபட்ட-நாய் விரட்டுதலாலேற்படும் துன்பத்திலகப்பட்ட, முசலும்-முயலும்; தேடி-அப்போதைக்கப்போது பொருள் சம்பாதித்து, உண்பார் - அதன்மூலம் ஆகாரமுண்டு ஜீவிப்பவர்களுடைய, கைக்குள் ஆன-கைக்குள்ளே சிக்கிய, பல உடைமையும் - பல பொருள்களும்; தீ வாதையான-நெருப்பின்

வாதனையிலகப்பட்ட, மனையும் - வீடும்; திரள் - திரண்ட, கொடுங்கோல் அரசர்-அநீதி பொருந்திய மன்னர்களுடைய, கைக்கு ஏறு-கையிலேறுகின்ற, பொருளும்-திரவியமும்; திரும்பிவாரா என்பர்-திரும்பி வரமாட்டாவென்று அறிவுடையோர் கூறுவார்.

(வி - ரை.) பசித்த பாம்பின் வாயில் தேரை அகப்பட்டால் அஃது அத்தவளையை விழுங்காமல் விடாது. யானையின் வாயிற் புகுந்த கரும்பு, மிகுந்த சுவையாயிருத்தல்பற்றி அதனை மிக்க ஆவலோடு அந்த யானையானது மென்று தின்னுமாதலின் எவரும் மீளப்பெறுத லரிதாகும். கப்பற் பாய்மரத்தை ஆதர்வாகப்பற்றி நடுக்கடலிற் செல்லுங் காக்கையானது சுழல் காற்றி லகப்பட்டால் அதற்குப் பூமியின் ஆதாவின்மையால் கடல்நீரிலேயே வீழ்ந்திறக்கும். தாரைவார்த்துக் கொடுத்த பொருள் பிறர்க்குரிமையாய் விடும் ஆதலானும், அதனை மீளப்பெறுதல் தருமசாஸ்திரத்திற்கு விரோதமாகலானும் அது திரும்பிக் கைக்கு வருத லரிதாம். ஒருவருக்கு ஆயுள் முடிந்தபிறகே எமன் அவருயிரைப் பிடிப்பானாதலின் அவ்வுயிர் மீளுத லரிதாம். அணைகடந்த வெள்ளம் பள்ளத்தாக்கிலேயே பாய்ந்து செல்லுமாதலின் அது மீண்டு எதிரேறிவருதலருமையாம். நாய் வேட்டையிற் சிக்கியிளைத்த முயலானது எப்படியும் அதன் வாயிற் சிக்கியே மடியுமாதலின், அது மீண்டும் சுகப்படுதல் இல்லை. நாடோறும் பொருள் தேடி ஜீவிப்பவர், தங்கள் கையில் எது அகப்படினும் தங்களுக்கு வரும் மானபங்கத்தைச் சிறிதும் கவனியாது அதனை விற்றேனு அடைவுவைத்தோ பணம் வாங்கித் தங்கள் ஜீவனத்தை நடத்தும் இயல்பினை யுடையவ ராதலின் அவர் கைக்குட் சிக்கிய உடைமைகள் மீண்டு வரமாட்டா. தீப்பட்ட மனை கரிந்து சாம்பராய்ப்போய்விடு மாதலின் அதனை முன்னிருந்த நிலைமையோடு மீண்டும் காணுதல் எப்பொழுதும் அருமையாகும். கொடுங்கோல் மன்னருக்கு இரக்கமென்பதே சிறிது மிராதாதலின் அவர் அபகரித்த பொருளை மீண்டும் கொடுக்கமாட்டார்கள்.

முருகக்கடவுள், சோழநாட்டிலுள்ள சுவாமிமலை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் எழுந்தருளி அங்குள்ளார்க்குத் திருவருள் புரிகின்றானாதலின், 'சோணாடு வாழவந் திடுமுதல்வனே' என்றார் ஆசிரியர். தாரை-ஒருபொருளை ஒருவர்க்குத் தத்தஞ்செய்வதற் கறிகுறியாக அவர் கையில் தாரையாக விடப்படும் ஜலம்; தாரை-நீரொழுக்கு. அணைகடந்து பாயும் வெள்ளம் அப்பாற் சென்று தான் செல்லுமிடங்களில் பயிர்த்தொழில் செய்வார்க் குதவி புரியக்கூடியதாதலின், 'நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளம்' என்றார் ஆசிரியர். வேட்டை - மிருகங்களைக் கொல்லுந் தொழில். உடைமை-உடைத்தாயிருக்கும் பொருள். தீவாதையான-ஏழாம் வேற்றுமைத் தொகை. 'கையில் ஏறு பொருள்' என வருதற்பாலது, 'கைக்கேறு பொருள்' என வந்தது; ஏழாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக மயங்கி வந்த உருபுமயக்கம். சோணாடு-சோழன்நாடு என்பதன் மரூஉ. (௫௪)

இதினுமிது நன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி னின்சொலாற்
    களிகொண் டழைத்த னன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
    கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றவோ ரவிவேகி யுறவினில்
    விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னரைக்காசு
    வேளைகண் டுதவ னன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
    சற்றுமிலை யென்ன னன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னோயற்ற
    தாரித்தி ரியநன்று காண்

மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக னான முதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மடுவினில் - குளத்திலே, கரி-முதலையின் வாயிற் சிக்கிய கஜேந்திரனென்னும் யானையானது, ஓலம் என்ன - ஆதிமூலமே உனக்கபயமென்று கூவியழைக்க, வந்து - அப்பொழுதே அங்கெய்தி, அருள் செய்த-அதன் ஆபத்தைநீக்கி அதற்குக் கிருபை புரிந்த, மால்-மகாவிஷ்ணுவின்; மருகனான-மருமகனான, முதல்வா-தேவர்களுக்குத் தலைவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கடுகடுத்து - கடுகடுப்பான வார்த்தை பேசிக் கோபித்து, ஆயிரம் செய்குவதில்-ஆயிரம் உதவிகளைச் செய்வதைக் காட்டினும், இன்சொல்லால்-இனிமையான வார்த்தைகளினாலே, களி கொண்டு - சந்தோஷத்தை யடைந்து, அழைத்தல் நன்று-அன்புடன் கூப்பிடுதல் நன்மையாம்; ஆயிரம்-ஆயிரக்கணக்கான, கனவேள்வி - உயர்ந்த யாகங்களை, செய்வதில் - செய்வதைக் காட்டிலும், கருத்தொடு-நினைவோடு, பொய் உரை-பொய் வார்த்தைகளை, சொல்லாமை நன்று-கூறுதிருத்தல் நன்மையாம்; வெடுவெடுக்கின்ற-எப்பொழுதும் வெடுவெடுத்துப் பேசுகின்ற, ஓர் அவிவேகி-விவேகமில்லாதஒருவனுடைய, உறவினில்-சிநேகத்தைக்காட்டினும், விவேகியொடு - புத்தியுள்ளவனோடு, பகைமை நன்று-பகை கொண்டிருத்தல் நன்றாகும்; (அவசியமில்லாத காலத்தில்) ஆயிரம் வெகுமதிகள்-ஆயிரக்கணக்கான சன்மானங்களை, செய்வதின்-செய்வதைக் காட்டினும், வேளை கண்டு-உதவத்தக்க சந்தர்ப்ப மறிந்து, அரைக்காசு-அரைக்காசாயினும், உதவல்-கொடுத்தல், நன்று-நன்மையாம்; சடுதியில்-சீக்கிரமாக, பக்குவம் சொல்லும் - (நாளைவா மறுநாள்வா என்று) தவணை கூறிச் செய்கின்ற, கொடைக்கு - தானத்திற்கு, இங்கு-இவ்விடத்திலே, சற்றும் இல்லை என்னல் - சிறிதும் இல்லை

யென்று கூறிவிடுதல், நன்று - நன்மையாம்; சம்பத்துடன் - மிக்க செல்வத்துடனே, பிணியில் - நோயிற்சிக்குண்டு, மெலிகுவதில் - இளைத்து வருந்துவதைக் காட்டினும், நோய் அற்ற-பிணியில்லாம லிருக்கின்ற, தாரித்திரியம்-வறுமையானது, நன்று-மிகவும் நன்மை யாம்.

(வி-ரை.) மன வெறுப்போடு ஆயிரங் கொடுத்தும் அக்கொடை யினால் யாசகர்க்கு மிக்க மனவேதனை யுண்டாகுமேயன்றி சிறிதும் திருப்தி யேற்படமாட்டாது; முகமலர்ச்சியோடு இன்சொற் கூறிச் சிறிது கொடுத்தாலும் திருப்தியாம்; ஆதலால், கடுகடுப்போடு மிக்க பொருள் கொடுப்பதைக் காட்டினும் ஒன்றுங் கொடாமல் இனிய வார்த்தை கூறுதல் நன்மையாம். பொய்கூறல் முதலிய பாவச்செயல் களை யுடையார் ஆயிரம் வேள்விகளைச் செய்தாலும் நல்லோராக மாட்டார்; ஆதலின், அவர்கள் யாகஞ் செய்வதினும் பொய்கூறா திருத்தலே மேன்மையாம். கோபமுடைய மூடன், சிநேகமா யிருப்பி னும் சிறிது மனஸ்தாபத்திலும் தீங்கு செய்வான்; விவேகி பகையா யிருப்பினும் பெரிய மனஸ்தாபத்திலும் அவசரப்பட்டுத் தீங்கு செய்யமாட்டான்; ஆதலின், மூடன் உறவினும் விவேகிபகை நன்று. உதவி செய்வோர், தளர்ச்சியுற்ற சமயத்திற் செய்தலே பயன்படும்; அவசியமில்லாத காலத்தில் ஆயிரம் வெகுமதி செய்தாலும் பயன் படாது; ஆதலின், சமயத்தில் அரைக்காசு வெகுமதி கொடுத்தாலும் அது மேன்மை யாகும். யாசகனுக்குக் கொடையாளன் தவணை சொன்னால், அவன் முடிவில் அதிக பொருள் பெறினும் அலைச்ச லால் வருந்துவானாதலின், அவனுக்கு அக்கொடையில் திருப்தி யிராது; ஆதலின், அங்ஙனம் தவணை சொல்வதிலும் முதலிலேயே இல்லையென்று சொல்லிவிடுதல் நன்மையாம். ஒருவனுக்கு எவ் வளவு சம்பத்திருந்தாலும் நோயுடனிருப்பானாகில், ஒரு சுகத்தையு மடையான்; ஆதலின், வறுமைப்பட்டாலும் நோயில்லாதிருத்தல் மிகவும் நன்றாம். கஜேந்திரனென்னும் யானையானது முதலையின்

வாய்ப்பட்டு வருந்திய காலத்தில் ஆதிமூலமேயென் றோலமிட, அக்காலத்தில் விஷ்ணுமூர்த்தி விரைந்தோடிவந்து முதலையைச் சங்கரித்து யானையைக் காத்தனரென்பது புராணகதை.

'கடுகடுத்தாயிரம்' என்பதில், ஆயிரம் - எண்ணலளவை யாகு பெயர். செய்குவதில், இதில் கு-சாரியை. 'வெகுமதிகள் ஆயிரஞ் செய்வதில்' என்பதற்கு முன், 'அவசியமில்லாத காலத்தில்' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. பக்குவம்-பருவம்; இஃதிங்கே தவணை யென்னும் பொருளில் வந்தது. ஓலம்-அபயக்குரல். முதல்வன்-தேவர்களுக்கெல்லாம் தலைவன். (கூஉ)

பலகூடினு மொன்றற்கிடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகு மோ
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னுமொரு
தம்பட்ட வோசை யாமோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றாகு மோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னுமொரு
கோகனக மலராகு மோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னுமொரு
பைம்பொன்மக மேரு வாமோ
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பனனொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) ஒரு கரத்தில்-ஒருகையிலே, வாரணக்கொடி பிடித்து-சேவற் கொடியைப்பற்றி, ஒன்றில் மற்றொரு கரத்தில், வடி-கூர்மைதங்கிய, வேல் அணிந்த-வேலாயுதத்தைத் தரித்த, முருகா-குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, ஒரு கோடி - ஒப்பற்ற கோடிக் கணக்கான, தாரகைகள் - நக்ஷத்திரக் கூட்டங்கள், வானத்து - ஆகாயத்திலே, இருக்கினும் - தங்கியிருந்தாலும், (அவை) சந்திரற்கு - ஒரு சந்திரனுக்கு, ஈடாகுமோ-இணையாகுமோ? தாருவில் - மரங்களிலே நாட்டப்பட்ட, கொடி-துணிக்கொடிகளின், தொனிகள்-சப்தங்கள், பல கூடினும்-பலவாகத் திரண்டாலும், (அவை) ஒரு தம்பட்ட ஓசை ஆமோ-ஆனகமென்னும் ஒருவகைப் பறையின் ஒலிக்கீடாகுமோ? கோரம் மிகு-கொடுமை மிகுந்த, பன்றியின் குட்டி-பன்றியினுடைய குட்டிகள், பல கூடின்-பலவாகக்கூடினாலும், (அவை) ஒரு குஞ்சரக் கன்று ஆகுமோ-ஒரு யானைக்கன்றுக் கீடாகுமோ? வாவியில்-தடாகத்திலே, கொட்டி மலர்-கொட்டியின் புஷ்பங்கள், பல கூடினும்-பலவாக நிறைந்திருந்தாலும், (அவை) ஒரு கோகனகமலர் ஆகுமோ-ஒரு தாமரைப் புஷ்பத்திற் கீடாகுமோ? பாரம் மிகு-கனம் மிகுந்த, மா-சிறந்த, மலைகள்-பர்வதங்கள், பல கூடினும்-பலவாகக்கூடினும், (அவை) ஒரு-ஒப்பற்ற, பைம்பொன்-பசும் பொன்மயமாகிய, மகமேரு ஆமோ-மகாமேருகிரியாகுமோ? பலன் இல்லா-பயனற்ற, பிள்ளைகள்-புத்திரர்கள், அநேகம் பிறந்தும் - பலராகப் பிறக்கினும், (அவர்கள்) விற்பனன் ஒருவனுக்கு-புத்தியுள்ள புத்திரனாகிய ஒருவனுக்கு, நிகரோ-ஒப்பாவரோ?

(வி - ரை.) வானத்தில் பல நக்ஷத்திரங்கள் கூடியிருப்பினும் சந்திரனைப்போல் பிரகாசிக்கமாட்டா. மரத்தில் நாட்டப்பட்ட துணிக்கொடிகள் காற்றினால் படபடவென்று சப்தித்தாலும் அவை தம்பட்ட முழக்கத்தைப்போல பெருந்தொனி செய்யமாட்டா. பன்றிக்குட்டிகள் பலகூடினாலும் அவற்றை எவரும் நிஷேதங்களென விலக்

குவர்; யானைக்கன்று ஒன்றுயிருப்பினும் அதனைக் கோவில்களிலும், அரச மாளிகைகளிலும் சேர்த்துக் கொண்டாடுவர். அநேகம் கொட்டி மலர்கள் தடாகத்தில் நிறைந்திருப்பினும் அவை அக்குளத்திற் கழகு செய்யமாட்டா; தாமரைமலர் ஒன்றிருப்பினும் மிக்க அழகைத் தரும். பல பெரிய மலைகள் கூடினாலும் அவை கல்லாயிருப்பதால் உலகத்திற் சிறந்து தோன்றமாட்டா; மேரு ஒன்று யிருப்பினும் பொன்மலையாதலின் எல்லோராலும் கொண்டாடப்படும். பயனற்ற பிள்ளைகள் பல ரிருப்பினும் அவர்கள் ஒழுங்கீனமான காரியங்களையே செய்து பெற்றோருக்கு அபகீர்த்தியை யுண்டாக்குவார்கள்; விவேகமுள்ள புத்திரன் ஒருவனிருந்தாலும் அவன் சிறந்த காரியங்களைச் செய்து தாய் தந்தையர்க்குப் புகழை யுண்டாக்குவன்; ஆதலின், இந்த ஒரு புத்திரனுக்குப் பயனற்ற பலபுத்திரர்கள் ஈடாக மாட்டார்கள்.

தரு என்பது தாருவென முதனீண்டது செய்யுள் விகாரத்தால். நெடுந்தூரம் தெரியும்பொருட்டுக் கொடிகளைக் கோபுரங்களிலும், மாளிகைகளிலும், மரங்களிலும் நாட்டுவது இயற்கை; ஆதலின், அவ்வழக்கம்பற்றி ஆசிரியர் இங்கே, 'தாருவிற்கொடி' என்றார். தம்பட்டம்-இடக்கை, உடுக்கை, உறுமி, தம்பட்டம், பம்பை, பேரிகை, மத்தளம், முரசு, முருடு, முழவு என்னும் வாச்சிய வகுப்புக்களுளொன்று; இந்தத் தம்பட்டத்திற்கு ஆனகம், திண்டி, திண்டிமம், படகம், பணவம் எனச் சில பெயர்களுண்டு. 'நிகரோ' என்பதற்குப் பின், 'ஆவரோ' என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. முன்னே 'ஒருகரத்தில்' என வந்த குறிப்பால், பின்னே, 'ஒன்றில்' என்பதற்கும் கரம் கூட்டிக்கொள்ளப்பட்டது. (௫௩)

அருமையறிதல்.

மணமாலை யருமையைப் புனைபவர்களேயறிவர்
மட்டிக் குரங் கறியுமோ

மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ
கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவ ளறிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
களைவான நாயறியு மோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையு மறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவ ரோ
மணவாள நீயென்று குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவு மழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மணவாளன் நீ என்று - மணத்திற்குரிய நாயகன் நீயே என்று மதித்து, குறவள்ளி - வேடுவரால் எடுத்து வளர்க்கப்பட்ட வள்ளிநாயகி, பின் தொடர - பின்னே தொடர்ந்துவர, வனம் ஊடு - காட்டினிடையே, தழுவும் - அவளைத் தழுவிக்கொண்ட, அழகா - அழகையுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—மணமாலை - வாசனை நிறைந்த பூமாலையின், அருமையை - மேன்மையை, புனைபவர்களே - சூடுகின்ற சுகவாசிகளே, அறிவர்-அறிவார்கள், மட்டிக்குரங்கு-மடத்தனமுள்ள குரங்கானது, அறியுமோ-உணருமோ, மக்களுடை-பிள்ளைகளுடைய, அருமையை - மேன்மையை, பெற்றவர்களே - அவர்களை ஈன்றவர்களே, அறிவர் - உணர்வார்கள், மலடி-பிள்ளைப்பெறாதவள், அறிவது உண்டோ-தெரிந்துகொள்வது உளதோ? (இல்லை); கணவருடை - நாயகருடைய, அருமையை - உயர்வை, கற்பான-பதிவிரதாதன்மையுள்ள, மாது அறிவள் - பெண்ணே உணர்வாள், கணிகை

யானவள் - பாத்தையானவள், அறிவளோ-உணர்வாளோ? கருதும்-உயர்வாக எண்ணப்படுகின்ற, ஒரு சந்தியின்-விரதத்தின், பாண்டம் என்பதை - பாத்திரமென்பதை, (விரதத்தை யனுஷ்டிக்கும் மனிதரே உணர்வர்) வரும்-திருடுதற்கு மறைவாகவருகின்ற, களவான-கள்ளமுள்ள, நாய் அறியுமோ-நாயானது உணருமோ? குணம்ஆன்-நற்குணம் பொருந்திய, கிளி அருமைதனை - தத்தையின் உயர்வை, வளர்த்தவர் அறிவர் - அதனைப் பிரியமாக வளர்த்தவர்களே உணர்வார்கள், கொடிய - கெட்ட செய்கையையுடைய, பூனையும் - பூனையானதும், அறியுமோ - உணருமோ? குலவு - உலகத்திற் பிரகாசிக்கின்ற, பெரியோர் - உயர்ந்தவர்களுடைய, அருமை - உயர்வை, நல்லோர்களே அறிவர் - நற்குண முடையவர்களே தெரிவார்கள், கொடுமூடர்தாம்-கொடுமைநிறைந்த அவிவேகிகள், அறிவரோ-உணர்வார்களோ (இல்லை).

(வி - ரை.) மலர்மணத்தின் இனிமையை யுணர்ந்து சுகிக்கக்கூடிய மனிதர்களே மணமாலையின் உயர்வையெண்ணி அதனை மிருதுவாகச் சூட்டி அதன் இன்பத்தை யனுபவிப்பார்கள்; குரங்குக் கையில் அந்தப்பூமாலை அகப்பட்டால் அதனை அது சிதைத்தெறியும். பிள்ளைகளைப் பெற்றுப் பக்ஷமாக வளர்த்து வழக்கப்பட்டவளுக்குத்தான் குழந்தையைக்கண்டால் பிரியமுண்டாகும்; மலடிக்குமனம் இளகாமல் கடினமாகவே யிருக்குமாதலால் அவள் பிள்ளைகள்மீது அன்பு செலுத்தமாட்டாள். பதிவிரதை கணவனையே தெய்வமாக நினைக்கக்கூடியவளாதலின், அவன்மீது மிக்கவிசுவாச முடையவளா யிருப்பாள்; பாத்தை பணத்தையே பெரிதாக நினைப்பவளாதலின், தன்னோடு சிநேகஞ்செய்பவர் எத்தகையரா யிருப்பினும் அவர்மீது விசுவாசம் வைக்கமாட்டாள். ஒரு சந்திப்பானையின் உயர்வை விரதமனுஷ்டிப்போரே அறிவாராதலின், அதனை எப்பொழுதும் டனிதமாக வைத்திருப்பர்; நாய்க்கு விரதத்தின் தன்மை தெரியாதாதலால் அதில் கூசாமல் வாய்வைக்கும். நன்றாகப்பேசுங் குணமுடைய கிளியின்

அருமையை வளர்த்தவர்களே அறிவார்களாதலின், அவர்கள்தாம் அதன்மீது பக்ஷமுடையவரா யிருப்பார்; பூனைக்கு அதன் மாமிச மொன்றே விருப்பமாதலின் அதனைக் கொல்லவே துணியும். பெரியோரை நல்லோரே கொண்டாடுவர்; மூடருக்குப் பெரியோரியல்பு கெட்டதாகவே விளங்கும்; அந்த மூடர்கள் தங்களைப்போன்ற மூடர்களையே கொண்டாடுவர்.

கணவர்-சேர்க்கையானவர்; கணம்-கூட்டம்; அதனையுடையார் கணவர். ஒருசந்தி - ஒருவேளை; இஃதிருமடியாகுபெயராய் ஒரே வேளையிற் செய்யப்படும் போசனத்தை யுணர்த்த அப்போசனம் விரதத்தை யுணர்த்தும். 'ஒருசந்தியின் பாண்டம்' என்பதற்குப் பின், 'விரதத்தை யனுஷ்டிக்கும் மனிதரே யுணர்வர்' என்னுஞ் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன. மூடர்-அஞ்ஞானத்தால் மூடப்பட்டவர். மணவாளன்-கலியாணத்திற்குரிய புருஷன். 'வனமூடு' என்பதில் ஊடு-ஏழாம்வேற்றுமைச் சொல்லுருபு. (௯௪)

தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக் கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவிபதில் வண்டிருக் கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக் கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக் கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக் கும்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்

வடுவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
　　வள்ளிக் குகந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வடுவையும்-மாம்பிஞ்சியும், கடுவையும் - விஷத்தையும், பொருவும்-நிகர்த்திருக்கின்ற, இரு கண்ணி-இரண்டு கண்களையுடையவளாகிய, குறவள்ளிக்கு-வேடுவரால் எடுத்து வளர்க்கப்பட்ட வள்ளிநாயகிக்கு, உகந்த - பொருந்திய, கணவா - நாயகனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, மடுவினில்-தடாகத்தில், கஞ்சமலர் உண்டு-எவர்க்கும் பயன்படத் தக்கதாய்த் தாமரைப் புஷ்பமுளது, (அங்ஙனமிருப்பினும், அதனிடத்தே) ஒருவர் அணுகாமல்-ஒருவரும் நெருங்காதபடி, (மனிதரைக் கொல்லுகின்ற) வன்முதலை-வலிமை பொருந்திய முதலையானது, அங்கு இருக்கும்-அவ்விடத்திற் குடிகொண்டிருக்கும்; மலையினில்-கிரியின்மேலே, தேன் உண்டு-(எவரும் பருகத்தக்க சுவைபொருந்திய) தேனுந்து உளது, (அவ்வாறிருப்பினும், அதன் சமீபத்தில்) ஒருவர்-ஒரு மனிதரும், சென்று கிட்டாமல்-போய் நெருங்காதபடி, அதில்-அத்தேனிடத்தே, வண்டு-(நெருங்குவோரைக் கொட்டிவருத்துகின்ற) வண்டானது, மருவியிருக்கும்-சேர்ந்திருக்கும்; நெடுமை திகழ்-நீளமாகப் பிரகாசிக்கின்ற, தாழைமலர் உண்டு - (எவரும் விரும்பிச் சூடிக்கொள்ளத்தக்க மணம் பொருந்திய) தாழை புஷ்பமுளது, (அங்ஙனமிருப்பினும் அதில்) ஒருவர் அணுகாமல்-ஒருவரும் நெருங்காதபடி, நீங்காத-விலகாத, முள் இருக்கும்-முள்ளானது நிறைந்திருக்கும்; (எவரும் வாசனையையும் சுகத்தையும் அடையும்படி உலகத்தில்) நீடு-நீண்ட, பல சந்தன விருக்ஷம் உண்டு-பல சந்தன மரங்களுள்ளன, (அப்படியிருப்பினும் அவற்றின்பால்) அணுகாது-எவரும் நெருங்காதப்டி, நீள் - நீண்ட, அரவு-சர்ப்பங்கள், சூழ்ந்திருக்கும் - நிறைந்திருக்கும்; குடி மல்கி-குடித்தனமானது பெருகி, வாழ்கின்ற-

பலர்க்கும் உபகாரமான மனிதர் வாழ்ந்துவருகின்ற, வீட்டினில்-இல்லத்திலே, (அவர்கள் அவ்வாறு உபகாரிகளாயிருந்தும்) செல்லாது-(யாசகர், பரதேசிகள் முதலியவர்கள்) செல்லாதபடி, அங்கு-அவ்விடத்திலே, குரை நாய்கள்-குலைக்கின்ற சுணங்குகள், இருக்கும்-குடிகொண்டிருக்கும்; (உலகத்தில் வறுமைப்பட்டுச் செல்லும் யாசகர்க்கு) கொடுக்கும்-வேண்டியவற்றை அளிக்கின்ற, தியாகி உண்டு-கொடையாளன் உளன், (அங்ஙனம் அக்கொடையாளன் இருப்பினும், அவன் யாசகர்க்குக் கொடாதபடி) இடையூறு பேசும் - தடையான வார்த்தைகளைக்கூறி அவ்வுபகாரத்தைக் கெடுக்கின்ற, கொடும் பாவி-கொடிய பாவியும், உண்டு-அவனிடத்தே உளன்.

(வி - ரை) தாமரைமலரிருக்குந் தடாகத்திலே முதலையும் குடியிருந்துகொண்டு, அதனிடத்தே ஒருவரையும் நெருங்கவொட்டாது தீங்கு புரியும். மலையிலிருக்கும் தேன் கூட்டில் வண்டுக்கூட்டங்கள் தங்கியிருந்து அதனிடம் நெருங்குவோரைக் கொட்டி உபத்திரவம்புரியும். தாழைமலர் இனிமையான வாசனையுடையதாயிருப்பினும் அதனிடத்தே கூரிய முட்கள் தங்கி, பறிக்க நெருங்குவோர்க்கு உபத்திரவத்தை யுண்டாக்கும். சந்தனவிருக்ஷம் வாசனையும் குளிர்ச்சியு முடையதாயிருப்பினும், அதனிடத்தே நெருங்குவோர் அஞ்சும்படி நாகங் குடியிருக்கும். தயாளமுள்ள மனிதர் வாசஞ்செய்யும் வீட்டின் வாயிலிலே நாய் காவலிருந்து குலைத்து யாசகம் பெற வருவார்க்கு உபத்திரவத்தை யுண்டாக்கும். இவைகள்போல கொடையாளரிருக்குமிடத்தே சில பாவிகளும் சேர்ந்திருந்துகொண்டு தாங்கள் மட்டும் அவரிடம் தந்திரமாக வாய்ப்பகட்டால் வேண்டுவன பெற்று, மற்றையர்க்குக் கொடுக்குங் கொடையைத் தடுத்துக் கேடுபுரிவர்; இவ்வாறே இக்காலத்திலும், சில பாவிகள், தயாளமுள்ள பிரபுக்களிடம் சார்ந்து எவ்வகை உபாயத்தினாலேனும் அவர்கள் மனத்தை வசப்படுத்தி அவர்களோடு சிநேகங்கொண்டு, தாங்கள் கல்வி நிரம்பாதவர்களாயிருப்பினும் அவிவேகிகளாயிருப்பி

னும், மகா பண்டிதர்போலவும் புத்திமான்கள்போலவும் நடித்து, வாய்ப்பகட்டால் சமஸ்தான வித்வான்கள்போல இருந்துகொண்டு, அங்கே வரும் கல்வியாளருக்கும் விவேகிகட்கும் மதிப்பில்லாமற் போகும்படி செய்து, பிரபுக்கள் கொடுக்கும் கொடையைத் தடுத்துக் கேவலமான ஜீவனஞ் செய்துகொண்டிருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இவர்க்குக் கிடைப்பது நரகமேயாம். இத்தகையரை நிந்திக்கக்கூடாதெனவும் சில சுயநலப்பிரியர்கள் கூறிக்கொண்டு திரிகின்றனர்; இவர் இங்ஙனங் கூறுதற்குக் காரணம், அந்தத் தரும விரோதிகளையும் தங்கள் வசப்படுத்தி அவர்கள் உதவிகொண்டு தாங்கள் நலம்பெற்றுக்கொள்ளவேண்டுமென்னும் நோக்கமேயாம்; இந்தப் புண்ணியாத்துமாக்கள் அவர்களினும் மேற்பட்டவராவர்.

இப்பாடல் எடுத்துக்காட்டுவமையாக அமைந்தது. இவைபோல என்னும் உவமவுருபுச்சொல் தொக்கி நின்றது. கஞ்சம் - நீரினில் ஜனிப்பது; இது முதலாகுபெயர். இடையூறு - நடுவிற் செய்யும் கேடு; இடை-நடு, ஊறு-கேடுதி. (௫௬)

வேசையர் இழிவு.

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில்பொது வம்பல முடுத்ததுகில்
பொருவில்சூ தாடு சாலை
மேவலா கியகொங்கை கைபாடு திரள்பந்து
விழிமனங் கவர் தூண்டி லாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு துடைசர்ப்ப மாம்
ஆவலா கியவல்கு லோதண்டம் வாங்குமிட
மதிகபட மாமனது கல்

லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்க லாமோ
மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலா யுதா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மா வடிவுகொண்டு - மாமரத்தின் வடிவத்தைத் தரித்து, ஒளித்த - மறைந்த, ஒரு - ஒப்பற்ற, சூரனை - சூரபத்மனை, வதைத்த - கொன்ற, வடி - கூர்மைதங்கிய, வேலாயுதா - வேற்படையை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பூவில்-இந்த வுலகத்தில், வேசிகள் வீடு-தாசிகளுடைய இல்லமானது, பெரும் - பெரிய, சந்தைப்பேட்டை-சந்தைகூடுமிடமாம்; புனை - அலங்கரிக்கப்பட்ட, மலர்ப்படுக்கை - புஷ்பசயனத்தையுடைய, வீடு-பள்ளியறையானது, பொன் வாசல்-(கண்டவர்களெல்லாம் தட்டின்றிப் பொன்னையெடுத்துக் கொள்ளும்படி திறந்து வைக்கப்பட்டிருக்கும்) பொன்னறையின் வாசலாம்; கட்டில் - கட்டிலானது, பொது - எல்லோருக்கும் பாகமாகிய, அம்பலம் - பலஜனங்கள் கூடும் சபையிடமாம்; உடுத்த-அவர்கள் அரையிலணிந்திருக்கின்ற, துகில்-ஆடையானது, பொருவில்-ஒப்பில்லாத, சூதாடு சாலை - சூதாட்டம் புரிகின்ற கூடமாம்; மேவல் ஆகிய - பலரும் விரும்பிச் சேருதலையுடைய, கொங்கை - அவர்களுடைய தனபாரங்கள், கை ஆடு-பலரும் கையிலெடுத்தாடுகின்ற, திரள்-உருண்டை வடிவமான, பந்து-பந்தாம்; விழி - கண்கள், மனம்-பார்ப்பவர்களுடைய மனதை, கவர் - அபகரித்துக் கொள்கின்ற, தூண்டிலாம் - தூண்டில்முள்ளாம்; மிக்கமொழி-நடிப்பில் மிகுந்த வார்த்தைகள், நீர்மேல் எழுத்து-ஜலத்தின்மேல் எழுதும் எழுத்துக்களாம்; அதிகம்-நடிப்பில் அளவற்றதாகிய, மோகம்-காதலானது, ஒரு-ஒப்பற்ற, மின்னல்-மேகத்திற்றோன்றும் மின்னலாம்; இரு தொடை-இரண்டு தொடை

கள், சர்ப்பமாம்-உயிரைக்கொல்லும் விஷத்தையுடைய நாகமாம்; ஆவல் ஆகிய-விருப்பம் நிறைந்த, அல்குலோ-மர்மஸ்தானமோ, தண்டம் வாங்கும் இடம்-அபராதம் வாங்குகின்ற தண்டசாலையாம்; அதிகபடமாம்-மிக்க வஞ்சனையாகிய, மனது- உள்ளமானது, கல்-கல்லாகும்; அமிர்தம் - நீரூறுதலையுடைய, வாய் இதழ் - வாயும் அதரமும், சித்திரசாலை - சித்திரமாளிகையிலே, (பலரும் எச்சில் துப்பும்படி வைக்கப்பட்ட), எச்சிற் குழி - எச்சில் நிறைந்த பள்ளமாம்; (ஆதலின், இத்தகைய அருவருப்பான அங்கங்களையும், செய்கைகளையும், துணைக்கருவிகளையும், அந்தக்கரணங்களையுமுடைய) அவர்க்கு-அந்த வேசையர்மீது, ஆசை வைக்கலாமோ-அறிவுடையோர் விருப்பம் கொள்ளலாமோ (கூடாது).

(வி-ரை.) சந்தைகூடும் பேட்டையில் சகல வகுப்பாரும் தட்டுத் தடையின்றிப் புகுந்து சரக்குகளை விற்றலும் கொள்ளலும் செய்வார்கள்; இதுபோல் தாசிவீட்டில் பலரும் தடையின்றிப் புகுந்து பணத்தைக் கொடுத்து அவள் வனப்பை வாங்கிச் செல்வார்களாதலின் அந்தத் தாசிவீடு சந்தைப்பேட்டைக்கு நிகராகும். திறந்துவைக்கப்பட்ட பொன்னறையின் வாசலானது எவரும் தடையின்றி உள்ளே நுழைந்து பொன்னை யெடுத்துச் செல்வதற்கு அனுகூலமாக விருக்கும்; இதுபோல தாசியின் படுக்கைவீடானது சகலரும் தடையின்றி நுழைந்து அவள் நலத்தை யனுபவித்தற் குபயோகமாக விருக்கும்; ஆதலின், அவள் படுக்கை யறையானது பொன்னறையின் வாயிலுக்கு நிகராம். கிராமத்தார் கூடும் அம்பலமானது எல்லோருக்கும் பொதுவா யிருத்தல்போல, பரத்தையின் கட்டிலும் எவ்வகுப்பாருமிருத்தற்குச் சொந்தமா யிருத்தலால் அஃதம்பலத்துக்கு நிகராம். சூதாடுசாலையில் ஒவ்வொருவரும் அதிகலாபத்தைப் பெறலாமென்று கருதி மேலும் மேலும் கணக்கற்ற பொருள்களைப் பந்தயம்வைத்தாடி எல்லாவற்றையும் தோற்று வறிஞராவர்; தாசியின் புடவையானது அவள் விகாரரூபியா யிருந்தாலும் தான் சேர்ந்திருப்பதால் அவளுக்கு,

ஒருவகையான போலி அழகைக் கொடுத்துக் காமுகரை மயக்குவித்து அவர்கள் ஒவ்வொருவரும் அவளின் அபிமானத்தை அதிகமாகப் பெறவேண்டு மென்னும் விருப்பத்தால் தோதிட்டுப் பொருளை விரயஞ்செய்து கெடுதற்கேதுவா யிருக்கின்றது; ஆதலின், தாசியின் புடவை சூதாடுசாலைக்கு நிகராம். பந்தை பலரும் கையிலெடுத்தாடுவர்; இதுபோல் தாசிகளுடைய நகிலும் பலர்கையிலும் சாரும் தகுதி பெற்றதா யிருக்கின்றது; ஆதலின், அது பந்துக்கு நிகராம். தூண்டிலானது, மீனுக்கு ஆகாரத்தைக் காட்டி அதனைக் கவர்ந்துகொள்ளல் போல தாசிகளுடைய கண்களும் ஆடவர்க்கு நலஞ் செய்வதுபோற் றோன்றி விரைவில் அவர்களின் மனத்தைக் கவர்ந்து அவர்களை அடியோடு கெடுத்துவிடு மாதலின் அவை தூண்டிலுக் கொப்பாம். நீரின்மேல் எழுதும் எழுத்தானது எழுதும்போதே ரூபமில்லாமல் மறைந்துவருதல்போல தாசிகளுடைய பசப்பு வார்த்தைகளும் வாயிலிருந்து வெளிப்படும்போதே உறுதியற்றனவாய் மறைந்துபோகும். மின்னலானது தோன்றிய அப்பொழுதே மறைந்துவிடுதல்போல தாசிகள் நடிப்பாகக் காட்டுங் காதலும் நிலையற்றதாய் உடனே மறையும். சர்ப்பம் நெருங்கியவரைக் கடித்துக் கொல்லுதல்போல தாசிகளுடைய ஊருகளின் வடிவமும் தன்னை விரும்பிய தூர்த்தரை நோய்முதலிய துன்பங்களுக் குள்ளாக்கி வதைக்குமாதலின் அவை சர்ப்பத்துக்கு நிகராம். தண்டசாலையானது மனிதரை அடித்து வருத்திப் பொருள்பறிக்கும் ஸ்தானமாகும்; அதுபோல, தாசிகளின் நிதம்ப ஸ்தானமும் ஆடவரைப் பலவேதனைக் குள்ளாக்கிக் கேட்டவற்றையெல்லாம் பயத்துடன் கொடுக்கச்செய்யும்; அதனால் அது தண்டசாலைக்கு நிகராம். தாசிகளுடைய மனமானது, எவ்வளவோ பொருள்களை அவளுக்குக் கொடுத்துக் கெட்டவர்கள்மீதும் இரக்கமுள்ளதாயிராது, ஆதலின், அது கல்லைப்போன்ற கடினமுடையதாம். சித்திரசாலையில் ஜனங்கள் கண்டவிடமெல்லாம் எச்சில் துப்பி அதைக் கெடுத்துவிடாமல் ஓரிடத்தில் துப்பும்படி எச்சிற்குழியொ

ன்று அமைக்கப்பட்டிருக்கும்; அதில் பலரும் எச்சில் துப்பி நிரப்பி விடுவார்கள்; தாசிகள் வாயானது பல ஜாதியாருடைய வாயும் படு தற்கு இடமாயிருத்தலால், அது அந்த எச்சிற்குழிக்கு நிகரான அருவருப்புடையதாம். இவைகளையெல்லாம் ஆராய்ந்து தாசிகள்மீது விருப்பம் வைத்தலை நீக்கவேண்டுமென்பது இதன் கருத்து. (கூசு)

கலிகாலக் கொடுமை.

தாய்புத்தி சொன்னன் மறுத்திடுங் காலமுயர்
 தந்தையைச் சீறு காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
 சற்றுமெண் ணாத காலம்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
 புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
 பெரியர்சொற்கொ ளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
 சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை
 செப்புவோர்க் குதவு காலம்
வாய்மதம் பேசிவிடு மனியாய காரர்க்கு
 வாய்த்தகலி கால மையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, ஐயா-ஐயனே! வாய்மதம் பேசிவிடும்-வாய்க் கொழுப்பான கொடுஞ் சொற்களைப் பேசி நியாயத்தைக் கைவிடு கின்ற, அனியாயகாரர்க்கு - நியாய மற்றவர்க்கு, வாய்த்த-பொருந் திய, கலிகாலம்-இக்கலிகாலமானது, தாய் புத்தி சொன்னல்-பெற்ற

அன்னை புத்திகூறுவாளேயானால், (பிள்ளைகள்) மறுத்திடும் காலம்-தடைசெய்கின்ற காலம்; உயர்-மேலான, தந்தையை - தகப்பனை, சீறு காலம்-புத்தி கூறும்போது கோபிக்கின்ற காலம்; சற்குருவை-நல்லாசிரியனை, (மாணுக்கர்) நிந்தைசெய் காலம்-பழித்துப் பரிகசிக்கின்ற காலம்; மெய்க் கடவுளை-சத்தியமான தெய்வத்தை, சற்றும்-சிறிதேனும், எண்ணுத காலம்-நினையாத காலம்; பேய்-பைசாசங்களை, தெய்வம் என்று-உண்மைத் தெய்வமென்று கருதி, உபசரித்திடும் காலம்-பூசனை புரிந்து உபசாரஞ் செய்கின்ற காலம்; புரட்டருக்கு-பொய்யருக்கே, ஏற்ற காலம்-மேன்மை யடைவதற்குப் பொருந்திய காலம்; பெண்டாட்டி - மனையாள், வையினும் - புருஷனைத் திட்டினலும், (அவன்) கேட்கின்ற காலம்-அவளுக்கடங்கி அப்பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்ற காலம்; நல்-நல்ல, பெரியர் சொல்-உயர்ந்த அறிவாளிகளுடைய புத்தியான வார்த்தைகளை, கொள்ளாத காலம்-உலகோர் ஏற்றுக்கொள்ளாத காலம்; பெரியவன்-அறிவாலுயர்ந்தவன், தேய்வுடன் - குறைவுடனே, சிறுமை உறு காலம் - தரித்திரத்தை அடைகின்ற காலம்; மிகு-அறியாமை மிகுந்த, சிறியவன் - அற்பன், பெருகு காலம்-செல்வத்துடன் வளர்ந்தோங்கு காலம்; செருவில் - போரில், விட்டு ஓடினேர்-தலைவனைத் தனியே விட்டுத் தம்முயிரைக் காப்பாற்றும்பொருட்டுப் பயந்தோடிய பேடிகள், (பின்னர் வாய்ப்பகட்டால்) வரிசை பெறு காலம்-அத்தலைவனிடம் சன்மானத்தை அடையுங்காலம்; வசை செப்புவோர்க்கு - ஒருவரைப்பற்றி நிந்தையான மொழிகளைக் கூறுவோர்க்கு, (அம்மொழிகளை ஏற்றுக்கொள்வோர்) உதவு காலம்-உபகாரஞ் செய்கின்ற காலம்.

(வி - ரை.) இக்காலத்தில் தாய் தந்தையர் தேடிவைத்த பொருளையே செலவு செய்துகொண்டு அவர்கள் சொல்லும் புத்தியைக் கேளாமல் அவர்களையே திட்டி யுதைக்கின்ற பிள்ளைகள் பெரும்பாலும் மிகுந்திருப்பதை எங்குங் காணலாம்; இந்த மூடப்

பிள்ளைகள், தங்கள் வாலிப கர்வத்தினாலும், தங்களைத் துரைகளென நினைத்துக்கொள்வதாலும், தாய் தந்தைகள் தங்களைப் பெற்று வளர்த்த விஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசையைச் சிறிதும் கவனிப்பதில்லை. பெரும்பான்மையான மனிதர்கள், உயர்ந்த வித்தைகளை ஓர் ஆசிரியனிடம் கற்றுக்கொண்டாலும் அவனைச் சிறிதும் மதியாமலும், மரியாதையின்றி அவனைத் தன் வீடுதேடி வரும்படி செய்தும், அவனிடம் வித்தை கற்றுக்கொண்டதை வெளியிற் சொல்லாமலும், தானே கல்வி கற்றுக் கொண்டதாகச் சொல்லியும், அவனைப் பலவாறு நிந்தித்துத் தாங்கள் உயர்ந்த வித்வான்களைப்போல நடித்துத் திரிவதை எங்குங் காணலாம்; இவ்வழக்கம் இக்காலத்து மாணவர்களிடம் மிகுதியும் உண்டு; இதனால் இவர்கள் விருத்தியடையாமற்போகின்றதும் சகஜமாயிருக்கின்றது. சில பேதைகள், விவஸ்தையின்றிச் சாக்கடைக் கல்லையும் ஒரு தேவதையாக நினைத்துப் பூஜிப்பதை பிரத்தியக்ஷமாகக் காணலாம். பொய் கூறுவோன் காரியசித்தி பெறுவதையும், மெய்யுடையான் ஒரு வழியினும் பயனின்றி வறுமைப்படுவதையும் பிரபுக்களின் சமஸ்தானங்களில் நிச்சயமாகக் காணலாம். பெண்வழிச் சேறல் கூடாதெனச் சாஸ்திரங்கள் வற்புறுத்திக் கூறியிருந்தும், சில பேதைகள் தாலுணர்வின்றி அந்தப் பெண்களையே பெரும் பாக்கியமாகக் கருதி அவர்கள் மனங்கோணாமல், அவர்கள் செய்வதை யெல்லாம் பொறுத்தும், பேசும் தூஷணை வார்த்தைகளை யெல்லாம் சகிப்போடு கேட்டும், அவர்கள் மன நோக்கங்களைத் தடையின்றி நிறைவேற்றியும், அவர்களுக்குப் புடவைகள் தோய்த்துப் போட்டும், குற்றேவல் புரிந்தும் பேடிகளாகத் திரிவதைப் பெரும்பான்மையும் நகரங்களிற் காணலாம்; இவர், மனிதரிற் பதராவர், பெரியோர் சொல்லை அவமதித்தலும் சிறியோர் சொல்லை உயர்வாகப் பாவித்தலும் நடந்து வருகின்றன வென்பதை, இக்காலத்தில் கல்விகற்போரும், நாடகம் முதலிய கல்வி சம்பந்தமான தொழில்களை நடத்துவோ

ரும், உயர்ந்த வித்துவான்களுடைய பாடல்களைக் கொள்ளாமல் தள்ளி அறிவுடையோர் கேட்டு அருவருக்கத்தக்க சிறியோர் வழுப் பாடல்களை மேன்மையாகக் கொண்டும் வருதல்மூலம் தெரிந்து கொள்ளலாம். அறிவுடையோர் உவக்கத்தக்க உண்மைத் தொழிலுடைய பெரியோர் வெளிக்கு வாராமல் ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடக்க எவ்வித சிறந்த தொழிலுமில்லாத சிறியர் பலராலும் கொண்டாடப்படுகின்றன ரென்பதை, இக்காலத்தில், சில போலி மனிதர்கள் வாக்கு சாதுரியத்தால் பொய்த் தொழில்களை மெய்த்தொழில்கள் போலக் காட்டிப் பலபாமர ஜனங்களை யேமாற்றிச் செல்வமும் புகழும் பெற்று வாழ்வதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்; போலிப்பட்டம் பெற்றுப் புலவர்களெனத் திரியும் ஜாலக்கார ரிடத்திலேயே இத்தொழில் மிகுதியும் உண்டு. ஒருவனைப் போரில் கைவிட்டோடிய பின், பின்னர் அவனிடம் வந்து, தான் பெரிய ஒரு காரியத்தைச் சாதித்தற்பொருட்டு அவ்வாறு நீங்கிச் சென்றதாகச் சமர்த்தான வார்த்தைகளைப் பேசினால், அவன் ஏமாந்து அந்த மோசக்காரனுக்கு வேண்டுவன நல்குவான்; உண்மையாக ஒருவன் யுத்தத்தில் சிரமத்துடன் பாடுபட்டு வந்தாலும் அவனுக்கு வாக்கு சாதுரிய மில்லாவிட்டால் ஒன்றுங் கொடுக்கமாட்டான்; இவ்விநோதத்தை இக்காலத்திற் சிற்சில சம்ஸ்தானங்களில் பிரத்தியக்ஷமாகக் காணலாம். சில பிரபுக்கள் இக் காலத்தில் தங்களை நிந்திப்போர்க்கும், வாய்மதங்கொண்டு திட்டுவோர்க்கும் பயந்து வேண்டுவன கொடுப்பதையும், புகழ்வோர்க்கு ஒன்றும் நல்காதிருத்தலையும் அநேக விடங்களிற் காணலாம்; இவையனைத்தும் அடாத செய்கைகளாயினும் கலிகாலத்தின் கொடுமையால் நடக்கின்றன. (கஎ)

அவரவர்க்குரியவை.

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாங்

கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினஞ்
சிந்தைசெய் பவண்மனைவி யாஞ்
சிநேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோத ரன்
தொல்வள மிருந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவ னுஞ்
சொன்னநெறி தவறுமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன்
வல்விரக மிஞ்சுசுர குஞ்சரி யுடன்குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வல் விரகம் - உன்மீதிலே வலிமையான காதலானது, மிஞ்சி - அதிகரிக்கின்ற, சுரம் - காட்டிலிருந்து நின்னைக் கணவனாகப் பெறவேண்டுமென்று முன்னே தவஞ்செய்த, குஞ்சரியுடன் - தெய்வயானையுடனே, குறவர் - வேடுவரால் வளர்க்கப்பட்ட, வஞ்சியை - வஞ்சிக்கொடிபோன்ற வள்ளிநாயகியையும், மணந்த - கலியாணஞ் செய்துகொண்ட, கணவா - அவர்களின் நாயகனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, (தன் புத்திரனை) கல்வியொடு - வித்தையுடனே, கனம் உற-உயர்வு பொருந்தும்படி, சபையில் - பலர்கூடிய அவைக்களத்திலே, மேல் வட்டமா - மகத்துவமாக, காணவைப்போன் - இருந்து தோற்றும்படி வைப்பவனே, பிதாவாம் - அவனுக்குத் தந்தையாவன்; கற்று உணர்ந்து - சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தேறி, தனது புகழால் - தன்னுடைய கீர்த்தியினாலே, பிதாவை-தன்னைப்பெற்ற தகப்பனை, பிரகாசம் செய்வோன் - பிரகாசமாகச் செய்பவனே, புத்திரன் -

ஒருவனுக்கு நற்புத்திரனாவான்; செல்வம் மிகு-தன்மீது அன்பாகிய செல்வமே மிகுந்திருக்கின்ற, கணவனே - நாயகனையே, தெய்வம் என்று - தனக்கு வழிபடுகடவுளென்றெண்ணி, அனுதினம் - நாள் தோறும், சிந்தை செய்பவள் - மனதிற் றியானிப்பவளே, மனைவி ஆம் - ஒருவனுக்குத் தக்க மனைவியாவள்; சிநேகிதன்போலவே - உறவினன்போலவே, அன்பு வைத்து-தன்னுடன் பிறந்தவன்மீது மனப்பற்றுதல் வைத்து, (அவனிடம்)உண்மை மொழி-சத்தியமான வார்த்தைகளையே, செப்பும் அவனே - சொல்லுகின்றவனே, சோதரன் - அவனுக்குரிய சகோதரனவன்; தொல் - பழமையான, வளம் இருந்த - வளப்பம் தங்கியிருக்கின்ற, நூல் - சாஸ்திரங்களின், கலை தெரிந்து-எல்லாகண்டு கற்றுத்தேறி,உறுதி மொழி-மாணுக்கருக்குத் திடமானவார்த்தைகளை, சொல்லும் அவனே-கூறிப் போதிப்பவனே, குறவனும்-நல்லாசிரியனுவான்; சொன்ன-ஆசிரியன் கூறிய, நெறி - நன்மார்க்கங்களினின்றும், தவருமல்-பிசகாமல், வழிபாடு செய்து வரும் - அவனுக்கு வணக்கஞ்செய்து நற்கல்விகளைக் கற்று வருகின்ற, தூயனே - பரிசுத்தனே, இனிய-இனிமையாகிய, சீஷன்-மாணுக்கனுவன்.

(வி - ரை.) பிள்ளை கல்விகற்று அறிவுடையனு யிருந்தால் மாத்திரம் உலகத்திற்குப் பிரயோசன முள்ளவனுவ னுதலின், தந்தையா யிருப்பவன் அவனைக் கல்வியில் முதன்மை பெற்றவனுகச் செய்யவேண்டும்; "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச்செயல்," என்னுந் திருக்குறளும் இதனை வற்புறுத்தும். புத்திரனும் கல்வியிற் பெரியனுய்த் தந்தைக்குப் புகழை உண்டாக்கினுல் மாத்திரமே பயனுடையவனுவன்; "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை, என்னேற்றுன் கொல்லெனுஞ் சொல்," என்பது திருக்குறள். மனைவிக்குயர்வு தன் கணவனையே தெய்வமெனச் சிந்தித்தலாம்; "தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை," என்பது திருக்குறள். சகோதரன் சிநே

தனைப்போன்று அன்புடையனும், உண்மை கூறுவோனும், வஞ்சனையற்றவனுயு மிருத்தல்வேண்டும்; உடற்பிறப்புக்கு வஞ்சனை செய்வோன் சகோதரனுகமாட்டான். ஆசிரியனுக்கு நூலுணர்ச்சியும், சொல்வன்மையும் வேண்டும்; கல்வி நிரம்புதலில்லாமல் புலவரைப் போன்று நடித்துக் கல்வி சம்பந்தமான ஒவ்வொரு தொழிலிலும் உபாத்தியார்களெனத் திரிவோர் ஆசிரியராகார். ஆசிரியனுக்குத் தொண்டு புரியும் மாணுக்கனே சிறந்தவனுவான்; குரு விசுவாசமில்லாத மாணுக்கன் கல்வியிற் றேர்ச்சியுருன்.

'சபையின்மேல் வட்டமாக், காணவைப்போன்' என்பதற்கு 'சபையில் ஜனங்கள் வட்டமாகக் கூடிப் பார்க்கும்படி செய்வோன்' எனப் பொருள் கூறலுமொன்று. 'பிரகாசஞ் செய்வோன்' என்பதில் 'ஆக' என்னுஞ் சொல் தொக்கி நின்றது. (௫அ)

சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக் குந்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தாசரது
தேகத்தின் மேலிருக் கும்
போற்றியிடு பூச்சியின் வாயினுல் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்கு மாஞ்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றோ

மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) (சம்பந்தரா யவதரித்தபோது) விபூதியால் - திருநீற்றினாலே, சுரத்தினை - பாண்டியனுக்கு வந்த காய்ச்சல் நோயை, மாற்றி - நீங்கும்படிசெய்து, உடல்-அவன்தேகத்தை, குளிரவைத்த-குளிர்ச்சி யடையும்படி செய்த, மெய்ஞ்ஞானம் - உண்மை யறிவையுடைய, முதலே - தலைவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சேற்றில் - சேதகத்திலே, பிறந்திடும் - உற்பத்தியாகின்ற, கமலமலர் - தாமரை புஷ்பமானது, கடவுளது-தெய்வத்தின், திரு முடியின்மேல்-அழகிய மகுடத்தின்மீது, இருக்கும் - தங்கியிருக்கும்; திகழ் - பிரகாசிக்கின்ற, சிப்பி - இப்பியின், உடலில் - தேகத்தில், சனித்த - உற்பவித்த, முத்து - தாளமானது, அரசரது - மன்னர்களுடைய, தேகத்தின்மேல் - உடலின் மீது, இருக்கும் - ஆபரணங்களாகித் தங்கியிருக்கும்; போற்றியிடு - பாதுகாக்கப்படுகின்ற, பூச்சியின் - பட்டுப்பூச்சியினுடைய, வாயின் நூல் - வாயிலிருந்துண்டாகின்ற நூலானது, பட்டென்று - பட்டென்று எல்லோரா லுங் கொண்டாடப்பட்டு, பூசைக்கு - தேவபூஜை முதலியவற்றிற்கு, நேசம் ஆகும்-பொருத்தமானபொருளாகும்; புகல் அரிய-சொல்லுதற்கரிதாகிய, வண்டு-வண்டுகளின், எச்சிலான-உச்சிஷ்டமான, தேன்-மதுவானது, தேவர் கொள்-கடவுளர்கள் பிரியமாகக் கொள்கின்ற, புனிதம் - பரிசுத்தமாகிய, அபிடேகம் ஆகும்-திருமுழுக்கு வஸ்துவாகும்; சாற்றிய - இழிவாகச் சொல்லப்பட்ட, புலாலொடு - மாமிசத்துடனே, பிறந்த - உண்டாகிய, கோரோசனை - கோரோசனையும், சவாது - சவ்வாதும், புழுகு - புழுகும், அனைவர்க்கும் - எல்லாவகுப்பார்க்கும், ஆம் - மருந்துகளாகவும் வாசனைத் திரவியங்களாகவும் உபயோகமாம்; (இவைபோல) கற்றோர்கள் - நூல்

களைக் கற்றுணர்ந்தவர்கள், சாதியீனத்தில் - ஈனஜாதியிலே, பிறக்கினும் - பிறந்தாலும், சபையில் - பலர்கூடிய அவைக்களத்திலே மேல்வட்டம் - மகத்துவமுடையவராவர்.

(வி - ரை.) தாமரை மலரானது தாழ்மையான சேற்றிலே உற்பத்தியானாலும், அதனை மனிதர் கடவுளர் முடிமீதும் சூட்டிக் கொண்டாடுவர்; இது பிறப்பால் தாழ்ந்ததாயினும் குணத்தால் சிறப்புற்றது. முத்தானது புலால் நாற்றத்தை சிப்பியிற் றோன்றினும் அதன்குண விசேஷத்தாலே அரசரும் அதனை ஆபரணமாகச் செய்தணிவர். கேவலமான ஒருவகைப் பூச்சியின் வாயிலிருந்து பட்டானது உண்டானாலும் அதன் குணத்தின் உயர்வாலே அது பட்டு முதலியவைகளாக நெய்யப்பட்டு தேவபூஜை முதலியவற்றிற்கு உபயோகிக்கப்படுகின்றது. வண்டுகள் வாயினால் எச்சில் பண்ணிப் பல தாழ்ந்த விடங்களிலிருந்தும் கொண்டுவந்து சேர்க்கப்படுகின்ற தேனானது பிறப்பில் தாழ்ந்ததாயினும் சுவையால் அபிஷேகம் முதலியவற்றிற்கும் உபயோகப்படுகின்றது. பசுவின் மாமிசத்திலே உற்பத்தியாகும் கோரோசனையும், ஜவாதுபூனையின் பீஜத்திலுண்டாகும் ஜவாதும், புழுகுபூனையின் பீஜத்திலுண்டாகும் புழுகும் பிறப்பால் தாழ்ந்தவைகளாயினும் குணத்தால் எல்லோருக்கும் அவுடதங்களாகவும் வாசனை வஸ்துக்களாகவும் உபயோகப்படுகின்றன. இவைபோல கற்றவர் தாழ்ந்த ஜாதியிற் பிறந்தவர்களாயினும் சிறந்தவராவர்; "களர்நிலத்துப் பிறந்த வப்பினைச் சான்றோர், விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர், கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரை, தலைநிலத்து வைக்கப் படும்," என்பது நாலடிச்செய்யுள். இக்காலத்தில் ஜாதிபேதத்தை யனுசரித்து உயர்ந்த கல்வியாளரைத் தாழ்த்தியும், தாழ்ந்த கல்வியாளரை உயர்த்தியும் வரும் சிலர் இச் செய்யுளைக் கவனிப்பாராக.

அபிஷேக மென்பது ஆகுபெயராய் அதற்குரிய பொருளை யுணர்த்திற்று. மேல்வட்டமும் அங்ஙனமே அம் மகிமை யுடையாரை

விளக்கிற்று. முருகக்கடவுள், திருஞானசம்பந்தரா யவதரித்து விபூதியால் பாண்டியனுடைய சுரநோயைத் தீர்த்தனராதலின், 'மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர வைத்தமெய்ஞ் ஞான முதலே' என்றார் ஆசிரியர். (௯௧)

செய்யத்தகாதவை.

தானாசரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயில்வி டாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியா
மானைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாற்கொன் றிடும்
தீனாதி னிதென்று மீதூண் விரும்பினாற்
றேகபீ டைகளே தருஞ்
சேகராசர் சனுவென்ன வேலாத காரியஞ்
செய்தான் மனம்பொறார் காண்
வானாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வானாடு-சுவர்க்கநாட்டிலுள்ள தேவர்களும், புகழும்-துதிக்கின்ற, ஒரு-ஒப்பற்ற, சோணாடு-சோழதேசமானது, தழைய-செழிப்படையுமாறு, இவண் வந்து-இவ்வுலகத்திலே எழுந்தருளி, அவதரித்த-தோன்றிய, முதலே-முதல்வனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, தான் ஆசரித்து வரு-ஒருவன் தான் வழிபட்டு வருகின்ற, தெய்வம் இது என்று-கட

வுள் இஃதென்று, (தன் வழிபடு கடவுளுக்குமுன்னே) பொய்ச் சத்தியம் செய்யில் - பொய்யான சத்தியஞ் செய்வானானால், விடாது - அஃது அவனைத் தண்டிக்காமல் விடாது; தன் வீட்டில் - தனது மாளிகையில், ஏற்றிய - ஏற்றிவைத்த, விளக்கு என்று - தீபமென்று, (அதற்கு) முத்தந்தனைக் கொடுத்தால் - முத்தங்கொடுத்தால், அது - அவ்விளக்கானது, சுடும் - தன்னியற்கைப்படியே சுட்டுவிடும்; மேலவர்கள் ஆனாலும் - உயர்ந்தவர்களாயினும், (அவர்கள் பழக்க மிருப்பின்) மெத்தவும் தனதென்று - அவர்கள் மிகவும் சொந்தமென்று நினைத்து, (அவர்களிடம்) அடாதது செய்யின் - தகாத காரியத்தைச் செய்தால், கெடுதி ஆம் - கேடுவரும்; ஆனை தான் - யானையானது, மெத்தப் பழக்கம் ஆனாலும் - தனக்கு மிகவும் பழக்கமாயிருந்தாலும், (அதனிடத்தே) செய்யாது செய்தால் - செய்யத்தகாத காரியத்தைச் செய்தால், கொன்றிடும் - அது தன்னைக் கொன்றுவிடும்; தீனும் - உணவானது, இனிது என்று - சுவையுள்ளதா யிருக்கின்றதென்று நினைத்து, மீதூண் விரும்பினால் - மேலும்மேலும் அவ்வாகாரத்தை யுண்ண விரும்பினால், (அது) தேக பீடைகளே - தேக துன்பங்களையே, தரும் - கொடுக்கும்; செகராசர் - பூவுலகத்திலுள்ள அரசர்கள் (சிநேகமாயிருப்பினும்), சனு என்ன - சரசமுடையவர்தாமே என்றெண்ணி, (அவர்களிடம்) ஏலாத காரியம் செய்தால் - பொருந்தாத செய்கையைச் செய்தால், (அவர்கள்) மனம் பொறார் - அதற்கு மனஞ் சகிக்கமாட்டார்கள், (அச்செய்கைக்குத் தக்க தண்டனையே புரிவர்).

(வி - ரை.) ஒருவன், தன்னுடைய வழிபடுகடவுள் முன்னே பொய்ச்சத்தியஞ் செய்தாலும், அது தன்னைச் சார்ந்தவனென்று அவனைத் தண்டிக்காம லிராது. தன் வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தங் கொடுத்தால் அது தன்னியற்கைப்படி சுடுமேயன்றிச் சுடாம லிராது. மேலானவர்கள் சொந்தமாயிருந்தாலும் அந்தச் சொந்தத்தைப் பாராட்டி அவர்களுக்குமுன் செய்யத்தகாத காரியத்தைச் செய்

தால் அவர்கள் மனம் பொறுர்கள். யானை பழக்கமா யிருந்தாலும் அதனிடம் குறும்பு செய்தால் அது கோபங்கொண்டு உடனே கொல்லும். 'அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் விஷமாகும்' என்கிறபடி, உணவு இனிமையா யிருந்தாலும் அதனை அளவுக்கு மிஞ்சியுண்டால் அதனுல் தேகத்திற் பிணிகளுண்டாவது நிச்சயம். அரசர் உறவா யிருப்பினும் அவர்களிடம் அடாதகாரியஞ்செய்தால் உடனே ஆபத்துவரும்.

தனது-சொந்தம்; இஃதாகுபெயராய்ச் சொந்தமான பொருளையுணர்த்தும்; மேலோரைச் சொந்தப்பொருளாக உருவகஞ் செய்தமையினுலே, 'தனது' என அஃறிணை முடிபாற் கூறினர் ஆசிரியர். வாளுடு, சோளுடு என்பன இடவாகுபெயர்கள். முதல் - குணவாகுபெயர். (௬௦)

நடுவுநிலைமை.

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
 வருமென்று நேசரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென்று மிக்கதன
 வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோ
 ரெள்ளள வுரைத்தி டாம
லெண்ணமுட னேவிகித புத்தியொடு சாக்ஷிக்கு
 மேற்கச்சு பாச மதமா
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன்
 மொழிந்திடிற் றர்மமது காண்
முனைவிம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
 முன்றருமர் சொன்ன தலைவோ

மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) அன்று - சாவணப்பொய்கையிலுதித்த அக்காலத்திலே, உமை - உமாதேவியானவள், மைந்தன் என - புத்திரன் என்று அன்புபாராட்டி, முலைப்பால் கொடுத்திட - தனப்பாலீய, (அதனைப்பருகி) வளர்ந்தருள் - வளர்ந்தருளிய, குழந்தை வடிவே- பிள்ளைவடிவமான குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடுகுகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, (நியாயத்தீர்ப்புச் செய்வோன்) வந்த விவகாரத்தில்-தன்னிடத்தே வந்தவழக்கில், இனிய - தனக்கு மட்டும் இனிமையாகிய, பரிதானங்கள் - இலஞ்சப்பொருள்கள், வரும் என்றும் - கிடைக்குமென்றும், (வழக்குக் கொண்டுவந்தோர்) நேசர் என்றும் - தன் உறவினரென்றும், வல் பகைஞர் என்றும் - வலியவிரோதிக ளென்றும், அயலோர் என்றும் - அன்னியரென்றும், மிக்க தனவான் என்றும்-அதிகரித்த செல்வமுடையவனென்றும், ஏழை என்றும்-தரித்திரனென்றும், (ஆகிய) இந்த வகையைக் குறித்து - இந்தவிதங்களை யெண்ணி, ஒரு பக்ஷபாதம் - ஒருதலைப் பக்ஷமான அனியாயத்தீர்ப்பு, ஓர் எள் அளவு - ஓர் எட்பிரமாணமும், உரைத்திடாமல் - சொல்லாமல், எண்ணமுடனே - வாதி பிரதி வாதிகளுடைய உள்ளக் கருத்திற்கும், இலிகித புத்தியொடு - எழுத்து மூலமாக அறியப்படும் விஷயவுணர்ச்சிக்கும், சாக்ஷிக்கும் - சாக்ஷி சொல்வோரின் வாக்கு மூலத்திற்கும், ஏற்க - பொருத்தமாக, சபா சம்மதமா-சபையிலுள்ளவர்க்குச் சம்மதியாகும்படி, முந்த-முதன்மையாக, இருதலையும்-இரண்டு பக்கங்களையும், சமன் செய்த-சமன்செய்துகாட்டும், கோல்போல் - தராசுக்கோல்போல, மொழிந்திடில் - நியாத்தீர்ப்புச்சொன்னால், அது தர்மம்-அதுவே அறமாம்;

முனை - போர்செய்தலையுடைய, வீமன் உடல் - வீமனுடைய தேகத்திலே, பாதி - பாதிப்பாகமானது, மிருகம் தனக்கென்று - புருஷாமிருகத்திற்கென்று, முன் - ஆதியிலே, தருமர் சொன்னது அலவோ - தருமர் நியாயத்தீர்ப்புச் சொன்னதன்றோ (நீதி).

(வி - ரை.) வழக்குத் தீர்க்கும் நியாயஸ்தலத்தி லிருப்பவர் தம்மிடத்தே வழக்குவந்த காலத்தில், இலஞ்சப்பொருள் வருமென்றுவது, வழக்குக் கொண்டுவந்தவர் நேயரென்றுவது, பகைஞரென்றுவது, அயலோரென்றுவது, தனவந்தரென்றுவது, ஏழைகளென்றுவது வேறுபிரித்துக் கருதி, பாரபக்ஷமாக அவரவர்க்குத் தக்கபடி வழக்குத் தீர்ப்புச் செய்யலாகாது; வழக்குக் கொண்டுவந்தவர்களின் எண்ணத்தையும், சாக்ஷி வாக்குமூலத்தையும் ஆராய்ந்தறிந்து இரண்டு பக்கங்களையும் சமமாகக் காட்டும் துலாக்கோல்போல் இரண்டு பக்ஷத்தையும் சமமாகப்பாவித்து, தருமர் வீமனுடலிற் பாதி மிருகத்திற்குக் கொடுக்கச் சொல்லியதுபோல நியாயத்தீர்ப்புச் சொல்லவேண்டும்; "சமன்செய்து சீர் தூக்குங்கோல்போ லமைந்தொருபால், கோடாமை சான்றோர்க் கணி," என்பது திருக்குறள். ஒருகாலத்தில் வீமனை ஒரு புருஷாமிருகமானது துரத்திக்கொண்டுவந்து அவன் தருமருடைய எல்லையில் ஒருகாலும் அம்மிருகத்தின் எல்லையில் ஒருகாலும் வைத்திருக்கும்போது பிடித்துக்கொள்ள, வீமன் தருமருடைய எல்லையில் கால்வைத்து விட்டபடியால் விட்டுவிடவேண்டு மென்றுசொல்ல, மிருகம் தன்னுடைய எல்லையில் ஒருகாலிருந்தபடியால் விடமாட்டேனென்றுசொல்ல, இருவரும் தர்க்கமிட்டுத் தருமரிடமே வழக்குத் தீர்ப்புக்குச் செல்ல, அவர் வீமனைத் தம்முடைய தம்பியென்றும் பாராமல் நடுவுநிலைமை யொன்றையே பெரிதாக எண்ணி வீமனுடைய ஒரு கால் மிருகத்தின் எல்லையி லிருந்தபடியால் அவனுடலிற் பாதி மிருகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்தாரென்பது பாரதகதை.

பரிதானம் - விருப்பத்தை யுண்டாக்கும் தானம்; பரிதல் - அன்புகொள்ளல்; அதனையுடைய தானம் - பரிதானம். இலஞ்சப் பொருள் அதிகாரிகளுக்கு விருப்பத்தை யுண்டாக்கக் கூடியதாத லால் அதற்கு இப்பெயர் ஏற்பட்டது. பக்ஷபாதம் - ஒரு பக்கத்தன்பு; பாதம் - ஒருபக்கம்; பக்ஷம் - அன்பு. எள் - அளவினுட்பத்தைக் காட்டவந்த வோருவமையாகுபெயர். இலிகிதம் - கருவியாகுபெயர். 'தருமர் சொன்ன தலவோ' என்றதற்குப் பின், 'நீதி' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. (கூக)

பக்ஷபாதத்தால் வருபயன்.

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங் கே
யுயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மிவரில்ல
முறையுமூர் பாழ்நத்த மாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுஞ்
சமானமா வெழுபிறப் புஞ்
சந்ததியி லாதுழல்வ ரிவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப் பாள்
பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவாள்
பழித்ததுர் மரண மாவார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போது மென்பார்
வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வாரமுடன் - அன்புடனே, அருணகிரிநாதருக்கு - அருணகிரியா ரென்பவர்க்கு, அனுபூதிவைத்து-மனதில் நற்சிந்தனை

வைத்து, எழுதிஅருள் - சடாக்ஷரத்தை எழுதிக்கொடுத்த, குருபரா- மேன்மையுள்ள குருவே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஓரவிவகாரமா-பக்ஷபாதமானவழக்காக, வந்தவர் - நியாயத் தீர்ப்புப்பெற வந்தவர்களுடைய, முகம் பார்த்து - முகத்தை நோக்கி, (நேராயிருந்தால் அவர்க்கொரு விதமாகவும் விரோதிகளா யிருந்தால் அவர்களுக்கொரு விதமாகவும்) உரைப்போர்-நியாயத்தீர்ப்புச் சொல்வோர், மலைக்குரங்கு - மலையில்வாசஞ் செய்யும் குரங்காவர்; இவர் இல்லம்-இவர்களுடைய வீட்டில், உடன்- உடனே, உயர்-வளருகின்ற, வெள்ளெருக்கு முளைத்துவிடும்-வெள்ளெருக்கானது முளைத்துக் காடாகும்; உறையும்-இவர் தங்குகின்ற, ஊர்-கிராமமானது, பாழ் நத்தமாம்-சூனியமான ஊராகும்; தாரணியில்-இந்தப் பூமியிலே, இவர்கள் கிளை-இவர்களுடைய சுற்றமானது, நெல்லி இலைபோல்-நெல்லிமரத்தின் இலையைப்போல, உகும்-ஒன்றில்லாமல் உதிர்ந்து நாசமாம்; எழுபிறப்பும்-எழுவகைப்பிறப்பிலும், சமானமா - ஒரேதன்மையாக, (இவர்கள்) சந்ததி இல்லாது - புத்திரோற்பத்தி யில்லாமல், உழல்வர் - வருந்துவார்கள்; இவர் முகத்தினில் - இவர்களுடைய முகத்திலே, மூத்த தையலே - மூத்தபெண்ணாகிய மூதேவியே, குடியிருப்பாள் - வாசஞ்செய்வாள்; புவி மங்கையும் - பூமிதேவியும், (இவரைத் தாங்குவதற்கு மனங்கூசி) பாரம் இவர் என்று - இவர் வீண்சுமையாவரென்று, நடுங்குவாள் - நடுக்கங்கொள்வாள்; (மேலும் இவர்கள்) பழித்த - பலராலும் நிந்திக்கப்பட்ட, துர்மரணம் ஆவார்-அவமிருத்தியுக்குள்ளாவர்; பகர் - சொல்லக்கூடிய, முடிவிலே-ஆயுள்முடிவிலே, ரவுரவாதி நரகத்து-இரௌரவம்முதலிய நரகங்களிலே கிடந்து, எப்போதும்-எக்காலத்திலும், அனுபவிப்பர் என்பார் - நீங்காமல் அனுபவிப்பார்களென்று அறிவுடையோர் கூறுவர்.

(வி - ரை.) உலகத்தில் பாரபக்ஷமாக வழக்குத் தீர்ப்போர், சற்றும் நன்னடையில்லாமல் துஷ்ட காரியங்களையே செய்யும் மலைக்

குரங்குக்கு நிகராவராதலின், அவரைக் குரங்கென்றே கூறினர் ஆசிரியர். இன்னும் அவர்கள் மகாபாவிகளாதலின், அவர்கள் குடியிருக்கும் வீடு குட்டிச்சுவராய் அதில் வெள்ளெருக்கு முளைக்கும்; அவர்களிருக்கும் ஊரும் பாழடைந்தவூராம்; அவருடைய சுற்றத்தாரும் அடியோடொழிந்து நாசமாவார்கள்; அவர்கள் எழுபிறப்பிலும் சந்ததியற் றுழல்வார்கள்; அவர்களின் முகத்திலோ மூதேவி குடியிருப்பள்; அவர்களைச் சுமப்பதற்குப் பூமிதேவியும் அருவருப்படைவள்; அவர்கள் முடிவில் எல்லோராலும் பழிக்கப்படும் துர்மரணத்தையே அடைந்து இரௌரவாதி நரகங்களிற் சேர்வர்; இங்ஙனம் மன்றோரஞ் சொன்னோர் கேடடைவரென்பதை, "வேதாளஞ்சேருமே வெள்ளெருக்குப்பூக்குமே, பாதாள மூலி படருமே-மூதேவி, சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே, மன்றோரஞ் சொன்னோர் மனை," என்னும் ஔவை வாக்காகிய நல்வழிச் செய்யுளானுணர்க. வெள்ளெருக்கு, மனிதர் நெருங்குதற்கரிய காட்டினிடமே உற்பத்தியாகும்; கெட்டவரிருக்கு மூரே பாழடையும்; நெல்லியிலை உதிருங்காலத்தில் ஒன்றில்லாமல் உதிர்ந்துபோம்; இதுபோல் கெட்டவர் சுற்றமு மழியும்; கெட்டவர்க்கே சந்ததியில்லாமற்போம்; பாவிகள் முகத்திலேயே மூதேவி குடியிருப்பள்; பாவிகளைச் சுமப்பதற்கே பூமிதேவி நடுங்குவள்; சண்டாளருக்கே துர்மரணஞ் சம்பவிக்கும்; அவர்களே நரகத்தையுமடைவர்; ஆதலின், இவர்கள் மகா பாவிகளென்பதை இவற்றின் மூலம் விளக்கிக்காட்டினர் ஆசிரியர். இரௌரவாதி நரகங்களாவன:—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்னும் ஏழுமாம்.

அருணகிரியார்: பட்டினத்தடிகள் திருவருணைக் கெழுந்தருளிய காலத்தில், கருமவசத்தால் கோவில் தாசியைக் கண்டு மோகிக்க, அவள் வெட்கமுற்றுத் தாயிடம் தெரிவிக்க, அவள் மகளைக் கடிந்து சுவாமிகளிடம் அழைத்துவர, அவள் வருமுன், சுவாமிகளுக்கு வீரி

யம் வெளிப்பட்டமையால் அதனை அவர் ஓர் அரசிலையில் வைத்து, அவள் வந்தவுடன், 'உன்னைத் தேடினவன் அதோ அரசிலையி லிருக்கின்றான்' என்றுரைக்க, அத்தாசி அதனையெடுத் துட்கொள்ள அதனாற் பிறந்தவர். இவர் அங்ஙனம் பிறந்து தாயிறந்தமையால் தமக்கை வளர்க்க வளர்ந்து பருவம் வந்தவுடன் தம்மிடமிருந்த திரவியங்களைப் பெண்விருப்பாற் செலவிட்டனர்; அது காரணமாகத் தமக்கை இவரைக் கடிந்தனள்; அதனால் இவர் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து திருவண்ணாமலைக் கோபுரத்தின்மீதேறி விழுந்தனர். அங்ஙனம் விழுந்தும் இவர் உயிர் நீங்கவில்லை; அப்போது அங்கே குமாரக்கடவுள் துறவியாக வந்து இவருக்கு சடாக்ஷரம் உபதேசிக்க அதனை இவர் பெற்றுத் துறவியாகிக் குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுக்கெல்லாம் சென்று திருப்புகழ்பாடி முடிவில் நற்கதி யடைந்தனர். (சுஉ)

ஒன்றில்லாமையாற் சிறவாதவை

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை
 கூடினும் பெண்மை யில்லை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
 கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
 தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை யுற்றாலு நெய்யிலாச்
 சாதமுந் திர்த்தி யில்லை
பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
 பாரித்து மேன்மை யில்லை
பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
 பண்ணினும் பூசை யில்லை

மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
வரினுமில் வாழ்க்கை யில்லை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, கொங்கை இல்லாதவட்கு-பெண்ணின் முக்கிய அங்கம் இல்லாதவளுக்கு, எத்தனை-எவ்வளவாகிய, பணி உடைமை-சொந்த ஆபரணங்கள், கூடினும் - தேகத்திற் பொருந்தியிருந்தாலும், பெண்மை இல்லை-பெண்தன்மைக்குரிய அழகிராது; கூறு - உயர்த்திச் சொல்லப்படுகின்ற, நிறை - அறிவுநிறைந்த, கல்வி இல்லாமல்-நூற்பயிற்சியில்லாமல், எத்தனை கவிதை-ஒருவன் எத்தனை கவிகளை, கூறினும் - சொன்னாலும், புலமை இல்லை - அவனிடம் புலமைத் தன்மை இல்லை; சங்கை இல்லாதவர்க்கு - மதிப்பில்லாதவர்க்கு, எத்தனை விவேகம் தரிக்கினும் - எவ்வளவு அறிவு தங்கினாலும், கனதை இல்லை - மேன்மையில்லை; (சாப்பிடுங் காலத்தில் உணவில்) சட்சுவை - அறுசுவைகள் பொருந்திய, பதார்த்தவகை - கறிவகைகள், உற்றாலும் - பொருந்தினாலும், நெய் இல்லா-நெய் இல்லாத, சாதம்-சோறானது, திர்த்தி இல்லை - மனதிற்கு திருப்தியில்லை; வாவியில்-தடாகத்திலே, பங்கயம் இல்லாமல் - தாமரைமலர்களில்லாமல், எத்தனை மலர்கள் - எவ்வளவு புஷ்பங்கள், பாரித்தும் - உண்டாகித் தோற்றினாலும், மேன்மை இல்லை - உயர்வில்லை; பத்தி யில்லாமல்-மனத்திலே அன்பில்லாமல், வெகு நியமமாய்-அநேகம் ஒழுங்குகளாக, அர்ச்சனைகள் பண்ணினும் - பூசனைகள் புரிந்தாலும், பூசை இல்லை - பூசையாகமாட்டாது; மங்கையர் இல்லா - பெண்கள் இல்லாத, மனைக்கு - வீட்டில், எத்தனை - எவ்வளவு, அருஞ்செல்வம் - அரியசெல்வங்கள், வரினும் - வந்தாலும், இல்வாழ்க்கை இல்லை - இல்லறவாழ்வில்லை.

(வி - ரை.) பெண்ணுக்குரிய முக்கிய அவயவமே பெண்மையை விளக்குவதாதலின், அஃதில்லாதவளுக்கு எவ்வளவு ஆபரணங்களைப் பூட்டினும் அழகேற்படாது. கல்வியில்லாதவன் எத்தனை கவிகளைப் பாடினும், அவை இலக்கண வரம்புடனிரா வாதலின் சிறவாவாம்; இங்ஙனம் பெண்ணங்க மில்லாதவளுக்கு அழகிராதென்பதையும், கல்வி யில்லாதவன் கவி அழகுபடாதென்பதையும், "கல்லாதான் சொற்காமுறுதல்,......," என்னுந் திருக்குறளா னுணர்க. பொருளினாலாவது, வாக்கு சாதுரியத்தினாலாவது ஜனங்களை வசியப்படுத்தி அவர்களிடம் மதிப்பைப் பெற்றுக்கொள்பவனுக்கே உயர்வுண்டாகும்; அஃதில்லாதவன் எவ்வளவு புத்தி சாதுரிய முடையவனா யிருப்பினும் அவனுக்கு உயர்வேற்படாது. இதனைக் "கல்லானே யாமாகில் கைப்பொருளு முண்டானால், எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வார்," என்பதாலுணர்க. போசனத்தில் அறுசுவை பதார்த்தங்கள் பொருந்தி யிருப்பினும் நெய்யொன்றில்லாவிட்டால் அது திருப்தியா யிராது; "நீறில்லா நெற்றிபாழ் நெய் யில்லா வுண்டிபாழ், ஆறில்லா வூருக் கழகுபாழ்-மாறில், உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே, மடக்கொடி யில்லா மனை," என்னும் நல்வழிச் செய்யுளால் இதனையுணர்க. குளத்தில் தாமரை யில்லாமல் வேறு எத்தனை மலர்கள் மலரினும் அதற்குச் சிறப்பில்லை; இங்ஙனம் தாமரை சிறந்த தென்பதை, 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை,' என்பதா லுணர்க. மனதில் பத்தியில்லாமல் எத்தனை அர்ச்சனைகளைப் புரியினும் பயனில்லை; மானஸபூஜையே சிறந்ததாம். மங்கையரில்லா மனை இல்வாழ்க்கைக் குரியதாகா தென்பதை, "பாழே மடக்கொடி யில்லாமனை," என்பதா லுணர்க. ஒருவனுக்கு மனைவி யிருந்தால் மட்டுந்தான் தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்ற ஐந்திடங்களையும் ஓம்புதலாகிய இல்வாழ்க்கை நடைபெறும்; இல்வாழ்க்கையை ஒரு சகடமாக்கி, புருஷ

னும் மனைவியும் இரண்டெருதுகளா யமைந்து அதனை நடத்துவார்க ளென்பது நூற்களின் றுணிவு.

புலமை - குணப்பண்புப் பெயர்; புலம் - அறிவு; புலமை-அறிவாந்தன்மை. சட்சுவை என்பது, சடு-சுவை என்னும் வடமொழித் தொடர்களின் திரிபு; சடு-ஆறு. பங்கயம்-பங்கஜமென்னும் வடசொற் றிரிபு; இதற்கு, சேற்றிற்பிறப்பது என்பதுபொருள்; பங்கம்-சேறு, சம்-ஜனிப்பது. (சுங)

அளவுபடாதவை.

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு
 மானிடர்கள் சனனத்தை யும்
மன்னவர்க ணினைவையும் புருஷர்போ கங்களையும்
 வானினுயர் நீளத்தை யும்
பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
 படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்னிறையு மீசுரச் செயலையும்
 பனிமாரி பொழிதுளியை யும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
 சித்தர்தம துள்ளத்தை யுந்
தெரிவையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி
 தெரிந்தள விடக்கூடு மோ
வாரிச மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
 மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வாரிச மடந்தை-தாமரைமலரில் வாசஞ்செய்கின்ற இலக்குமியானவள், குடிகொண்ட - மார்பினிடத்தே குடிகொண் டெழுந்தருளியிருக்கின்ற, நெடு மாலுக்கு-நெடியோனாகிய விஷ்ணு

வுக்கு, மருகன் என - மருமகனென்று எல்லோரும் சொல்லித் துதிக்கும்படி, வந்த - தோன்றிய, முருகா-குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, வாரி ஆழத்தையும்-சமுத்திரத்தின் ஆழத்தையும்; புனல் எறியும் - சமுத்திர ஜலத்தால் வீசப்படுகின்ற, அலைகளையும்-நீர்த்திரைகளையும்; மானிடர்கள்-மனிதர்கள், சனனத்தையும் - ஜன்மங்களையும்; மன்னவர்கள்-அரசர்களுடைய, நினைவையும்-எண்ணத்தையும்; புருஷர் - ஆடவர்களுடைய, போகங்களையும் - அனுபவிப்புக்களையும்; உயர் - உயர்ந்த, வானின் நீளத்தையும்-ஆகாயத்தின் நீட்சியையும்; பாரில்-பூமியில், எழு-உண்டாகின்ற, மணலையும்-மணற்றுகள்களையும்; பல பிராணிகளையும்-உலகத்திலுண்டாகியிருக்கின்ற பல ஜீவஜந்துக்களையும்; படி-இந்தப் பூமியை, ஆண்ட-ஆட்சிபுரிந்துவந்த, மன்னவரையும்-அரசர்களையும்; பருப்பதத்தின்-மலைகளினுடைய, நிறையும் - எடையளவையும்; ஈசுரச்செயலையும்-தெய்வச் செயல்களையும்; பனி மாரி-பனியும் மழையும், பொழி-சொரிகின்ற, துளியையும்-துளிகளையும்; சீரிய-சிறப்புப் பொருந்திய, தமிழ்ப்புலவர் - தமிழ் வித்துவான்களுடைய, வாக்கில்-நாவிலுண்டாகின்ற, கவியையும்-பாடல்களையும்; சித்தர் தமது-அஷ்டமாசித்திகளையுடையவர்களுடைய, உள்ளத்தையும் - மனக்கருத்தையும்; தெரிவையர்கள்-பெண்களுடைய, சிந்தையையும்-உள்ளத்தையும்; இவ்வளவு எனும்படி - இவ்வளவின என்று சொல்லும்படி, தெரிந்து - ஆராய்ந்தறிந்து, அளவிடக் கூடுமோ-அளவிட்டுச் சொல்ல முடியுமோ? (முடியாது).

(வி - ரை.) 'அரசர்க்குச் செவிகண்' என்றபடி அவர்கள் அப்போதைக் கப்போது கேள்விப்படும் விஷயங்களை யனுசரித்தே காரியங்களை நடத்துவாராதலின் அவர்களுடைய மனம் நிலையற்றதாகும். ஆதலால் அவர்கள் ஒருவர் இனிக்கப் பேசும் வார்த்தைகளை நம்பித் திடுமென விரோதிகட்கு நன்மையும், உறவினர்க்குத் தீமையும் புரிந்துவிடுவார்; அதனால் அவர்களுடைய நினைவு அளவிடப்படாத

தாகும். ஸ்திரீகளுக்குக் கட்டுப்பாடிருப்பதுபோல ஆடவர்களுக்குக் கட்டுப்பாடின்மையில் அவர்கள் மனம் நாடியபடி போகங்களை அனுபவிக்கத் துணிவர்; அதனால் அவர்களுடைய போகங்கள் அளவிடப்படாதன வாகும்; இங்ஙனங் கூறியதனால், இவர்கள் போகங்களை நியாயந் தவறிச் செய்வனவாகிய பிறர்மனை நயத்தல் முதலியன வாகக் கொள்ளளாகாது; நியாயத்தோடு தங்கட்குரியனவாகச் செய்யப்படும் போகங்களென்றே கொள்ளவேண்டும். சித்தர்கள் எதையும் மறைத்துப் பரிபாஷையாகச் சொல்லி மானிடரை ஏமாற்றக் கூடியவராதலின், அவர் உள்ளமும் அளவிடப்படாததாம்; பெண்கள் உள்ளமும் திடமின்றி அடிக்கடி மாறுஞ் சுபாவமுடையதாகலானும் மிகவும் கள்ளம் பொருந்தியதாகலானும் அளவிடப்படாததாம்.

வாரிசம் - நீரில் ஜனிப்பது. மருமகன் என்பது மருகன் எனத் திரிந்து வந்தது; மருமகன்-மணத்திற்குரிய பிள்ளை. (சுசு)

பிறர்மனை நயப்பார்க் குறுபயன்.

ஒருதார மன்றியே பரதார மேனினைவு
தனைவைத்த காமுகர்க் குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினிற்
றைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மரபு மில்லை
யறமில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை
சந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு
நட்பில்லை கனதை யில்லை.
நயமில்லை யிளமைதனில் வலிமையிலை முத்திபெறு
ஞானமிலை யென்பர் கண்டாய்

மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
 மார்பனே யருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) மந்தார பரிமளம் - மந்தார மலரின் வாசனையையும், சுகந்தாதி - சந்தன முதலியவற்றையும், புனையும் - அணிகின்ற, மணி - அழகிய, மார்பனே - மார்பையுடையவனே! அருளாளனே - கிருபையையுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, தம் தாரம் அன்றி - தம்முடைய மனைவியல்லாமல், பரதாரமேல் - அன்னியர் மனைவியின்மீது, நினைவுதனை - விரும்புதலாகிய கெட்ட எண்ணத்தை, வைத்த - மனத்தில் கொண்ட, காமுகர்க்கு - தூர்த்தர்க்கு, தயை இல்லை - மனத்தில் கிருபையில்லை; நிசம் இல்லை-வாக்கில் உண்மை இல்லை; வெட்கம் இல்லை - நாணமிராது; சமரினில் - போரிலே, சற்றும் - சிறிதேனும், தைரியம் இல்லை - திடமிராது; அம் - அழகிய, தாரம் - இல்லை - மனைவியாலேற்படும் இன்பம் இராது; தொடர் - பற்றிய, முறை இல்லை - முறைமை இராது; நிலை இல்லை - ஒரு விஷயத்திலும் உறுதிப்பாடில்லை; அறிவு இல்லை-புத்தி இராது; மரபும் இல்லை-குலாசாரமும் இராது; அறம் இல்லை - தர்மம் இல்லை; நிதி இல்லை-பொருள் தங்காது; இரவினில் - இராத்திரிகாலத்தில், தனி வழிக்கு-தனியாகச் செல்லும் வழிப் பிரயாணத்துக்கு, மனதில் - நெஞ்சில், அச்சமோ இல்லை - பயமோ கிடையாது; நந்தாத - உதவிசெய்வதில் குறைவுபடாத, ஜனம் இல்லை-மனிதர் இல்லை; இனம் இல்லை-சுற்றத்தாரும் இல்லை, எவருக்கும் - எவரிடத்திலும், நட்பு இல்லை-சிநேகம் இல்லை; கனதை இல்லை - மேன்மை இல்லை; நயம் இல்லை-உபசாரம் இல்லை; இளமைதனில் - பாலிய தசையிலும், வலிமை இல்லை-தேகவன்மையில்லை; முத்தி பெறு - மோக்ஷமடையத்தக்க,

ஞானம் இல்லை - விவேகம் இல்லை, என்பர் - என்று சொல்லுவர் அறிவுடையோர்.

(வி-ரை.) பரதாரத்தை விரும்பும் தூர்த்தர், எத்தகைய ரிடத்திலும், எவ்வகை உயர்வு தாழ்வையுங்கருதாது கடினமாகத் தம்முடைய நோக்கத்தை மட்டுமே நிறைவெற்றிக்கொள்ளும் இயல்பினையுடையவராதலின் அவருடைய மனதில் இரக்கமிராது. அவர் தம்முடைய கெட்டசெய்கையை வெளிப்படாமல் மறைக்கும் இயல்பினையுடையவராதலின், அவருடைய வாயில் உண்மை வாராது. பிறர் பழிக்கும் தன்மையை நோக்காமல் பெண்களிடம் நெருங்கித் திரிவாராதலின் அவர்க்கு வெட்கம் சிறிதுமிராது. அவர் தூர்த்தராய்த் திரிவதனாலே மனிதரெல்லோரும் அவர்மீது அருவருப்புக் கொண்டு அவரிடம் ஒருவரும் சேரமாட்டாராதலின், போரில் அவர்க்கு உதவி செய்வாரின்மையால் தைரியமிராது. இன்னும் அவர் பிறர்மனை விரும்பிப் பலரும் நிந்திக்கத் திரிவதை முன்னிட்டு மனைவியர் விரோதமாகவேயிருப்பாராதலின் அவர்க்கு மனைவியரால் ஒருவித சுகமும் எற்படாது. அவர், எந்தப் பெண்ணு யிருந்தாலும் கற்பழிக்கத் துணிவராதலின் அவரிடம் முறை யொழுங்கு மிருக்க மாட்டாது. அவர், தம்முடைய தூர்த்தத் தன்மையால், சொன்னதைச் சொன்னது போல் செய்யமாட்டா ராதலின் அவரிடம் உறுதிப்பாடுமிராது. அவர் இங்ஙனம் வெட்கமின்றித் திரிவதனாலே அவருடைய அறிவானது நாளுக்கு நாள் மழுக்க மடைந்துவிடும். அவர் எந்தச் சாதிப் பெண்ணையும் சேர விரும்புவராதலின், அவரிடம் குலாசாரமும் இராது. அவர் இங்ஙனம் கெட்ட பிரவிருத்தி யுடையரா யிருத்தலினாலே அவரிடம் தருமமும் சேராது; அவர்க்கு இத்தொழிலால் வழக்கு வம்புகள் அதிகமாக நேருமாதலின், பொருளும் சேராது. அவர், இக்கெட்ட காரியத்திற்கு இராக்காலத்தில் எத்தகைய சுவரையும் தாண்டிச் சோரத்தனமாகச் செல்லும் இயல்புடைய ராதலின் அவர்க்குத் தனிவழிச் செல்வதற்குப் பயமென்பதே யிராது. அவரிடம் இங்ஙனம் கெட்ட

செய்கை யிருத்தலினாலே சனச்சேர்க்கையு மிராது; சுற்றச் சேர்க்கையு மிராது, ஒருவருடைய சிநேகமும் ஏற்படமாட்டாது; அவர்க்கு உலகத்தில் மதிப்பு மிராது; அவரை எவரும் தமதில்லத்திற் சேர்க்கச் சந்தேகப்படுவா ராதலின் அவர்க்கு ஒருவரிடத்திலும் உபசாரம் ஏற்படமாட்டாது. அவர் மிதமிஞ்சிப் போக நுகர்வ்ராதலின் பாலிய தசையிலும் அவருடைய தேகத்தில் வலிமை யில்லாமற் போய்விடும். அவர்கள் எந்நேரமும் பெண் விருப்பிலேயே மூழ்கிக் கிடப்பாராதலின் அவர்க்கு மோக்ஷத்தை யடைதற் கேதுவான ஞானசிந்தனை சிறிதும் ஏற்படமாட்டாது. இங்ஙனம் எல்லா விஷயத்திலும் பிறர்மனை நயத்தல் கேடுசெய்வதா யிருப்பதாலே அறிவுடையோர் அதனைக் கொடிதென விடுப்பாராக; "பகைபாவ மச்சம் பழியென நான்கு, மிகவாவா மில்லிறப்பான் கண்," என்பது திருக்குறள்.

அச்சமோ என்பதிலுள்ள ஓகாரம் வியப்புப்பொருளில் வந்தது. மந்தாரம் - பஞ்ச தருக்களிலொன்று; குமாரக்கடவுள் அசுரர்களை வதைத்துத் தேவசேனாதிபதி பட்டம் பெற்றவ ராதலின் அவர்க்குச் சுவர்க்கத்திலுள்ள மந்தாரமலர் உரியதாயிற்று. (சா௫)

மானம் விடாமை.

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்தி டாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவளன விற்கொ டாது
திரமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்புமுறை தவறி டார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரினொன் றுங்கொ டாது

வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) மனதார - நெஞ்சிற் பொருந்த, (உன்னைத் தியானித்து) உனது அடைக்கலம் என்ற - நான் உன்னுடைய பாதுகாப்புப் பொருளென்று கூறிய, கீரற்கு-நக்கீரனுக்கு, வன்சிறை - வலிய சிறைச்சாலைத் துன்பத்தை, தவிர்த்த - நீக்கியருளிய, முருகா - குமாரக் கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கல் தூண்-கல்லாலாகிய தூணனது, கனபாரம் - மிகுந்த சுமை, ஏறில் - தன்மீதேறினலும், பிளந்திடுவதன்றி - தான் நேராகப் பிளப்பதல்லாமல், வளைந்திடாது-வளைய மாட்டாது; கனகுரன்-மேன்மை பொருந்திய சூரனுயிருப்பவன், கருதலர்களால்-பகைவர்களாலே,உடைந்தாலும்-தனதுபடைகெட்டாலும், உயிர் அளவில்-தன் உயிரிருக்கும் வரையிலும், அமரில்-போரிலே, முறியான்-தான் இளைத்தோடமாட்டான்; வேங்கை - புலியானது, தினம் - நாள்தோறும், ஓர் இடுக்கண்வந்து உற்ருலும் - ஒவ்வொரு துன்பம் வந்து பொருந்தினலும், ஜீவன் அளவில்-தன்னுடைய ஜீவன் இருக்கும் வரையிலும், தோல் கொடாது - தன்னுடைய தோலைக் கொடுக்க மாட்டாது; திரமான-மனோதிடம் பொருந்திய, பெரியோர்-உயர்ந்த சாதுக்கள், சரீரங்கள்-தங்களுடைய உடம்புகள், போகினும்-அழியக் கூடியதாயிருந்தாலும், செப்பும் - சொல்லுகின்ற, முறை தவறிடார்கள்-ஒழுங்கு தவறி நடக்கமாட்டார்கள்; வனம் ஏறு-காட்டில் மேவிச் சஞ்சரிக்கின்ற, கவரிமா - கவரிமானது, உயிர் போகும் அளவும்-தன்னுடைய உயிர்போகும் வரையிலும், தன் மயிரின் - தன்னுடைய உரோமங்களிலே, ஒன்றும்-ஒன்றேனும், கொடாது-கொடுக்கமாட்

டாது; வாராத - எப்பொழுதும் வந்தடையாத, ஆபத்து வருகினும்- துன்பம் வந்தாலும், கற்புடைய மாது-பதிவிரதா தன்மத்தையுடைய பெண்ணானவள், நிறை - தன்னுடைய கற்பினின்றும், தவறி நடவாள்-விலகி நடக்கமாட்டாள்.

(வி - ரை.) எவ்வளவு பாரமேறினும், கற்றூண் பிளப்பதே யன்றி வளையமாட்டாது; அதுபோல் வீரனும் போரில் பக்கபல மின்றித் தனிப்பட்டானாயினும உயிர் விடுவானேயன்றிப் பயந் தோடமாட்டான்; "உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர், பற்றலரைக் கண்டாற் பணிவரோ - கற்றூண், பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கித், தளர்ந்து வளையுமோ தான்," என்னும் வாக்குண்டாம் செய்யுளானும் இஃதுணரப்படும். வேங்கை மகா வீர முடையதாகலின் அதனிடம் எவரும் நெருங்கி அதன் தோலை வாங்க முடியாது; அஃதிறந்தால் மாத்திரமே தன்னுடைய தோலைக் கொடுக்கும். பெரியோர் தங்களுக்கு உயிர்போகக்கூடிய ஆபத்து வரினும், சொன்ன வாக்குத்தவறி ஒழுங்கீனமாக நடக்கமாட்டார்கள்; இதனைச் சிபியின்கதை முதலியவற்று லுணர்க; கவரிமா மானினத்தைச் சார்ந்த ஒருவகை மிருகம்; இதன் உரோமம் சாமரங்களுக்கும், பெண்கள் கொண்டை யிடுவதற்கும் உபயோகப்படுவது; இந்த மிருகம் தன்னுடைய உரோமத்தைக் காப்பதில் மிகவும் சிரத்தையுடையது; தன்னுடைய உரோமத்தில் ஒன்று போனாலும் தன்னுடைய மானம் போய்விட்டதாகக் கருதும் இயல்புடையது; அதனால், இது காட்டில் தன்னுடைய உரோமமொன்று முள்ளிற் சிக்கிக்கொண்டால் அதை யிழுத்துக்கொண்டோடின் உரோமத்திற்குச் சேதமாகுமென்று நினைத்து அப்படியே நின்று உயிர்விடும்; அதனால் இஃதிறந்த பிறகுதான் தன் மயிரைப் பிறருக்குக் கொடுக்கும்; இக்கொள்கைபற்றியே இதனை, பிறர் தீண்டின் உயிர்விடும் இயல்பினையுடைய பதிவிரதைகளுக்குச்சிறந்த உவமையாகக்கூறுவர் பெரியோர். கற்புடைய மங்கை, தனக்கு வறுமையால் பல துன்பங்

கள் வரினும், வேறுவகை ஆபத்துக்களிற் சிக்கிக்கொண்டாலும், அவற்றிற்கஞ்சித் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுப் பரபுருஷரை நாடவேமாட்டார்கள்; கஷ்டம் வரின் உயிரை விட்டேனும் கீர்த்தியையே தேடுவர். (சுசு)

திருவருட் சிறப்பு.

திருமகள் கடாக்ஷமுண் டானு லெவர்க்குஞ்
　　சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
　　செல்லாத வார்த்தை செல்லும்
பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ
　　புகல்பெருக் காறு போலாம்
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
　　போலவே நேச மாவர்
பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
　　பேரும்பிர திஷ்டையுண் டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
　　பேச்சினிற் பிழைவரா து
வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
　　வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, திருமகள் - இலக்குமியினுடைய, கடாக்ஷம் - கடைக்கண் பார்வையானது, உண்டானல் - ஏற்பட்டுவிடும் பக்ஷத்தில், எவர்க்கும்-எப்பேர்ப்பட்டவர்களுக்கும், சிறப்பு உண்டு - அழகுண்டு; கனதை உண்டு - பெருத்த நன்மை உண்டாகும்; சென்ற

வழி எல்லாம் - போன மார்க்கங்களெல்லாம், (செல்லற்கரிய கடினமான வழிகளாயிருந்தாலும்) பெரும் பாதை ஆய்விடும் - பெரிய மார்க்கமாகிவிடும்; செல்லாத வார்த்தை செல்லும் - எவ்விடத்திலும் ஏறாத பேச்சுகளும் ஏறும்; பொருள் - திரவியமானது, ஒரு துரும்பு - ஒரு துரும்புக்கு நிகராம், (அதாவது: துரும்புபோல் நினைத்து ஏராளமாகச் செலவு செய்யும்படி அளவில்லாமற் சேரும்); மரியாதை ஆம்-எங்கும் வணக்க முண்டாகும்; செல்வமோ-ஆடு மாடு தனம் தானியம் நிலம் முதலிய ஐசுவரியங்களோ, புகல் - உயர்த்திச் சொல்லப்படுகின்ற, பெருக்கு - நாடோறும் அதிகரிக்கும் இயல்பினையுடைய, ஆறு போலாம் - நதியைப்போல் வளரும்; புவியில் - இந்தப் பூமியில், முன் - திருவருள் கிடைக்காதிருந்த முற்காலத்தில், கண்டு - அவரைப் பார்த்து, மதியாதபேர் - மதிக்காதிருந்தவர்களும், பழகினவர் போலவே - வெகுநாளாக நேசித்தவர்களைப் போல, நேசம் ஆவர் - அவரோடு உறவு கொள்வார்கள்; (அவர் சாதியிற் றாழ்ந்தவராயிருந்தாலும்) பெருமையொடு - உயர்ச்சியுடனே, சாதியில் - அவருடைய அந்தத் தாழ்ந்த சாதியிலும், (அந்தத் திருவருளானது) உயர்ச்சி தரும் - மேன்மையை அவருக்குக் கொடுக்கும்; அனுதினம் - தினந்தோறும், பேரும் - அவர்களுடைய நாமமும், பிரதிஷ்டை-கீர்த்தியும், உண்டாம் - விருத்தியாகும்; பகையாளி கூட - விரோதிகூட, பிரியமொடு - விருப்பத்துடனே, உறவாகுவான்-அவருக்கு நேசமாவான்; பேச்சினில்-அவருடைய எத்தகைய வார்த்தைகளினும், பிழை வராது - குற்றமென்பதே வரமாட்டாது; வரும் என - நம்மிடம் வந்து சேரும் என்று, நினைத்த பொருள்-சிந்தித்த பொருளும், (அவருக்குக்) கைகூடி வரும்-கையிற் சார்ந்து வரும்; அதிக வல்லமைகள்-மிக்க வலிமைகள், மிகவும் உண்டாம் - அளவுக்குமிஞ்சி யுண்டாகும்.

(வி - ரை.) உலகத்தில் மிகத் தாழ்ந்தவர்களுக்கும் இலட்சுமி கடாக்ஷமானது உண்டாய்விட்டால் செல்வம் அதிகரிக்கும்; அதனால்

கலியாணம் முதலிய சிறப்புக்களெல்லாம் விசேஷமாக அவர்களிடம் நடைபெறும்; எல்லோரும் அவர்களைப் பணக்காரர்களெனக் கருதிப் பெரிய காரியங்களுக்கெல்லாம் வரவழைத்து கௌரவப்படுத்துவதால் அவர்களுக்குப் பெருந்தன்மையு முண்டாகும்; அவர்கள் கெட்ட மார்க்கத்திற் சென்றாலும் ஜனங்கள் அதனை நன்மார்க்கமென்றே கொண்டாடுவர்; அவர்கள் சொல்லத்தகாத வார்த்தையைச் சொன்னாலும் ஜனங்கள் அவர்களுடைய தயவைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு அந்த வார்த்தைப்படியே நடப்பார்கள்; அவர்களிடம் பொருள் அதிகமாகச் சேர்ந்திருக்கு மாதலால் அவர்களுக்கது துரும்புபோல் அலக்ஷியமாகத் தெரியும்; ஒவ்வொருவரும் அவர் தயவைப் பெற்று ஏதேனும் பிரயோஜனத்தை யடையலாமென்று கருதியிருப்பா ராதலின் அவர்களைக் கண்டமாத்திரத்தில் வணக்கஞ் செய்வார்கள்; 'நூற்றுக்கு மேல் ஊற்று' என்பதற்கிணங்க அவர்களிடம் பொருள் சேர்ந்திருப்பதால் அதன் மூலம் மேலும் மேலும் பெருகும் ஆறுபோல செல்வம் வளர்ந்து கொண்டேயிருக்கும்; அவரை முன்னே கண்டு மதியாதவர்களும் அவர்களிடம் ஏதேனும் சகாயம் பெற்றுக்கொள்ளலா மெனக்கருதி மிகவும் பழக்கமுடையவர்களைப் போல் நேசமாவார்கள்; அவர்கள் தாழ்ந்தஜாதி யுடையவர்களாயிருந்தாலும் ஜனங்கள் அவர்கள் சகாயத்தைப் பெறவேண்டி அவர்களுடைய அந்தத் தாழ்ந்த ஜாதியையும் உயர்த்திப் பேசி அவர்கள் வீட்டில் விருந்து முதலியனவும் உண்டு அவர்களைப் பலவாறு கொண்டாடித்திரிவர். இங்ஙனம் எல்லோரும் பலவாறு கொண்டாடுவதால் அவர்களுடைய பேருங் கீர்த்தியும் நாடோறும் வளர்ந்தோங்கும். செல்வம் அதிகரித்திருப்பதை முன்னிட்டு அவர்களிடம் நன்மை யடையலா மெனக் கருதிப் பகைஞனும் நேசனாவான். அவர்கள் குற்றமுடைய வார்த்தை கூறினும் ஜனங்கள் அதில் அருவருப்புக் கொள்ளார்களாதலால் அவர்களுடைய வார்த்தையில் குற்றமே வராது. அவர்கள் எந்தப் பொருளை அடையவேண்டு மென்று

நினைத்தாலும், பணம் அவர்களிடம் அதிகமாக விருப்பதால் அப் பொருள் உதவியைக்கொண்டு எத்தகைய காரியங்களையும் நிறை வேற்றுவதற்கு வல்லமையுடையராவார். இவ்வாறு நடப்பதை இக் காலத்தில் பற்பல விடங்களிற் பிரத்தியக்ஷமாகக் காணலாம். ஆனால் அறிவற்ற மாக்களிடத்திலேயே இச்செய்கைகள் நடைபெறும்; புத்தியுள்ளவர்கள் பணத்தைப் பெரிதாக நினையார்; குணத்தையே பெரிதாகப் பாராட்டுவர்.

உயிர்ச்சிதரும் என்பதற்கு முன் 'அந்தத்திருவருளானது' என் பது வருவித்துரைக்கப்பட்டது. ஆகுவான்-இதில் ஆகு-பகுதி. ()

நட்புநிலை.

கதிரவ னுதிப்பதெங் கேநளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்லிரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன
நிதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு
நேசமோன ருயிருக் கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிட னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மதிலுடன்-புரிசைகளுடனே, கோபுரமும் - சிகரிகளும், வாவியும் - தடாகங்களும், புடை சூழ - பக்கங்களிற் சூழ்ந்திருக்கும்படி, மருவு - பூவுலகிற் சார்ந்திருக்கும், சோணாட்டு அதிபனே - சோழன் நாட்டிற் கிறைவனே! மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கதிரவன்-சூரியன், உதிப்பது - உதயமாவது, எங்கே - எவ்விடத்தில் நிகழ்கின்றது ? (அது நெடுந் தூரத்தில் நிகழ்கின்றது), நளினம்-தாமரையானது, எங்கே-எவ்விடத்தி லிருக்கின்றது? (அதுவும் நெடுந் தூரத்தி லிருக்கின்றது, அப்படி யிருந்தும்) நளினம் - அந்தத் தாமரையானது, உளம் களித்து-மனம் சந்தோஷித்து, மலர்ந்தது என்ன-அச்சூரியனுடைய தோற்றத்திற்கு முகமலர்ந்தது என்ன காரணம் ? கார் - கரிய, மேகம் - கொண்டலானது, எங்கே - எவ்விடத்தி லிருக்கின்றது? (அஃதிருப்பதும் நெடுந் தூரம்) பசும் தோகை - பச்சை நிறமுள்ள மயிலானது, எங்கே - எவ்விடத்தி லிருக்கின்றது? (அதுவும் நெடுந் தூரத்திலிருக்கின்றது; அப்படியிருந்தும் அதன்மீது) தோகை - அம்மயிலானது, கருத்தில்-மனதில், நட்பானது என்ன - சிநேகமானது யாது காரணம்? மதியம் சந்திரனனது, எங்கே-எங்குளது? (அது மிக்க தூரத்திலிருக்கின்றது) பெரும் - பெரிய, குமுதம் - அல்லிமலரானது, எங்கே - எவ்விடத்திலிருக்கின்றது? (அதுவும் நெடுந் தூரத்திலுள்ளது; அப்படி யிருந்தும் அச்சந்திரனுடைய தோற்றத்தைக் கண்டு) குமுதம்-அவ்வல்லியானது, முகம் மலர்ந்து - முகமலர்ச்சியுற்று, மகிழ் கொண்டது - களிப்படைந்தது, என்ன - யாதுகாரணம்? வல் - வலிமைபொருந்திய, இரவு - இராத்திரி காலமானது, விடிவது - விடிந்து சூரியனுதிப்பது, எங்கே - எவ்விடத்தில்? (அது அளவற்ற தூரத்தில் நிகழ்கின்றது) கோழி - கோழிச்சேவலானது, எங்கே-எவ்விடத்திலுள்ளது? (அதுவும் நெடுந் தூரத்தி லிருக்கின்றது; அப்படியிருந்தும் அச்சூரியோதயத்தைக் கண்டு) கோழி-அக்கோழிச் சேவலானது, மகிழ்ந்து-சந்தோஷித்து,

கூவிடுதல் - கூவுதல், என்ன - யாது காரணம்? (இவையெல்லாம் நட்பினாலேயே நிகழ்கின்றன; இவைபோல) நிதி அரசர் - திரவிய மிகுதியையுடைய மன்னர்கள், எங்கே இருந்தாலும் - எவ்விடத்தி லிருந்தாலும், நேசம் - அவர்கள் ஒருவர்மீது கொண்ட நட்பானது, அவர்களொடு - அவர்களுடனே, ஒன்றாயிருக்கும் - ஒன்றாகவே சேர்ந்திருக்கும்; நீதி மிகு - நியாயம் மிகுந்த, நல்லோர்கள் - நற்குண முள்ள பெரியோர், எங்கு இருந்தாலும் - எவ்விடத்திலிருந்தாலும், நிறை பக்ஷம் - அவர் மனத்தில் ஒருவர்மீது மிகுந்த நட்பை, அவர் மறவார்கள்-அவர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

(வி - ரை.) சூரியனும் தாமரையும் நெடுந்தூரத்தி லிருந்தாலும் தாமரையானது சூரியன்மீதுள்ள நட்பினால் அதன் தோற்றத்தைக் கண்டமாத்திரத்தில் மலரும்; மேகமும் மயிலும் நெடுந்தூரத்தி லிருப்பினும், மயிலானது மேகத்தின்மீது தனக்கேற்பட்ட நட்பினால் அதைக் கண்டமாத்திரத்தில் களித்தாடும். சந்திரனும் ஆம்பலும் எட்டாததூரத்தி லிருப்பினும் ஆம்பலானது சந்திரன்மீது தனக்கேற்பட்ட சிநேகத்தினாலே அதைக் கண்டவுடனே மலரும். சூரியனுதிப்பதும் சேவலிருப்பதும் நெடுந்தூரத்திலுள்ளன வாயினும் அச்சேவலானது சூரியன்மீது தனக்கேற்பட்ட உறவின் மிகுதியாலே அதைக் கண்டமாத்திரத்தில் கூவும். இவைகளைப்போல அரசரும், நற்குணமுடைய பெரியோர்களும் எவ்விடத்தி லிருந்தாலும் தாங்கள் ஒருவர்மீதுவைத்த அன்பை மறக்கமாட்டார்கள்; அவர்களைக் கண்டமாத்திரத்தில் முகமலர்ச்சியுற்று நன்குபசரிப்பர்; இதனை, "இராமர் வனவாசஞ்செய்து இராவண சம்மாரமுடித்து திரும்பி வந்து மகுடாபிஷேகம் பெற்றகாலத்தில், இளமையிற் பழகியிருந்த இடையனொருவன் தன் அன்பின் மேலீட்டால் விரைந்தோடிவந்து அவரைத் தழுவ, அந்த இராமர், அவன்மீது அருவருப்புக்கொண்டுகோபித்தவர்களை விலக்கி அவனைத் தாமும் தழுவிக்கொண்டு அவனுக்கு உபசார வார்த்தைகள் கூறினார்," என்ற கதையாலுணர்க. அறி

வீனர் தாம், இங்ஙனமின்றித் தாங்கள் உன்னதபதவி யடைந்தாலும், நெடுந்தூரத்திற் போய்விட்டாலும் தம்முடைய சிநேகிதர்களை மறந்து விடுவர்; இவர்களே மனிதரிற் பதராவார். 'திருப்புல்வயல்' என்னும் ஸ்தலம் புதுக்கோட்டை சம்ஸ்தானத்தைச் சேர்ந்ததாகச் சோழநாட்டின் தெற்குக் கோடியில் தென்கிழக்கு மூலையி லிருக்கின்றது; ஆனதுபற்றியே, முருகக்கடவுளை, 'சோழன் நாட்டின் தலைவர்' என ஆசிரியர் அடுத்தடுத்துக் கூறிவருகின்றனர் என்க.

எங்கே என்னுஞ் சொற்களில், 'இருக்கின்றது' 'நெடுந்தூரத்தி லிருக்கின்றது' 'அப்படியிருந்தும்' என்பன முதலியசொற்கள் இசையெச்சமாக எஞ்சிநின்றன வாதலின், அவை வருவித் துரைக்கப்பட்டன. 'என்ன' என்னும் சொற்களிலும், 'நட்பினாலே நிகழ்கின்றது' என்னுஞ் சொற்களும் இசையெச்சமாக வருவிக்கப்பட்டன. நளினம், தோகை, குமுதம், கோழி என்னுஞ் சொற்கள் தீபகமாக இரண்டிடங்களினும் கூட்டப்பட்டன. சூரியனுதிப்பதே விடிவதாதலின், 'விடிவது' என்பதற்குச் 'சூரியனுதிப்பது' எனப் பொருள் கூறப்பட்டது. கதிரவன் - கிரணங்களை யுடையவன். நளினம் - முதலாகுபெயர். தோகை - சினையாகுபெயர். குமுதம் - முதலாகுபெயர்.

காலமறிதல்.

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்
கருதுசய காலமது கண்டந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும்
மிக்கான வறிவுளோர் வருதருண காலத்தின்
மிடியாள ருக்குதவு வார்

நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுகந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பதறும லந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்
வாகினிய காலைகல் மாலைபுல் லெனுமுலக
வாடிக்கை நிசமல்ல வோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—பகல் காலம்-பகற்காலத்திலே, காகம் - காகமானது, கூகையை - தன்னினும் வலிதாகிய கோட்டானை, வென்றிடும் - வெற்றிகொள்ளும்; (இதுபோல) கனகம் - பொன்னினாற் செய்யப்பட்ட, முடி - கிரீடத்தையுடைய, அரசர்தாமும் - மன்னரும், கருது - நன்மையாக எண்ணப்படுகின்ற, சயகாலமதுகண்டு - வெற்றிதரும் சமயத்தையறிந்து, அந்த வேளையில் - அச்சமயத்திலே, காரியம் - யுத்தத்திற்குரிய செய்கைகளை, முடித்துவிடுவார் - நிறைவேற்றி விடுவார்கள்; மேகமும் - கொண்டலும், பயிர் விளைய - பயிர்கள் செழித்து விளையும்படி, கார்காலமதுகண்டு - அதற்குரிய கார்ப்பருவத்தை நோக்கி, மேன்மேலும் - மேலும்மேலும், மாரி பொழியும் - மழையைச் சொரியும்; (அதுபோல) மிக்கான - மிகுதியான, அறிவு உள்ளோர் - புத்தியுடையவர்கள், வரு - கஷ்டம் வருகின்ற, தருண காலத்தில் - சமயம் வாய்த்தபோது, மிடியாளருக்கு - தரித்திரமுடையார்க்கு, உதவுவார் - கொடுப்பார்கள்; நாகரிகம் உறு - விநோதம் பொருந்திய, குயில் - கோகிலமானது, நலம் என்று - இதுவே நமக்கு நன்மையைத் தரும் காலமென்று, உகந்து - சந்தோஷித்து, வசந்த காலத்திலே-தனக்கினிமைதரும் இளவேனிற் பருவத்திலே, கூவும் - இனிமையாகக் கூவுதல்செய்யும்; (அதுபோல) நல்லோர் - நன்மையுடைய பெரியோர், குறித்ததை - தாம் எண்ணிய காரியத்தை, பத

ருமல் - பதற்றமுருமல், அந்த அந்த நாளையில் - அது அதற்குரிய அவ்வத்தினங்களிலே, முடிப்பர் - நிறைவேற்றுவார்கள்; வாகு - ஒழுங்குள்ள, இனிய - இனிமையாகிய, காலை - உதயகாலத்திலே, கல்-கல்லும், மாலை - சாயங்காலத்தில், புல் என்னும் - புல்லும் தங்கு தற்காமென்று சொல்லி அதன்படி நடந்துவருகின்ற, உலகவாடிக்கை-உலகத்தார்வழக்கமும், நிசம் அல்லவோ-உண்மையன்றோ, (ஆதலின் எதையும் காலமறிந்து செய்யவேண்டும்.)

(வி-ரை.) கூகை இராக்காலத்தில் மற்ற பக்ஷிகளை அடித்துக் கொல்லும் ஆற்றலுடையது; ஆயினும், அதற்குப் பகற்காலத்தில் கண் தெரியாது; ஆதலின், அக்காலத்தில் அஃது எதிர்ப்படின் அதற்கு மிக்க பகைமை யுடையதும், அதனினும் தாழ்ந்த வலிமை யுடையதுமாகிய காக்கை அதனை அடித்துக்கொல்லும்; அதன் பொருட்டே கூகை பகற்காலத்தில் மரப்பொந்துகளிலும் மலைக் குகைகளிலும் மறைந்திருக்கும்; இதுபோல புத்தியுள்ள அரசர்கள், தங்களிடத்தில் வலிமை யில்லாவிடினும் காலமறிந்து பகைவருடன் எதிர்த்து ஜெயம் பெறுவர்; "பகல் வெல்லும் கூகையைக் காக்கை யிகல்வெல்லும், வேந்தர்க்கு வேண்டும் பொழுது," என்பது திருக்குறள். மேகமானது பயிர்கள் செழிப்படையும்படி அவை விருத்தியடைதற்கேதுவான கார்காலத்திலேயே அதிகமாக மழையைச் சொரியும்; அதுபோல அறிவுடையோர், தரித்திரர்க்கு அவர் கஷ்டப்படுங் காலத்தில் உதவுவார். குயில் சந்தோஷத்தை யடைதற்கு இளவேனிற் பருவமே உரியகாலமாம்; அதனால் அஃது அக்காலத்திலேயே கூவி இனங்களுடன் சேர்ந்து களிக்கும்; அதுபோல் நல்லோர்கள் தங்களுக்குச் சந்தோஷந்தரும் காரியங்களை அவற்றிற்குப் பொருத்தமான காலங்களிலே செய்து மகிழ்ச்சியடைவர்; அதாவது குளிர்ந்தகாலத்தில் உஷ்ண வஸ்துக்களையும், உஷ்ண காலத்திற் குளிர்ந்த வஸ்துக்களையும் உபயோகித்துச் சுகமடைவர். அறிவற்ற மூடர்கள் காலத்திற்குப் பொருந்தாதவற்றை உபயோகித்

துத் துன்புறுவர். உஷ்ணகாலத்தில் காலையிற் கல்லிலும் மாலையிற் புல்லிலும் தங்குவது தேகத்திற் கினிமைசெய்யு மென்பது அறிவுடையோராகிய வைத்திய சாஸ்திரிகளின் கொள்கை; இதற்குக் காரணம் இராக்காலத்தி லேற்பட்ட பனியால் கல்லிலுள்ள சூடெல்லாம் நீங்கிக் காலை நேரத்தில் அதில் குளிர்ச்சி தங்கியிருக்கு மென்பதும், பகலில் எற்படும் வெயிலால், புல்லில் இரவிலேற்பட்ட அதிக குளிர்ச்சி நீங்கி சாயங்கால நேரத்தில் அதில் உடம்பிற்குப் பொருத்தமான சமகுளிர்ச்சியிருக்கு மென்பதுமேயாம். இந்தக் கிரமத்தை யனுசரிக்காமல் மாலையில் கல்லிலும் காலையில் புல்லிலும் இருந்தால் அதிக உஷ்ணமும் அதிக குளிர்ச்சியும் உண்டாய் உடம்பிற்குக் கேடு சம்பவிக்கும். ஆதலின், அறிவுடையோர் இந்தக் கிரமம்பற்றிக் காலை கல்லிலும் மாலை புல்லிலும் தங்குவார்கள். "காலைகல் மாலை புல்," என ஒருபழமொழி தென்னாட்டில் வழங்கி வருகின்றது. இதையனுசரித்தே இந்நூலாசிரியர் இங்கு இவ்விஷயத்தைக் கூறினரென்க; இவ்வாக்கியக் கருத்துணராதார் இதற்குத் தம் புத்தியிற் றோன்றியபடி கண்டகண்டவாறு அசம்பாவிதமான பொருள்கூறி யிடர்ப்படுவர். நூலுணர்ச்சியுடன் பற்பல விடங்களிற் சஞ்சரித்து ஒவ்வொன்றையும் ஆராய்வோர்க்கே இத்தகைய விஷயங்கள் புலப்படும்; அறைக்குள்ளிருந்து புஸ்தகத்தைமாத்திரம் படித்துத் தற்பெருமையடைந்து அறிவுடையோர் கூறுவதையும் செவிக்கொள்ளாது திரிவோர்க்கு இதுபோன்ற அரிய விஷயங்களும் அவற்றாலேற்படும் நயங்களும் புலப்படா. (கூக)

இடமறிதல்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற்கு மோ

விரைமலர் முடிப்பரமர் வேணியர விணவெல்ல
　　மிகுகருட னாலாகு மோ
　வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
　　வேறொருவர் செல்ல வசமோ
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
　　துஷ்டர்பகை யென்ன செய்யும்
　துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை
　　சொன்னமொழி பொய்யல்ல வே
வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
　　வன்போர் செயித்த தன்றோ
　மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　　மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, தரையதனில் - பூமியின்மேலே, ஓடு தேர் - ஓடுகின்ற இரதமானது, நீள் கடலில் - நீண்ட சமுத்திரத்திலே, ஓடுமோ - விரைவாகச் செல்லுமோ? (ஓடாது); சலதிமிசை-சமுத்தி ரத்திலே, ஓடு கப்பல்-விரைந்தோடுகின்ற மரக்கலமானது, தரைமீதில்- பூமியிலே, ஓடுமோ-விரைந்து செல்லுமோ? (இல்லை); தண்ணீரில்- ஜலத்திலே, உறும் - பொருந்தி யிருக்கின்ற, முதலைதன்முன்னே - கராவுக்கெதிரே, கரி - உருவத்திற் பெரிய யானையும், நிற்குமோ - தைரியமாய் நிற்குமோ? (இல்லை); விரை - வாசனை தங்கிய, மலர் - கொன்றைமலர் மாலையணிந்த, முடி-சடாமுடியையுடைய, பரமர் - பரமசிவக்கடவுளது, வேணி-சடையிற் சேர்ந்திருக்கின்ற, அரவினை- நாகத்தை, வெல்ல-வெல்லுதற்கு, மிகு-வலியில்மிகுந்த, கருடனால் ஆகுமோ - கருடனாலும் முடியுமோ? (இல்லை); வேங்கைகள் இருக் கின்ற - புலிகள் தங்குகின்ற, காடுதனில் - வனத்தில், வேறொருவர் - அவைதவிர மற்றொருமனிதர், அஞ்சாமல் - பயப்படாமல், செல்ல வசமோ - செல்லுதற்கு அது அவருடைய ஆட்சிக் குட்படுமோ?

(இல்லை); துரைகளை - மன்னர்களையும், பெரியோரை - வலிமையா லுயர்ந்தவர்களையும், அண்டி - சார்ந்து, வாழ்வோர்தம்மை - ஜீவிக் கின்றவர்களை, துஷ்டர் பகை - துர்ச்செய்கை யுடையவர்களுடைய விரோதமானது, என்ன செய்யும்-யாதுகெடுதியைச் செய்துவிடும்? (ஒன்றுஞ் செய்யாது); வரை ஊது - மூங்கிற்குழலை ஊதுகின்ற, மாயனை-கிருஷ்ணனை, அடுத்தலால் அன்றோ-சார்ந்ததனாலல்லவோ, பஞ்சவர்கள் - பாண்டவர்கள் ஐவரும், வன் போர் - துரியோதனுதி யரா லேற்பட்ட வலிமையான யுத்தத்தில், செயித்தது - வெற்றி கொண்டது நிகழ்ந்தது; (இவையெல்லாம் இடச்சார்பினாலேயே நிக ழ்ந்தன ஆதலின்) துணை கண்டு - உதவியாவது பார்த்து, சேர் இடம் அறிந்து - சேரத்தக்க இடத்தை ஆராய்ந்தறிந்து, சேர் என்று - சேர்ந்து காரியம் நடத்தக்கடவாயென்று, ஔவை சொன்ன-ஔவை யார் கூறிய, மொழி - நீதி வாக்கியமானது, பொய் அல்ல - அபத்த மன்று, (ஆதலின் மனிதர் நன்மையடைய விரும்பின் சேரத்தக்க வலிமையுள்ள விடமறிந்து சேர்ந்துகொள்ளவேண்டும்).

(வி - ரை.) தோணது தரையிற் சென்றால் வேகமாக ஓடும்; தண்ணீரிற் செல்லின் அமிழ்ந்தி யழியும். கப்பலானது ஜலத்திற் சென்றால்மாத்திரம் விரைந்தோடும்; தரையிற் செல்லின் இருந்த விடத்தைவிட்டு ஓரடியும் நகரமாட்டாது. முதலை தண்ணீரிற் கிடந் தால் அதற்கு மிக்க வன்மையுண்டு; யானையையும் அது பிடித்திழுத் துக் கொன்றுவிடும்; இத்தகைய வன்மையுள்ள அது தரைக்கு வந் தாலோ தன்னுடைய வன்மைகுன்றிச் சிறு பிராணியினாலும் உயிர் விடும். எப்பொழுதும் பாம்புக்கும் கருடனுக்கும் பகையுண்டு; அத னால் தம்மினும் வலிய கருடனைக் கண்டால் நாகங்கள் நடுங்குவது இயல்பு; அங்ஙன மிருப்பினும் சிவன் முடியிலிருக்கின்ற நாகம், தானிருக்கு மிடத்தின் உயர்வினால் கருடனுக் கஞ்சுவதில்லை; ஒரு காலத்தில் விஷ்ணு கருடவாகனத் தமர்ந்து சிவனைப்பார்க்கச்சென்ற காலத்தில் சிவன்முடியி லணியப்பட்டிருந்த சர்ப்பம் அந்தக் கருடனைப்

பார்த்து, 'கருடா சுகமோ' என்று வினவியதாகவும், அதற்குக் கருடன், அச்சமயம் அதனை ஒன்றுஞ்செய்ய முடியாமையால் தனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, "நீ என்னைக் கண்டு நடுங்கக் கூடியதா யிருந்தும் சிவபெருமா னிடமிருக்கும் வன்மைபற்றி யன்றோ சிறிதும் அஞ்சாமல், என்னிடம் க்ஷேமம் விசாரிக்கின்றாய்," என்று பொருள் ஜனிக்கும்படி, "இருக்குமிடத்தி லிருந்தால் சுகந்தான்" என்று விடை கூறியதாகவும் வழங்கும் ஒரு கதையினால் இஃதுணரப்படும். புலிகள் காட்டைவிட்டு மனிதர் கைவசப்பட்டுக் கூண்டினி லடைபட்டிருக்குங் காலத்தில் அவைகளிடம் நெருங்கி வேடிக்கை பார்ப்பதற்கு எவரும் அஞ்சார்கள்; அவை சுயேச்சையாகக் காட்டில் திரியுங்காலத்தில் அந்தக் காட்டினூடே செல்வதற்கு எவரும் அஞ்சுவார்கள்; காட்டிலிருந்தால் அவற்றிற்கு அவ்வளவு வன்மையுண்டு. மன்னரையாவது பெரியோரையாவது அண்டிப் பிழைக்கின்றவரைத் துஷ்டர் வருத்தினால் உடனே அவனை அந்தப் பெரியோர் நாசஞ்செய்துவிடுவார்; அதனால் துஷ்டரின் கொடுஞ் செய்கை, பெரியோரைச் சார்ந்தவர்களிடம் செல்லாது. கிருஷ்ணனுடைய உதவி யிருந்ததனாலேயே பாண்டவர்கள் துரியோதனன் செய்த வஞ்சனைகளுக் கெல்லாம் தவறி முடிவில் வெற்றி யடைந்தார்கள். இவற்றை யெல்லாம் ஆராயின் எவர்க்கும் வெற்றியும் தோல்வியும் இடச்சார்பினாலேயே உண்டாகுமென்பது விளங்கும். இதுபற்றியே ஔவையும், "சேரிடமறிந்துசேர்," என்று கூறினள்.

ஓடுமோ, நிற்குமோ, ஆகுமோ, வசமோ, என்னசெய்யும் என்பவைகள் எதிர்மறை யெச்சங்களாதலின், 'இல்லை' என்னும் தம் பொருளைக் கொண்டன. தண்ணீர்-குளிர்ந்தநீர். கரி-கரிய நிறத்தை யுடையது. மலர் - ஆகுபெயராய் மாலையை யுணர்த்திற்று. வரை - மூங்கில்; அஃதிங்கே அதனாலாகிய குழலை யுணர்த்திற்று. கிருஷ்ணன் நந்தகோபனிடம் வளர்ந்து கோபாலருடன் கூடிப் பசுமேய்க்குங் காலத்தில் வேய்க்குழ லூதிக்கொண்டு கோபால கிருஷ்ண

னென்னும் பெயருடன் உலவினரென்பது புராணகதை பஞ்சவர்கள் - ஐவர்கள்; பஞ்சம் - ஐந்து. (எ0)

யாக்கை நிலையாமை.

மனுநன்மாந் தாதாமு னானவர்க ளெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவரு மில்லை
பனியதனை நம்பியே யேர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
பல்கோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின்பதத் தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணார்க
ளாசைவலை யிற்சுழலு வார்
வனிதையர்கள் காம விகாரமே பகையாகு
மற்றுமொரு பகைமை யுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, மனு - மனுக்கள், நல் - நல்ல, மாந்தாதா - மாந்தாதாவென்னும் பெயரினையுடைய அரசன், (முதலாக) முன் - முற்காலத்திலே, ஆனவர்கள் எல்லாரும்-உண்டானவர்களியாவரும், மண்மேல் - இந்தப் பூமியின்மீது இருந்து - தங்கி, வாழ்ந்தும் - நெடுங்காலம் ஜீவித்தும், (அவர்களுள்) மடியாது-சாகாமல், இருந்தபேர் - நிலைத்திருந்தவர்கள், இல்லை-யாருமில்லை; அவர் தேடியதை-

அவர்கள் சம்பாதித்த அளவற்ற பொருளை, வாரிவைத்தவரும் இல்லை. அள்ளிப் பத்திரப்படுத்தி வைத்தவர்களும் இல்லை; (அப்படியிருந்தும் மனிதர்கள்) பனியதனை நம்பி-பனி பயிரை விளைவித்துவிடுமென்று அதன்மீது நம்பிக்கைவைத்து, ஏர் பூட்டு கதை என-பயிரிடுவதற்கு ஏரைப்பூட்டி உழுகின்ற கதையைப்போல, பாழான - நாசமடையத் தக்க, உடலை நம்பி - தேகம் நெடுநாளைக்கு இன்பத்தைக் கொடுக்கு மென்று அதன்மீது நம்பிக்கைகொண்டு, பார்மீதில்-இந்தப்பூமியில், இன்னம்-இருந்த நாட்கள்போக இன்னமும், வெகுநாள் இருப்போம் என்று-அதிகநாள்கள் தங்குவோமென்று, பல்கோடி நினைவை - பல கோடி எண்ணங்களை, எண்ணி - நினைத்து, அனிதமாய் - அனியாயமாக, விருதாவில் - வீணிலே, மாய்வதே அல்லாமல் - இறந்து போவதே யன்றி, அன்பாக-மனதிற் பத்தியுண்டாக, நின் பதத்தை-உன்னுடைய பாதங்களை, அர்ச்சித்து - அருச்சனை புரிந்து துதித்து, முத்தி பெறல் வேண்டும் என்று - மோக்ஷத்தைப் பெறவேண்டு மென்று, எண்ணார்கள் - நினைக்கமாட்டார்கள்; ஆசை வலையில்-பெண்ணாசை மண்ணாசை முதலியவைகளாகிய வலையிலே சிக்கி, சுழலுவார்-சுழற்சியுற்று வருந்துவார்கள்; (உலகத்தில் இவர்கள் நாசமடைவதற்கு அங்ஙனங் கொள்ளும் ஆசைகளுள் முதன்மைபெற்றதாகிய) வனிதையர்கள் - பெண்களின்மேற் கொள்ளும், காம விகாரமே-மோகவருத்தமே, பகை ஆகும்-தக்க சத்துருவாகும்; (இது தவிர மனிதரைக் கெடுப்பதற்கு) மற்றும் ஒரு பகைமை உண்டோ-வேறொரு விரோதமு முண்டோ? (இல்லை).

(வி-ரை.) மனுக்கள்: சுவாயம்புமனு, சுவாரோசிஷமனு, உத்தமமனு, தாமசமனு, ரைவதமனு, சாக்ஷுஸமனு, வைவச்சுதமனு, சூர்யசாவர்ணிமனு, தக்ஷசாவர்ணிமனு, பிரமசாவர்ணிமனு, தர்மசாவர்ணிமனு, ருத்ரசாவர்ணிமனு, தேவசாவர்ணிமனு, இந்திரசாவர்ணி மனு ஆகிய பதினால்வருமாவர்; இவர்களுள் ஒவ்வொருவனும் தேவவருஷம் ஐயாயிரத்திருநூற்று நாற்பத்திரண்டும், பத்து மாத

மும், எட்டு நாளும், நான்கு சாமமும், இரண்டு முகூர்த்தமும், காலே யரைக்காலே காணி யரைக்காணி நாழிகையும் கொண்ட எழுபத்தொரு சதுர்யுகம் அரசாள்வன். முந்நூற்றறுபத்தைந்து மானிட வருஷங் கொண்டது, ஒரு தேவவருஷம். மாந்தாதா: இவன் அரசர்களுட் சிறந்த ஒருவன்; இவனுக்கு இந்திரனு லிடப்பட்ட (திரிசதசு) என்னும் மற்றொருபெயரு முண்டு; இவனுக்குப் பாரி இந்துமதி என்பாள்; இவனுடைய புத்திரர்: புருகுச்சன், அம்பரீஷன், முசுகுந்தன் என்பார்; இவனுக்கு ஐம்பது பெண்களுண்டு; அவர்களைச் சௌபரி முனிவர் விவாகஞ் செய்துகொண்டனர்; இந்த மாந்தாதா இராசசூயயாகஞ் செய்து சம்ராட் பட்டம் பெற்றவன்; இவன் ஒரு காலத்தில், தன்னுடைய நாட்டில் மழையில்லாதிருக்க, இந்திரனுடன் போரிட்டு மழை சொரியும்படி செய்தனன். இத்தகைய மனு மாந்தாதா முதலியவர்களே பொன்றினர்களென்றால், மற்றையர் அழிவது சொல்லவும் வேண்டுமோ; அப்படியிருந்தும் மனிதர் தங்கள் வாழ்வை நிலையென்றெண்ணி நின்னைத் தொழாமல் ஆசைவலையிற் சிக்கி யழிகின்றனர். இங்ஙனம் அழிவதற்குப் பெண்ணாசை முதலியவைகளே காரணமாயிருக்கின்றன; ஆதலின், இந்த நிலையற்ற வாழ்வை நம்பாது நிலையான மோக்ஷவாழ்வை யடைவதற்கு வழிதேடவேண்டுமென்பது இதன் கருத்து.

காமவிகாரம் என்பது கர்யாவிகாரம் என நெடித்த லாயிற்று. மக்கள் பலராயினும் இனவொற்றுமைபற்றி, மனுவென ஒருமையாகக் கூறினர் ஆசிரியர். (எக)

வேட்டகத் திகழ்ச்சி.

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின்
மேன்மேலு முபசரித்து

விருந்துகள் சமைத்துநெய் பாறயிர் பதார்த்தவகை
வேண்டுவ வெலாமமைப் பார்
ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப் பா
ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளுலாகி லோ
நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியாதை
நாளுக்கு நாள்குறைவு றும்
நகைசெய்வர் மைத்துனர்க ளனுவல்பார் போவென்று
நாணுமன் மாமி சொல்வாள்
வாட்டமிலை யாளொரு துரும்பா மதிப்பளவன்
மட்டியினு மட்டி யன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, வேட்டகந்தன்னிலே - கலியாணஞ் செய்து கொண்ட மாமியார் வீட்டிலே, மருகன் - அங்ஙனம் பெண்ணை விவாகஞ் செய்த மருமகன், வந்திடும் அளவில் - புதிதாக வந்த மாத்திரத்தில், (அங்குள்ளவர்கள்) மேன்மேலும் - அவனை மேலும் மேலும், உபசரித்து - கொண்டாடி, விருந்துகள் சமைந்து - புதுமையாகச் சாப்பிடுவதற்குரிய உணவுகளை யெல்லாம் சித்தப்படுத்தி, நெய் பால் தயிர் - நெய் பால் தயிர் முதலியவைகளையும், பதார்த்த வகை - கறி வகைகளையும், வேண்டுவ எல்லாம் - இன்னும் வேண்டுவனவாகிய எல்லாவற்றையும், அமைப்பார் - அவனுக்கு ஒழுங்காகச் சேகரித்து இலையில் வைப்பார்கள்; மிகு-மிகுந்த, ஊட்ட வர்க்கவகை-சிற்றுண்டிக் கூட்டத்தின் வகைகளையெல்லாம், செய்து இடுவர்-சித்தப்படுத்தி ஊட்டியிடுவார்கள்; உறுதியாய் - நிச்சயமாக, தைலமிட்டு முழுகுவிப்பார்-தைலம் தேய்த்து அவனை அடிக்கடி

முழுகும்படி செய்வர்; ஓயாது - இடைவிடாமல், தின்ன - மெல்லும் படி, பாக்கு இலை கொடுத்திடுவர்-பாக்கும் வெற்றிலையும் மடித்துக் கொடுப்பார்கள்; (முதலில் அவனுக்கு இவ்வளவு உபசாரம் புரிந்தாலும்) உற்ற-அவன் அங்கேவந்து சேர்ந்த, நாள்-தினமானது, நாலாகிலோ - மூன்றுக்கு மேற்பட்டு நான்காகிவிட்டாலோ, நாட்டம் - அவன்மீதேற்பட்ட அன்பானது, ஒருபடி இறங்குவதுபோல்-ஒவ்வொரு படியாக இறங்கிச் செல்வதுபோல, மரியாதை-அவனுக்கேற்பட்டிருந்த கௌரவமானது, நாளுக்குநாள்-ஒவ்வொரு நாளும், குறைவுறும்-குறைந்துவரும் (அதாவது, அங்குள்ளவர்கள் மரியாதையைக் கைநழுவ விடுவார்கள்); மைத்துனர்கள் - முன்னே மிகவும் உபசரித்துவந்த மைத்துனர்மார்களும், நகை செய்வர்-இன்னும் ஏன் இவன் போகாதிருக்கின்றானென்று அவனைப் பரிகசித்து நகைப்பார்கள்; மாமி-முன்னே எதிரில்வர நாணிக்கொண்டு திரிந்த மாமியானவளும், (அவனுக்கெதிரே வந்து) நாணமல்-வெட்கப்படாமல் நின்று, அலுவல்-ஏதேனுமொரு வேலையை, பார் போ என்று-பார்த்து ஜீவனம் செய்போ என்று, சொல்வாள்-கடுகடுத்துக் கூறுவாள்; வாட்டம் மனையாள்-அவன் அங்கே இருப்பதற்கு வாட்டத்தையடைகின்ற அவனுடைய மனைவியும், (அவனை) ஒரு துரும்பா மதிப்பள்-ஒரு துரும்பாக நினைத்து அவமதிப்பாள்; (ஆதலின் எவனும் மாமியார் வீட்டில் மூன்று நாளைக்குமே விருத்தல் மகா இழிவாம்; அப்படியிருந்தும் அவ்விழிவைக் கருதாமல் அங்கே அதிக நாளைக்கு இருப்பானாயின்) அவன்-அப்படியிருப்பவன், மட்டியினும் மட்டி-மூடனிலும் சிறந்த மூடனாவான்.

(வி-ரை.) மாமியார் வீட்டில் மருமகன் புதிதாகச் சென்றால் அங்குள்ள எல்லோரும் மிகுந்த உபசாரங்கள் புரிவர்; ஆயினும், அதிக நாளைக்கிருந்தால் அவன்மீதிருந்த பக்ஷம் நீங்கி எல்லா விதத்திலும் அவமதிப்பர்; மாமியும் மதியாள்; மனைவியும் மதியாள்; "விருந்தும் மருந்தும் மூன்றுநாள்" என்றபடி விருந்தினராகச் செல்வோர்

மூன்று நாளைக்குமே லிருத்தல் கூடாது; அங்ஙன மிருப்பின் அவர்க்கு உபசாரங் குறைவது இயற்கை; இங்ஙனம் நாளுக்குநாள் உபசாரங் குறையுமென்பதை, "வந்த அன்றைக்கு வாழையிலை மறுநாள், தையலிலை, மூன்றுநாள் கையிலை" என்னும் ஒரு பழமொழியாலும் உணர்க; இதன் கருத்து, 'வந்த அன்று வாழையிலையில் அன்னமிட் டுபசரித்து, மறுநாள் தையல் இலைபோட் டன்னமிட்டு, மூன்றுநாள் கையிற் போடுவர்' என்பதாம். இன்னும், மாமியார் வீட்டில் அதிகநாளைக் கிருந்துண்ணல் இழிவென்பதை, இந்நூலிலேயே 'சாகாதிருந்துஞ் செத்தவர்' வகுப்பைப்பற்றிக் கூறும் பாடலில் 'வருவேட்டகத்திலுண்போர்' என இவர்களையும் சேர்த்திருப்பதனாலு முணர்க; வேட்டகத்தில் மூன்று நாளைக்குமே லிருப்பவர்க்கே இக்கதியானால் மாமியார் வீட்டிலேயே சேர்ந்து வாழும் மருகர்களுக்கு எவ்வளவு இழிவு நேருமென்பதைப் புத்திமான்கள் யூகித்தறிந்து கொள்க. "ஒவ்வொருவரும் சுயேச்சையாகத் தொழில் செய்து வாழ்தலே சிறப்பு; அங்ஙனமின்றிப் பிறர் சகாயத்தை எதிர்பார்த்தல் இழிவாம்," என்பதை விளக்கும் பொருட்டே இங்ஙனம் மிகுந்துப க [illegible] சவேட்டகத்திலுங்கூட அவமதிப்புண்டாம் என்று ஆசிரியர் இதற்கென்றே இப்பாடலைக் கூறியிருக்கின்றனர். (எஉ)

செல்வம் நிலையாமை.

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு
மோடமிக வேநடக்கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல்கொண் மடுவாயி டும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீழ தாய்
நடையுறுஞ் சந்தைபல கூடுமுட னேகலையு
நன்னிலவு மிருளாய் விடும்

நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகன வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஓடம் இடும் - படகைப்போட்டு வைக்கும், இடமது-இடமானது, மணல்-மணல்மேடான விடமாய், சுடும் - சூரிய வெப்பத்தால் சுட்டுக்கொண்டிருக்கும்; சுடும் இடமும் - அவ்வாறு சுடக்கூடிய விடமும், (ஒருகாலத்தில் பள்ளமாய் நீர் நிறைந்து அதில்) ஓடம் - அவ்வாறு கிடந்த படகும், மிகவே நடக்கும் - மிகுதியாகச் செல்லும்; உற்றதோர்-பொருந்தியதாகிய ஒரு, ஆற்றின்மடு-ஆற்றிலுள்ள பள்ளமானது, மேடாகும் - அடுத்த சமயத்திலேயே திட்டாகிவிடும்; மேடு எல்லாம்-முன்னே மேடாயிருந்த விடமெல்லாம், உறு-மிகுந்த, புனல்; கொள்-நீரைக்கொண்ட, மடுவாயிடும் - பள்ளமாய்விடும்; நாடு-நாடானது, காடு ஆகும்-ஒருகாலத்தில் அழிந்து காடாகிவிடும்; உயர்-உயர்ந்த, காடு-வனமும், நாடாகிவிடும்-மனிதசஞ்சாரமுள்ள தேசமாகிவிடும்; நவில் - சொல்லக்கூடிய, சகடு-வண்டிச் சக்கரமானது, மேல் கீழதாய் - மேலாயிருப்பது கீழாகவும் கீழாயிருப்பது மேலாகவும், நடையுறும் - நடக்கும்; சந்தை - சந்தையிலே, பல - பலவும், கூடும் - வந்துநிறையும்; உடனே கலையும் - அப்பொழுதே அவை கலைந்துபோம்; நல் நிலவும் - நல்ல சந்திரிகையாயிருப்பதும், (நீங்கி) இருளாய்விடும் - இருட்டாகிவிடும்; நீடு பகல் - நீண்டபகற்காலமானது, போய பின் - சென்ற பிறகு, இரவு ஆகும்-இராத்திரி காலமானது உண்டாகும், (உடனே அந்த) இரவு

போய் - இருளானது நீங்கி, நிறை - சூரியப்பிரகாசம் மிகுந்த, பகல் போது ஆய்விடும் - பகல் நேரமானது உண்டாகி விடும்; (இவை போல) நிதியோர்-திரவியவந்தர்கள், மிடித்திடுவர் (அப்பொருளெல் லாம் நீங்கி ஒருகாலத்தில்) தரித்திரப்படுவர்; மிடியோர் - (எப்பொ ழுதும் துன்பத்தையே அனுபவித்துக்கொண்டிருந்த) தரித்திரர் கள், செழித்திடுவர் - (ஒருகாலத்தில் அவ்வறுமை நீங்கித் திரவியம் பெற்று) செழிப்புறுவார்கள்; (ஆதலால்) வாழ்வு-மனிதர் வாழ்க்கை யானது, நிசம் அல்ல-உண்மையானதன்று; (மனிதர் அடைந்திருக் கும்) மாடு-மாடுகளும், மனை-வீடுகளும், பாரி - மனைவியும், சனம்- சுற்ற ஜனங்களும், மக்கள்-பிள்ளைகளும், நிதி-திரவியமும், பூஷண மும்-ஆபரணங்களும், மருவு-நித்திரையிற் பொருந்திய, கனவாகும்- சொப்பனத்தைப்போலத் தோன்றி மறைவனவாம்.

(வி - ரை.) ஓடமிடும் இடம், ஆற்றின்மடு முதலியன மாறு படுதல்போல மனிதர் செல்வமும் நிலையாய் நில்லாது; ஆதலின், இந்த நிலையற்ற செல்வத்தை நம்பி வீணாக வாணாளைக் கழிக்காமல் அறஞ்செய்து மோக்ஷமாகிய நிலைத்த செல்வத்தைத் தேடவேண்டு மென்பது இதன் கருத்து. இங்ஙனம் செல்வம் நிலையாதென்பதை, "ஆறிடுமேடு மடுவும்போ லாஞ்செல்வம், மாறிடு மேறிடு மாநிலத்தீர்- சோறிடும், தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக, உண்ணீர்மை வீறு முயர்ந்து," என்னும் நல்வழிச் செய்யுளானும், "துகடீர் பெருஞ் செல்வம் தோன்றியக்காற் றொட்டுப், பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க, அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம், சகடக்கால் போல வரும்," என்னும் நாலடிச் செய்யுளானு முணர்க.

ஓடம்-ஓடுவது; இது தண்ணீரில் காற்றினால் தானேயும் ஓடக் கூடியதா யிருத்தலினாலே இப்பெயர் கொண்டது. சகடு-ஆகுபெய ராய்ச் சக்கரத்தை யுணர்த்திற்று. சந்தை-பலரும் பலவும் கூடி வியா பாரஞ் செய்யும் பேட்டை. மிடித்தல் - வறுமைப்படல். மாடு, மனை,

பாரி, சனம், மக்கள், நிதி என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன; இவை இருதிணையும் விரவியிருப்பினும் மிகுதிபற்றி, 'கனவாகும்' என அஃறிணை முடிபையேற்றன. (எ௩)

பிறந்தார் பெறுபேறு.

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
 தன்பேர் விளங்க வேண்டுஞ்
 சதுருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
 தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
 திசைமெச்ச வேண்டு மல்லால்
 தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே
 செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
 னுகவே வேண்டு மல்லா
 லறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ
 ரதிகபூ பால ராவார்
வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய
 மணியுரகன் முடிக ணெரிய
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வடகுவடு - வடதிசையிலிருக்கின்ற மேருமலையும், கிடுகிடென - கிடுகிடென்றசைய, எழு கடலும் - சப்த சமுத்திரங்களும், (அதிர்ச்சியுற்றுக் குதித்து) அலை எறிய-அலைகளைவீச, மணி-சிரோரத்தினத்தையுடைய, உரகன் - ஆதிசேஷனுடைய, முடிகள் ஆயிரம் சிரங்களும், நெரிய-நொறுங்க, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சடம் ஒன்று எடுத்தால் •

(ஆத்மனாகிய ஒருவன்) ஒரு தேகத்தை எடுப்பானாயின் (அதாவது மானிட ஜன்மமாகப் பிறப்பானானால்) புவிக்கு - இந்தப்பூமியிலுள்ளவர்க்கு, நல்லவன் என்று - நன்மையை உடையவன் என்று எல்லோரும் சொல்லும்படி, (நற்காரியங்களைச் செய்து) தன் பேர்-தன்னுடைய கீர்த்தியினாலே, விளங்கவேண்டும் - எங்கும் பிரகாசிக்க வேண்டும்; இது அல்லாது-இஃதல்லாமல், சதுருடன்-புத்தியுடனே, மெய்ஞ்ஞானி என்று - உண்மைஞானி யென்னவாவது, அவதரிக்க வேண்டும் - பிறக்கவேண்டும்; அல்லால்-இல்லாவிடில், இவன்-இம்மனிதன், இனிய திடம் - இனிமையாகிய மனோவன்மை பொருந்திய, சூரம்-சூரத்தன்மை பொருந்திய, ரணவீரன் என்ன-போரில் வல்லவன் என்று, திசை - திக்கிலுள்ளவர்க ளெல்லாரும், மெச்ச வேண்டும் - தன்னைமெச்சிக் கொண்டாடும்படி மகாவீரனா யுதிக்க வேண்டும்; அல்லால்-அப்படியில்லாவிடில், தேசி என-யாசகர் என்று, வருபவர்க்கு- தன்னிடம் வருகின்றவர்களுக்கு இல்லை, என்னாமல்-இல்லையென்று சொல்லாமல், செய்ய வேண்டும் - உதவிசெய்ய வேண்டும்; அல்லால்-அங்ஙன மில்லாவிடில், அடைவுடன் - முறையுடனே, பல கல்வி-பலநூற் படிப்புக்களை, ஆராய்ந்து-தெரிந்து படித்து, வித்துவான் ஆகவேண்டும்-கவிஞனாகவேண்டும்; அல்லால்-அப்படி யில்லாவிடில், அறிவு ஆன-புத்தி அதிகரித்த, துரைமக்களாக-மன்னர்களாக, வர வேண்டும் - உதிக்கவேண்டும்; இவர்-இப்படித் தோன்றுபவர்களே, அதிகம்-மிகுதியான, பூபாலர் ஆவர்-பூமிபாலகராவார்கள்.

(வி-ரை.) பூமியில் மானிடனாகப் பிறப்பவன், நல்லவனென்று பெயரெடுக்க வேண்டும்; அல்லது ஞானமுடையவனா யவதரிக்க வேண்டும்; அல்லது மகாவீரனாக உதிக்கவேண்டும்; அல்லது இல்லையென் றிரப்பார்க் கில்லையென்னாத விதயம்பெற்ற கொடையாளனாகவேண்டும்; அல்லது கல்வி நிரம்புத லில்லாத நடிப்பு வித்வானாகாமல் உண்மைக் கல்வியாராய்ச்சியையுடைய மகாபண்டிதனாக

வேண்டும்; அல்லது துரைமக்களாகப் பிறக்கவேண்டும்; இங்ஙனம் பிறந்தால்மாத்திரமே உலகத்திற்குப் பயனுடையவனுவான்; இங்ஙனமின்றி வேறுவிதமாகப் பிறப்பவனுல் உலகத்திற்கு எவ்வித பிரயோசனமுமில்லை. மேற்கூறிய விதமாக உலகத்திற்குப் பிரயோசனமுள்ளவராகப் பிறப்பவரே அதனைக் காப்பவராதலின், அவர் பூபாலராவர்.

புவி - இடவாகுபெயர். பேர்விளங்க - மூன்ரும் வேற்றுமைத் தொகை. சதுர் - புத்தி. அல்லது, அல்லால் என்பன குறிப்பு வினையெச்சங்கள். கல்வி-தொழிற்பெயர். வித்துவான்-வித்தையையுடையவன்; இதற்குக் கல்வியை எங்கும் விதைப்பவன் எனப் பொருள் கூறினும் அமையும். திசை-இடவாகுபெயர். பூபாலர்-பூமியைப் பாலிப்பவர். வடகுவடு - வடக்கிலுள்ள மலை; "பூவெனப் படுவது பொறிவாழ்பூவே," என்றபடி பூவென்பது சிறப்புநோக்கித் தாமரையையே உணர்த்துதல்போல, மலையென்பதும் சிறப்புப்பற்றி மேருவையுணர்த்திற்று. குமாரக்கடவுள் ஏறி நடத்தும் மயிலானது நடக்கும்போது மலை கடல் முதலிய எல்லாம் அந்நடையின் வேகத்தால் அதிருமென்பது தோன்ற, "வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய மணியுரகன் முடிக ணெரிய மயிலேறி," என்ருர் ஆசிரியர்.

வேசை நிந்தை.

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேகசீ வன்போல வே
சினேகித்த வும்மையொரு பொழுதுகா ணுவிடிற்
செல்லுரு தன்ன மென்றே
கூடிச் சுகிப்பரென் ஞசையுன் மேலென்று
கூசாம லாணை யிடுவார்

கொஞ்சிட முகத்தைச் சிரித்துக் கொடுத்திதழ்
கொடுப்பர்சும் பன முகப்பர்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்
வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, வண்டம்-குறும்புத்தனமுடைய, பரத்தையர்-வேசியர், பணக்காரர்-திரவியவந்தர்கள், தேடி-தங்களைநாடி, தம் வீட்டில்-தம்முடைய இல்லத்திலே, வந்திடில் - வந்துவிட்டால், தேக சீவன் போல-அவர்களுடைய தேகத்திலுள்ள ஆத்மாவைப்போல, (பற்றுடையவர்போன்று அவரிடம் நடிப்புக்காட்டிப் பொய்ந்நேயங் கொண்டு) சிநேகித்த-உறவுகொண்ட, உம்மை - உங்களை, ஒரு பொழுது காணவிடில்-ஒருநேரம் பார்க்காவிட்டால், அன்னம்-சோறுணாது, செல்லுறுது என்றே-உள்ளே செல்லமாட்டாதென்று சொல்லியே, (அவர்களிடமுள்ள பொருள்களை யெல்லாம் நாடோறும் தந்திரமாகக் கவர்ந்து) கூடி-அவரைச் சேர்ந்து, சுகிப்பர்-இன்பத்தை யனுபவிப்பார்; என் ஆசை-என் விருப்பமானது, உன்மேல் என்று-உன்மீதிலேயே இருக்கின்றது என்று, கூசாமல் - நாணமில்லாமல், ஆணையிடுவார் - சத்தியஞ்செய்வார்கள்; கொஞ்சிட-கொஞ்சும்படி, சிரித்து-நகைத்து, முகத்தைக் கொடுத்து-கன்னத்தை நல்கி, இதழ் கொடுப்பர் - வாயிதழையுங் கொடுப்பார்கள்; சும்பனம் - அவர் சுவைத்தலுக்கு; உகப்பர்-அருவருப்புக் கொள்ளாமல் சந்தோஷிப்பார்கள்; (இவ்வாறு) வேடிக்கை பேசி-விநோதமான வார்த்தைகளைக் கூறி, கைமுதல் - அவர்க

ளுடைய கையிலுள்ள முதற்பொருளை யெல்லாம், பறித்தபின்-கைப் பற்றிக்கொண்ட பின்னர், வேறுபட - அவர்கள் மனம் வேற்றுமை யடைய, நிந்தை செய்து - அவரை நிந்தித்து, விடவிட-மனம் அதிக மாக விட்டுப்போகும்படி, பேசுவார்-ஏசுவார்கள்; தாய் கலகம் மூட்டி விட்டு-தாய்க்கிழவியினாலே கலகத்தை மூட்டிவிட்டு, துரத்திவிடு வார்-வீட்டைவிட் டோட்டிவிடுவார்கள்; (இவர்கள் இங்ஙனம் மகா கொடியவர்களா யிருப்பதனாலே) வாடிக்கையாய் - வழக்கமாக, இந்த வண்டப்பரத்தையர் - இந்தக் குறும்பு மிகுந்த தாசிகளுடைய, மயக் கத்தை - மாயையை, நம்பலாமோ-நம்புதல் கூடுமோ? (ஒருபோதும் நம்பலாகாது.)

(வி - ரை.) தாசிகள் முதலில் தம்மைத் தேடி வருபவர்களி டம் பொய்ந்நேயங் காட்டி அவர்களுடைய பொருள்களை யெல்லாம் பறித்துக்கொண்டு கை வறண்டபின் சிறிதும் விசுவாசமில்லாதவ ராய், அவரை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார். ஆதலால், இந்தப் பாவிகளை எப்பொழுதும் நம்பலாகாது; இங்ஙனம் இவர்களை நம்ப லாகா தென்பதுபற்றியே இந்நூலில் பலவிடங்களிலும் இவர்கள் தன்மையை ஆசிரியர் கூறியிருக்கின்றனர். இச்சதகத்தில் 56 ஆஞ் செய்யுளும் இக்கொடியரைக் குறித்தே அமைக்கப்பட்டிருத்தல் காண்க. தாசி வீடே கைலாயமெனத் திரியும் பேதையர் இச்செய் யுட்களைக் கவனிப்பாராக.

கைமுதல்-ஏழாம் வேற்றுமைத்தொகை. விடவிட - விடுதலின் அதிகரிப்பைக் காட்டவந்த இரட்டைக்கிளவி. தாய் கலகம் - மூன் றாம் வேற்றுமைத்தொகை. 'பரத்தையர்' இரண்டிடத்துங் கூட்டப் பட்டது.

இச்செய்யுளின் இரண்டாமடியில் அசம்பாவிதமான சொற்றொட ரொன்று 'கொஞ்சிட முகத்தைச் சிரித்து' என மாற்றப்பட்டிருக்கிறது.

இதற்கிது உறுதியெனல்.

கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக் கங்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்ய வசனம்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதி தேடல்
விரகருக் குறுதிபெண மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதி தீரம்
செய்க்குறுதி நீருரும் பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதி வேழஞ்
செல்வந் தனக்குறுதி பிள்ளைகண கர்க்குறுதி
சேர்ந்திடுஞ் சர்ச்சனர்க ளே
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவ னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மைக்கு உறுதியாகிய - அஞ்சனத்திற்கு வலிமை யாகிய, விழி - கண்களையுடைய, குறமடந்தை - வள்ளி நாயகியும், சுரர் மங்கை - தேவர்களுக்குச் சொந்தப் பெண்ணாகிய தெய்வயானை யும், மருவும் - கூடிமகிழ்கின்ற, தலைவனே - நாயகனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கைக்கு உறுதி - கரத்திற்கு வலிமை செய்வன, வேல் வில் - வேலும் வில்லு மாம்; மனைக்கு-வீட்டிற்கு, உறுதி-வலிமை, மனையாள்-இல்லாளாம் கவிக்கு உறுதி-செய்யுட்களுக்கு வன்மை, பொருள் அடக்கம் - விசேஷமான அருத்தங்கள் அடங்கியிருப்பதாம்; கன்னியர் தமக்கு உறுதி - பெண்களுக்கு வன்மையாவது, கற்புடைமை - நிறையை யுடைத்தாயிருத்தலாம்; கண்டிடில்-ஆராய்ந்துபார்க்கு மிடத்து, சொ

ற்கு உறுதி-வார்த்தைக்கு உறுதியாவது, சத்தியவசனம் - உண்மை மொழி கூறுதலாம்; மெய்க்கு உறுதி-ஒருவனுடைய தேகத்திற்குப் பலம், முன் பின் - முன்னும் பின்னும் பிறந்தவர்களாகிய தமைய னும் தம்பியுமாவர்; சபைக்கு-அவைக்களத்துக்கு, உறுதி - வன்மை, வித்வசனம்-வித்வான்கள் தங்கியிருப்பதாம்; வேசையர்க்கு உறுதி - பரத்தையர்க்கு வல்லமையாவது, தேடல்-பலரை ஏமாற்றிப் பொரு ளைச் சம்பாதித்தலாம்; விரகருக்கு-காதலுடையவர்க்கு, உறுதி-திடமா வது, பெண் - தாம் நினைத்த பெண்கிடைத்தலாம்; மூப்பினுக்கு - விருத்தாப்பியதசைக்கு உறுதி-வலிமை செய்வது, ஊண்-புஷ்டிதரும் உணவாம்; வீரருக்கு - சூரருக்கு, உறுதி-வலிமை செய்வது, தீரம் - மனோதிடமாம்; செய்க்கு - பயிர்கள் விளையும் நிலத்திற்கு, உறுதி- வலிமையாவது, நீர்-ஜலமாம்; அரும்-அருமையாகிய, பார்க்கு உறுதி- பூமியிலுள்ளவர்களுக்கு வன்மையாவது, செங்கோல்-அரசருடைய நீதி யுள்ள ஆட்சியாம்; செழும் படைக்கு-செழித்த சேனைக்கு, உறுதி- வலிமை செய்வது, வேழம் - யானைப்படையாம்; செல்வம் தனக்கு- ஐசுவரியத்திற்கு, உறுதி-வன்மை, பிள்ளைகள்-அதனை அனுபவித்து விருத்தி செய்யும் நற்புத்திரர்களாவர்; நகர்க்கு - பட்டினங்கட்கு, உறுதி - பலம், சேர்ந்திடும் - அதிலே சேர்ந்திருக்கும், சர்ச்சனர் களே - உத்தமர்களேயாவர்.

(வி - ரை.) வேல் வில் முதலிய படைகளிருந்தால்மாத்திரந் தான் துஷ்டர்களை யடக்கி ஜெயம் பெற்று மேன்மையடைவதற்கு கை உதவியாகும். வீட்டில் மனைவியிருந்தால்மட்டுமே இல்லறமா னது செவ்வனே நடைபெறும்; இதனை, "பாழே மடக்கொடியில்லா மனை" என்பதா லுணர்க. பொருளடக்கமில்லாத கவி அறிவுடைய ரால் கொண்டாடப்படமாட்டாது. கற்புடைய மங்கையே உலகத் தில் என்றும் கீர்த்தியுடன் விளங்குவாள். சத்தியமான வார்த்தை களைக் கூறுதலே உலகத்திற் சிறந்ததாம். ஒருவனுக்குச் சகோதரர்க ளிருந்தால் இரண்டு கைகளைப் போன்று ஆபத்து வந்தகாலத்தில்

உதவி செய்வார்கள்; சகோதர ரில்லாதவர் எதிலும் வன்மையற்றவ ராவார்; இதனை, "மாறில் உடற்பிறப்பில்லா வுடம்பு பாழ்" என்னும் ஔவை திருவாக்காலு முணர்க. வித்வான்கள் தங்கியிருக்கும் சபை தான் சிறப்புற்று விளங்கும். தாசி சம்பாத்தியம் செய்பவளா யிருந் தால் மாத்திரந்தான் எவராலும் கொண்டாடப்படுவாள். விரகதாப முடையவர்களுக்குக் குறித்த பெண் கிடைத்தால் மாத்திரந்தான் மனச்செழிப் புண்டாகும்; இல்லாவிடில் அவர்கள் அவ்விசாரத் தால் ஒரு தொழிலும் செய்ய இயலாதவர்களா யிருப்பார்கள். விருத் தாப்பியருக்கு இரத்தம் ஊறத்தக்க நல்ல ஆகாரங்கள் சேர்ந்துவந் தால் மாத்திரந்தான் உடம்பில் வலிமை யுண்டாகும். மனோதைரிய மிருந்தால் மாத்திரந்தான் வீரருக்கு வெற்றி யுண்டாகும். நிலத்தில் சேதமின்றி நீர் தங்கினால் மட்டுந்தான் அதிற் பயிர்கள் செழித்து வளர்ந்தோங்க, அதனால் அந்நிலத்திற்குச் சிறப்புண்டாகும். அரசன் செங்கோல் செவ்வனே நடைபெற்றால் மாத்திரந்தான் பாரிலுள்ள வர்கள் க்ஷேமத்தை யடைவார்கள்; சேனைகளில் யானைகளிருக்கும் படைக்குத்தான் வெற்றி அதிகரிக்கும்; யானை எதினும் மேற் பட்ட வன்மை யுடையதாதலின் எவரும் அதற்கு முன்னின்று ஜெயம் பெறுதல் கஷ்டசாத்தியமாம். ஒருவர்க்கு எவ்வளவு செல்வ மிருந்தாலும் புத்திரரில்லாவிடில் சிறப்பில்லை. சர்ச்சனர்களிருக்கும் ஊரே எல்லா வூர்களினுஞ் சிறப்புற்றதாய் விளங்கும்.

வேல் வில் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. மனையாள் - வீட்டிற் குடையவள். கன்னியர் - அழியாத்தன்மை யுடையவர். சத்தியவசனம்-இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்கதொகை. முன், பின் என்பன காலவாகுபெயர்கள்; இவை முறையே முன் பிறந்தவனையும், பின் பிறந்தவனையும் உணர்த் தின. தேடல் - தொழிற்பெயர். பார்-இடவாகுபெயர். செங்கோல்- ஆகுபெயராய் அதனால் நடத்தப்படும் ஆட்சியை யுணர்த்திற்று. தெய்வயானை இந்திரன் மகளாதலின், 'சுரர் மங்கை' எனப்பட்டாள்.

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றாய்பழுது சொல்லுவாண்
மனையாட்டி சற்று மெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையிற் றைரிய மிலை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ்
செல்வரைக் காணி னாணும்
உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
லுயிருடன் செத்த பிணமா
முலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னால்
மறுவசன முஞ்சொலார் துன்பினிற் றுன்பமிது
வந்தணுகி டாதருளு வாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, (ஒருவனுக்கு) வறுமை வந்திடில் - தரித்திரம் வந்தால், தாய் - பெற்ற அன்னையும், பழுது சொல்லுவாள்-அவன்மீது குற்றங்களைக் கூறுவாள்; மனையாட்டி - மனைவியும், சற்றும் - சிறிதும், எண்ணாள் - அவனை மதிக்கமாட்டாள்; வாக்கில் - அவனுடைய நாவிலே, பிறக்கின்ற - உண்டாகின்ற, சொல் எல்லாம் - வார்த்தை முழுதும், பொல்லாத வசனமாய்-கெட்டவார்த்தையாய், வந்து விளையும் - வந்து சம்பவிக்கும்; சிந்தையில் - அவன் மனதிலே, சிறுமையொடு-தாழ்வுடனே, தொலையாவிசாரமே அல்லாது-நீங்காக்கவலையே குடிகொள்ளுமல்லாமல், தைரியம் இல்லை-எதிலும் திடமேற்படாது; செய்ய-செவ்விதாகிய, சபைதன்னிலே - பலர் கூடியிருக்கும் கூட்

டங்களிலே, சென்றவர - போய்வர, வெட்கமாம் - அவனுக்கு நாண மாம்; செல்வரைக் காணில் - தனவந்தரைப் பார்த்தால், நாணும் - அவன் வெட்கப்படுவான்; உறுதி பெறு - தைரியமான, வீரமும் - அவனுடைய வீரச்செய்கையும், குன்றிடும்-குறைந்துவிடும்; விருந்து வரில் - அவன் வீட்டிற்கு விருந்தினர் வரும்பக்ஷத்தில், உயிருடன் செத்த பிணமாம் - அவன் உயிருடனே செத்தபிணமாய் ஒன்றுஞ் செய்ய-வியலாதவனுவான்; உலகம் பழித்திடும் - உலகத்திலுள்ளவர் கள் அவனை மிகவும் நிந்திப்பார்கள்; பெருமையோர் - தற்பெருமை யுடையவராகிய, ஒருவரொடு-ஒரு தனவந்தரிடத்தில், முன்பு சென்று- அவன் முன்னேபோய், செய்தி சொன்னால் - ஏதேனுமொரு காரி யத்தைக் கூறினால், (அவர்கள் அவனுக்கு) மறுவசனமும் சொல்லார்- மறுவார்த்தையுங் கூறமாட்டார்கள்; துன்பினில் துன்பம் - துன்பத் தில் மிகுந்ததுன்பம், இது - இந்தத் தரித்திரமேயாகும்; (ஆதலின்) வந்து அணுகிடாது - (என்னிடத்தே இத்தகைய வறுமை) வந்து சேராமல், அருளுவாய்-கிருபை செய்வாயாக.

(வி—ரை.) உலகத்தில் ஒருவனுக்குத் தரித்திரம் வந்து குடி யேறினால், தாயும், "இவன் வீணே சோற்றைத் தின்று திரிகின் றனே," என்று நிந்திப்பாள்; மனைவியும், "ஐயோ! மற்றவர்களெல் லோரும், நல்ல சம்பாத்தியஞ் செய்து தங்கள் மனைவியர்க்கு அள வற்ற ஆடையாபரணங்களை வாங்கிக் கொடுக்கின்றார்களே; நான், ஒன்றுக்கு முதவாத சவமாகிய உன்னைக் கட்டிக்கொண் டழுகின் றேனே," என்று திட்டி அவனை அவமதிப்பாகப் பேசுவாள். அவன் எதைச் சொன்னாலும் ஜனங்கள் அவனுடைய வார்த்தைகளைக் கெட் டவைகளாகவே கருதுவார்கள். அவனுடைய மனதில் எந்தக் காரிய மூஞ் செய்யத் துணிவேற்படாமல் சஞ்சலமே குடிகொண்டிருக்கும். அவனை ஒருவரும் மதியார்களாதலால் அவனுக்கு எவ்விடத்திலும் தாழ்மையே உண்டாகும். அவன், தன்னிடம் தக்க ஆடையாபரணங்க ளின்மையால் தன்னுடைய தாழ்ந்த நிலைமையைக் காட்டிக்கொண்டு

சபையிற் செல்வதற்கும் தனவந்தரிடம் போவதற்கும் நாணுவான். பொருள் ஊக்க மில்லாததால் அவனுக்கு வீரத்தன்மையுமிராது; எவரேனும் தனக்குத் தீங்கு செய்யினும் அவன் பொறுத்துக்கொண்டு போவான். தன்னிடத்தே விருந்தினர் வரின் அவர்களை உபசரிக்க ஒன்று மில்லாமையால் கவலைப்பட்டுச் செத்தபிணம்போல ஒன்றுஞ் செய்ய வியலாதவனுவான். உலகத்தில் அவனைப் பார்த்தவர்க ளெல்லோரும், "இவன் ஏதேனுமொரு தொழில்செய்து சம்பாதிக்கலாகாதா?" என்று நிந்திப்பார்கள். பணக்கொழுப்பால் கர்வங்கொண்ட பேதையரிடஞ் சென்று அவன் தன்னுடைய கஷ்டங்களை யெடுத்துக் கூறினுல், அவர்கள் அதற்கு வாயைத் திறந்து மறுவார்த்தை சொல்லார்கள். ஆதலால், இந்தத் தரித்திரமானது உலகத்தில் மிகவும் துன்பஞ் செய்வதாகும். தரித்திரர்க்கு இங்ஙனம் எங்கும் கஷ்டங்கள் நிகழ்வதை என்றும் நாம் அனுபவத்திற் காணலாம். வறிஞரை இவ்வாறு எவரும் மதியார்க ளென்பதை,

"கல்லானே யானுலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற் சொல்."

என்னும் நல்வழிச் செய்யுளானு முணர்க. (எஎ)

தீச்சார்பால் நன்மையிழப்பு.

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவு
மாயிரம் பேர்கூடி வீடுகட் டிடிலேத
மறைகுறளு முடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி
லீகிடந் திசைகேட தாம்

இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னதுதடுக் கும்
சேனைமன் னவரென்ன கருமஙிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற் குறைபடுஞ்
சிங்கத்தை யும்பெரிய ருஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல்ல வோ
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளா ளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மானையும் - பெண்மானாகிய வள்ளியையும், திகழ் - அழகுடன் பிரகாசிக்கின்ற, தெய்வயானையும் - தெய்வயானையையும், தழுவும் - சேர்கின்ற, மணி - அழகிய, மார்பனே - மார்பகத்தை யுடையவனே! அருளாளனே - அடியார்மீது கிருபையை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஆனை - யானையானது, தண்ணீரில் - ஜலத்திலே, நிழல் பார்த்திட-தன்னுடைய நிழலைப்பார்க்க, (அதற்கிடையூறாக) தவளை-மண்டூகமானது, அங்கே சென்று - அவ்விடத்திற்போய், கலக்கி - நீரைக்கலக்கி, உலவும் - சஞ்சரிக்கும்; ஆயிரம்பேர் கூடி - ஆயிரம் மனிதர்கள் திரண்டு, வீடு கட்டிடில்-வீட்டைக்கட்டி அரும் பிரயாசையில் முடித்தால், (அதற்கு) ஏதம் அறை - குற்றஞ் சொல்லுகின்ற, குறளும்-கோட்சொல்பவனும், உடனே வரும் - அப்பொழுதே வருவான்; ஏனை-மற்ற, நல் - நன்மையையுடைய, பெரியோர்கள் - உயர்ந்தவர்கள், போசனஞ் செய்யும் அளவில்-ஆகார முண்ணுகின்ற காலத்திலே, (அதில்) ஈ கிடந்து - ஈயானது செத்துக்கிடக்க, இசை-பொருந்திய, கேடதாம் - கெடுதியாம்; இன்பம் மிகு - இனிமை மிகுந்த, பசுவிலே-பசுவினிடத்து, கன்று சென்று-கன்றானது செல்ல, ஊட்டுதற்கு-அதற்குப் பசு பாலூட்டுவதற்கு, இனிய-பால் கறப்பதனு

லேற்படும் சந்தோஷத்தையுடைய, கோன்-இடையன், அது - அந்தப் பசுவை, தடுக்கும் - தடுப்பான்; சேனை மன்னவர் - படையையுடைய அரசர்கள், என்ன கருமம் நியமிக்கினும் - எவ்வகை நற்காரியங்களை ஏற்படுத்தினும், (அவை) சிறியோர்களால் - (அவற்றை அரசன் கட்டளைப்படி நடத்தும் வேலையாட்களாகிய) அற்பர்களால், குறைபடும் - குறைவுறும்; (முன்னே மிகவும் சிநேகமாயிருந்த) சிங்கத்தையும் பிங்களன் என்னும் ஒரு சிம்மத்தையும், பெரிய - பெரிதாகிய, ருஷபத்தையும் - சஞ்சீவகன் என்னும் ஓர் எருதையும், பகைமை செய்தது-விரோதமுடையவைகளாகும்படி செய்து கெடுத்தது, ஒரு நரி அல்லவோ-ஒரு நரியன்றோ?

(வி - ரை.) யானையானது தண்ணீரின் ஓரத்தில் நின்று அதிலே தெரியும் தன் நிழலைப் பிரியத்தோடு பார்க்கும்; அப்போது அங்கே சஞ்சரிக்கும் தவளைகள் அந்நிழலுக்கு நேரே ஓடித்திரியும்; அதனால் அந்நிழல் தெரியாமற் போகும்; பலபேர்கள் கூடி ஒரு வீட்டைக் கட்டி முடித்தால் அங்ஙனம் முடிந்த பின்னர் ஒருவன் வந்து 'அது குறை இது குறை' என்று அவ்வீட்டிற்குக் குறை கூறுவான்; இஃது உலகத்தியற்கை. போசனத்தில் ஈ கிடந்தால் உடனே உட்சென்ற அவ்வாகாரத்தை வாந்தியின் மூலம் வெளிப்படுத்திவிடும். பசுவின்பால் கன்றுக்கு மிகவும் உரித்தானதா யிருப்பினும் பால் கறக்கும் இடையனால் அது அப்பாலைப் பருகுதற்குத் தடை யேற்படும். அரசர்கள், ஜனங்களுக்கு சௌகரிய முண்டாகும்படி அநேகம் நன்மையான காரியங்களைச் செய்யினும் ஆங்காங்கேயுள்ள வேலைக்காரர்களாகிய அற்பர்கள் இலஞ்சம் வாங்கும்பொருட்டு அந் நன்மைகளுட் பல கெடுதிகளைப் புரிவர்; இதனை இப்போது தாழ்ந்த பணியாளரால் பற்பல விடங்களிலும், ஊர்ப் பிரயாணங்களிலும் ஜனங்கள் பொருளையு மிழந்து மிகுந்த துன்பத்தை யடைவதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். இங்ஙனம் கைக்கூலியை விரும்பி நன்மை கெடுதியும் பாரபக்ஷமுஞ் செய்யும் சண்டாளர்கள் என்றும் மீளா

நேரிற்காளாவர்; இப்போதவர்க்கிது மகிழ்ச்சியா யிருப்பினும் பின்னர் நிச்சயமாகக் கேட்டைத்தரும்; இகத்திலேயே அவர் தரித்திரராய் வயிற்றிற் கொன்றுமின்றித் திரிந்தலைவர்; இத்தகையர் அநேகரை நாம் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கின்றோம். மிகவும் சிநேகமாயிருந்த சிங்கத்தையும் எருதையும் ஒரு நரி பிரித்து எருதை மரண மடையும்படி செய்தது பஞ்சதந்திரக் கதையிலுள்ளது. வள்ளி, மான் வயிற்றிற் பிறந்தவளாதலின் அவளை மானென்றும்; தெய்வயானை, ஐராவதத்தால் வளர்க்கப்பட்டமையின் அவளை யானை யென்றும் கூறினர் ஆசிரியர்.

குறளை - கோள்; இஃதாகுபெயராய்க் கோட் சொல்லுவோனை யுணர்த்திற்று. (எஅ)

இடையூறுற்றும் பயன்படுபவை.

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலு மூற்றுநீ
ரமுதபா னங்கொடுக் கு
மாதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலு-
மப்போது முதவிசெய் வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங்
குவலயத் திருள் சிதைக்குங்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு
வீறுட னுதாரிதான் மிடியான போதினிலு
மிகநாடி வருபவர்க் கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றளவு
வியைந்துள மகிழ்ந் துதவுவான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவே லணிந்த முருகா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மாறுபடு - தேவர்களோடு பகைகொண்ட, சூரசங்கார-சூரபத்மனை நாசஞ் செய்தவனே! கம்பீரனே - வீராவேசத்தையுடையவனே! வடி-கூர்மையுள்ள, வேல் அணிந்த-வேலாயுதத்தைக் கரத்தில் தரித்த, முருகா - குமாரக் கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, ஆறு-நதியானது, தண்ணீர் வற்றிவிட்டாலும் - தண்ணீர் குறைந்து போனாலும், ஊற்று நீர் - ஊறுகின்ற சுத்த ஜலமாகிய, அமுத பானம் - அமுத பானத்தை, கொடுக்கும்-தரும்; ஒரு - ஒப்பற்ற, ஆதவனை-சூரியனை, பாதி-பாதியுடலை, கட்செவி-கேதுவென்னும் பாம்பானது, மறைத்தாலும்-மூடினாலும், அப்போதும் - அங்ஙனம் மறைவுற்ற காலத்திலும், உதவி செய்வன்-அவன் உலகத்திற்குத் துணைபுரிவன்; கூறும்-உயர்த்திக் கூறப்படுகின்ற, மதி - சந்திரன், தேய் பிறையதாக-பிற்பக்கத்தில் தேய்ந்து போகக்கூடிய பிரபையையுடையதாக, குறையினும்-குறைந்தாலும், (அங்ஙனங் குறைவுபட்ட காலத்திலும் தன்னொளியன்றவாவு) குவலயத்து-இப்பூமியிலுள்ள, இருள்-அந்தகாரத்தை, சிதைக்கும்-கெடுத்துப் பிரகாசத்தை யுண்டாக்கும்; கொல்லை - தோட்டத்திலுள்ள பயிரானது, சாவிபோய்விட்டாலும் - விளையாமற் கால் விளைச்சல் அரை விளைச்சலாகப் போய்விட்டாலும், அங்கு-அவ்விடத்தில், வரும்-வருகின்ற, குருவிக்கு-குருவிகளுக்கேனும், மேய்ச்சல் உண்டு - தின்னுதலாகிய தானியம் அவ்விடத்திற் கிடைக்கும்; உதாரி - உதார குணமுள்ளவன், மிடி ஆனபோதிலும் - தரித்திரமடைந்தாலும், மிக - மிகுதியாக, நாடி-தன்னைத்தேடி, வருபவர்க்கு-வருகின்றவர்களுக்கு, வேறு வகை இல்லையென்று - கொடுப்பதற்கு வேறே மார்க்கம் இல்லையென்று, உரையாது - சொல்லாமல், இயன்ற அளவு-முடிந்தவரையில், இயைந்து-பொருந்தி, உளம் மகிழ்ந்து-

மனம் சந்தோஷித்து, வீறுடன்-பெருமையுடனே, உதவுவான்-ஏதாவது கொடுத்தனுப்புவான்.

(வி - ரை.) ஆறு, நீர் வற்றிவிட்டாலும் தன்னிடம் வருவார்க்கு ஊற்றுநீரையேனும் உதவும்; சூரியன், கேதுவென்னும் கிரகத்தால் பாதியுடல் மறைக்கப்பட்டாலும் அப்போதும் உலகத்திற் பிரகாசித்து உதவிசெய்வான்; தேய்பிறையிலும் சந்திரன் இருளை நீக்கி உலகத்தார்க் குதவி செய்யும்; கொல்லைப் பயிர் பூரணமாக விளையாமற் சாவியாய்ப்போனாலும் சிறிது தானியங்களை யுடையதாய் அங்கே வரும் குருவிகளுக்கேனும் ஆகாரம் நல்கும்; இவைபோல, உதார குணமுடையவன் மிகுந்த வறுமையடைந்தாலும், தன்னிடம் வருவார்க்கு இல்லை யென்னமல் இயன்றவரையில் ஏதேனுங் கொடுப்பான்.

"ஆறுதண் ணீர்வற்றி விட்டாலும்' என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. ஊற்று-தொழிலாகுபெயர். 'மாதவனை பாதியை' என்னுந் தொடர் ஈருருபேற்றது. பிறை-சந்திரனின் பதினறு பாகத்தில் ஒருகூறு. சாவி-தானியம் பிடிக்காமல் காய்ந்துபோகும் பயிர். 'மேய்ச்சல்' என்னுந் தொழிற்பெயர் ஆகுபெயராய்த் தானியத்தை யுணர்த்திற்று. (எக)

இன்னவர்க் கிதில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை
யுண்டிடார்க் குறுதி நிலையே
துணைமையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வ மேது

சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசை யேது
துர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்க மேது
மார்புருவ வாலிமே லஸ்திரம் விடுத்தநெடு
மான்மருக ஞன முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மார்பு உருவ - நெஞ்சினுள்ளே துளைத்து அப்பாற் செல்லும்படி, வாலிமேல்-வாலியின்மீது, அஸ்திரம் விடுத்த-பாணத்தைப் பிரயோகித்த, நெடு - நீண்ட, மால்-மகாவிஷ்ணுவுக்கு, மருகஞன - மருமகனுகிய, முருகா - குமரனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சார்பு இல்லாதவருக்கு - துணையற்றவர்களுக்கு, நிலை ஏது - நிலைபேறில்லை; முதல் இல்லாதவருக்கு-வியாபாரத்துக்குத் தக்க முதற்பொருளில்லாதவர்களுக்கு, இலாபம் ஏது - வருவாயில்லை; தயை இல்லாதவர்தமக்கு-அன்பில்லாதவர்களுக்கு, உறவு ஏது - சிநேகமில்லை; பணம் இல்லாதார்க்கு - பொருளில்லாதவர்களுக்கு, வேசை உறவு ஏது - தாசி நேசமில்லை; ஊர் இல்லாதவர்தமக்கு - நாடில்லாத அரசர்களுக்கு, அரசு ஏது - அரசாட்சியில்லை; பசி வேளை - பசியுள்ள நேரத்திலே, உண்டிடார்க்கு - ஆகாரமுண்ணுதவர்களுக்கு, உறுதி நிலை ஏது - தேகத்தில் வன்மை நிலைத்தல் இல்லை; உண்மை இல்லாதவர்க்கு - சத்திய மற்றவர்களுக்கு, அறம் ஏது - தருமம் இல்லை; முயல்வு இல்லார்க்கு - முயற்சி யில்லாதவருக்கு, உறுவது ஒரு - வந்துபொருந்துவதாகிய ஒப்பற்ற, செல்வம் ஏது-ஐசுவரியமில்லை; சோர்வு இல்லாதவருக்கு - எதிலும் தளர்ச்சியற்றவர்க்கு, மற்றும் ஒரு - பின்னுமொரு, பயம் ஏது - அச்சம் இல்லை; சுகம் இல்லார்க்கு-தேகசௌக்கியம் இல்லாதவர்களுக்கு, ஆசை ஏது - எதிலும் விருப்பம் இல்லை;

துர்க்குணம் இல்லாதவர்க்கு - கெட்டகுண மில்லாதவர்களுக்கு, எதிராளி ஏது - பகைவன் இல்லை; இடர் செய் - பலர்க்கும் துன்பத்தையே செய்கின்ற, துஷ்டர்க்கு - கொடியருக்கு, இரக்கம் ஏது - அன்பு இல்லை.

(வி - ரை.) துணையில்லாதவர் தங்கட்கு வரும் இடையூறுகளை நீக்கிக்கொள்ள முடியாதாதலால், அவற்றின் உபத்திரவத்தால் அவர்கள் ஓரிடத்திலும் தங்க முடியாது. முதலிருந்தாற்றான் வியாபாரங்களைப் பெருக்கமாக நடத்தி, அதிக லாபத்தை யடையலாம். மனத்தில் அன்பிருந்தால் மாத்திரந்தான் மனிதருள் ஒருவர்க்கொருவர் சிநேகமிரும்; அஃதின்றி மிருகங்களைப்போற் பற்றுதலற்று அவரவர் காரியங்களைப் பார்த்துக்கொண்டு திரிபவர்களுக்கு ஒருவர் உறவும் அகப்படாது; அதனால் அவர்கள் ஒருவித சிறப்பையும் அடையமாட்டார்கள்; "அன்பீனும் ஆர்வ முடைமை யதுவீனும், நண்பென்னும் நாடாச் சிறப்பு," என்பது திருக்குறள். பணமுள்ளவர்கள் தாம் அடிக்கடி கண்டகண்ட தாசிகளுடைய உறவையெல்லாம் பிடிப்பார்கள்; பணமில்லாதவர்க் கவர் நேயம் அகப்படுவதருமை. நாடிருந்தால் மாத்திரந்தான் மன்னர் அரசாட்சி செய்யமுடியும். காலந்தப்பி உணவுண்பவர்களுக்கு உடம்பில் வன்மையே யிராது; பல வியாதிகளே உண்டாகும்; வேலை செய்வதையே பெரிதாக நினைத்துச் சாப்பிடாமல் கிடக்கும் இயல்பினர் இதனைக் கவனிப்பாராக. பொய்கூறும் இயல்பினர்க்குப் பாவமே குடியேறு மாதலின், அவரிடத்தில் தருமம் எள்ளளவும் விருத்தியடையாது. முயற்சியிருந்தால் மாத்திரமே செல்வமுண்டாகும்; "முயற்சி திருவினையாக்கும்," என்பதை உய்த்துணர்க. தளர்ச்சியுற்றவர் எதற்கும் அஞ்சார்கள்; அவர்களுடைய மனவூக்கமானது எக்காரியத்திலும் ஜெயத்தை யுண்டாக்கும். தேகத்திற் சுகமில்லாமல் உபத்திரவம் மிகுந்திருப்பவர்களுக்கு எந்த வஸ்துவிலும் விருப்பமேற்படாது. துர்க்குண மில்லாதவரிடத்தில் எவரும் சிநேகமே கொள்வார்க ளாதலின் அவர்களுக்குப் பகை ஏற்பட

மாட்டாது. மனத்தில் அன்பில்லாதவர்களே துஷ்ட காரியங்களைச் செய்வார்கள். 'எது' என்பது எதிர்மறையெச்சம். (அ0)

இதினுமிது நன்றெனல்.

பஞ்சரித் தருமையறி யார்பொருளை யெய்தலிற்
 பலர்மனைப் பிச்சை நன்று
 பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
 பட்டினி யிருக்கை நன்று
தஞ்சவொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
 சமர்செய்து தோற்ற னன்று
 சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
 சன்னியா சித்த னன்று
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
 லரவினொடு பழகுவது நன்
 றந்தணர்க் காபத்தி லுதவா திருப்பதனி
 லாருயிர் விடுத்த னன்று
வஞ்சக ருடன்கூடி வாழ்தலிற் றனியே
 வருந்திடுஞ் சிறுமை நன்று
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பஞ்சரித்து - கெஞ்சி, அருமை அறியார் - தம்முடைய அரிய தன்மையை அறியாதவர்களுடைய, பொருளை - திரவியத்தை, எய்தலின் - அடைவதைக்காட்டினும், பலர் மனை - பலர்வீட்டிற்சென்று செய்யும், பிச்சை நன்று-யாசகம் நல்லதாகும்; பரிவாக-அன்பாக, உபசாரம் இல்லா-உபசரித்தல் இல்லாத, விருந்தினில் - விருந்துண்பதைக் காட்டினும், பட்டினியிருக்கை - சாப்பிடா

திருத்தல், நன்று-நன்மையாம்; தஞ்சம்-எளிமையுள்ள, ஒரு முயலை-ஒருசசத்தை, அடு - கொல்வதாலேற்படும், வென்றிதனில் - ஜெயத்தைக்காட்டினும், யானையொடு-தந்தியுடனே, சமர் செய்து - போர் செய்து, தோற்றல் நன்று - தோல்வியடைவது நன்மையாம்; சரசகுணம் இல்லாத - பரிகாச விளையாட்டுத்தன்மை யில்லாத, பெண்களைச் சேர்தலின் - ஸ்திரீகளைக் கூடுவதைக்காட்டினும், சன்னியாசித்தல் - பெண்ணாசையைவிட்டுச் சந்நியாசங்கொள்ளுதல், நன்று - நன்மையாம்; அஞ்சலார் தங்களொடு - பகைவர்களுடனே, நட்பாயிருப்பதனில் - சிநேகமா யிருப்பதைக் காட்டினும், அரவினொடு - பாம்பினுடனே, பழகுவது - நேசிப்பது, நன்று - நன்மையாம்; அந்தணர்க்கு - முனிவருக்கு, ஆபத்தில் - ஆபத்துக் காலத்தில், உதவாதிருப்பதனில் - தக்கதுகொடுத் துதவா திருப்பதைக்காட்டினும், ஆருயிர் விடுத்தல் நன்று - நிறைந்தவுயிரை விட்டுவிடுதல் நன்மையாம்; வஞ்சகருடன்-வஞ்சகசித்த முடையவர்களுடனே, கூடி வாழ்தலின் - சேர்ந்து வாழ்வதைக்காட்டினும், தனியே வருந்திடும் - தனித்திருந்து துன்பப்படுகின்ற, சிறுமை நன்று-தரித்திர நிலைமை நல்லதாம்.

(வி - ரை.) ஒருவரிடம் ஒரு பொருளைப் பெற்றால் அவர் திரிகரண சுத்தியோடு முகமலர்ந்து, கேட்பவர்களின் அருமையைத் தெரிந்து கொடுக்கப் பெறவேண்டும்; அங்ஙனம் பெறும் பொருள்தான் மனதிற்குத் திருப்திசெய்வதாகும்; அவ்வாறின்றி அவர் மனங் கசந்து கொடுக்கப்பெறின் அப்பொருள் விஷத்தை உண்டதுபோல் அதிருப்தியைச் செய்வதாகும்; அதைப் பெறுவதைக்காட்டினும் பிச்சையெடுக்கும் பொருள் ஒவ்வொருவரும் மனமிசைந்து கொடுக்கப்படுவதாதலின் அது மேலானதாம். உபசார மில்லாதவரிடத்தில் விருந்துண்டால் அவ்வாகாரமானது விஷமுண்டதுபோல வயிற்றைப் புரட்டிக்கொண்டிருக்கும்; உபசரித்துச் செய்யும் விருந்தே பயன்படுமென்பதை, "ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மைபேசி, உப்

பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்,'' என்பதாலுணர்க; உபசாரமில்லாம விடும் அன்னமானது அங்ஙனம் விஷத்தைப் போலக் குடலைப் புரட்டுமாதலால் அதற்குப் பட்டினி யிருந்தாலும் அவ்வித உபத்திரவமின்றி யிருக்கலாம். முயலோ ஒரு கல்லினாலும் எறிந்து கொல்லத்தக்க எளியபிராணி; யானை, பல்லாயிரம் ஜனங்கள் வரினும் அஞ்சாமல் நின்று சீறத்தக்க வன்மை வாய்ந்தது; ஆதலின், அம்முயலைக் கொன்று ஜெயம் பெறுவதால் எவ்வகைக் கீர்த்தியு மின்று; யானையோ டெதிர்த்துத் தோல்வியடைந்தாலும், "இவன் யானையோடும் எதிர்த்தானே" என்று ஜனங்கள் வியந்து புகழ்வ தாகிய கீர்த்தியுண்டு. சரசமே இன்பம் பயப்பதாதலின், அஃதில் லாத மனைவியின் சேர்க்கை அதிருப்தியே செய்வதாகும்; அங்ஙனம் அதனால் இல்லறவின்ப மில்லாமற்போகு மாதலின், ஒரேமனதாய்ச் சந்நியாசங் கொள்வதாற் பயனுண்டாம்; இங்ஙனம் சரசமில்லாதவ ளோடு கூடி வாழ்வதைக்காட்டினும் சந்நியாசஞ் கொள்ளுதல் நல மென்பதை,

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக விருப்பளே யாமாயிற்
கூறாமற் சன்யாசங் கொள்."

என்னும் ஔவை திருவாக்கா லுணர்க.

ஒருசமயமில்லாவிடினும் மற்றொரு சமயத்திற் கடித்துக்கொல் லும் அரவைக்காட்டினும், பகைவர் சமயமறிந்து மிகுந்த தீங்கைச் செய்யக்கூடியவர்களாதலின் அவர்களோடு நட்பாயிருத்தல் தீங்காம்; அதைக்காட்டினும் பாம்போடு பழகுதல் நல்லதாம். இல்வாழ்வோர்: பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆகிய மூவகை ஆசிரமத் தார்களுக்கும் உதவக் கடமைப்பட்டவர்களாதலின் அந்தணர்க்குதவா தார் இருந்தும் பயனில்லை; ஆதலின், அவர்கள் இறத்தலே நன்று. ஒருவன் வஞ்சகருடனே கூடி வாழ்ந்தால் அவர்கள் அவனை விருத்தி

யடையவொட்டாமல் பலவித வஞ்சனைகளால் அவனுக்குக் கேடு புரிந்துகொண்டேவருவர்; ஆதலின், அவர்கள் கூட்டுறவு பயனற்றதாகும்; அதைக்காட்டினும் தனியேயிருந்து தரித்திரத்தை யடைவது நலமாம்; அத்தரித்திரத்தால் துன்பமிருப்பினும் வேறு கவலையில்லாமல் அவ்வொருவகைத் துன்பத்தோடாவது காலங் கழியும்.

நிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய
குளங்களும் வேசை யுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையா டலும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதி நிணறும்
பாதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான வாற்று வரவும்
நத்துமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
காவினல் லுறவுமொரு நாள்போ லிராவிவைக
ணம்பப் படாது கண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணையெ னப்பரவும்
வானவர்கள் சிறைமீட்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மற்றும் ஒரு - பின்னுமொரு, துணை இல்லை - பற்றுக்கோடில்லை, நீ துணை - நீயே எங்கட்குப் பற்றுக்கோடு, என - என்று சொல்லி, பரவும் - துதிக்கின்ற, வானவர்கள் - தேவர்களுடைய, சிறை மீட்டவா - காவலை விடுவித்தவனே! மயிலேறி

விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கொற்றவர்கள் - அரசர்களுடைய, சானுவமும்-படையும்; ஆறு நேர் ஆகிய-நதிகளுக்கு நேராயிருக்கின்ற, குளங்களும் - ஏரிகளும்; வேசை உறவும் - பரத்தையர் நேயமும்; குணம் இல்லார் - நற்குண மில்லாதவர்களுடைய, நேசமும் - சிநேகமும்; பாம்பொடு பழக்கமும் - அரவத்துடனே செய்கின்ற உறவும்; குலவு - பிரகாசிக்கின்ற, நீர் விளையாடலும் - ஜலத்திலே மூழ்கி விளையாட்டயர்தலும்; பற்றலார் தமதிடை - அன்பில்லாதவர்களிடத்திலே, வருந்து-(அவர்கள் தம்மைக் கவனிக்கவில்லை யென்று பிணங்கிச் சனுவாக) வருந்துகின்ற, விசுவாசமும் - பயனற்ற பற்றும்; பழைய - பழமையாகிய, தாயாதி பங்காளியின், நிணறும் - மனவுருக்கமும்; பரதாரமாதரது - அன்னியர் மனைவியராகிய பெண்களின், போகமும், - அனுபவமும்; பெருகி வரு - பெருக்கெடுத்து வருகின்ற, பாங்கான - அழகிய, ஆற்று வரவும் - நதிப்பெருக்கின் வருகையும்; நத்தும் - விரும்புகின்ற, ஒரு - தீங்கில் ஒப்பற்ற, துர்ப்புத்தி கேட்கின்ற பேர்-கெட்டபுத்தியைக் கேட்கின்றவர்களுடைய, உறவு - சிநேகமும்; நல்ல - பெட்டைக்கு நல்லதாகிய, மதயானை - மதம் பொருந்திய யானையினுடைய, நட்பும் - சிநேகமும்; நாவில் - நாவில் மாத்திரம் பொருந்தியிருக்கின்ற, நல்-பேச்சால் மாத்திரம் நல்லதாகிய, உறவும் - பொய்ந்நேயமும், ஒரு நாள்போல் இரா--ஒருநாள் உள்ளனபோல் எப்பொழுதும் இருக்கமாட்டா; (ஆதலின்) இவைகள் - இவற்றை, நம்பப்படாது - நிலையென நம்புதல் கூடாது.

(வி - ரை.) மன்னவர் படையானது ஒரு சண்டை நேரும் பக்ஷத்தில் திடுமென அழிந்துபோகும்; ஆதலின், அது நிலையற்றதாம்; அதனால், மன்னர் யுத்தகாலத்தில் இருக்கின்ற படையை மாத்திரம் நம்பாமல் மேலும் மேலும் சேனைகளைச் சேர்த்துக்கொண்டேயிருக்க வேண்டும்; ஆற்றுக் கெதிரிலிருக்குங் குளங்கள் ஒரு சமயமில்லாவிடினும் மற்றொரு சமயத்தில் ஆற்று வெள்ளத்தா லுடைத்

துத் தள்ளப்படும். வேசையர் மனம் பணங் கொடுப்பவர்மீதெல்லாம் அடிக்கடி மாறிமாறிச் செல்லும் இயல்பினையுடைய தாதலின் அவர் உறவு நிலையற்றதாம். நற்குண மில்லாதவர்களுடைய மனம் தாசிகள் நெஞ்சைப்போலவே அடிக்கடி மாறுமாதலின் அவர் சிநேகமும் நிலைத்து நிற்காது. பாம்புடனே எவ்வளவு பழக்கஞ் செய்தாலும் திடுமென அது பழக்கத்தை விட்டுச் சீறிக் கடித்துக் கொல்லும். அதிகமாக நீந்தத் தெரிந்தவர்களும் ஒரு சமயத்தில் கால்கை ஒய்ந்து அபாயத்திற்குள்ளாவராதலின், நீர்விளையாட்டின்பமானது ஒரு சமய மில்லாவிடினும் மற்றொரு சமயத்தில் கேட்டை விளைவிக்கும்; மனப் பற்றில்லாதவர்கள் எதிரில் மாத்திரம் புகழ்ந்து பேசிக் காணாத விடத்தில் நிந்திப்பாராதலின், அவர்களிடம் தம் குறைகளைச் சொல்லி வருந்தியும், அவர்கள் கவனிக்கவில்லையென்று சுகிர்த்துக்கொண்டு பிணங்கியும் காட்டும் விசுவாசத்தால்; ஒன்றும் பயனில்லை; எவ்வளவு விசுவாசங்காட்டினும் அவர்கள் மனதில் இரக்கமிராது. தாயாதிகள் அற்ப சொற்ப விஷயங்களுக்கும் அடிக்கடி விரோதங் கொள்ளக்கூடியவராதலின், அவர்கள் ஒரு சமயத்திற் காட்டும் மனவுருக்கமானது நிலையற்றதாகும். அன்னிய மாதர் போகம் எப்பொழுதும் அச்சத்தோடு நிகழ்வதாதலின், அது ஒரே தன்மைத்தாய் நிலைத்திராது. ஆற்றுவெள்ளம் ஒருநாள் மிகுந்த பெருக்கெடுத்து வரும், அடுத்தநாள் வற்றிப்போகும். துர்ப்போதனை கேட்கின்றவர்களுடைய உறவானது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக் கொண்டேயிருக்கும். யானையைப் பாகன் எவ்வளவு அருமையாக வளர்த்தாலும் அது அந்தப் பாகனையே கொல்லும்; 'யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' என்பதா லிஃது துணரப்படும். வாக்குபசாரமாகச் செய்கின்ற உறவு எதிரில் கண்டபோது மாத்திரந் தான் நிற்கும். (அஉ)

நற்புலவர் தீப்புலவர் செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காக்கை ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனை நாடும்
மெத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்
டினந்தூர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மை-அஞ்சனந் தீட்டப்பெற்ற, காவி - கருங்குவளை மலர்போன்ற, விழி - கண்களையுடைய, மாது - பெண்ணாகிய, தெய்வானையும்-குஞ்சரியும், குறவர் வள்ளியும்-வேடர்களுடைய வளர்ப்புப் புத்திரியாகிய வள்ளியம்மையும், தழுவும் - சேருகின்ற, தலைவா - நாதனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, குயில் - கோகிலமானது, மிக்கான - வளப்பத்தில் மிகுதியான, சோலையில் சென்று-சோலையிலே புகுந்து, மாங்கனி - மாம்பழத்தை, விருப்பமொடு - பிரியத்துடனே, தேடி - ஆராய்ந்து, நாடும் - அதனை உண்ணுதற்கு எண்ணும்; மிடை - நெருங்குகின்ற, கரும் காகங்கள்-கருமை நிறத்தையுடைய காகங்கள், எக்கனி இருந்தாலும்- தாங்கள் இருக்குமிடத்தில் எவ்வகை உயர்ந்தகனிகள் பழுத்

திருந்தாலும், (அவைகளை விட்டு) வேப்பங்கனிக்கு-மிகவும் தாழ்மையாகிய வேப்பம்பழத்தைத் தின்பதற்கு, நாடும் - எண்ணும்; வரி - இசை பாடுதலையுடைய, வண்டு-உயர்ந்த ஜாதிவண்டுகள், எக்காலும் - எந்தக் காலத்திலும், பங்கேருகத்தினில் - தாமரைப் புஷ்பத்தில், இருக்கின்ற - உற்பத்தியாயிருக்கின்ற, தேனை நாடும் - மதுவைப் பருகுதற்கு நினைக்கும்; உருள் வண்டினம் - உருள்வண்டின் கூட்டமானது, எத்தனை சுகந்தவகை - எவ்வளவோ நல்ல வாசனையுள்ள வஸ்துக்களின் வகைகள், உற்றாலும்-எதிரிற்பொருந்தியிருந்தாலும், (அவற்றை நாடாமல்) துர்மலத்தை நாடும் - துர்க்கந்தத்தையுடைய பவ்வீயையேதேடும்; (இவைபோல) தக்கோர் - உயர்ந்த வித்வான்கள், (ஒருவர் பாடிய நூல்களில்) பொருட்சுவை நயங்கள்-அருத்தங்களின் இனிமையாலேற்படும் நன்மைகள், எங்கே என்று - எவ்விடத்தி லிருக்கின்றனவென்று, தாம் பார்த்து - தாங்கள் ஆராய்ந்து தேடிக் கண்டுபிடித்து, உகந்து - சந்தோஷித்து, கொள்வார் - அவற்றைக் கொள்வார்கள்; தாழ்வான-தாழ்மையையுடைய, வன்கண்ண: - கொடியராகிய துர்க்குணப் புலவர்கள், தமிழில் - ஒருவர் செய்த தமிழ்நூலில், குற்றம் எங்கே என்று - தப்பிதம் எவ்விடத்தி லிருக்கின்றதென்று, ஆராய்வர் - தேடுவார்கள்.

(வி - ரை.) குயிலானது சோலைகளிலே புகுந்து மாங்கனியையும், அதுபோன்ற வேறுசுவைக் கனிகளையும் உண்ணுதற்கு நாடும்; காகங்களோ கசப்பு விரவியிருக்கின்ற வேப்பங்கனியைத் தேடும்; வரி வண்டுகள் தாமரைபுஷ்பம் முதலியவற்றி லிருக்கும் மதுரமான தேனை நாடும்; உருள்வண்டோ அருவருக்கத்தகுந்த மலத்தை நாடும்; இவைபோல, உயர்ந்த வித்வான்கள் பாடல்களிலுள்ள நயத்தைத் தேடுவார்கள், தாழ்ந்த புலவர்களோ குற்றங்களைத் தேடுவர். இங்ஙனங் கூறியதனால், உயர்ந்த வித்வான்கள் குயிலையும், தேன்வண்டையும் நிகர்ப்பார்களென்பதும், தாழ்ந்தபுலவர் காகங்களையும் மலமுண்டு களிக்கும் உருள்வண்டையும் நிகர்ப்பார்களென்பதும் பெறப்படும்.

கல்வி நிரம்புதலில்லாமல் ஆங்காங்கே சில வார்த்தைகளை மாத்திரங் கற்றுக்கொண்டு அவற்றைத்தவிர வேறு இலக்கியங் கிடையாதென்று நினைத்து, இலக்கியவகைகளை யெல்லாம் உணர்ந்த பெரியோர் நூல்களிலும், அறியாமையால் 'அது குற்றம் இது குற்றம்' என்று குறைகூறி (உதாரணமாக: மாமரத்திற்கு - ஆமிரம், அம்பரம் முதலிய பல பெயர்க ளேற்பட்டிருப்பினும், தங்களுக்கு அம்பரம் என்னும் ஒரு வார்த்தைமட்டும் தெரிந்திருப்பது கொண்டு, பலவும் தெரிந்த பெரியோர் ஆமிரம் என்று பிரயோகித்திருந்தால் அது தமக்குத் தெரியாமையால் அதைக் குற்றமென்று சொல்லல்போலப் பல குறைகூறி) வித்வான்கள்போல நடித்து அறிவுடையோர் வெறுக்கத் திரியும் சிலர் இச்செய்யுட் கருத்தை ஆராய்வராயின் அக் கொள்கையை அடியோடொழித்துவிடுவர்.

உருள்வண்டு - வண்டினங்களில் இது தாழ்ந்த ஒருவகை; இது மலத்தைத் திரட்டி உருண்டையாக்கிப் பின் பக்கமாகத் திரும்பிப் பின்னங்கால்களால் தள்ளிக்கொண்டுபோய்த் தன்னிடத்திற் சேர்த்துவைத்துக்கொண்டு அதனை யுண்ணும்; இஃது அதனை உருட்டிக்கொண்டு பிற்பக்கமாக உருண்டு செல்லக்கூடியதாதலால் இதற்கு உருள்வண்டெனப் பெயர் ஏற்பட்டது. சுகந்தம் - ஆகுபெயராய்ச் சுகந்தமுள்ள வஸ்துக்களை யுணர்த்திற்று. (அங)

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந் திடுதலும்
மேடமத கன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ளயர்ந்து கொளலும்

முதிர்படை யொதுங்குதலும் விணைஞர்க ளடங்குதலு
முதலினர் பயந் திடுதலும்
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனை விளைப்பு வருமோ
மாங்கனிக் காவரனை வலமது புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயின்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மாங்கனிக்கா - மாங்கனியைப் பெறுவதற்காக, அரனை-சிவபெருமானை, வலமது புரிந்து-வலஞ்சுற்றிவந்து அதனைப் பெற்று, வளர்-வளர்ந்தோங்கிய, மதகரிக்கு-மதம் பொருந்திய யானை போன்ற முகத்தினையுடைய விநாயகக்கடவுளுக்கு, இளைய-இளமையாகிய, முருகா-முருகக்கடவுளே! மயின்மேலேறி விளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே!—,வேங்கைகள்-புலிகள்,பதுங்குதலும்-பதுங்கி மறைந்திருத்தலும்; மா - சிறந்த, முகில்-மேகமானது, ஒதுங்குதலும்-ஒரு பக்கமாக விலகிச் செல்லுதலும்; விரி-நிமிர்ந்தகன்ற, சிலை-வில்லானது, குனிந்திடுதலும்-வளைதலும்; மேடமது - ஆட்டுக்கடாவானது, அகன்றிடலும் - பின்காட்டி யகன்று செல்லுதலும்; யானைகள் - தந்திகள், ஒடுங்குதலும் - பாகர்க்குள்ளே அடங்கியிருத்தலும்; வெள் விடைகள் - வெள்ளை நிறம்பொருந்திய எருதுகள், துள்ளி விழலும்-துள்ளி விழுதலும்; மூங்கில்கள்-வரைகள், வணங்குதலும்-வளைதலும்; மேலவர்-உயர்ந்தோர், இணங்குதலும் - துஷ்டர்க்கிணக்கமாயிருத்தலும்; முனிவர்கள்-இருடிகள், நயந்து கொள்ளலும்-தங்களுக்குத் தீங்கு செய்வாரிடம் நன்மை பாராட்டி நேசித்துக் கொள்ளுதலும்; முதிர் - வெற்றியில் முதிர்ச்சி யடைந்த, படை-சேனையானது, ஒதுங்குதலும் - பின்னிடைந்து விலகிச்செல்லுத

லும்; வினைஞர்கள் - காரியங் கொள்வோர், அடங்குதலும் - ஒடுங்கியிருத்தலும்; முதலினர் - முதலாகிய திரவியமுள்ள வியாபாரிகள், பயந்திடுதலும் - சமயத்திற் பயப்படுதலும்; ஆம் கரவு - வலிமையான முதலையானது, சாய்குதலும்-தலை சாய்ந்திருத்தலும்; மகிழ் மலர்-மகிழமலரானது, உலர்ந்திடலும் - காய்தலும்; ஆயர் குழல் - இடையருடைய புள்ளாங்குழல், சூடு படலும் - சூடு படுதலும்; (ஆகிய) இவை-இச்செய்கைகள், காரியங்களுக்கு-ஒவ்வொரு பெருங்காரியங்களை உத்தேசித்தே நிகழ்வனவாம், அல்லாமல்-அப்படியன்றி, அம்புவியில் - அழகிய பூமியில், அதனால் - இவை இப்படியிருக்கும் அச்செய்கையால், இளைப்பு வருமோ - இவைகளுக்குத் தாழ்மையுண்டாகுமோ? (இல்லை).

(வி - ரை.) வேங்கை ஒரு பிராணியைப் பிடித்துத் தின்னுதற்கே பதுங்கியிருக்கும். மேகம் மழை சொரிவதற்குத்தான் ஒரு பக்கத்தில் ஒதுங்கும். வில் வளைதல் எதிர்ப்பட்டவன்மீது அம்பைச் செலுத்தி அவனைக் கொல்லுதற்கேயாம். ஆட்டுக்கடா பின் வாங்குவது எதிரிமீது வலிகொண்டு பாய்வதற்கேயாம். யானை, பாகனிடத்தில் அடங்கியிருத்தல் சமயத்தில் அவனைக் கொல்லுதற்காம். எருதுகள் பாரத்தைச் சுமந்திழுக்கும்போது மேடுகளிலும் சதுப்பு நிலங்களிலும் சங்கடம் ஏற்படும்போது வலிகொண் டிழுப்பதால் துள்ளி விழுந்து பின்னர் எழுந்து முன்னிலும் அதிக வேகங்கொண் டிழுத்துச் செல்லும். மூங்கில்கள் வளைந்தால் பல்லக்குக் கொம்புமுதலியவற்றிற்கு உபயோகப்படும். துஷ்டர்கள், தீங்கு செய்தாலும் உயர்ந்தோர், அவர்களை எதிர்த்தால் மரியாதை கெடுமென்று நினைத்து அடங்கியிருந்து தங்கள் கௌரவத்தை யிழக்காமல் காப்பாற்றிக் கொள்வார்கள். முனிவரிடத்தில், சாபமிட்டுத் துஷ்டரை அடக்கக் கூடிய வல்லமை பொருந்தியிருந்தாலும், கீழ்மக்கள் தீங்குசெய்யும் போது அவ்வாறு சபித்தால் பெருமை குறையுமென்று நினைத்து அத்தீங்கைச் சகித்துக்கொண்டு அவர்களை நயந்து அப்பெருமை

யைக் காப்பாற்றுவார்கள். படையானது, எதிர் சேனையை உள்ளே யிழுப்பதற்குப் பின்வாங்கும்; தருணம் பார்த்து முன்னேறி எதிரிகளை யொழித்துவிடும். காரியக்காரர்கள் வீண் இடம்பம் செய்யாமலும், தற்புகழ்ச்சியான வார்த்தைகளைப் பேசாமலும் அடங்கியிருந்து காரியத்தை முடித்து அதனால் தங்கள் வல்லமையைக் காட்டுவார்கள்; காரிய முடிக்கும் ஆற்றலில்லாத பதர்கள் தாம் வீணே தற்பெருமை பேசி இடம்பஞ் செய்துகொண்டு திரிவார்கள். முதலுள்ள வியாபாரிகள், துஷ்டர்கள் தீங்கு செய்யினும் அவர்களோடெதிர்த்தால் பொருட் செலவு நேர்ந்து தங்கள் முதலுக் கழிவு வருமென்று நினைத்து அவர்களுக்குப் பயந்து தங்கள் முதலை எவ்வழியாற் காப்பாற்றிக்கொள்ளலாமோ அவ்வழியிற் காப்பாற்றிக்கொள்வார்கள். முதலை, கரையோரத்தில் வந்து தண்ணீரில் மிதந்து தலையைச் சாய்த்துக்கொண்டு மரம்போல் கிடக்கும்; குரங்குகள் அதனை மரமென்றே நினைத்து அதன்மேலேறிக் குதித்து விளையாடும்போது அம்முதலையானது அவைகள் செய்யும் சேஷ்டைகளெல்லாம் பொறுமையாயிருந்து அவை சோர்வுற்ற சமயம்பார்த்து அவற்றை வாலினல் ஒரே அடியாக அடித்துக் கொன்று தின்றுவிடும்; இச்செய்கை பினங்கு முதலிய தீவுகளில் மிகுதியாகக் காணலாம். மகிழம்பூ உலர்ந்தாற்றான் அதிக வாசனை கொடுக்கும். வேய்ங்குழல் சுட்டுத் துவார மிடப்பட்டால் மாத்திரந்தான் ஓசையில் இனிமையுடையதாகும். இவையெல்லாம் ஒவ்வொரு காரியத்தை முன்னிட்டுத் தாழ்ந்திருத்தல்போல அறிவுடையார் தங்கள் காரிய முடியும் வரையிலும் அடக்கமா யிருப்பார்கள்; அதனல் அவர்களைத் தாழ்ந்தவர்களென்று கருதலாகாது;

"அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு."

என்பது ஔவை திருவாக்கு. இவற்றையெல்லா முணராமல் அடக்கமா யிருப்பாரை யிகழ்ந்து திரிவர் சிலஅறிவீனர். மாங்கனிக்கு, குகனும் விநாயகரும் பரமனை வலம்வந்த கதையை இந்நூலின் 40 ஆஞ் செய்யுளுரையா னுணர்க. (அச)

தெய்வச் செயல்.

சோடாய் மரத்திற் புறாரெண் டிருந்திடத்
    துறவுகண் டேவே டுவன்
றோலாம லவையெய்ய வேண்டுமென் றொருகணை
    தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
    குலவுரா சாளி கூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
    துதைத்தசிலை வேட னடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
    சிலையிற் றொடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ வவ்விரு
    சிறைப்புறா வாழ்ந்த வன்றோ
வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாதுன்
    மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—,மரத்தில்-ஒரு தருவின்மேலே, புறாரெண்டு-இரண்டு புறாக்கள், சோடாய்-இணையாய், இருந்திட-தங்கியிருக்க, வேடுவன்-ஒரு வேடன், துறவு கண்டு - அவற்றின் நெருக்கத்தைப் பார்த்து, தோலாமல் - தான் அபஜெயப்படாமல், அவை - அவற்றை, எய்ய

வேண்டும் என்று - ஒரேகணையில் ஒருசேர எய்து கொல்லவேண்டு மென்று நினைத்து, வில் வாங்கி-வில்லை வளைத்து, ஒரு கணை தொடுத்து - ஓர் அம்பை அவ்வில்லிற் பூட்டிவிடுத்து, நிற்க - நிற்ப, குலவு-ஆகாயத்திற் பறந்து சஞ்சரிக்கின்ற, ராசாளி-வல்லூறென்று, கூட-அவ்வேடனோடுகூட்டவே, ஊடாடி-ஊடே புகுந்து ஆராய்ந்து பார்த்து, மேலே எழும்பிடில்-அப்புறாக்கள் அவ்வம்புக்குத் தவறி மேலெழுந்து பறந்தால், அடிப்பதற்கு - அவற்றை அடித்துக் கொல்வதற்கு, உயர-அம்மரத்திற்கு மேலே, பறந்துகொண்டே திரிய-பறந்துகொண்டே சுழன்றுவர, அப்போது - அச்சமயத்தில், சிலை வேடன் - வில்வேடனுடைய, உதைத்த அடியில்-பூமியில் மிதித்த பாதத்தில், சேடு ஆக-மிகுதியாக, வல் விடம்-வலிய விஷப்பாம்பானது, தீண்ட - கடிக்க, (அதன்விஷந் தலைக்கேறி) அவன் விழ - அவ்வேட னிறந்து கீழே விழ, சிலையில் தொடுத்த - அவனால் வில்லிற்றொடுத் தேவப்பட்ட, வாளி - அம்பானது, (குறிதவறிப் புறாக்களின்மீது பாயாமல்) சென்று-வேகமாகப் போய், இராசாளி மெய் தைத்து-வல்லூற்றின் உடம்பிலே பாய, விழ-அதனாலே அவ்விராசாளி பறந்து கீழேவிழ, சிறை-இறகுகளையுடைய, அவ்விரு புறா-அந்த இரண்டு புறாக்களும், (தெய்வச் செயலால் அம்மரணத்தினின்றும் தப்பி) வாழ்ந்த - வாழ்ந்தன; இவை எல்லாம்-இங்ஙனம் நடந்த இச்செய்கைகளெல்லாம், சிவன் செயல்கள் - சிவபெருமானுடைய செய்கைகளேயாம்; அல்லாது-அங்ஙனமன்றி, இவை - இச்சம்பவங்கள், வாடாமல்-சோர்வுறாமல், உன் மனச் செயலினாலும் - உன்மனத்தின் செய்கையாலும், வருமோ-வந்து சம்பவிக்குமோ? (இல்லை).

(வி - ரை.) "இரண்டு புறாக்கள் ஒரு மரத்தின்மீது நெருங்கியிருக்க, ஒரு வேடன் அவ்விரண்டையும் ஒருசேரக் கொல்லலாமெனக் கருதி ஓர் அம்பை அவற்றிற்கு நேராக விடுக்கும்பொருட்டு வில்லிற் றொடுத்திழுக்க, மேலே அவை எழுந்த சமயத்தில் அடித்துக் கொல்லுதற்கு இராஜாளி யொன்று வட்டமிட்டுப் பறந்து

கொண்டிருக்க, அப்புறுக்கள், ‘இவ்விரண்டாபத்துக்களினும் நாம் எதற்குத்தான் தப்புவோம்,’ எனக் கலங்கியிருந்தன. அச்சமயத்தில் தெய்வச்செயலால் ஒரு பாம்புவேடன் காலிற் கடிக்க அவன் துடித்த படியால் அவனால் வில்லிற் றொடுத்திழுக்கப்பட்ட அம்பானது பறிபட்டுக் குறி தவறிச் சென்று புறுக்களை விட்டு இராஜாளி யின்மேற் பாய அஃதிறந்து வீழ்ந்தது; விஷந் தலைக்கேறினமை யால் வேடனும் வீழ்ந்திறந்தான்; புறுக்க ளிரண்டும் ஆபத்து நீங்கி வாழ்ந்தன” என்பது ஒரு கதை. இது தெய்வச்செயலால் நிகழ்ந்த தென்ப. இங்ஙனமே மனிதர் நினைத்துச் செய்வதொன்றாயிருக்க வேறொன்று நிகழ்வதெல்லாம் தெய்வச் செயலெனக் கொள்க; இஃது அவரவர் பழவினைக்குத் தக்கபடி நடப்பது; இங்ஙனம் தெய்வச் செயலால் நினையாத செய்கையும் திடுமென நிகழு மெனக் கூறி யதனால், மனிதர் எவ்வகை முயற்சிகளைச் செய்யினும் அவரவர் பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி தெய்வச்செயலால் பலன் சித் திக்குமென்பதும், ஆகவே, அங்ஙன மேற்படும் இன்பதுன்பங்களுக் கவர்கள் மகிழ்தலும் வருந்தலு மின்றிச் சமத்துவமாக விருந்து பின்னர் நற்கதி யடைதற்குரிய மார்க்கங்களைத் தேடவேண்டு மென் பதும் பெறப்படும்;

> “ஒன்றை நினைக்கில் அதுவொழிந்திட் டொன்றாகும்
> அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
> எனையாளு மீசன் செயல்.”

என்பது ஔவையார் திருவாக்கு.

ரெண்டு-இரண்டென்பதன் மரூஉ. துறவு - நெருக்கம். ஊடா டல்-இடையிற் புகுதல், ஆராய்தல். திரிய - சுழல. வேடன் பாம்பு வளையில் உதைத்துக்கொண்டு வில்லை யிழுத்தானாதலால் அப்பாம்பு கோபித்து வெளியேறிக் கடித்தது; அதனாலேயே, ‘உதைத்த அடி யில் தீண்ட’ என்றார் ஆசிரியர். விஷம் ஆகுபெயராய் அதனை

யுடைய பாம்பை யுணர்த்திற்று. 'இவை' என்னுஞ் சொல் இரண்டிடத்தும் கூட்டப்பட்டது. (அரு)

பாட லியல்பு.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொகைகள் சிதையா
திருக்கவே வேண்டு மப்பா
வீரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டு
மன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமு
னலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருண்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) தினம் - நாள்தோறும், மழு - மழுவாயுதத்தை, செம் கைதனில் - சிவந்த கரத்தில், வைத்த - தாங்கிய, கங்காளன் - கங்கைக்கு நாயகனான சிவபெருமான், அருள் - கிருபையுடன் பெற்ற மைந்தன் என - புத்திரன் என்று எல்லோரும் கொண்டாடும்படி, வந்த - சரவணப் பொய்கையில் தோன்றிவந்த, முருகா - முருகனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சொல் கவிதை - உயர்ந்த சொற்களையுடைய கவி

கள், (பாடும்போது அவற்றில்) எழுத்து-எழுத்திலக்கணத்தில் சொல்லப்பட்ட அக்ஷரங்களும், அசைகள் - அவ்வெழுத்துக்களாலாகிய சீருறுப்புக்களும், சீர்-அவ்வசைகளாலாகிய சீர்களும், தளைகள்-தளைகளும், அடி - அடிகளும், தொடைகள் - தொடைகளும், சிதையாது இருக்கவேண்டும்-கெடாமலிருக்கவேண்டும்; அப்பா-இன்னும் அப்பாடல்கள், ஈரைம்பொருத்தமொடு - பத்துவகைப் பொருத்தங்களுடனே, மதுரமாய் - இனிப்புடையனவாய், பளபளப்பு - பிரகாசத்தால், இனிய - இனிமையாகிய, சொற்கு-சொற்களால், அமைய வேண்டும் - பொருந்தி யிருக்கவேண்டும்; அழுத்தம் மிகு - உறுதி மிகுந்த, குறளினுக்கு ஒப்பாக - திருவள்ளுவநாயனார் திருக்குறட் செய்யுட்களுக்கு நிகராக, பொருள் அடக்கமும் - அருத்தங்களின் செறிவும், இருக்கவேண்டும் - அவற்றில் அமைதல் வேண்டும்; அன்பான - பக்ஷமுடைய, பாவினம்-பாக்களின் வகைகளிலே, இசைந்து வரல் வேண்டும்-அவை பொருந்தி வரவேண்டும்; முன் - முன்னர், அலங்காரம் உற்ற - அணி பொருந்திய, துறையில் - அகத்துறை புறத்துறை ஆகிய இரண்டு துறைகளிலும், பழுத்து - முதிர்ந்து, உளம் உவந்து - கேட்போர் மனம் சந்தோஷிக்க, ஓசை உற்று - நல்ல சந்தமும் பொருந்தி, வரல்வேண்டும்-வருதல் வேண்டும்; படிக்கும் - பாடுகின்ற, இசை - சங்கீதமானது, கூடல் வேண்டும்-அவற்றிற் பொருந்தியிருக்கவேண்டும்; பாங்காக - அழகாக, இன்னவை-இத்தகைய இலக்ஷணங்கள், பொருந்திட - அமைய, பாடின் - அவற்றைப் பாடினால், சிறப்பு என்பர் - மேன்மை யுடையனவாம் என்று அறிவுடையோர் கூறுவர்.

(வி-ரை.) பாட்டுப் பாடத் தொடங்கினால், எழுத்தசை சீர் தளை அடிதொடை முதலியவை சிதையாமலும், பத்துவகைப் பொருத்தங்களுடனும், இனிய சொற்களாலும், மிக்க பொருளடக்கத்துடனும், பாவினங்களு ளொன்றாகவும், துறைகளிற் சார்ந்ததாகவும், சந்தமுடையதாகவும், இராகம் இசைந்து வரும்படியாகவும் அதனைப்

பாடவேண்டும்; அங்ஙனம் பாடும் பாடலே பல அறிவுடையோராலுங் கொண்டாடப்பட்டு என்றும் நிலைபெற்று விளங்கும்; அவ்வாறின்றிக் கல்வியறிவின்மாக்கள் மனம் போனபடி எல்லா இலக்ஷணங்களும் குறைய ஆபாசமாகப் பாடும் பாடல்கள் அறிவுடையோர் பலராலும் இகழப்படுவதோடு, மின்னல் தோன்றி மறைவதுபோல் விரைவில் ரூபமேயின்றி மறைந்துபோகும். இதனை, முற்காலத்தும் பிற்காலத்தும் உயர்ந்த வித்வான்கள் பாடிய செய்யுட்கள் தமிழ் நாட்டில் என்றும் நிலைபெற்றுக் கீர்த்தியுடன் விளங்குவதனாலும், இக்காலத்தில் கல்வியறிவில்லாத தான்றோன்றிகளும், தமிழின் உயர்வைச் சிறிதும் கவனியாத சில பாமரநாடக வகுப்பாரும் செய்யும் இலக்ஷணக் குறைவான பாடல்கள் நீடித்து நில்லாமலும், கல்வி யறிவாளராற் பழிக்கப்பட்டும், செய்தவர்களுடனே ஒழிந்துபோவதனாலுங் கண்டுகொள்க. இதனால், இலக்ஷணமுடைய பாடல்களையே பாடக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது பெறப்படும்.

எழுத்துக்கள்: எழுத்திலக்கணத்திற் சொல்லப்பட்டு அசைக் குறுப்பாக வரும் உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டுமாகிய முதலெழுத்து முப்பதும், உயிர்மெய் இருநூற்றுப் பதினாறும், முற்றாய்தம் எட்டும், உயிரளபெடை இருபத்தொன்றும், ஒற்றளபெடை நாற்பத்திரண்டும், குற்றியலிகரம் முப்பத்தேழும், குற்றியலுகரம் முப்பத்தாறும், ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும், மகரக்குறுக்கம் மூன்றும், ஆய்தக்குறுக்கம் இரண்டும் ஆகிய சார்பெழுத்துக்கள் முந்நூற்றறுபத்தொன்பதுமாம். அசைகள்: எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்குறுப்பாய்வரும் நேரசை, நிரையசை ஆகிய இரண்டுமாம். சீர்கள்: அவ்வசைகள் சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டுமுதலாகத் தொடர்ந்தும் அவற்றாலாக்கப்பட்டு அடிக்குறுப்பாய் வரும் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் ஆகிய நான்குமாம். தளையாவது: நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியாவது ஒன்

றுமலாவது கூடி நிற்பது; தளை - கட்டு, பந்தம், கூட்டம். அத்தளைகள்: நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை, கலித்தளையென எழுவகைப்படும். அடியாவது: மேற்சொல்லிய தளைகள் ஒன்றும் பலவும் அடுத்துச் சீர்களினாலாக்கப்பட்டுச் செய்யுட் குறுப்பாக வருவதாம்; அது: குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப்படும். தொடையாவது: பல அடிகளிலாவது, பல சீர்களிலாவது, பல பாடல்களிலாவது எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது; அது: எதுகைத்தொடை, மோனைத்தொடை, முரண்டொடை, அளபெடைத்தொடை, இயைபுத்தொடை, அந்தாதித்தொடை என அறுவகைப்படும். பத்துவகைப் பொருத்தமாவது: பாட்டியலில் கூறப்பட்ட உண்டிப்பொருத்தம், எழுத்துப்பொருத்தம், கணப்பொருத்தம், கதிப்பொருத்தம், சொற்பொருத்தம், தானப்பொருத்தம், நாட்பொருத்தம், பாற்பொருத்தம், மங்கலப்பொருத்தம், வருணப்பொருத்தம் ஆகியவைகளாம். பாவினம்: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கும், இவற்றின் இனங்களாகிய துறை, தாழிசை, விருத்தம் என்பனவும், மருட்பாவுமாம். அலங்காரம்: சொல்லணி, பொருளணி என்னும் இரண்டுமாம். துறை: அகப்பொருட்டுறை, புறப்பொருட்டுறை என்னும் இரண்டுமாம். ஓசை: வெண்பாவின் செப்பலோசையாகிய ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை முதலியனவாம். இசை: ஒவ்வொரு செய்யுட்கு முரித்தாக வரும் இராகமாம். இவற்றின் பரப்பை நன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களானும், பாட்டியல் முதலிய நூல்களானும், இசை நூல்களானு முணர்க. (அசு)

விபூதி தரிக்கும் முறைமை.

'பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்

பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
 பருத்தபுய மீதி லொழுக
நித்தமூ விரல்களா னெற்றியி னழுந்தலுற
 நினைவாய்த் தரிப்ப வர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
 நீங்காம னிமல னங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
 தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வாராதுபர கதியுதவு மிவரையே
 சத்தியுஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
 மான்மருக னென முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) இனிய - இனிதாகிய, மத்து - மத்தானது, மேரு என - பொன்மலையேயென்று, வைத்து - பாற்கடலிற்பொருத்தி, அமுதினை - சாவாமருந்தை, கடையும் - கடைந்தெடுத்துத் தேவர்க்கு நல்கிய, மால்-மகாவிஷ்ணுவின், மருகனென-மருமகனென, முருகா-முருகக்கடவுளே!—மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே!—, திருநீற்றை - அழகிய விபூதியை, பத்தியொடு - விசுவாசத்துடனே, சிவசிவா என்று - சிவசிவாவென்று உச்சரித்துக்கொண்டு, பரிந்து - விரும்பி, கையால் எடுத்து - வலக்கரத்தால் அள்ளி, பாரினில் விழாதபடி - பூமியில் விழாமல், அண்ணாந்து - நெற்றியை மேலே தூக்கி, செவியொடு - இரண்டு செவிகளுடனே சார்ந்து, பருத்த - பெரியனவாகிய, புயமீதில் ஒழுக - தோள்களின்மேல் சொரியும்படி, மூவிரல்களால் - மூன்றுவிரல்களினாலே, நெற்றியில் - நுதலில், அழுந்தலுற - பதிய, நினைவாய்-இது நன்மைசெய்யும் என்கிற சிந்தனையுடனே, நித்தம் - தினந்தோறும்

தரிப்பவர்க்கு - அணிபவர்க்கு, நீடு-அதிகரிக்கின்ற, வினை - பழைய தீவினை, அணுகாது-நெருங்கமாட்டாது; தேகபரிசுத்தமாம்-உடம்பு பரிசுத்தத்தை யடையும்; நிமலன்-குற்றமற்ற கடவுளாகிய சிவபெருமான், அங்கே - அத்தேகத்திலே, சத்தியொடு - உமாதேவியுடனே கூடி, நீங்காமல்-எப்பொழுதும் விலகாமல், நித்தம் - தினந்தோறும், விளையாடுவன்-திருவிளையாட்டைச் செய்து தங்கியிருப்பான்; மூகத்திலே - அங்ஙனம் திருநீறு தரிப்பவர்களுடைய முகத்தில், திரு - இலக்குமியானவள், தாண்டவம் செய்யும்-நர்த்தனம் புரிந்துகொண்டிருப்பாள்; (அவர்க்கு) சஞ்சலம் வராது - துன்பமென்பதே அணுகாது; (அத்திருநீறுனது) பரகதி உதவும் - மேலான கதியையும் கொடுக்கும்; இவரையே - இவ்வாறு திருநீறணிவோரையே, சத்தியும் சிவன் என்னலாம் - சத்தியுஞ் சிவமுமாகிய சொரூபமென்று கூறலாம்.

(வி - ரை.) விபூதி தரிப்பார், சிவசிவாவென்று சொல்லிக்கொண்டு விருப்பத்தோடு அதனைக் கையாலெடுத்துச் சிறிதும் பூமியிற் சிந்தாமல் அண்ணாந்துகொண்டு செவிகளின் பக்கமாசச் சிந்துவது இரண்டு தோள்களிலும் விழும்படி, நடுமூன்று விரல்களால் அழுத்தமாக நற்சிந்தனையோடு பூசவேண்டும்; இவ்வாறு பூசுவோர்க்குப் பழவினை யணுகாது; தேகம் பரிசுத்தமாகும்; அவர்களிடம் சத்தியுஞ் சிவமும் குடிகொள்வார்கள்; அவர்களுடைய முகத்திலே இலக்குமி தாண்டவம் புரிவாள்; அவர்களுக்கு எவ்வித துன்பமும் வாராது; நற்கதி கிடைக்கும்; அவர்கள் சத்திசிவரூப மாவார்கள்.

சிவசிவா - இரட்டைக்கிளவி; இவ்விரண்டும் ஒரு சொன்னீர்மையன. நிமலன் - குற்றமற்றவன். சத்தியொடு - இதில் ஒடுவுருபு மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. 'மத்தினிய' என்பதை, 'இனியமத்து' என மாற்றுக. (அஎ)

விபூதி வாங்கும் முறைமை.

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந் தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கினூர்
திகழ்தம் பலத்தி னோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநில மான வதிலு
மங்கே தரிக்கிலுந் தந்திடிற் றள்ளினு
மவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சக நாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வரி - செவ்வரிபடர்ந்த, விழி - கண்களையுடைய, மடந்தை - பெண்ணாகிய, குறவள்ளி நாயகிதனை - வேடுவரால் வளர்க்கப்பட்டு வேடுவப்பெண்ணாகிய வள்ளிநாயகியை, மணந்து - விவாகம்புரிந்து, மகிழ் - சந்தோஷிக்கின்ற, சகநாதனே - இந்த பூமியிலுள்ளவர்களுக் கெல்லாம் தலைவனே! மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பரிதனில் இருந்தும் - குதிரையின்மே லிருந்துகொண்டும், இயல் - பொருந்திய, சிவிகையில் இருந்தும் - பல்லக்கில் இருந்துகொண்டும், உயர் - உயர்ந்த, பலகையில் இருந்தும் - பலகையி லிருந்துகொண்டும், மிக - மிகுதியாக, பாங்கான - அழகுபொருந்திய, அம்பலம்தனிலே இருந்தும் - பொதுஜனங்கள் கூடும் சபையிலே யிருந்துகொண்டும், பருத்த -

பெரிதாகிய, திண்ணையில் இருந்தும் - வேதிகையி லிருந்துகொண்டும், தெரிவொடு - தெரிதலுடனே, கொடுப்பவர்கள் - விபூதியைக் கொடுப்பவர்கள், கீழ் நிற்க - கீழே நிற்க, மேல் நின்று-வாங்குவோர் மேலாக உயர்ந்தஸ்தானத்திலே நின்றுகொண்டும், திரு நீறு-அழகிய விபூதியை, வாங்கியிடினும் - வாங்கினாலும், செங்கை ஒன்றாலும் - செம்மையாகிய ஒரு காத்தாலும், விரல் மூன்றாலும்-மூன்று விரல்களாலும், வாங்கினும் - வாங்கினாலும், திகழ் - வாயிற் பிரகாசிக்கின்ற, தம்பலத்தினோடும் - மெல்லப்பட்ட வெற்றிலை பாக்கோடும், அரியதொரு - அருமையாகிய, வொருபாதையில் - வழியில், நடக்கின்ற போதிலும் - நடந்து செல்லும்பொழுதும், அசுத்த நிலமான அதிலும் - சுத்தமில்லாத நிலத்தில் நிற்கின்றபோதும், அங்கே - அவ்விடத்தில், தரிக்கிலும்-வாங்கிப்பூசினாலும், தந்திடில்-ஒருவர் விபூதியை அன்புடன் கொடுத்தால், தள்ளினும் - அதை வாங்காமல் தள்ளினாலும், அவர்க்கு - அப்படிச் செய்வார்க்கு, நரகு என்பர் - நரகம் கிடைக்கும் என்று அறிவுடையோர் கூறுவர்.

(வி - ரை.) குதிரை, பல்லக்கு, பலகை, சபை, உயர்ந்ததிண்ணை முதலியவற்றி லிருந்துகொண்டு கொடுப்பவர் கீழ்நிற்க அலக்ஷியஞ் செய்து விபூதியை ஒருகையினாலாவது மூன்று விரல்களினாலாவது வாங்கலாகாது; இன்னும், வாயில் தம்பல மிருக்கும்போதும், வழியில் நடக்கின்ற பொழுதும், அசுத்த நிலத்தில் நிற்கும்போதும் அதனை வாங்கிப் பூசலாகாது; ஒருவர் விபூதி கொடுக்கும்போது அதனை வாங்காமற் றள்ளவுங்கூடாது. இங்ஙனம் தகாத விடங்களிலிருந்து விபூதியை வாங்கினாலும், பொருத்தமற்ற காலங்களில் அணிந்தாலும், பெரியோர் கொடுக்கும்போது வாங்காமற் றள்ளினாலும் அவ்வாறு செய்வார்க்கு நரகம் சித்திப்பது திண்ணம். இங்ஙனம் புரிவதால் நரகம் சித்திக்கு மென்றதனாலே, தாழ்மையுடனும், மனத்தூய்மையுடனும், தேகபரிசுத்தத்துடனும் அதனை வாங்கி யணிவார்க்கு நற்பதவி கிடைக்கு மென்பது தானே போதரும். (அ)

இன்ன வுறுப்புக்களாற் பயனில்லையெனல்.

தேவால யஞ்சுற்றி டாதகா லென்னகா
றெரிசியாக் கண்ணென்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி
விடைசெயாக் கையென்ன கை
நாவார நினையேத் திடாதவா யென்னவாய்
நற்றீர்த்த மூழ்கா வுட
ஞனிலத் தென்னவுடல் பாவியா கியசனன
நண்ணினுற் பலனேது காண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வேலைதனில் - சமுத்திரத்தில், மாவாகி-மாமரமாகி, வரு - முன்னேவந்த, சூரன் - சூரபத்மனுடைய, மார்பு உருவ - நெஞ்சில் நுழைந்து செல்லும்படி, வடி - கூர்மைதங்கிய, வேலை - வேலாயுதத்தை, விட்ட - ஏவிய, முருகா - குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, தேவாலயம் - தெய்வங் குடியிருக்கும் கோவிலை, சுற்றிடாத - வலமாகச் சுற்றிவராத, கால் - மானிடரின் பாதமானது, என்ன கால்- என்ன பிரயோசனமுள்ள கால்? (ஒருவித பிரயோசனமு மில்லாத தாம்); தெரிசியா - அவ்வாலயத்தைக் காணாத, கண் - நேத்திரம், என்ன கண்-என்னபயனுள்ள நேத்திரம்? (எவ்விதப்பயனுமற்றதாம்);

தினமும் - நாள்தோறும், நின் - உன்னுடைய, கமல பாதத்தை - தாமரை மலர்போன்ற அடிகளை, நினையாத - சிந்தியாத, சிந்தை - மனமானது, என்ன சிந்தை - என்ன பயனுள்ள மனம்? (எவ்வித பயனு மற்றதாம்); மேவு - உலகத்தில் மானிடர்க்கு நன்மை செய்வ தற்குப் பொருந்திய, ஆகமம்-சிவாகமங்களையும், சிவபுராணம் அவை-சைவபுராணங்களாகிய அவைகளையும், கேளாமல் விட்ட - கேட்ட லில்லாமல் விடுத்த, செவி - காதுகள், என்ன செவிகள் - எவ்வித பிரயோசனமுள்ள காதுகள்? (ஒருவித பயனுமில்லாதனவாம்); விமலனை-குற்றமற்றவனாகிய கடவுளை, வணங்காத-பணியாத, சென்னி-சிரமானது, என் சென்னி - என்ன பயனுள்ள சிரம்? (நிர்ப்பிரயோசனமானதாம்); பணிவிடை செய்யா - தெய்வத்திற்கு ஊழியஞ் செய்யாத, கை - கரமானது, என்ன கை-என்ன பயனுள்ள கை? (எவ்வித பயனுமற்றதாம்); நாவுஆர-நாவுநிறையும்படி, நினை-உன்னை, ஏத்திடாத-துதிக்காத, வாய் - வாயானது, என்ன வாய் - என்ன பயனுள்ளவாய்? (பயனேயில்லாததாம்); நல்-நல்ல, தீர்த்தம் - ஜலங்களிலே, மூழ்கா - ஸ்நானஞ்செய்யாத, உடல் - தேகமானது, நால் நிலத்து-நான்கு நிலங்களைக்கொண்ட இப்பூமியில், என்ன உடல் - என்ன பயனுள்ள தேகம்? (ஒருபயனு மில்லாததாம்) ஆதலின், இவ்வித பயனற்ற அவயவங்களைப் பெற்றுத் தெய்வ வழிபாடின்றிப் பாவி ஆகிய-பாதகனாகிய, சனனம்-ஜன்மத்தை, நண்ணினல்-மானிடன் எடுப்பானேயானல், பலன் ஏது-அதனாற் பிரயோசனமேது? (ஒன்றுமில்லை).

(வி - ரை.) ஒருவன் மானிட ஜென்ம மெடுத்தால் அவனுடைய கால், கை, கண், சிந்தை, செவி, சென்னி, வாய், உடல் முதலிய அவயவங்கள், தெய்வ வழிபாடு செய்வதிலும், சிரவணஞ் செய்வதிலும் பயன்படுமாறு செய்யவேண்டும்; அங்ஙனம் செய்தாலே தேக மெடுத்ததற்கு நற்பிரயோசனமாம்; இல்லாவிடில் அவன் ஜன்மம் பயனற்ற ஜன்மமாம்.

என்ன கால், என்ன கண் முதலியனவெல்லாம் எதிர்மறை யெச்சங்கள்; கால் அன்று, கண் அன்று எனப் பொருள்படும். சிவாகமங்கள்: காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசருவோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என்னும் இருபத்தெட்டுமாம்.

சிவபுராணங்கள்: சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரம்மாண்டம் ஆகிய பத்துமாம்.

நால் நிலம்: மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் என்பனவாம். பாலை சேர்த்து நிலங்கள் ஐந்தாயினும் அது மானிடர்க்குப் பயனற்றதாதலால் அதனைத் தள்ளி மற்ற நான்கும் கொள்ளப்பட்டன. உலகம் இந்த நான்கு நிலங்களாலும் பயன் செய்யக்கூடியதா யிருத்தலாலே பூமிக்கு நானிலமெனப் பெயர் கூறுவது தொன்றுதொட்ட வழக்கு. சூரபத்மன் கடைசியில் மாமர வடிவமாகிச் சமுத்திரத்தில் நிற்க, குமாரக்கடவுள் வேலாயுதத்தால் அவனுடைய மார்பைப் பிளந்து பின்னர் அவன் மயிலும் சேவலுமாய் வர அவற்றைத் தமக்கு வாகனமும் கொடியு மாக்கிக்கொண்டன ரென்பது கந்தபுராணகதை.

நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவுமாட் டின்க ணத்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்று மென்ன

மாகருணு மமுதிஞெடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பிற்றுருத் தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்கு
வளமொடு பிறந்தென்ன வுண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பன்னுமொரு தாய்வயிற் றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேது மில்லை யன்றே
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மா - சிறந்த, கனகம்-பொன்மயமாகிய, மேருவை - மகாமேருகிரியை, சிலையென - வில்லாக, வளைத்த - வளைத்துக் காத்திற் பிடித்த, சிவன் மைந்தன் என - சிவபெருமானுடைய புத்திரனெனத் தோன்றி, வந்த முருகா - சரவணப்பொய்கையில் வந்தருளிய முருகக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, கோகனகம் - தாமரைமலரில் எழுந்தருளியிருக்கின்ற, மங்கையுடன்-பெண்ணுகிய இலக்குமிதேவியுடனே, மூத்தவள் - மூதேவியானவள், பிறந்து என்ன - பிறந்ததனுல் யாது பயன்? குலவு - பிரகாசிக்கின்ற, மாட்டின்கண் - பொன்னினிடத்தே, அதர்தான்-குறுமணல், கூடப் பிறந்து என்ன - உடன்பிறந்ததனுல் யாது பயன்? தண்ணீரினுடனே-ஜலத்துடனே, கொடும் பாசி-கொடுமையாகிய பாசமானது, உற்று என்ன பிறந்ததனுல் யாது பயன்? மாகர் - தேவர்கள், உணணும்-உட்கொள்ளுகின்ற, அமுதிஞெடு - அமுதத்துடனே, நஞ்சம் - ஆலகால விஷமானது, பிறந்து என்ன - தோன்றியதனுல் யாது பயன்? வல் - வலிமை பொருந்திய, இரும்பில் - கரும்பொன்னிலே, துரு - துரு

வானது, வந்தே பிறந்து என்ன- வந்து தோன்றியதனால் யாது பயன்? நெடுமரந்தனில் - நீண்ட மரத்தில், மொக்கு - கணுவானது, வளமொடு - வளப்பத்துடனே, பிறந்து என்ன - உண்டானதனால் யாது பயன்? உண் - உண்ணத்தக்க, பாகம் மிகு- பக்குவம் மிகுந்த, செந்நெல் ஒடு-சிவந்த நெற்களுடனே, பதர்தான் - பதரானது, பிறந்து என்ன - தோன்றியதனால் யாது பயன்? பன்னும் - உயர்த்திக் கூறப்படுகின்ற, ஒரு தாய் வயற்றில்-ஒரே தாயின் உதரத்தில், பண்பு உறு-நற்குணம் பொருந்திய, விவேகியொடு - புத்திமானுடனே, கயவர்கள்-கீழ்மக்கள், பிறந்து என்ன-தோன்றியதனால் யாது பயன்? (இப்பிறப்புக்களால்) ஏதும் பயன் இல்லை - எவ்விதமான பிரயோஜனமும் இல்லை.

(வி - ரை.) இலக்குமியுடன் மூத்தவள் பிறந்ததனாலும், பொன்னோடு மணல் பிறந்ததனாலும், தண்ணீருடன் பாசி பிறப்பதனாலும், அமுதோடு நஞ்சு பிறந்ததனாலும், இரும்போடு துரு வுண்டானதனாலும், மரத்தில் கணு உண்டானதனாலும், நெல்லோடு பதர் பிறந்ததனாலும், விவேகிகளோடு மூடர்கள் பிறப்பதனாலும் எவ்வித பயனு மில்லையாம்.

கோகனகம்-தாமரை; இது முதலாகுபெயராய் மலரை யுணர்த்திற்று. என்னவென்னும் வினைக்கள் எதிர்மறை யெச்சங்களாக வந்தன. மாடு-பொன்; பொன்கட்டிகளைப் பூமியிலிருந்தெடுக்கும்போது அவற்றில் மணல்கள் சேர்ந்திருப்பது இயற்கை; இதனை, 'ஆட்டின் கண் அதர்' எனப் பிரித்து, 'ஆட்டின் கழுத்தில் தாடிபோல் இரட்டையாகத் தொங்கும் தோல்' எனப் பொருள் கோடலு மொன்று; இங்ஙனம் தொங்கும் ஆட்டின் தாடிக்கு அதர் என்று தென்னாட்டில் வழங்குகின்றது. மாகம் - ஆகாயம், அங்கிருக்கும் தேவர் - மாகர். மொக்கு என்பதை, மொக்குள் எனக் கொண்டு அதற்குப் புல்லுருவி யென்று சிலர் பொருள் கூறுவர்; புல்லுருவி யென்பது மரங்களில் அவற்றின் இயல்பைப் பெறுமல் வேற்று வடிவமான இலைகளுடன்

ருசி முதலியன வெல்லாம் மாறி உண்டாயிருக்கும் ஒரு கிளை; நீரில் பயனின்றித் தோன்றும் நீர்க்குமிழிக்கு மொக்குள் என்று பெயர்; அதேபோல இந்தப் புல்லுருவியும் பயனற்ற தாதலின் இதற்கும் மொக்குள் என்னும் அப்பெயர் ஏற்பட்டதுபோலும். மரத்தில் கணு பயனற்ற தென்பதை, 'கரும்பிற்கணு நிகர்த்தேன் காண்' என்பதனு லுணர்க. கயமை - கீழ்மை, அதனை யுடையார் கயவர். திரிபுரசம் மாரகாலத்தில் சிவபெருமான் மேருவை வில்லாகக்கொண்டு வளைத் தன ரென்பது புராணகதை. கனகமேரு-பண்புத்தொகை. வளைத்த-பெயரெச்சம். சிவன் மைந்தன்-ஆறும் வேற்றுமைத்தொகை. (௯௦)

இனத்தை அழிப்பவை.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
 கூரிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
 கோத்திர மெலா மழிக்கும்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
 நண்ணுபற வைகளை யார்க்கு
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன்
 னவில்சாதி தனை யிழுக்கும்
உலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண்
 டுற்றுறை யீட ழிப்ப
ருளவனில் லாமலூ ரழியா தெனச்சொல்லு
 முலகமொழி நிசமல்ல வோ
வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்ட
 மதயானை தன்சோ தரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வலமாக வந்து-பிரதக்ஷணமாக வந்து, அரனிடத்தினில்-சிவபெருமானிடத்தில், கனி கொண்ட-மாங்கனியைப் பெற்றுக்கொண்ட, மதயானை தன்-மதம் பொருந்திய யானைபோன்ற முகத்தினையுடைய விநாயகக்கடவுளுடைய, சோதரா-சகோதரனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, குலமான - இரும்பின் இனமாகிய, சம்மட்டி - கூடமும், குறடு - பற்றுக்கோடும், கைக்கு உதவியாய் - கொல்லனுடைய கைக்குத் துணையாயிருந்து, கூர் - கூர்மையாகிய, இரும்புகளை - இருப்புத் துண்டங்களை, வெல்லும் - அடித்து முனையை மழுக்கி வெற்றி கொள்ளும்; கோடாலி தன்னுள்ளே - கோடரிக்குள்ளே, மரமது - மரமானது, நுழைந்து - காம்பாகச் சமைந்து நுழைந்துகொண்டு, தன் கோத்திரமெல்லாம் - தன்னுடைய குலமாகிய மரங்களை யெல்லாம், அழிக்கும் - வெட்டி நாசஞ்செய்துவிடும்; நலமான - நன்மை பொருந்திய, பார்வை சேர் - வேடர்கள் கண்ணியில் பார்வையாகச் சேருகின்ற, குருவியானது - குருவி, வந்து-அவ்விடத்தே வந்து, நண்ணு - பொருந்துகின்ற, பறவைகளை-பக்ஷிகளை, ஆர்க்கும் - கண்ணியிற் கட்டுப்படுத்தும்; நட்புடன் - சிநேகத்துடனே, வளர்ந்த - தன் இனத்தோடு சேர்ந்து வளர்ச்சியுற்ற, கலைமான் ஒன்று - ஒரு ஆண்மானானது, சென்று - காட்டிற் புகுந்து, நவில் - உயர்வாகச் சொல்லப்படுகின்ற, தன் சாதிதனை - தன்னினமாகிய மான்களை, இழுக்கும் - வேடன் வலைக்குள் இழுத்துக் கொண்டுவந்து அவற்றை நாசஞ்செய்யும்; உலவும் - உலகத்தில் நடைபெறுகின்ற, நற்குடி தனில் - நல்ல குடும்பத்தில், கோளர்கள் - பொய்யர்கள், இருந்து கொண்டு - தங்கிக்கொண்டு, உற்றுறை - பொருந்திய தம்மினத்தவர்களை, ஈடு அழிப்பர் - அவர்களின் வல்லமையை ஒழித்து நாசப்படுத்திவிடுவார்கள்; (இங்ஙனம் நடப்பதற் குதாரணமாக) உளவன் இல்லாமல் - உளவுசொல்வோன் இல்லாமல், ஊர் அழியாது - ஊர்கெடாது, எனச் சொல்லும் - என்று கூறுகின்ற, உலகமொழி -

உலகத்தின் பழமொழியானது, நிசம் அல்லவோ - உண்மை யன்றோ?

(வி - ரை.) இரும்பினாலேயே செய்யப்பட்ட சம்மட்டியும் குறடும் கொல்லன் கையிற் சேர்ந்துகொண்டு தம்மினமாகிய இரும்புகளையே அடித்துச் சிதைத்து வலிமை குறையச்செய்யும். ஒரு மாத் துண்டே கோடாலிக் காம்பாகச் சேர்ந்து தன்னினமாகிய மரங்களை யெல்லாம் வெட்டியழிக்கும்; அம் மரமில்லாவிடின் கோடரியால் வெட்டுதல் இயலாது. வேடர்கள் வலையை அடித்து அதில் தாங்கள் பழக்கி வைத்திருக்கும் குருவியை உட்கார வைப்பார்கள்; அது தன் ஜாதி யியற்கைப்படி கூவும்; அதைக்கேட்டு மற்ற பறவைகள் அதனைத் தன் இனமென்று நம்பி அங்கே வந்து உட்காரும்; உடனே வேடன் வலையைச் சுருக்கி அவற்றைப் பிடித்துக்கொள்வான்; இங்ஙனம் வஞ்சனையாக வேடனுக் குதவியாய், வலையில் இருக்கும் குருவிக்கு, 'பார்வைக் குருவி' என்று பெயர். வேடர்கள் ஒரு மான்குட்டியை இளமையிற் பிடித்துத் தங்கள் வேட்டைக் குதவியா யிருக்கும்படி, அது தானே காட்டிற் புகுந்து மேய்ந்து தாங்களிருக்கு மிடத்திற்கு வருமாறு பழக்கிவைத் திருப்பார்கள்; தாங்கள் வேட்டைக்குச் செல்லுங்காலத்தில் ஓரிடத்தில் வலையை அடித்துவிட்டு அந்த மானை விட்டுவிடுவார்கள்; அதுபோய்க் காட்டில் திரிந்து தன்னுடைய இனங்களை அழைத்துக் கொண்டுவந்து வலையிற் சிக்கும்படி செய்யும். இவற்றைப்போல் சிற்சில சம்ஸ்தானங்களில் சில கோளர்கள் இருந்துகொண்டு தம்மினத்தவர்மீது குறைகூறி அவர்களுக்கு நலங் கிடைக்கவொட்டாமல் அவர்களைக் கெடுப்பார்கள்; சில வூர்களில், சில பாவிகள் திருடருக் குதவியா யிருந்துகொண்டு குடித்தனக்காரரின் வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களின் இரகசியங்களைச் சொல்லி அவர்களைத் திருடக்கொண்டு போகும்படி செய்வர்; இவ்வழக்கம் தென்னாட்டில் மிகுதியும் நடைபெறுகின்றது; இது பற்றியே, "உளவனில்லாமல் ஊரழியாது" என்னும் பழமொழி

ஏற்பட்டது. சிவபெருமானிடத்திலிருந்து விநாயகர் பெற்ற கனியானது, ஒரு காலத்தில் நாரதர் பிரமதேவனைத் துதித்துப் பாடி மகிழ்வித்து அவனிடம் பரிசாகப் பெற்றுவந்து சிவபெருமானுக்கு ஸமர்ப்பித்தது. (கக)

வீணுக்குழைத்தல்.

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங்
குணம்போலு மீக்க ளெல்லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
கூடுய்த்த நறவு போலும்
பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்கருதி யே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் புருடர் போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
றொட்டுத் தெரித்தி டாமற்
றொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போகவரு
சொந்தமா னவர்வேறு காண்
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வயிரமொடு-கோபத்துடனே, சூரனை-சூரபத்மனை, சங்காரம் செய்து - நாசப்படுத்தி, வானவர்க்கு-தேவர்களுக்கு, உதவு-துணைபுரிந்த, தலைவா - நாதனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, காக்கை - காகமானது, குயில் முட்டை - குயிலானது தன்னுடைய கூட்டில்வந்து வஞ்சனையாக இட்டு வைக்கப்பட்ட அதனுடைய முட்டையை, தனது என்று-

தன்னுடையதென்று நினைத்து, அடைகாக்கும் - அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்ற, குணம்போலும் - தன்மையைப் போலவும்; ஈக்கள் எல்லாம் - தேனீக்களெல்லாம், கூடி-நெருங்கி, தாம் உண்ண வேண்டுமென்று - தாம்பருகவேண்டுமென்று நினைத்து, தினம் - நாள் தோறும், கூடு-தங்களுடைய கூட்டில், நறவு - தேனை, உய்த்த போலும்-சேர்த்து வைத்ததுபோலவும்; பயில் - தம்மனைவியருடனே இரகசியமாகப் பழகிவருகின்ற, சோரருக்கு - கள்ள நாயகருக்கு, பிறந்திட - பிள்ளைபிறக்க, (அவனை) தாம் பெற்ற - தாங்கள்பெற்ற, பாலன் என்று - புத்திரன் என்று, உள் கருதி - மனதில் நினைத்து, பாராட்டி-உபசரித்து, முத்தம் இட்டு-முத்தியிட்டு, அன்பாய் - பிரியமாக, வளர்த்திடும்-வளர்க்கின்ற, பண்பு இல்லா - கௌரவ குணமில்லாத, (பேதையர்களாகிய) புருடர்போலும் - புருஷர்களைப்போலவும்; துயில் இன்றி-இரவிலும் நித்திரையில்லாமல், நிதிகளைத் தேடி-திரவியங்களைச் சம்பாதித்து, ஒருவர்பால் - ஒருவரிடத்திலும், தொட்டு - அதனைக் கையினால் தொட்டெடுத்து, தெரித்திடாமல் - பகிர்ந்து கொடாமல், தொகை பண்ணி-அதிகமாகச் சேகரம் செய்து, வைத்திடுவர்-சிலர் வைப்பார்கள், (அப்பொருள்கள் அவர்க்கும் பயன் படா; அவற்றைக்) கைக்கொண்டு போக - கைப்பற்றிக்கொண்டு செல்ல, வரு - வருகின்ற, சொந்தமானவர்-அப்பொருள்களுக் குரியவர்கள், வேறு - வேறொருவர் இருப்பர், (முடிவில் அவர்களிடம் அனுபவிக்கும்படிக் கொடுத்துச் செல்வர்).

(வி - ரை.) காக்கையானது முட்டையிட்டு அடைகாக்குங் காலத்தில் குயிலும் அதில் வந்து முட்டை யிட்டுவிடும்; காகம் அதன் முட்டைகளையும் தன் முட்டைகளென்றே நினைத்து அடைகாத்துக் குஞ்சுகள் வெளிப்பட்டவுடன் அக்குயிற் குஞ்சுகளையும் தன்னுடைய குஞ்சுகளென்றே காப்பாற்றிவரும்; குயில் காகத்துக்குத் தெரியாமல் வந்து தன்னுடைய குஞ்சுகளுக்கு மாத்திரம் இரை கொடுத்து வளர்த்துப் பறக்கும் பருவம் வந்தவுடன் அவற்றை

அழைத்துக்கொண்டுபோய்விடும். தேனீக்கள் தங்களுடைய கூட்டில் தேனைச் சேகரித்து வைக்கும்; அதனை மனிதர் கண்டு எடுத்துக் கொள்வார்கள். சில அறிவீனமான பேடிகள் பெண்களை அடக்கியாளத் தெரியாமல் அவர்களிஷ்டம்போலத் திரியவிட்டுத் தங்கள் மனைவியர்க்குச் சோர புத்திரர்கள் பிறந்தால் அவர்களைத் தங்கள் பிள்ளைகளென்றே நினைத்துக் கொண்டாடுவார்கள்; அவர்கள் வேறொருவருக்குப் பிறந்தார்களென்ற உண்மையை உணரமாட்டார்கள். இச்செய்கைகள்போலச் சிலமூடர் தங்கள் பொருளைத் தாங்கள் அனுபவிக்காமல் பிறர் அனுபவிக்கும்படி கஷ்டப்பட்டுத் தேடிவைப்பார்கள். (கஉ)

சேர்க்கை பேதத்தால் பயன்படாமற்போபவை.

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்த புளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
மலகைகட் கிடு பூசையும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிநறும் பனிநீரு நீள்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வுங்கடல்
சுழிக்குளே விடுகப்ப லும்.
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய
வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு
வண்ணக் குழந்தை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) மழலை-குதலைச் சொற்களையுடைய, பசும் - பச்சை நிறத்தையுடைய, கிள்ளை-கிளி சேர்ந்திருக்கின்ற, முன் கை - முன் கையையுடைய, மலைமங்கை - மலைமகள், தரு - பெற்ற, வண்ணம்-அழகுபொருந்திய, குழந்தை-பிள்ளையாகிய, முருகா - குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அழலுக்கு உள்ளே விட்ட-நெருப்புக்குள் கவிழ்த்த, நெய்யும்-கிருதமும்; பெருக்கு ஆன-வெள்ள மிகுதியையுடைய, ஆற்றில்-நதி ஜலத்திலே, கரைத்த-கரைத்துவிடப்பட்ட, புளியும்-திந்திருணியும்; அரிதான-கூடுதல் அரிதாகிய, களரில்-நிலவெடிப்பிலே, கவிழ்த்திட்ட-கொட்டிவிட்ட, பாலும்-அமுதமும்; வரும்-பலிகொள்ள வருகின்ற, அலகைகட்கு-பேய்களுக்கு, இடு-இடுகின்ற, பூசையும் - பூசனைத்திரவியங்களும்; சுழல் - சுழல்கின்ற, பெருங்காற்றினில் - பெரிய காற்றடிக்கும்போது, வெடித்த - வெடிப்புற்று வெளிப்பட்ட, பஞ்சும் - பருத்தியும்; மணல்-மணலிலே, சொரி - ஊற்றிய, நறும் பனிநீரும் - பனிநீரானதும்; நீள்-நீண்ட, சொல் அரிய-சொல்லுதற் கரிதாகிய, காட்டுக்கு-காட்டினிடத்தே, எரித்த - வீசிய, நிலவும்-சந்திரப் பிரகாசமும்; கடல் சுழிக்குள்ளே - சமுத்திர ஜலத்தின் சுழற்சிக்குள்ளே, விடு கப்பலும்-விடுகின்ற மரக்கலமும்; விழலுக்கு-விழல் என்னும் புல்லுக்கு, இறைத்திட்ட - இறைத்துப் பாய்ச்சிய, தண்ணீரும் - ஜலமும்; முகமாய - முகத்தால் மயக்கும் வஞ்சனை யுடையவர்களாகிய, வேசைக்கு - பரத்தையர்க்கு, அளித்த-கொடுத்த, பொருளும் - திரவியமும்; வீணருக்கு - பயனற்ற அற்பருக்கு, செய்த நன்றியும் - செய்த நன்மையும், பலன் இல்லை-பயன் தருவனவல்ல; (இந்தச் செய்கைகள் ஒவ்வொன்றையும்) விருதா இது என்பர் - இது வீண்காரியம்! இது வீண்காரியம்!! என்றே கூறுவர் அறிவுடையோர்.

(வி - ரை.) நெருப்புக்குள் விட்ட நெய்யையும், ஆற்றிற் கரைத்த புளியையும், விரிவில் கொட்டிய பாலையும், மீண்டும்

பெறுதல் அரிதாம். பேய்க்கு எவ்வளவு பலியிட்டாலும் அவற்றின் சாரங்களை யெல்லாம் மனிதருக்குக் கொடாமல் அஃதுட்கொண்டு விடும். காற்றில் வெடித்த பஞ்சு மனிதர் கைக்கு அகப்படாமல் எங்கேனும் போய் மறைந்துபோகும். மணலில் பனிநீர் கொட்டினால் அம்மணலானது உடனே அதனை உள்ளிழுத்துக்கொள்ளும். சந்திரிகை காட்டில் வீசுவதால் பயனில்லை; நாட்டில் வீசினால் மனிதர்க்குப் பலவிதத்திலும் பிரயோசனப்படும். கடல் நீர்ச் சுழிக்குள் கப்பல் அகப்பட்டால் அஃது உடனே அமிழ்ந் தழியும். விழல் - ஒரு வகைப் பயனையுந் தராத புல்; இதற்குத் தண்ணீர் இறைப்பதால் இது ஒரு பிரயோஜனத்தையும் தரமாட்டாது. வேசிக்கு எவ்வளவு பொருள் கொடுத்தாலும், ஆபத்துக்காலத்தில் ஒரு காசேனும் அவளிடம் பெறுதல் அரிதாம். அற்பருக்கு உதவி செய்தால் அவர்கள் அதனை உடனே மறந்துவிடுவார்கள்; ஆதலின், அவர்கள் தங்களுக்கு உதவி செய்தவர்க்கு எவ்வித துணையும் புரியமாட்டார்கள்; அவர்கள் மனதில் விசுவாசமு மிராது.

கமர் - பூமியிலுண்டாகும் வெடிப்பு. பூசை யென்பது ஆகு பெயராகப் பலிப் பொருள்களை யுணர்த்திற்று. பனி நீர் - பாதிரிப் பூவின்மே லெடுக்கப்படும் பனி ஜலம்; பாதிரிப் புஷ்பங்களின்மேல் மெல்லிய சல்லாவை விரித்து இராக்காலத்தில் அதில் பனி பெய்து அவ்வஸ்திரம் நனைந்திருக்கக் காலையில் அம்மலர்களுடன் சேர்த்துச் சல்லாவைச் சுருட்டிப் பிழிந்தெடுக்கப்படுவது பனிநீர்; இக்காரணத்தினாலேயே இதற்குப் பனிநீரெனப் பெயர் ஏற்பட்டது. (கூ௯)

கைவிடத் தகாதவர்.

அன்னைசுற் றங்களையு மற்றைநாண் முதலா
வடுத்துவரு பழையோரையு

மடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரை யும்
தன்னைநம் பினரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மை யுந்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரை யும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதி யாய்
நத்துசே வகனையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாது காண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வணபூ பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மன் - பொருந்திய, அயிலும் - வேலாயுதத்தையும், இனிய - இனிமையாகிய, செஞ் சேவலும் - சிவந்த நிறத்தை யுடைய சேவற் கொடியையும், செங்கை - சிவந்தகையாகிய, மலர்-தாமரைப் புஷ்பத்திலே, வைத்த-தரித்த, சரவணம்-சரவணப் பொய் கையிலே தோன்றி வந்த, பூபனே,-உலகத்தை இரட்சிக்கின்றவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அன்னை - தாயையும்; சுற்றங்களையும் - பந்துக்களையும்; அற்றை நாள் முதலா - தான் முதலிற் பழகிய அன்றுமுதலாக, அடுத்து வரு-தன்னை அடுத்துவருகின்ற, பழையோரையும்-பழைய சிநேகித ரையும்; அடு - கொல்லுகின்ற, பகைவரில் - விரோதிகளிடத்தி லிருந்து, தப்பி வந்த - தவறிவந்த, ஒரு - ஒப்பற்ற, வேந்தனையும்-அரசனையும்; அன்பான - பக்ஷமுள்ள, பெரியோரையும்-உயர்ந்தோர் களையும்; தன்னை நம்பினரையும் - தன்னையே நம்பி ஜீவிக்கின்ற வர்களையும்; ஏழை ஆனவரையும்-எளியவர்களையும்; சார்ந்த-தன்னைச்

சார்ந்திருக்கின்ற, மறையோர்தம்மையும் - வேதியர்களையும்; நல் ஆபத்து வேளையில் - மிகுந்த ஆபத்து வந்த சமயத்தில், தருணம் இது என்று - என்னைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் இதுவே யென்று சொல்லி, சரணம் புகுந்தோரையும் - தன்னிடம் அடைக்கலம் புகுந்தவர்களையும்; நன்னயமதாக - மிகுந்த நன்மையாக, முன்-முன்னே, உதவி செய்தோரையும் - துணை புரிந்தவர்களையும்; நாளும் - தினந்தோறும், தனக்கு உறுதியாய்-தனக்குப் பலமாகி, நத்து - தன்னை விரும்புகின்ற, சேவகனையும் - ஏவலாளனையும்; (நல்ல நிலைமையிலிருக்கும் மனிதனானவன்) காப்பது அல்லாது - காப்பாற்றுவதல்லாமல், கைநழுவ விடலாகாது - கையைவிட்டு நீங்கும்படி தள்ளிவிடலாகாது, (அங்ஙனமின்றி அவர்களைக் கைநழுவவிட்டால் மிக்க கெடுதியும் பாவமும் சேரும்).

(வி-ரை.) அன்னை பத்துமாதமும் சுமந்து பெற்று வளர்த்தவளாதலால் மனிதன் அவளைக் காப்பாற்ருமல் கைவிடல் மிகுந்த பாதகமாம்; "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்," என்பதனால் தாயின் உயர்வை உணரலாகும். ஒருவன், சுற்றத்தார் கெட தான் வாழுதல் கொடியபாதகமாதலால், அவர்களை அவசியம் ஆதரித்தல் வேண்டும்; "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்," என்பதால் சுற்றந் தாங்குதலின் உயர்வை உணர்க. பழைய சிநேகிதர் முன் பின் நடந்த தன்னுடைய விஷயங்களை யெல்லா முணர்ந்து தன்னியல்புக்குத் தக்கபடி தனக்குதவி புரிந்து தன்னைக் கௌரவப்படுத்துவார்களாதலால் அவர்களையும் கைவிடலாகாது. பகைவரிடம் தப்பி வந்த அரசனைக் காப்பாற்றினல், அவனல் ஒரு சமயத்தில் அளவற்ற நன்மையுண்டாகும். தன்மீது பக்ஷமுடையோர் எப்பொழுதும் தனக்கிதத்தையே செய்துகொண் டிருப்பார்களாதலின், அவர்களைக் கைவிட்டால் தனக்குக் கேடு சம்பவிக்கும். தன்னை நம்பி ஜீவிப்பவர்களையும் ஏழைகளையும் தள்ளிவிட்டால் அவர்கள் ஜீவனத்திற்குக் கஷ்டப்படுவார்கள்; அதனல் தனக்கு மிகுந்த பாவமுண்டாம். தனக்கு எல்

லாச் சடங்குகளையும் நடத்துவிக்கும்பொருட்டுச் சொந்த வேதியனாக ஏற்பட்டிருப்பவனைக் கைவிட்டால், அவன் வேறே புதிதாக மற்றொருவனிடத்தைச் சாரும்வரை கஷ்டப்படுவான்; ஆதலின், அவனைக் கைவிடுதலும் பாவமாம். ஆபத்துக் கஞ்சிச் சரணமடைந்தவர்களைத் தள்ளினால் அவர்கள் அந்த ஆபத்தினாலே அழிவாராதலின் அது மகா பாதகமாம்; ஆதலின், சரணமடைந்தவர்களை அவசியம் காப்பாற்ற வேண்டும். முன்னே உதவி செய்தவர்களை மறத்தல் பாதகங்களிலெல்லாம் மிகுந்த பாதகமாம்; "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா, முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு," என்பது திருக்குறள். சமயத்தில் உயிரைக் கொடுத்தேனும் தன்னைக் காப்பாற்றத் தக்க உறுதி வாய்ந்த சேவகனைக் கைவிட்டால் தனக்காபத்து நேருங் காலத்தில் துணையில்லாக் காரணத்தால் அழிவுண்டாம். 'நல் ஆபத்து' என்பதில், 'நல்' என்னும் அடைமொழி மிகுதிப்பொருள் குறித்துவந்தது. நன்னயம்-ஒருபொருட் பன்மொழி. (கச)

தகாச் செயல்கள்.

ஆண்டிவரு முற்றூர் பசித்தங் கிருக்கவே
  யன்னியர்க் குதவு வோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
  னற்பரை யடுத்த பேரும்
கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
  கொண்டாடி மருவு வோருங்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
  குணமிலார்க் கீந்த பேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக்
  கைவிட் டிருந்த பேருங்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
  கடக்கின்ற மரியாதை காண்

வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே யருளாள னே
மயிமேலறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வண்டு அடர் - வண்டுகள் நெருங்குகின்ற, கடப்ப மலர் - கடம்ப மலரினால் தொடுக்கப்பட்ட, மாலிகா - மாலையையும், ஆபரணம் - பதக்கம் முதலிய ஆபரணங்களையும், அணி - சூடுகின்ற, மார்பனே - நெஞ்சை யுடையவனே! அருளாளனே - கிருபை யுடையவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அண்டி வரும் - நெருங்கி வருகின்ற, உற்றார்-உறவினர்கள், அங்கு - அவ்விடத்தில், பசித்திருக்க - பசிகொண்டிருக்க, அன்னியர்க்கு - வேற்றோர்க்கு, உதவுவோரும் - கொடுப்போரும்; ஆசு தபு-குற்றமற்ற, பெரியோர் செய்-உயர்ந்தோரால் செய்யப்பட்ட, நேசத்தை விட்டு - உறவைவிட்டு, பின்-பின்பு, அற்பரை-புல்லரை, அடுத்தபேரும் - சிநேகமாக நெருங்கியவர்களும்; கொண்ட - பலரறியத் தாலி கட்டிக்கொண்ட, ஒரு - ஒப்பற்ற, மனையாள் இருக்க - மனைவியிருக்க,(அவளைவிட்டுப்) பரத்தையை-தாசியை, கொண்டாடி-துதித்து, மருவுவோரும் - சேருகின்றவர்களும்; கூறு - உயர்த்திச் சொல்லப்படுகின்ற, சற்பாத்திரம் இருக்க-நற்றகுதியுடையவன் இருக்க, (அவனுக்குக் கொடாமல்) மிகு தானமது-மிகுந்த தானத்தை, குணம் இல்லார்க்கு-நற்குணமில்லாதவர்களுக்கு, ஈந்தபேரும்-கொடுத்தவர்களும்; கண்டு வரு-தம்மைப் பணக்காரரென்று அறிந்து ஏதேனும் இலாபம் பெறும்பொருட்டு நடிப்பு வார்த்தைகளாற் பசப்பி வருகின்ற, புதியோரை நம்பி - புதுமையானவர்கள் மீது நம்பிக்கை வைத்து, பழையரை - பழமையான சிநேகரை, கைவிட்டு இருந்தபேரும் - நீக்கியிருந்தவர்களும்; (கொண்ட செய்கையானது) கரி வாலை விட்டு - ஒருவன் பற்றிவிறங்கும்போது தான் பற்றியிருந்த யானையின் வாலைவிட்டு நரி வால் பற்றி-நரியின் வாலைப் பிடித்துக்

கொண்டு, நதி நீர் - அவ்வாற்று நீரை, கடக்கின்ற - தாண்டிச் செல்கின்ற, மரியாதை - செய்கையாகும்.

(வி - ரை.) ஒருவன் உற்றார்க்குதவினால் அவர்கள் எப்பொழுதும் தனக்குதவியா யிருப்பார்கள்; அன்னியர்க் கெவ்வளவு உதவினும் அவர்கள் தருணத்தில் எவ்வித துணையுஞ் செய்யமாட்டார்கள். பெரியோர் நேசம் எப்பொழுதும் நன்மையைத் தரும்; அற்பருறவு தீங்கைத் தரும். மனையாள் எப்பொழுதும் அன்புடையளாயிருப்பள்; தாசி எவ்வளவு கொடுத்தாலும் விசுவாசம் வைக்கமாட்டாள். சற்குணமுடையவனுக்குச் செய்யுந் தானமே சிறந்ததாகும்; தகுதியற்றவனுக்குத் தானஞ் செய்வதால் பாவமே கிடைக்கும். பழைய நேயர் நீடித்து நடந்துவந்த உறவால் நன்மையே செய்ய நாடுவர்; புதியவர் மனத்தில் நிலைத்த விசுவாசம் வைக்கமாட்டார்கள். ஆதலின், இவ்வுண்மைகளை யுணராமல் இவற்றிற்கு விரோதமாக நடப்பவர் கேடுறுவர்; அங்ஙனம் நடக்கும் அவர் செய்கை எத்தகையதென்றால், யானைவாலைப் பற்றிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் சென்ற ஒருவன் அதை விட்டு நரியின் வாலைப் பற்றிக்கொண்டு சென்ற செய்கையை நிகர்க்கும்; யானை எவ்வளவு வெள்ளம் வந்தாலும் தளர்ச்சியுறாமல் தன் வாலைப்பற்றினவனை அக்கரை கொண்டுபோய்ச் சேர்க்கும்; நரி சிறு வெள்ளத்திலும் தலைகீழாக வுருண்டுபுரண்டு தானழிவதன்றித் தன்வாலைப் பற்றினவனையும் அந்தரத்தில் விட்டுவிடும்; இதேபோல் நற்காரியஞ் செய்வோர்க்கு நன்மையும் செய்டத்தகாதன செய்வோர்க்குக் கெடுதியும் சம்பவிக்கும்.

'பழையரைக் கைவிட் டிருந்த பேரும்' என்பதற்குப் பின் 'கொண்ட செய்கையானது' என்பது இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. பாத்திரம் - தகுதி; அஃதாகுபெயராய்த் தகுதியுடையவனை யுணர்த்திற்று. மரியாதை - ஒழுக்கம்; அஃதிங்கே நடக்கையை யுணர்த்திற்று. (௬௫)

நல்லோர் முறைமை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலுங்
கொளும்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுத்த லாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்த லாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்ல லாலும்
நன்மையே தருமலாற் றாழ்ச்சிகள் வராவிவை
நல்லோர்கள் செயுமுறைமை காண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ-ள்.) மனம் வாடி-உள்ளம் வாட்டமடைந்து, நொந்து - வருந்தி, தமிழ் - தமிழ்ச் சொற்களாலாகிய திருமுருகாற்றுப்படை யென்னும் நூலை, சொன்ன - கூறிய, நக்கீரன்முன்-நக்கீரன் என்னும் புலவனுக் கெதிரே, வந்து-தரிசனமாகி, உதவி செய்த - அவனைக் கொல்லத் துணிந்த பூதத்தை யொழித்துத் துணைபுரிந்த, முருகா-முருகக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, சோதரர்கள்-சகோதரர்கள், கூடி வாழ்தலாலும் - மனிதர் தம்முடனே சேர்ந்து வாழ்வதாலும்; தகு - நற்றகுதியாகிய, பல குழந்தை - பல புத்திரர்களை, பெறுதலாலும் - மனிதர் பெறுவதாலும்; குணமாக - நற்குணம்பொருந்த, பிச்சை இட்டு-தம்மை நாடி வருவார்க்குப் பிச்சை கொடுத்து, உண்கையா

லும் - தாம் போசன முண்ணுவதாலும்; கொளும் - தாம் கொடுக்கும் அவிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற, பிதிர்க்கு-பிதிர்தேவதைக ளுக்கு, இடுதலாலும் - திலதர்ப்பணம் முதலானவற்றைச் செய்வதா லும்; தேடி - பொருளை நல்வழியிற் சம்பாதித்து, தெய்வங்களுக்கு- தேவதைகளுக்கு, ஈதலாலும்-கொடுப்பதாலும்; தியாகம் கொடுத்தலா லும் - இல்லையென் றிரப்பார்க்குக் கொடை கொடுத்தலானும்; சிறி யோர்கள் - அற்பர்கள், செய்திடும்-அறிவீனத்தாற் செய்யும், பிழை யைப் பொறுத்து - குற்றங்களைச் சகித்து, சினத்தை - கோபத்தை, தவிர்த்தலானும் - நீக்குதலாலும்; நாடி-உயர்வை எண்ணி, தாழ்வாய்- எவர்க்கும் தாழ்ந்திடுதலாகி, வணங்கிடுதலாலும் - தொழுதலாலும்; மிக-மிகுதியாக, நல் வார்த்தை-நல்ல வார்த்தைகளை, சொல்லலாலும்- எவரிடத்தும் பேசுவதாலும்; நன்மையே தரும் - இவை அவர்க்கு நலத்தையே கொடுக்கும், அல்லால் - இவையல்லாமல், தாழ்ச்சிகள் வரா - குறைவுகள் வரமாட்டா; இவை - இச்செய்கைகள், நல்லோர் கள் - நற்குண முடையவர்கள், செய்யும் முறைமை- நடத்தி வரும் ஒழுங்கான செய்கைகளாம்; (ஆதலின் எல்லோரும் இச்செய்கைகளை யனுஷ்டிக்க வேண்டும்).

(வி - ரை.) சகோதரர்களுடன் கூடி வாழ்ந்தால் ஐசுவரியஞ் சிதறிப்போகாமல் உலகத்தில் நல்ல மதிப்புண்டாம். சற்புத்திரர் பல ரிருந்தாற் பல நற்றொழில்களைப் புரிந்து பொருளீட்டித் தந்தை க்கு மிக்க உதவி புரிவர். பிச்சையிட்டுண்டால் இம்மையிற் புகழும், மறுமையில் சுகமு முண்டாம். பிதுர்க்கடன்களைத் தவறுமற் செய்து வந்தால் குலம் மேன்மை யடையும். பொருளைச் சம்பாதித்து அதன் மூலம் தெய்வங்களுக்குப் பூஜைமுதலியவற்றை இயற்றி வந்தால் இருமையிலும் சுகமுண்டாம். கொடை கொடுத்தலால். என்றும் புகழ் நிலைபெறும். சிறியோர் செய்த பிழையைப் பொறுத்துக் கோ பத்தை நீக்குவதால் எவ்விடத்திலும் மிக்க கௌரவமுண்டாகும். எவருக்கும் வணக்கமாயிருந்தால் அவ்வணக்கத்தின் பொருட்டுப்

பகைவரும் நன்மை செய்வார்கள். நல்ல வார்த்தை பேசுவதால் உலகத்தில் எத்தகையரும் சிநேகமாகி இதஞ் செய்வார்கள். (கசு)

அடைக்கலங் காத்தல்.

அஞ்சலெனு நாயினுட றருமன் சுமந்துமுன்
ஞற்றைக் கடத்து வித்தா
னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந் தான்
றஞ்சமென வந்திடு புறவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொடுத் தான்
றடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித் தான்
இன்சொ லுட னேபூத தய்வுடைய ராயினோ
ரெவருக்கு மைபத்தி லே
யினியதுஞ் சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்ப ரன்றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல்கீண்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

(இ - ள்.) வஞ்சம் - சூது பொருந்திய, கிரவுஞ்சமொடு- கிரௌஞ்சகிரியையும், தாருகன் - தாருகாசுரனையும், சிங்கமுகன்- சிங்கமுகாசுரனையும், வளர் - இணையின்றி வளர்ந்த, சூரன் உடல்- சூரபத்மனுடைய தேகத்தையும், கீண்டவா-பிளந்து கொன்றவனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அஞ்சல் என்னும் - நான் உன் அடைக்கலமென்ற, நாயின் உடல்- நாயின் தேகத்தை, முன் - முற்காலத்தில், தருமன் - தருமராஜன்,

சுமந்து-தாங்கிச் சென்று, ஆற்றைக் கடத்துவித்தான் - அதனை ஆற்றைக் கடக்கும்படி செய்தான்; அடைக்கலம் என்னும் - தஞ்சம் என்று வந்தடைந்த, கயற்காக - கயனுக்காக, அருச்சுனன்-அருச்சுனனானவன், நெடுமாலுடன் - நெடியோனாகிய திருமாலுடனே, சமர் புரிந்தான் - போர் செய்து அவனைக் காப்பாற்றினான்; தஞ்சம் என - அடைக்கலம் என்று, வந்திடு - தன்பால் வந்தடைந்த, புறவுக்கு - புறவினுக்கு, முன் - முற்காலத்தில், சிபி - சிபிச்சக்கரவர்த்தி, சரீரந்தனை - தேகத்தை, கொடுத்தான் - ஈந்தான்; தடம் - விசாலமாகிய, மலை-மலைகளை, சிறகு அரிந்தவனை-சிறகறுத்த இந்திரனை, முன்-முற்காலத்தில், காக்க - காப்பாற்றும் பொருட்டு, ததீசி-ததீசிமகரிஷியானவன், (அவனுக்கு வச்சிராயுதமாகும்பொருட்டு) முதுகு என்பு-முதுகெலும்பை, அளித்தான்-கொடுத்தான்; (ஆதலின்) இன்சொல்லுடனே - இனிய வார்த்தைகளுடனே, பூத தயவு - உயிரிரக்கமும், உடையர் ஆயினோர் - உள்ளவராயிருப்பவர்கள், ஆபத்திலே - அபாயம் வருங்காலத்திலே, எவருக்கும் - எப்பேர்ப்பட்டவர்களுக்கும், இனிய - இனிதாகிய, தம் சீவனை - தம்முடைய உயிரை, விடுத்தாகிலும் - விட்டாகிலும், இரங்கி - மனமிளகி, காத்து-அவரைக் காவல்செய்து, ரக்ஷிப்பர் - இரக்ஷணைபுரிவர்.

(வி - ரை.) தருமன், அருச்சுனன், சிபி, ததீசி முதலியவர்களைப்போல பூததயையுள்ளவர்கள், தங்கள் உயிரைக் கொடுத்தேனும் அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றுவார்கள். தருமர் கடைசிக் காலத்தில் சுவர்க்கம் செல்லும்போது எமன் அவரைச் சோதிக்கும் பொருட்டு நோயுள்ள நாய் வடிவங்கொண்டு அவரைப் பின்தொடர்ந்து வழியிற் குறுக்கிட்ட ஆற்றைக் கடக்க முடியாமல் தயங்க அவர் அந்நாயைத் தூக்கி ஆற்றைக் கடத்துவித்தார் என்பது பாரதகதை.

கிருஷ்ணன் ரைவதக பர்வதத்தில் ஒரு காலத்தில் சந்தியாவந்தனஞ் செய்யும்போது, விமானத்திற் சென்ற கயனென்னுங்

கந்தருவன் உமிழ்ந்த தம்பலமானது அவர் கையில் விழுந்ததனால் அவர் கோபங்கொண்டு அவன்மீது சக்கரத்தை யேவ, அவன் அதற்குப் பயந்து அருச்சுனனிடம் அடைக்கலம் புக, அந்த அருச்சுனன் அவனை விடமாட்டேனென்று கிருஷ்ணனுடன் போர் புரிந்து அக் கந்தருவனைக் காப்பாற்றினனென்பது அருச்சுனன் கதையாம்.

சிபிச்சக்கரவர்த்தியின் ஜீவகாருண்யத்தைப் பரீக்ஷிக்கும்பொருட்டு ஒருகாலத்தில் யமன் புறாவாகவும், இந்திரன் பருந்தாகவும் வடிவெடுத்து இந்திரனாகிய பருந்தானது எமனாகிய புறாவைக் கொல்லும்பொருட்டுத் துரத்திச் செல்வதுபோலச் செல்ல, புறாவானது சிபியிடம் அடைக்கலம் புக, அவன் அப்புறாவைக் காப்பாற்றும்பொருட்டு பருந்துக்குத் தன் உடம்பிலிருந்து அப்புறாவின் எடை தசை தருவதாக இசைந்து அங்ஙனமே செய்து முத்தியடைந்தானென்பது புராணகதை.

இந்திரன் விருத்திராசுரனை வென்று தான் நிலைபெறும்பொருட்டு வச்சிராயுதம் செய்தற்குத் ததீசி முனிவரின் முதுகெலும்பைக் கேட்க அவர் அங்ஙனமே தம் உயிரைப் பெரிதாக நினையாமல் கொடுத்தன ரென்பது புராணகதை.

கிரௌஞ்சம்-கிரௌஞ்சன் என்னும் அசுரன் தன் சாபத்தால் கொண்டிருந்த மலை வடிவம்; தாரகன் இம்மலையை இருப்பிடமாகக் கொண்டு முருகக்கடவுளுடன் யுத்தஞ்செய்த காலத்தில் அவர் இம் மலைவடிவமான கிரௌஞ்சனை அழித்தனர். தாருகன், சிங்கமுகன் ஆகியவர்கள் மாயையிடம் காசிபருக்குச் சூரபதுமனுடன் தோன்றியவர்கள். (கஎ)

யோக்கியா யோக்கியம்.

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம்
பருகுநீர் சேரி லென்னும்

பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கி லென்னும்
மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேஷமது சேரி லென்னும்
மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழுத்தி லென்னும
வாலிப மினோர்களுட னிளையோர்கள் சேரினலம்
வளைகிழவர் சேரி லென்னும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம்
வருகயவர் சேரி லென்னும்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) மாலிகை தரித்த-கடப்பமலர் மாலையை அணிந்த, மணி-அழகிய, மார்பனே-மார்பையுடையவனே! தெய்வானை தெய்வயானைக்கும், வள்ளிக்கு - வள்ளிநாயகிக்கும், வாய்த்த - பொருந்திய, கணவா-நாயகனே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, பாலினொடு-பாலுடனே, தேன் வந்துசேரில்-தேனானது வந்து கூடும்பக்ஷத்தில், (அந்தப் பாலுக்கு) ருசி - சுவை, அதிகமாம்-மிகுதியாம், பருகும்-குடிக்கின்ற, நீர் சேரில்-ஜலமானது சேர்ந்தால்,என்னும்-என்ன சுவையுண்டாகும்? ஒரு சுவையும் ஏற்படாமல் பாலின் மதுரமும் குறையும்); பவளத்தின் இடை - பவளத்தின் மத்தியிலே, முத்தை வைத்திடில்-முத்துக்களைச் சேர்த்து வைத்தால், சோபிதம்-பிரகாசமும் சௌந்தரியமுமுண்டாகும், படிகமணி-கண்ணாடிமணிகளை, கோக்கில் - கோப்பதனால், என்னும் - என்ன அழகுண்டாம்? (சிறிதும் பிரகாசமேற்படாது); மேல் - உயர்வான, இனிய - இனிமையுடைய, மன்னர்பால் - அரசர்களிடத்தில், யானை சேர்வது - யானையானது சேர்ந்திருப்பது, கனதை - கௌரவமாம்,

மேஷமது-ஆடானது, சேரில்-சேர்ந்திருப்பதால், என்னும் - என்ன மேன்மையுண்டாம்? (ஒன்றுமேற்படாது); மிக்கான - உயர்வான, தங்கத்தில்-பொன்னிலே, நவமணி-ஒன்பது வகை ரத்தினங்களும், உறின்-சேர்ந்திருந்தால், பெருமை-உயர்வாம், வெண்கல் - வெள்ளைக் கல்லை, அழுத்தில் - அதிற்பதித்து ஆபரணம் செய்தால், என்னும் - என்ன மேன்மையுண்டாகும்? (ஒன்றுமுண்டாகாது); வாலிப்ப - இளமை பொருந்திய, மின்னார்களுடன் - பெண்களுடனே, இளையோர்கள் சேரின் - வாலிபர்கள் சேர்ந்தால், நலம் - சுகமுண்டாம், வளை - உடல் கூனிவளைந்த, கிழவர் சேரில் - விருத்தாப்பியர் கூடினால், என்னும் - என்ன மகிழ்ச்சி யுண்டாகும்? (ஒரு வித மகிழ்ச்சியு மேற்படாது); மருவும் - மேன்மை பொருந்திருக்கின்ற, நல்லோரிடம் - நற்குணமுடையவர்களிடத்தில், பெரியோர் வரில் - உயர்ந்தோர்கள் வந்தால், பிரியம் - மிகவும் விருப்ப முண்டாகும், வரு - துர்க்குணம் வளருகின்ற, கயவர் சேரில் - கீழ்மக்கள் வந்து சேர்ந்தால், என்னும் - என்ன மகிழ்ச்சி யுண்டாகும்? (ஒரு வித விருப்பமும் ஏற்படாது).

(வி - ரை.) பாலோடு தேன் கலந்தால் மதுரம் அதிகப்படும், நீர் கலந்தால் உள்ள மதுரமும் போகும். பவளத்தோடு முத்து சேர்ந்தால் அழகுண்டாகும், படிக மணிசேர்ந்தால் உள்ள அழகும் போம். மன்னரிடம் யானை சேர்ந்திருந்தால் கௌரவ முண்டாகும், ஆட்டுக்கடா சேர்ந்தால் உள்ள கௌரவமும் குறையும். தங்கத்திலே நவரத்தினங்களை யழுத்தி நகைகள் செய்தால் மிக்க அழகுண்டாகும், வெள்ளைக்கல்லை அழுத்தினால் பொன்னுக்கு முன்னிருந்த அழகும் குறையும்; மங்கைப்பருவ முடையார்க்கு வாலிபர் கணவராகச் சேர்ந்தாலே மகிழ்ச்சியுண்டாம், கிழவர் சேரின் முன்னிருந்த மகிழ்ச்சியும் போம். இவைபோல, நல்லோரிடம் பெரியோர் சேர்ந்தால்மாத்திரம் உயர்வுண்டாம்; கீழ்மக்கள் சேரின் முன்னிருந்த கௌரவமும் போய்விடும்; ஆதலின் மேன்மையடைய விரும்புவோர் நல்லினத்தைச் சாரவேண்டும்.

சோபிதம்-பிரசாசம். மிக்கான-இது, நிலைமொழியான மிகுதல் என்னுந் தொழிற்பெயரின் தல்லீறுகெட்டு வல்லொற்று மிக்கு இங்ஙனமாயது. மின்னுர்-மின்னலைப் போன்றவர். (கூஅ)

பெரியோ ரியல்பு.

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற
 லாபத்தின் வந்த பேருக்
 கபயங் கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத
 லாசிரியன் வழி நின்றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
 துணையடி யருச்சனை செயல்
 சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
 தொல்புவியி னுட்டி யிடுதல்
மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
 வைகினுந் தாமரை யிலை
 மருவுநீ ரெனவுறுத விவையெலா மேலவர்த
 மாண்பென் றுரைப்ப ரன்றோ
வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
 வலமாக வந்த முருகா
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

(இ - ள்.) வன்னம் - அழகிய நிறத்தையுடைய, மயில்மேல் - மயில்வாகனத்தின்மீது, இவர்ந்து-ஏறி, இவ்வுலகை-இந்த உலகத்தையெல்லாம், ஒரு நொடியில்-ஒரு நொடிப்பொழுதில், வலமாகவந்த-சிவபெருமானிடம் மாங்கனி பெறும்பொருட்டுப் பிரதக்ஷணமாகச்சுற்றி வந்த, முருகா-குமாரக்கடவுளே! மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே!—, அன்னதானம் செய்தல் - ஏழை

களுக்கு அன்னமிடுதலும்; பெரியோர் சொல் - முதியோர் கூறுகின்ற, வழி நிற்றல்-நன்னெறியிலே நின்று அதன்படி நடத்தலும்; ஆபத்தின் - அபாயத்தினாலே, (பயந்து) வந்த பேருக்கு - தம்மிடத்தே வந்தவர்களுக்கு, அபயம் கொடுத்திடுதல் - தைரியம் கொடுத்து உதவி செய்தலும்; நல் இனம் - நல்ல கூட்டத்தார்களை, சேர்ந்திடுதல் - கூடியிருத்தலும்; ஆசிரியன் வழி-குரு சொன்ன நன்னெறியிலே, நின்று - நிலைபெற்று, அவன் சொன்ன மொழி-அவன் கூறிய உபதேசவார்த்தையி னின்றும், தவறாது - பிசகாமல், செய்திடுதல்-அதன்படியே எதையும் செய்தலும்; தாய் தந்தை-அன்னை தந்தையருடைய, துணை அடி - இரண்டு பாதங்களுக்கும், அருச்சனை செயல் - அருச்சனை புரிதலும்; சோம்பல் இல்லாமல் - அயர்ச்சியின்றி, (சத்தியத்தைக் கடைப்பிடித்து) உயிர் போகினும் - தங்கள் உயிர் நீங்கினாலும், தொல் புவியில்-பழமையான இந்த வுலகத்திலே, வாய்மை மொழி- சத்தியவார்த்தையை, நாட்டியிடுதல் - நிலை நிறுத்துதலும்; மன்னரைச் சேர்ந்து - அரசர்களுடைய ஆக்ஞையிலே சார்ந்து, ஒழுகல் - அரச நீதிப்படி நடத்தலும்; கற்புடைய-பதிவிரதா தன்மத்தையுடைய, மனைவியொடு - இல்லாளுடனே, (கூடி) வைகினும் - இல்லறத்திலே தங்கியிருந்தாலும், தாமரையிலை-தாமரையிலையிலே, மருவும் - சேர்ந்திருக்கின்ற, நீர் என - ஜலத்தைப்போல, உறுதல்-அவ் வாழ்க்கையிற் பற்றுதலின்றிப் பொருந்தியிருத்தலும்; (ஆகிய) இவை எல்லாம் - இச் செய்கைகளெல்லாம், மேலவர்தம் - உயர்ந்தவர்களுடைய, மாண்பு என்று - குணங்கள் என்று, உரைப்பர்-அறிவுடையோர் கூறுவர்.

(வி - ரை.) அன்னதானஞ் செய்தலும், பெரியோர் சொற்படி கேட்டு நடத்தலும், அடைக்கலங் காத்தலும், நல்ல கூட்டத்தாரோடு சேர்தலும், ஆசிரியன் உபதேசப்படி நடத்தலும், தாய் தந்தையரை வழிபடுதலும், சோம்பலில்லாதிருத்தலும், சத்தியத்தை நிலைநிறுத்தலும், அரசரின் ஆக்ஞைப்படி நடத்தலும், இல்லறத்தி லிருந்

தாலும் தாமரையிலைத் தண்ணீர்போல அதில் பற்றில்லா திருத்த லும் மேலோர்களுடைய செய்கை யென்றதனாலே, மேலோராக வேண்டுவோ ரெல்லாரும் இச் செய்கைகளை யனுஷ்டிக்க வேண்டு மென்பது இதனாற் பெறப்படும்.

ஆபத்தின் வந்த - மூன்றும் வேற்றுமைத்தொகை. அபயம் - பயமற்றதன்மை; அதாவது தைரியம். துணை-இரண்டு. அடி - கீழே யிருப்பது. வாய்மைமொழி நாட்டி யிடுதலாவது: அரிச்சந்திரனைப் போலச் சொன்ன சொல்லை நிலைநிறுத்துதல். தாமரையிலையின்மேல் தண்ணீர் சேர்ந்திருப்பினும் அதில் ஒட்டாமலிருக்கும். (கக)

நூலின்பயன்.

வன்னமயி லேறிவரு வேலா யுதக்கடவுண்
 மலைமே லுகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாகினோன்
 வானவர்கள் சேனா பதி
கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னரன்மகன்
 கங்கைபெற் றருள் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
 கடவுளா யினன்குடி யினன்
பன்னரிய புல்வயலில் வாழ்குமர ரேசர்மேற்
 பரிந்துகுரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தினைப்
 பாடலொரு நூறு நாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
 நாடோறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
 நன்முத்தி யும்பெறுவ ரே.

(இ - ள்.) வன்னம் - அழகு பொருந்திய, மயில் ஏறி வரு - மயில் வாகனத்திலேறிப் பவனி வருகின்ற, வேலாயுதக்கடவுள் - வேற்படையைத் தாங்கிய கடவுளும்; மலைமேல் - மலைகளின்மேலே இருப்பதற்கு, உகந்த-சந்தோஷித்த, முருகன் - முருகக்கடவுளும்; வள்ளிக் கொடிக்கு - வஞ்சிக்கொடிபோன்ற வள்ளி நாயகிக்கு, இனிமை - இனியதாகிய, வேங்கை மரம் ஆகினேன்-வேங்கை விருக்ஷமானவனும்; வானவர்கள் - தேவர்களுடைய, சேனபதி - சேனாதிபதியும்; கன்னல் மொழி - கரும்பிரசம்போன்ற வார்த்தைகளையுடைய, உமையாள் - உமாதேவியின், திருப்புதல்வன் - அழகிய புத்திரனும்; அரன் மகன்-சிவபெருமானுடைய புதல்வனும்; கங்கை பெற்று அருள் புத்திரன் - கங்காதேவி யீன்றருளிய புதல்வனும்; கணபதிக்கு இளைய - விநாயகனுக் கிளமையாகிய, ஒரு - ஒப்பற்ற, மெய்ஞ்ஞானம் - உண்மை ஞானத்தையுடைய, தேசிகக்கடவுள் - குருவாகிய கடவுளும்; ஆவினன்குடியினன்-திருவாவினன்குடியிலிருப்பவனுமாகிய, பன்னரிய - அளவிட்டுச் சொல்லுதற்கரிய (வளங்களையுடைய) புல்வயலில்-திருப்புல்வயல் என்னூர்தலத்திலே, (குடிகொண்டிருக்கும்) வாலகுமரேசர்மேல்-இளமைப் பருவத்தையுடைய குமாரக்கடவுள்மீது, பரிந்து - விரும்பி, குருபாததாசன் - குருபாததாசன் என்னும் பெயரினையுடைய நான், பாங்கான - அழகான, தமிழ் - தமிழினாலாகிய, ஆசிரிய விருத்தத்தின் - ஆசிரிய விருத்தமென்னும் பாவினத்தாலே, அறை - சொல்லிய, ஒரு - ஒப்பற்ற, பாடல் நூறும் - நூறு செய்யுட்களையும், நாடி - விரும்பி, நன்னயமதாக - மிகுந்த நன்மையுடனே, படித்தபேர்-படித்தவர்களும், கேட்டபேர் - படிக்கக் கேட்டவர்களும், நாள்தொறும் - தினந்தோறும், கற்றபேர்கள் - படிக்கக் கற்றுக்கொண்டவர்களும், ஞானயோகம் பெறுவர் - ஞானத்தால் விளங்கும் யோகநிலையை அடைவர்; பதவி யாவும் பெறுவர்-எல்லா நற்பதவிகளையும் அடைவார்கள்; நல் முத்தியும் பெறுவர்-நல்ல மோக்ஷத்தையும் அடைவார்கள்.

(வி-ரை.) குமாரக்கடவுள் மிகுதியும் மலைகளிலேயே கோவில் கொண்டிருத்தல் இயல்பாதலின், 'மலைமேலுகந்த முருகன்' என்றார் ஆசிரியர். கொடிபடருதற்கு மரம் உரித்தானதாகலின், 'வேங்கை மரம்' என்றதற்கேற்ப வள்ளியைக் கொடியாக உவமித்துக்கூறினர்; வேங்கைமரமாகிநின்ற குமாரக்கடவுளை வள்ளி சேர்ந்தாளாதலின், இங்ஙனம் அவளைக் கொடியாகவும், முருகனை வேங்கைமரமாகவும் கூறியது மிகவும் பொருத்தமுடைத்தாம்; வள்ளி தினைப்புனங் காத்திருக்கும்போது குமாரக்கடவுள் வேடனாகிச் சென்று அவளுடன் சரசவார்த்தைகளாடிக்கொண்டிருக்கும்போது அவளுடைய சகோதரர்கள் வருவதைக் கண்டு தம்முருமறைத்து வேங்கைமரமாக நின்றனரென்பது புராணகதை. அம்மரத்தின்மீது வள்ளி மிகவும் பற்றுடையவளாயிருந்தாளாதலின், 'கொடிக்கினிய வேங்கைமரம்' என்றார். சூரசம்மாரகாலத்தில் குமாரக்கடவுள் தேவர்களுக்குச் சேனாதிபதியாயினா ரென்பது கந்தபுராண கதை. குமாரக்கடவுளின் கருவாகிய அனற்பொறிகளை அக்கினிதேவன் கங்கையிற் சேர்க்க அவள் தாங்கிச்சென்று சரவணப் பொய்கையிற்சேர்க்க அவருண்டான காரணத்தால் கங்கை அவருக்குத் தாயெனப்பட்டாள். சிவபெருமானுக்கும் பிரணவத்தின் உண்மை கூறியவராதலின் குமாரக்கடவுள் 'தேசிகன்' எனப்பட்டார். ஆவினன்குடி - பழனி. வாலகுமரேசர்-இதில், 'வாலகுமர' என்னுஞ் சொற்றொடர், சிறப்பால் வந்த ஒருபொருட்பன்மொழி; இஃதொருசொன்னீர்மைத்து. குமரேசர்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. யோகம்-நிஷ்டை; அதாவது, கரணங்கள் ஒன்றுபட்டிருத்தலாம். பதவி-சுவர்க்கம் முதலியன. (௧௦௦)

குமரேச சதகம் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

உ

சிவமயம்.

குமரேச சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அக்கினியை	41
அஞ்சலெனு	293
அண்டிவரு	288
அந்தணர்	87
அரசர்பகை	75
அழ[illegible]க்கு	283
அற்பர்க்கு	139
அனைவர்க்கு	107
அன்றுமுடி	145
அன்னதானஞ்	298
அன்னைசுற்	285
அன்னைதங்	142
ஆ	
ஆடரவின்	165
ஆதுலர்க்	28
ஆறுதண்	245
ஆனைதன்	242
இ	
இர[illegible]காண்	100
எ	
எழுத்தசைகள்	265
ஓ	
ஓடமிடு	229
ஓரவிவகார	197
க	
கடவாரண	119
கடனீர்	93
கடனுதவு	79
கடுகடுத்	168
கட்டியெரு	127
கதிரவ	214
கல்லாது	163
கல்வியுன்	103
கல்வியொடு	186
கனபார	208
கா	
காகம்	217
கு	
குடிபடையி	13
குணமிலாத்	133
குயின்[illegible]டை	281
குரு[illegible]லா	71
கு[illegible]மான	278
குறையாத	11
கூ	
கூடியே	291
கை	
கைக்குறுதி	237
கொ	
கொங்கையில்	200
கொண்டபடி	16
கொண்டல்	54
கொற்றவர்கள்	253
கோ	
கோகனக	275
ச	
சடமொன்	232
சத்தியங்	26
சந்தனவிருக்ஷ	144
சா	
சார்பிலா	247
சி	
சிங்கார	52
சூ	
சூரபத்மன்	153

செய்யுள்.	பக்கம்.
சே	
சேற்றிற்	189
சோ	
சோடாய்	262
சோரமங்கையர்	123
ஞா	
ஞானநெறி	31
த	
தங்கமான து	58
தந்தார	205
தந்தைதாய்	147
தருணத்தி	90
தரையதனி	220
தவமதுசெய்தே	23
தன்பெருமை	96
தா	
தாய்புத்தி	183
தாரகைக	171
தாராளமாக	45
தாருவிற்	83
தாநுசரித்து	192
தான்பிடித்	136
தி	
திரவியங்	117
திருமகள்	211
தே	
தேசுபெறு	68
தேடித்தம்	234
தேவாலயஞ்	273
ந	
நல்லதேவாலய	20
நி	
நியாயநெறி	38
ப	
பகல்விளக்	48
பஞ்சரித்	250
பதராகிலுங்	114
பத்தியொடு	268
பரிதனி	271
பருவத்திலே	160
பா	
பாவிநெடு	295
பூ	
பூமேவு	1
பூமிக்கோ	8
பூவில்வேசி	179
ம	
மடுவினிற்	176
மணமாலை	173
மனதிற்	130
மனுநன்மாந்தாதா	224
மன்னரைச்	60
மா	
மாதத்திரண்டு	64
மாமதியின்	157
மாரிக்கு	4
மாறுத	111
மி	
மிக்கான	256
வ	
வங்காள	150
வந்தவிவ	194
வறுமைதான்	240
வன்னமயி	300
வா	
வாரியாழ	203
வே	
வேங்கைகள்	258
வேசைக்கு	35
வேட்டகங்	226

குமரேச சதகத்தின் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை.

	ரூ.	அ.
ஸ்ரீ பகவ[illegible] வசனம்	1	8
துவைத சைவ[illegible]ண்டனம்:		
1-ம் பாகம் ...	2	0
2-ம் பாகம் ...	1	8
அகம்புறஆராய்ச்சி விளக்கம்	1	4
பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் வசனச் சுருக்கம்	1	4
திருவெண்காட்டடிகள் சரித்திரம் ...	0	12
ஸ்ரீ விநாயக கவசம் உரை	0	5
சூதசம்ஹிதை (செய்யுள்)	1	8
விவேகசிந்தாமணி உரை:		
1-ம் பாகம் ...	0	6
2-ம் பாகம் ...	0	6
வேதப்பொருள் சார சங்கிரகம்	0	4
108 திருப்பதித் திருப்புகழ்	0	8
தேவார திருவாசகத்திரட்டு	0	8
ஸ்ரீ பகவத்கீதை வெண்பா	1	0
சிவஸூத்ர விளக்கம்	1	8
ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை விருத்தியுரை ...	0	12
தன்வந்திரி நாடிசிந்தாமணி	0	2
அஷ்டப்பிரபந்த மூலம் ...	0	12
ஞானத்தின் பிரிவுகள் ...	0	2
பக்தி (இன்னதென்பது)	0	2
கலியுக தர்மம் ...	0	1
பஞ்சாக்ஷரப் பதிபசு பாசம்	0	1½
சித்தாந்த தத்துவ லக்ஷணம்	0	¾
பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம்	0	2

	ரூ.	அ.
அனிபிஸண்டு அம்மாள் சரித்திரம் ...	0	6
ஸ்ரீ தத்துவபோதம் ...	0	2
சிவநாமாவளித் திரட்டு ...	0	3
சித்தாந்தப் பிரகாசிகை ...	0	2
திருநாவலூர்ப் புராணம் ...	0	4
பட்டணத்தார் பாடல் ...	0	2
பஞ்சதந்திர வசனம் ...	0	10
திராவிடபூர்வகாலக்கதைகள்	0	8
திராவிடமத்யகாலக்கதைகள்	0	8
திரிகடுகம் உரை ...	0	4
அறநெறிச்சாரம் மூலம் ...	0	6
ஆசாரக்கோவை உரை ...	0	8
பழமொழி உரை ...	2	0
இன்னிலை உரை ...	0	12
நீதிச்செய்யுள் திரட்டு ...	0	2
இராஜயோகவித்யா வினா விடை ...	0	1
திருவாதவூர்ப்புராண வசனம்	0	3
சிவநாமாத்துவிதக்கீர்த்தனை	0	8
காஞ்சிப் புராண வசனம்	1	8
சைவசமய விளக்க வினா விடை	0	8
நாஞ்ஜீவவாதக் கட்டளை	0	1
ஷெடி செய்யுள் ...	0	1
ரிப்பன் காளப்பாட்டு ...	0	½
வாக்ய இலக்கணசிந்தாமணி	0	4
சரஸ்வதி ஒருபா ஒருபஃது	0	¾
திருநீலகண்ட நாயனார் கீர்த்தனை	0	1
ஸ்ரீ அருணாசலேசுரர் பதிகம்	0	1
பட்டணத்தார் உடற்கூற்று வண்ணம்	0	¼